பிரம்பதி துணை.

தேவ ரிஷி முனி சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய வாத யோக
ஞானசாஸ்திரத்திரட்டு

இரண்டாம் பாகப் புஸ்தகம்.

இஃது

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:

மதுரை புதுமண்டபம் புஸ்தக ஷாப்

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1934 [ரூபாய் 2.

Registered Copy Right.

(இரண்டாம் பதிப்பு.)

கடவுள் துணை.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்களுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும், இன்னுமற்றுமுள்ள மகான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த யோகஞானசாஸ்திரத்திரட்டு என்னுமிப் புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கிற சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற ஒவ்வொரு மகான்களிடத்திலும் ஓலையேட்டுப் பிரதிகளைச் சகல சுதந்தரத்துடன் பெற்று, என் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலையேட்டுச் சாஸ்திரங்களையுஞ் சேர்த்து, இந்நூலுக்குப்போதுமான திரவியத்தைச் செலவுசெய்து என்னால் "கெவர்ன்மெண்ட் சட்டப்படி" ரிஜிஸ்தர் செய்திருப்பதால் இச்சாஸ்திரங்களைப் பிறர் எவ்விதத்திலும் அச்சிடக் கூடாதென்பதை இதன்மூலமாய்த் தெரிவித்துக் கொண்டேன்.

இப்படிக்கு

இ. ராம. குருசாமிக்கோனார்: ஸன்.

புஸ்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

உ

கடவுள் துணை.

முகவுரை.

உலகின்கண் சர்வேசுவரனால் உற்பத்தியாக்கப்பட்ட பலவுயிர்களிலும், சுவேதஜம், அண்டஜம், உற்பீஜம், சராயுஜமாகிய நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசிகளிற் சிரேஷ்டமானது இம்மானிடப் பிறவியேயாம்; இதில் ஜெனிக்கும் சிசுக்கள், பாலர், குமாரர், எவ்வனர், விருத்தர்களாகிய ஆண்பெண்ணினங்களுக்குரிய சகல சுக துக்கங்களையும், தர்மார்த்த காம மோக்ஷ மர்மங்களையும், இகபர சாதனங்கட்குரிய இயல்பினையும, எண்ணிலாப் பிறவித் துன்பங்களையும், இஷ்ட காமியார்த்த இன்ப ரசங்களையும் எடுத்துக்கூறிய நூல்கள் பலவாயினும், அவற்றினை இனிது விளங்கக் கூறுவன: அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாயுள்ள சின்மய சொரூப நிலையைப் பெற்ற தேவ, ரிஷி, முனி, சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய யோகஞான சூஸ்திரங்களேயாம்.

இவ்வித சாஸ்திரங்களை வெளிவிடாது நமது முன்னோர்கள் தொன்றுதொட்டு ஓலையேடுகளி லெழுதி, வீடுகளில் காலை மாலை பூஜையில் வைத்துப் பூசித்து வாசித்து வருவது யாவருக்குந் தெரிந்த விஷயமே. அப்படிப்பட்ட அரியசாஸ்திரங்கள் நமது நண்பர் ☞ இ. ராம. குருசாமிக்கோனார் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலையேட்டுப் பிரதிகள் பலவாம். அவற்றுட் சிலவற்றையும், கனம் ௯. ராம. கணபதியாபிள்ளை யவர்களிடத்திலும், என்னிடத்திலும் கைவசமா யிருந்த ஓலைச்சுவடிகளையும் ஒருங்கே திரட்டிப் பார்க்கையில், பதினெண் சித்தர்கள் பாடல்களிற் சில இருந்தும் சில இல்லாதிருக்கவே அதையுஞ் சேர்த்து அச்சிடக் கருதி "சொல்லும் பொருளுஞ் சுவையுங் கனியும், எல்லும் ஒளியும் இருப்பதுபோல, என்பாற் பிரியா தெழில் கட் பதனை, அன்பாற்கொண்ட அருமைநண்பர்" இ. ராம. குருசாமிக்கோனாரிடம் வெளியிட, அவரு மதற்கிணங்கி பல தேயங்களிற் சென்று சில ஏடுகளைச் சேகரித்துக்கொண்டு வந்தனர். அச்சமயம் தெய்வ கடாக்ஷத்தால் திருப்பழனியின்கண் வசிக்கும் ஸ்ரீ கைலாச போகமகா ரிஷீஸ்வர சுவாமி யவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகா கைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாச தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்கள் தமது ஆச்சிரமத்திற் கையாண்டு வந்த பல சாஸ்தி

முகவுரை.

திரங்க ளடங்கிய ஏட்டுச் சுவடிகளை வரப்பிரசாதத்துடன் கொடுத்து, அச்சிடும்படி உதவி புரிந்தனர்கள்.

எல்லாச் சுவடிகளையும் காயிதத்தில் எடுத்தெழுதிப் பார்க்கையில் அதிற்சில சாஸ்திரங்களில் ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு செய்யுட்களில் இரண்டுவரியும் மூன்றுவரியுமாக இருந்ததுடன், சிலபாக்களில் எதுகை மோனைக ளேதுமில்லா திருந்தன. அவைகளை பூர்த்தி செய்ய வேண்டி, இப்புஸ்தகத்தில அச்சிட்டிருக்கும் ஒவ்வொருவ ரிடத்திலும் ஒரு பிரதிக்கு நாலு ஓலையேட்டுப் பிரதிகளைப் பெற்று அவற்றுள் வரைந்துள்ள லிகிதப் பிரகாரம், அநேக மகான்களின் உதவியைக் கொண்டு என் சிறறறிவிக் கெட்டியவாறு சீர்திருத்தஞ் செய்ததுமன்றி இதற்கு தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய யோகஞான சாஸ்திரத் திரட்டு. எனத் திருநாமஞ்சூட்டிப் பன்னிரண்டு பாகங்களாக அச்சிட்டிருக்கின்றன.

இச் சாஸ்திரங்களை யெல்லாந் திரட்டி ஒன்றுசேர்த்து அச்சிடுவதற்காகப் பொருட் செலவும், தேகப்பிரயாசையும் எடுத்துக்கொண்டு சதா துணைக்கருவியாயிருந்த மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரியும், ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ் புரோப்ரைட்டருமாகிய நமது நேயர் ☞ இ. ராம. குருசாமிக்கோனரவர்களது நன்றியும், தாலபத்திர சாஸ்திரச் சுவடிகளுதவிய ஏனைய நண்பர்களது நன்றியும் யான் என்றும் மறக்கத்தக்கனவன்று.

இவ்விதம் பன்னிரண்டுபாகமாய் அச்சிட்டிருக்கிற இவ்வரியபெரிய சாஸ்திரங்கள் ஒருபுஸ்தகத்திலிருப்பது மற்றொரு புஸ்தகத்தி லில்லாதிருப்பதால், பன்னிரண்டு வாலியத்தையும் பார்ப்ப தவசியம். ஆகையால் ஒவ்வொருவரும் இதனை வாங்கிக் கையாண்டு வருவீர்களென நம்புகின்றேனன்.

இங்ஙனம்,

☞ த. குப்புசாமி நாயுடு,

மதுரை.

கணபதி துணை.

இரண்டாவது புஸ்தகம்.

தேவரிஷி முனி சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய யோகஞான சாஸ்திரத்திரட்டின்

அட்டவணை.

தொகைப்	சாஸ்திரங்களின் பெயர்.			பக்கம்
42	போகமகாரிஷி	உபதேச ஞானம் 150	...	1
43	காலாங்கிநாதர்	உபதேச ஞானம் 34	...	41
44	ஷை	ஞான சூஸ்திரம் 29	...	50
45	ஷை	ஞானவிந்தரகசியம் 30	...	55
46	ஷை	இந்திரஜால ஞானம் 46	...	63
47	ஷை	ஞானபூஜாவிதி 80	...	76
48	கமலமகாமுனி	ஞானசைதன்யம் 18	...	97
49	ஷை	ஞானசூஸ்திரம் 76	...	102
50	இடைக்காட்டுச்சித்தர்	ஞான சூஸ்திரம் 70	...	113
51	ஷை	பாடல் 130	...	124
52	புண்ணாக்குச்சித்தர்	முப்புச்சுண்ண செயநீர் 45	...	138
53	ஷை	பாடல் 20	...	145
54	கொங்கணர்	சூட்சதெரிசன ஞானம் 6	...	148
55	ஷை	திருமந்திர ஞானம் 12	...	150
56	ஷை	மெய்ஞ்ஞானம் 13	...	154
57	ஷை	சுத்தஞானம் 16	...	158
58	ஷை	உற்பத்தி ஞானம் 21	...	163
59	ஷை	ஞானவெண்பா 49	...	169
60	ஷை	ஞானசைதன்யம் 111	...	176
61	குதம்பைச்சித்தர்	ஞானசூஸ்திரம் 18	...	208
62	ஷை	பாடல் 246	...	213
63	அம்பிகானந்தர்	ஞானோபதேசம் 25	...	238
64	டமரானந்தர்	சிவநூல் சூஸ்திரம் 17	...	245
65	வால்மீகர்	சிவயோக ஞானம் 10	...	250
66	ஷை	ஞானநாடி சாஸ்திரம் 11	...	253
67	ஷை	சுத்த ஞானம் 16	...	255

உ

குமரன் றுணை.

நாற்பத்திரண்டாவது:

போகமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

உபதேச ஞானம் ஈருய.

கரிமுகவன் கடவுள்பதம் போற்றிநாளும்
கருணைவைத்துக் காக்குமுமை பாதம்போற்றி
அரியநான் முகன்வாணி பாதம்போற்றி
அச்சுதன்லெக் குமியாள்தன் பாதம்போற்றி
துரியமாய்ப் பாட்டர்திரு மூலர்பாதம்
துணையாகக் காலாங்கி அய்யர்பாதம்
நிருவிகற்ப சமாதியுற்றோர் பாதம்போற்றி
நிறைந்துநின்ற பூரணமேயாப்புத்தானே. (1)

தானான ஏழுலெட்சஞ் சிவன்றான்சொன்ன
சாத்திரத்தின் கருவெல்லாந் தரிக்கப்பண்ணி
கோனான குருநூலாய் ஏழுகாண்டம்
கொட்டினேன் வாதமென்ற முறைகடன்னை;
வேனான பாட்டரையுங் கருக்கள்கேட்டேன்
வீரிரண சூரிசொல்லின் பண்புகேட்டு
தேனான காலாங்கி யையரையுங்கேட்டுச்
செப்பினே னிந்நூலின் கருத்தாம்காட்டே. (2)

நாட்டமாய் லெகுவாக மூலம்பாரு
நலமான வாசிகொண்டு ஊதிபூதி
ஊட்டமாய்ச் சக்கரத்தில் நின்றுநின்று
உத்தமனே நந்திகண்டால் வாதங்காணும்
சூட்டமாய் வெரும்பேச்சாய் வார்த்தைசொன்னால்
சுடுகாட்டுப் பிணமான சொல்லுக்கொக்கும்
பூட்டமாய் மூலவெளி காணமட்டும்
பொற்கொடிபோற் சுழிமுனையுந் திறந்துபோமே. (3)

சுழிமுனையே துறந்தாக்கால் மனமொடுங்கும்
சுழியிலே அகப்பட்ட துரும்புபோலாம்
வழிமுனையே ஆதார மேறலாகும்
மகத்தான சித்தியது எட்டுமாகும்
கழிமுனையாஞ் சுழுத்தியுள்ளே அழுத்திடாது
கணக்கோடே வாசியென்ற குதிரையேறு
இழிமுனையி லிறந்தாக்கா லிங்கொன்றில்லை
யேறுவது கடினமெத்த யிதத்தோடேறே. (4)

ஏறவே ஐம்புலனு மூலக்கையாக
இடும்பான ஆங்கார முரலுமாக
ஆறவே ஆசையது உருவமாக
அழும்பான மனத்தையுள்ளே மாட்டிக்கொண்டு
சூறவே அசையாதே அடித்துச்சண்ணி
முழுமோச மாக்கியல்லோ மிரளப்பண்ணும்
தேறவே யோகமுதல் ஞானம்ரெண்டும்
தெரியாதே யிருந்தவர்கள் கோடிதானே. (5)

கோடியென்ற ஜெனனம் மண்மேலாசை
குணமான தீனியறு சுவையினாசை
மோடியென்ற பலபணிதி பொன்மேலாசை
மோகத்தைப் பூட்டுகிற பெண்களாசை
சூடியென்ற சுகபோக சுசியினாசை
துணையான பாசத்தி னாசையாலும்
வாடியென்ற வுலகமெல்லாம் மயக்கமாச்சு
மக்களே வாய்ஞானம் பேச்சுமாச்சே. (6)

ஆச்சென்ற பேச்சாலே யொன்றுமில்லை
அரிதான சாஸ்திரமா ராய்ந்துபார்த்து
மூச்சென்ற மூச்சாலே ஜனமிறந்தார்
மூச்சடங்கிச் சாகாமல் முயற்சிகேளு
நாச்சென்ற நடுமூலங் கண்டத்தூணி
நலியாமல் வாயுவுட வீட்டிற்கட்டி
தோச்சென்ற தேசியெங்கு மோடாதப்பா
சோடசத்திற் சீவகலை யிருப்புமாமே. (7)

இருப்பான மூலத்திற் கணேசன்பாதம்
இருத்தியே வாசியைநீ அதுக்குள்மாட்டு
தருப்பான பிராணாயந் தவறிற்றானால்
தம்பித்து வரவழைத்துத் தளத்தில்ரேசி
குருப்பான மாத்திரைதா னேறயேறக்
குறிகளெல்லாங் குறிப்பாக அறிவிற்றோணும்
மருப்பான வாசியது நழுவிற்றானால்
மனுஷனல்ல மாடென்ற வார்த்தையாமே. (8)

வார்த்தையால் தர்க்கத்தா லொன்றுமில்லை
வல்லமையா லைம்புலனை மறித்துக்கட்டி
ஆர்த்தையால் காத்தவிழி ரெண்டில்வைத்து
அறிவான மனந்தன்னை யதுக்குள்நாட்டி
தேத்தையால் தேசியென்ற குதிரைதன்னைச்
சிக்கெனச்சிங் கென்றுகடி வாளம்பூட்டி
மூத்தையால் மூலத்தில் மரித்துக்கட்டி
முனையான சுழினைமட்டும் மூட்டிப்பாரே. (9)

மூட்டியே மதுவுண்ணு கற்பமுண்ணு
மூதண்ட காயத்தைச் சித்திபண்ணு
காட்டியே கனமாமூ லிகையையுண்ணு
கசடருக்குஞ் சனத்திற்கண் ணொளிதான்மீறும்
ஆட்டியே அண்ணாக்கிற் கபத்தைத்தள்ளு
அடுக்காறு தலத்திலுள்ள ஆம்பல்நீக்கு
வாட்டியே ஐம்புலனை வாளால்வீசு
மறவாதே இரவுபகல் வாசிமாட்டே. (10)

மாட்டவே மார்க்கமூ லத்தில்நில்லு
மறவாதே ஒன்றில்நின் று தேறினாக்கால்
ஆட்டவே அடிமரத்தைத் தொத்தியேற
ஆச்சரியம் நுனிமட்டும் ஏறலாகும்
மூட்டவே மூலமது பழகினாக்கால்
முடிந்தவிட மாறுகடந் தப்பாற்றாண்டி
சூட்டவே துவாதசாந் தத்திற்புக்கிச்
சுருதிமுடிந் திடமறந்து சேரலாமே. (11)

சேரவே சகஸ்திரமுண் டகத்தின்பூவைச்
சேர்ந்தேறிச் சந்திரமண் டலத்திற்புக்கி
ஆரவே அறிவென்ற மனதாற்கொய்து
ஆனைமுகன் வல்லபைகுண் டலியைத்தாக்கும்
பாரவே பதத்திலரிச் சித்துத்தூமம்
பலதீபம் பணிமாறி விவேகத்தாலே
தூரவே சோமப்பா லுகந்தளித்துத்
தூயனாய் மூலத்திற் பரியைக்கட்டே. (12)

கட்டியே அஞ்சலிகுண் டலியாந்தாயைக்
கருத்தில்கண பதியைவல் லபையைத்தானும்
மூட்டியே முகிழ்திறந்து வழிதாவென்று
முனையான சத்தியெண்பர் முயக்கந்தீரத்
தெட்டியே வஸ்துவைத்தான் பானம்பண்ணிச்
செயலறிந்து கபாடமது தீர்ப்பாரப்பா
எட்டியே நந்திபத மிறைஞ்சிப்போற்று
எத்தமாந் தொழிலிதெல்லாம் எளிதிலாமே. (13)

எளிதிலே நந்திவந்து இரக்கமாகி
எட்டெட்டா மறுபத்து நாலுமீவார்
நெளிதிலே வாதவகை கட்டிநிற்கும்
நீச்சுனக்கு யீதெல்லாம் நிசமாய்த்தோனும்
களிதிலே காயமது சித்தியாகும்
கருத்தாணித் தானவனாய்க் கலந்துபோவாய்
அளிதிலே ஆலமுண்டோன் நாட்டங்காணும்
ஆச்சரியம் சிலம்பொலியும் அயிக்கமாமே. (14)

அயிக்கமாய் விழுகாதே காமத்தீயில்
அனுதினமும் வேதாந்த முடியைப்பாரு
ஒயிக்கமா யொருவருடன் வாயாடாதே
ஊமையைப்போ லிருந்துஉன்னி உன்னுப்பாரு
தியக்கமாய்ப் பொய்கொலைகள் செய்திடாதே
சேர்ந்தேறு வாசியென்ற தேசிதன்னில்
மயக்கமாய் வஷ்துவைநீ பானம்பண்ணி
மதத்தாலே அழியாதே மாயை நீக்கே. (15)

நீக்கியே ஐம்புலனை யறுத்துச்சாடு
நித்திரையைத் தள்ளிவிட்டு காலையுண்ணு
தூக்கியே ரேசகபூ ரகத்தைத்தானும்
சுயம்பான கும்பகமுங் கணக்காய்ச்சூடு
தாக்கியே அமுதவெள்ளந் தன்னையுண்ணு
சங்கற்ப விகற்பமென்ற சட்டைநீக்கு
வாக்கியே பிராணாய வரிசைதன்னை
மறவாமல் மாட்டுதற்கு மார்க்கஞ்செய்யே. (16)

செய்துமே உத்துப்பார் கருத்தையூணி
திகையாதே புலன்களொடு கணேசன்காண்பாய்
கொய்துமே பூசைபண்ணி குட்டிக்கொண்டு
கூர்ந்துமே வாசிதன்னை யிருத்திவைத்து
ஓய்துமே ஓம்ஸ்ரீம் கிலியும் சவ்வும்
உயர்கெங்கெங் கணபதியென் றுச்சரிக்க
கய்துமே கந்திகதிர் கோடியொப்ப
கற்சுழியி லொளிகண்டால் நமன்நாடானே. (17)

நாடாமற் போவதென்ன வென்றுகேட்கில்
நலசத்த பரிசமொடு ரூபங்கெந்தி
நாடாமல் ரசத்தோடு பொறிகளைந்தும்
தனக்கேத்த வழிபோகில் மனந்தானோடும்
வீடாமல் வேகத்தாற் போகொட்டாமல்
மீட்டுமே புலனைவெட்டி வீசிப்போடு
சூடாமல் தாயைநீ போற்றினாக்காற்
சொல்லொன்றுங் கேளாது சூட்டிப்பாரே. (18)

சூட்டிப்பா ரின்னமுநீ பரிட்சைகேளு
துடிக்கண்ணைப் பொத்திடிலோ ரூபங்காணும்
வாட்டிப்பார் மூக்கதனை யடைத்துக்கொண்டால்
வளமான வாசமொன்றுந் தோன்றிடாது
ஊட்டிப்பார் வாய்தன்னி லுப்பைவிட்டால்
உப்பரிச்ச உப்பென்று உருசிகாணும்
ஏட்டிப்பார் எறும்பதுவும் உடலிலூர்ந்தால்
எத்தமா மறிவாலே பரிசமாச்சே. (19)

ஆச்சிந்த மனம்வேறாய் நின்றாயானால்
அறிவுமகா மந்திரியின் விவேகமாச்சு
ஓச்சிந்த மனைத்துநித்தம் பிராணாயாமம்
உசந்தேறி வாசியைநீ யிடத்தேபூரி
மூச்சிந்த மூலத்தில் முதிர்ந்துகும்பி
முனையான வலம்ரேசி தவறிடாமற்
காச்சிந்த மூலத்தில் நின்றுநின்று
கரைகண்டு தேறிநீ மேலேயேறே. (20)

ஏறியே பாரென்று பாட்டர்சொன்னார்
எனையீன்ற அப்பர்கா லாங்கிநாதர்
பாறியே வழியெனப்பக் குவமாய்ச்சொன்னார்
பதஞ்சலிவி யாக்கிரமர் சிவயோகீசர்
மீறியே யேறுதற்கு விளக்கஞ்சொன்னார்
மிக்கபரா பரத்தாளு மிதுவேசொன்னாள்
ஆறியே நான்பார்த்த அனுபோகத்தை
அனுபவித்தே ஆயிரத்தி லமைத்திட்டேனே. (21)

அமைத்திட்ட சிகாரமென்ற அட்சரத்தை
அழும்பாய்த்தான் வெளியிலவர் கணமேசெய்வார்
குமைத்திட்டங் கொள்ளாத போதந்தன்னைக்
கூறுவோர் வெளிதன்னிற் கூகூகூகூ
நமைத்திட்ட ஒருசொல்லா லேழுகோடி
நரகிலேயே பிறவியென்ற கடலிலாழார்
இமைத்திட்ட சித்தரெல்லாம் மூலத்துள்ளே
சிங்கென்று உன்னியே தியானிப்பாரே. (22)

தியானித்து உள்ளடக்கிப் பூசைசெய்வார்
செயகண்டிச் சங்கோசை காதிற்கேட்கும்
தியானிப்பார் சிலம்பொலியின் இயக்கங்கேட்டுச்
சிதம்பரமாம் நடனத்தின் செயலுங்காணும்
தியானிப்பார் சச்சிதா னந்தவெள்ளம்
தெவிட்டாம லுண்டிருப்பார் தேவியீவாள்
தியானிப்பார் சிவன்தேவி பதத்தில்காணும்
திடமான மனவிலங்கு மாட்டுவாரே. (23)

மாட்டியே மனவிலங்கு பூட்டிக்கொண்டு
மகிழ்ச்சியா யானந்த மயமுமாகிப்
பூட்டியே வாசியைக்கும் பித்துக்கொண்டு
புரளாமற் றம்பித்து நிற்பாரையா
நாட்டியே மனமொன்றாய்த் திடப்படுத்தி
நாதாந்தப் பெருவழியை நாடுவார்கள்
சூட்டியே துவாதசாந் தத்திற்புக்கிச்
சுருதியந்தத் துள்ளிருந்து துதிசெய்வாரே. (24)

துதிசெய்த மூலத்தே தாண்டியப்பால்
துடியான நாலுஅங் குலமேதாண்டப்
பதிசெய்த பிரமனுட வீடுமாகும்
பகர்ந்தசுவா திஷ்டான மென்றும்பேரு
அதிசெயத்தால் நால்வட்டம் வளையஞ்சுத்தி
ஆறிதழ்தா னட்சரத்தை அறியக்கேளு
பதிசெய்த பபமயர லாவென்றேதான்
பாங்கான நடுபீசம் லங்கங்ஆமே. (25)

நகாரமென்ற எழுத்ததுவும் பிரமற்காகும்
லாவென்ற எழுத்ததுவும் பிரிவுபீசம்
புகாரமென்ற துரியாதிக் கிருப்பிடந்தான்
புகழ்கின்ற இருக்கான வேதமாகும்
அகாரமென்ற அன்னமாம் வாகனந்தான்
அதினுடைய நிறமும்பொன னிறமுமாகும்
மகாரமென்ற இவருடைய தொழிலின்கூறு
மயிரெலும்பு இறைச்சிதோல் நரம்போடஞ்சே. (26)

அஞ்சான பொன்னினிறம் பிரமன்பக்கல்
அடவான வாணிநிற்பா ளறிந்துகொள்ளு
தஞ்சான சதுர்முகமும் அபயாஸ்தந்தான்
தண்டுகமண் டலஞ்செபிக்கும் மாலையோடு
பஞ்சான பரமதளம் பரனணியுமமாலை
பகர்ந்தநவ ரத்தினமாங் கிரீடத்தோடு
கிஞ்சான தேசியையும் நிறுத்தித்தானே
சிறந்தஜெப மந்திரத்தைச் சேவித்தன்னே. (27)

உன்னியே சரஸ்வதியைத் தியானித்தாணி
உறுதியா யேறுதற்கு உண்மைகேளு
தன்னியே சகலவித்தை தருவாய்நீயே
தயாநிதியே சிங்குவையில் தரிக்குந்தாயே
முன்னியே நீபிரிந்தால் மூடனாவேன்
முனிந்துநீ முன்னின்றால் முத்தனாவேன்
கன்னியே யோகசித்தி வாதசித்தி
காயசித்தி ஞானசித்தி கடாக்ஷிப்பாயே. (28)

என்றுமே தியானித்து வாசிவைத்து
இழுத்துமே நங்கென்று இருத்திக்கும்பி
நன்றுமே நகாரத்தாற் பிறப்போகோடி
நல்வினைக்கும் தீவினைக்கும் மேடுகாடாய்
ஒன்றுமே தியானித்து இருக்கவேண்டும்
ஒத்தமா மலர்கொண்டு அர்ச்சித்தேதான்
அன்றுமே நான்முகன்றன் பதியைவிட்டு
அடியளந்த மாலினுட பதியிற்புக்கே. (29)

மாலினுட வீட்டினறு விரலின்மேலே
மகத்தான பிறைபோலே கோட்டையாகும்
பாலினுட வளையம்போற் பத்திதழ்தான்
பத்திதழி னட்சரத்தைப் பகரக்கேளு
தாலினுட பப்பணத தததத
தயங்காதே நபஸ தண்மையாகும்
ஆலினுட மங்நடுவிற் பூதமப்பு
அதின்பீசம் வஙகென்று அறியலாமே. (30)

அறிந்தமணி பூரகத்தின் வீடுமாகும்
அப்பனே றரியமதுக் கிருப்பிடந்தான்
பிறிந்தயசுர் வேதமுமாம் படிகவர்னம்
பிரியாமல் லெட்சுமிதன் வாமபாகம்
கறிந்துஅறு சுவையுமங்கே காணலாகும்
கதித்தநிறம் பச்சையொடு உதிரமூளை
வெறிந்ததோர் விந்துவொடு அஞ்சுமாகும்
மிக்கசங்கு சக்கரம்புள் ளரசுவாகனமே. (31)

வாகனமாம் லெட்சுமியும் சமேதர்பக்கல்
வாசியொடு மங்கென்று இருத்திக்கும்பி
ஆகனமாய் அரிநமோ நாராயணுவென்
றனுசரித்துச் செபஞ்செய்தஞ் சலியேபண்ணு
தேகனமாய் ஜெகமெல்லாங் காக்குந்தாய்தான்
திரோதாயின் மயக்கத்திற் சுழற்றுந்தாய்தான்
மோகனமாய் மோகமெல்லா மானவீடு
மூக்கரச்சி குடியிருந்து முதிர்ந்தவீடே. (32)

வீடாகத் திரோதாயும் இருந்தவீடு
வெகுபோகவ காமியத்தை விடுத்தவீடு
வாடாக மனங்கலங்கி நின்றவீடு
மாயமெல்லாம் குடிகொண்ட மகத்தாம்வீடு
பேடாகக் கருத்தழிந்து பெண்ணைத்தேடி
பேய்க்கூத்தாய் நின்றலைந்த பெரியவீடு
சாடாக வரம்பழித்த சாதிவீடு
தன்மயமாய் வாசிகொண்டு தாக்கிடாயே (33)

தாக்கியே சந்திரமண் டலத்திற்பூவை
சகஸ்திரமா மிதழாலே தரிக்கப்பண்ணி
பாக்கியே பலதீப தூபந்தன்னைப்
பண்பாக மனத்தாற்பா வகமேபண்ணி
ஆக்கியே மேலேற அருள்தாவென்று
அஷ்டமா சித்திதந்து அனுப்பவென்று
போக்கியே ஐம்புலனைப் பொறியின்பக்கல்
போகாமல் நிறுத்தென்று போற்றிசெய்யே (34)

செய்யவே நாரணனை லெட் சுமியுந்தானே
சித்தமகிழ்ந் தப்போது சித்திநீவார்
பையவே யேறுதற்குப் பயனுஞ்சொல்வார்
பலதொழிலின் முறைசகுப்பக் குவமேசொல்வார்
உய்யவே பிறவாமற் சடந்தான்நிற்க
உறுதியாம் யோகத்துக் குண்மைசொல்வார்
அய்யவே அஷ்டாங்க மளந்துபார்க்க
அதுக்கதுக்கு அங்கமெல்லா மறிவிப்பாயே. (35)

அறிவுக்கு மேலேறெட் டங்குலத்துக்
கப்பாலே அனுகத்தின் வீட்டைக்கேளு
மூறிவுக்கு முக்கோண மாகநிற்கும்
மூதிர்வளையம் பன்னிரண்டு இதழுமாகும்
பிறிவுக்கு க க க க ங ச ச்ச
பேரான ஜ ஜ ஞ ட ட்டாவாகும்
இறிவுக்கு மெழிலநிற்கு வட்சரந்தான்
ஏற்றமாஞ் சுழுத்தியதுக் கிருப்புமாமே. (36)

ஆமென்ற சிகாரத்தின் எழுத்துநடுவாகும்
ஆண்மையால் பூதமது தேயுந்தானும்
தேமென்ற செம்புநிறம் சிவப்புமாகும்
தேயுவுட பீசமது றவ்வுமாகும்
ஓமென்ற வொளிகோடி பானுவாகும்
உருத்திரனு முருத்திரியும் நடுவேநிற்பாள்
பாமென்ற அவருடைய குணமேதென்னில்
பயஞ்சோம்பல் சினம்பொசிப்புத் தூக்கமாமே. (37)

தூங்கவே யெழுப்பிமெள்ளப் பெண்ணைச்சேர்க்கும்
சுகமஞ்சு சிவனுமைக்குந் தொழில்தானப்பா
ஓங்கவே ரத்னசிங்கா தனமுமாகும
உமாசகிதர் சடாமகுடம் அஸ்திமாலை
மாங்கவே மான்மழுவும் வரிப்புலித்தோல்
மகாகோடி சூரியப்பிர காசமாகும்
தாஙகவே விபூதிதா ரணரேதேவா
சர்ப்பரா சனைத்தரித்த ஆளதாமே. (38).

தாமென்ற தியானிவா சியைநீவைத்துத்
தப்பித்தோம் ஆம்ஊம்சி வாயநமவென்று
ஓமென்ற உத்தமியென் தாய்பாதத்தை
உறுதியாய் மனந்தன்னை யொன்றுபண்ணி
ஆமென்ற ஐம்புலனை யறிவாற்றள்ளி
ஆதியந்த மில்லாத அரூபத்தாயே
காமென்றே கடாக்ஷித்து அருள்தாவென்று
கருத்தாக மனந்தன்னை வொளியில்வையே. (39)

ஒளியான நந்திவா கனருமாகும்
　　உருசாம வேதத்தி னுருவுமாகும்
களியான காமப்பால் மாச்சல்செய்து
　　கடுகரையும் திரையுங்கண் புகைச்சலாகி
வெளியான சடமழித்து விந்தையூத்தி
　　வெறுங்கூத்தாய் ஞானமெல்லாம் விழலாய்ப்பண்ணும்
கொளியான இவருடகூத் தெல்லாங்கண்டு
　　கும்பித்துக் குறியோடே கூர்ந்திடாயே. (40)

கூர்ந்திட்டு நடுவணையிற் காந்திதானும்
　　கூகைக்கு ராக்காலம் குறிகண்டாப்போல்
ஆர்ந்திட்டு [அவர்] பதத்தில்மன விலங்குமாட்டி
　　அறிவோடே அசையாம லதற்குள்நின்று
ஏர்ந்திட்டு ஏறுதற்கு வழியைக்கேட்டு
　　எட்டெட்டுச் சித்திக்கு மியல்புவாங்கி
வார்ந்திட்டு வாதகரு வெல்லாங்கேட்டு
　　வகையான காயசித்தி மார்க்கங்கேளே. (41)

கேளுமே சந்திரமண் டலத்திற்புக்கி
　　கெடியான மலர்வாங்கிப் பதத்தில்வைத்து
ஆளுமே சிவனோடு சத்திக்குத்தான்
　　அசையாமல் மனதைதிரு வடிசெலுத்தி
வாளுமே மந்திரத்தை யுனனியுன்னி
　　வாசியைநீ மறவாமல் மருவிப்பூட்டி
தாளுமே நீயகத்திற் றாடதீபம்
　　தோத்தரித்து விடைதரவே சுழுவிலேறே. (42)

ஏறியே பன்னிரண்டங் குலமேதாண்ட
　　ஏற்றமாம் வாசியென்ற தலமுமாகும்
மாறவே அறுகோண வளையமொன்று
　　மகத்துவமாம் பதினாறு இதழுமாகும்
ஆறவே இதழுக்குள் ளட்சரந்தான்
　　அ-ஆ-இ-ஈ-ஐ-உ ஊவாமென்று
தூறவே யிர்யிரோ இல்லோஇல்லோ
　　துணையான ஏ ஐ ஒ ஔ அம் ஆமே. (43)

ஆமுதலாய் பதினாறு எழுத்துமிட்டு
அறுகோணம் நடுவேதான் வகாரம்நிற்கும்
வாமுதலாய் மயேசன்மயேஸ் வரியும்நிற்பாள்
மகத்தான சொற்பனத்தாக் கிருப்புமாகும்
பூமுதலாய்ப் பூதமது வாய்வுவாகும்
புகழான பீசமது வவ்வுமாகும்
நாமுதலாய் அதர்வணமே தந்தானும்
நல்லமனோ வாகனமாய் நாட்டலாமே (44)

நாட்டமாய் அவருடைய தொழில்நடப்பு
நடத்தலொடு வோடல்மயங் கிகிடத்தல்
நீட்டமாம் நிறுத்தல்கலங் காதிருத்தல்
நிலையஞ்சின் விபரத்தை நிலைக்கக்கேளு
பூட்டமாம் பொசித்தலொடு ராகங்கேட்கல்
பொங்கியகோ பஞசண்டை சுமையைத்தூக்கல்
ஓட்டமாம் ஓங்காரம உன்னைக்கண்டால்
உயர்வரையைத் திறந்திடுத லுறுதிகாணே. (45)

உறுதியா மஞ்சாறு வாயினுள்ளே
உருசைதான் வாயிலுக்கு ளப்பாலில்லை
பருதியாம் பரமென்ற பீடமப்பா
பரத்தினடி யென்றுமே பண்புமாகும்
பிருதியாம் ரத்னகலை யதனைவாங்கிப்
பிசகாமல் காலதனில் ஒக்கச்சேர்த்து
அருதியாம் ஆதார மெல்லாம்பார்த்து
அப்பனே நாலுக்குள் அழைத்திடாயே. (46)

அழைத்திட்ட நாலுக்குள் சிங்கென்றானு
ஆதிஓம் நமசிமசி வாயமென்றே
இழைத்திட்ட வாசியைநீ வாய்வின்வீட்டிற்
சுருக்கிட்டுக் கட்டிடவே ஓடாதப்பா
பழைத்திட்ட பதினாறு தளத்திற்றானும்
பாங்கான சீவகலை யிருப்புமாகும்
இழைத்திட்ட சீவகலை யிருந்ததாலே
சிறப்பாகப் பாடிவைக்குந் திறமையாமே. (47)

திறமையா யுருமையோ டுண்ணப்பண்ணும்
சிவகலை யிருந்துகொண்டு எட்டுகோளாய்
புறமையா யிருந்துகொண்டு நாலும்பாழாய்ப்
புத்தியுள்ள சிவகலை மதியோற்றேய்ந்து
நறுமையாய் நரதிரையாய்ச் சேரமாண்டு
நலமான சிவகலை போகிறதைககாணூர்
குறுமையாய் நாதங்கண் டத்திறகாணும்
குறிப்பான திரோதாயின் கூத்துத்தானே. (48)

தாமப்பா வாயுவுட வீட்டில்நின்று
தம்பித்தாத் தாலத்தாள் விலங்குபூட்டிப்
போமப்பா சந்திரமண் டலத்திற்பூவாற்
போற்றியே அடிவணங்கி வாசிபூட்டித்
தோமப்பா மேலேற வழிதாவென்று
சுத்தசை தன்யத்தைத் தோத்தரித்து
வாமப்பா வாதசித்தி யோகசித்தி
மகத்தான காயசித்தி மார்க்கங்கேளே. (49)

மார்க்கமாய் மந்திரத்தை யுன்னியுன்னி
வாசியைநீ மறவாமல் மருவிப்பூட்டி
ஆர்க்கமாய் அங்கெனக்கும் பித்துநிற்கில்
ஆத்தாளும் அப்பனுமே அகமகிழ்ந்து
மார்க்கமாய் வாதத்தி னடியுஞ்சொல்லி
வரிசையோ டேறுதற்கு வழியுஞ்சொல்வார்
ஊர்க்கமாய் மயேஸ்பரத்தின் பதியைவிட்டு
உசந்தேறி பதினோரங் குலமேலேறே. (50)

மேலேறி யிரண்டுநடு புருவமையம்
மிகையான அண்டம்போல் நிற்குமப்பா
வாலேறி வட்டமாம் வீடுபோலே
வளையமுமொன் றிரண்டிதழ்தான் ளாகூர்வாகும்
ஆலேறி நடுவேயங் கக்கரந்தான்
ஆகாசஸ் தானம்சங் பூதபீசம்
மாலேறி மனோன்மணியும் (சதா) சிவனும்நிற்பார்
மவத்தைதான் சகரத்தின் வீடுமாமே. (51)

வீடுமாம் வர்னமது மேகவர்னம்
விளங்குகின்ற தொழிலிதுகா மக்குரோதம்
வாடுமாம் லோபமொடு மோகமாகும்
மதனம்போ ஆச்சரியத் தோடஞ்சாகும்
நாடுநான் முகன்மாலும் சிவன்மயேசன்
நலமாகக் காப்பார்கள் திசைகள்தானும்
தாடுசதா சிவன்றானுந் தளவாயாகும்
தளவாயைக் கண்டாக்காற் சகலமாமே. (52)

தளவாயைக் கானில்சமு சயமுந்தீரும்
சங்கற்ப விகற்பமென்ன சட்டைநீங்கும்
தளவாயைக் காவிற்றா யோடேசேர்க்கும்
சச்சிதா னந்தத்தின் தன்மைகாண்பார்
தளவாயைக் காணிலெல்லாச் சித்துமாகும்
தானெடுத்த கள்ளனைந்து நிறமேயாகும்
தளவாயை மற்றொன்றாற் காணுதப்பா!
சாங்கமா யுரைத்துநீ வாசிமாட்டே. (53)

உரைத்துமே ஆக்கினையாம் சக்கரத்தில்
உகந்துமே மனோன்மணியை யுச்சரித்து
மரைத்துமே மந்திரத்தைச் சொல்லக்கேளு
மருவுகா ஏ-யீ-ஊ-றீம் அம்வஸீமஸ்ரீயும்
அரைத்துமே சொல்ஐயுங கிலியும்சவ்வும்
அதின்பின்பு அட்சரங்கள் இறீயுமாகும்
முரைத்துமே ஏகபஞ்சாட் சரியைக்கண்டே
முனிந்துமே யுச்சரித்து மூட்டுநீயே. (54)

மூட்டியே தாயினுட பதத்தைக்கண்டால்
முழக்கமாம் மாயையெல்லாம் ஒழிந்துபோகும்
நாட்டியே யெட்டோடே நாலைக்கூட்டு
நாதாந்த சித்தியெல்லாம் க்ஷணத்திலாகும்
மாட்டியே தமருக்குட் புகுதலாகும்
மயிர்ப்பாலம் நெருப்பாறு கடக்கலாகும்
நீட்டியே நிராதார மறியலாகும்
நிச்சயமாய்க் குறிகளெல்லாம் நினைக்கலாமே. (55)

நினைக்கவே ஐம்புலன்க ளொடுங்கிப்போகும்
நோய்மூப்போ டுண்டாஞ்சாக் காடுநரைதிரையும்
கனைக்கவே காயசித்தி வாதசித்தி
கண்ணிமைக்குட் போகுமுயுர் கடுகிமீளும்
அனைக்கவே சக்கரத்தி விருந்துகொண்டு
ஆயிதன்னோ டப்பனுமே கூத்தும்பார்த்துத்
தனைக்கவே சரியையொடு கிரியையோகம்
சார்ந்தோர் ஞானமெல்லாந் தானானரே. (56)

தானான மனோமணியைத் தாண்டியப்பால்
தனித்ததோ ரெட்டுவிரல் மேலேகேளு
கோனான குருபதந்தான் கூட்டிப்பாரு
குறிப்பான யிதழாயி ரத்தியெட்டு
ஆனான நடுவிலேங் கோணமாகும்
உகாரமாம் உகாரமொடு மகாரமாகும்
நானான நடுமைய நிலையிற்றானே
நாதமொடு விந்துவைந்து நிற்கும்பாரே. (57)

பார்க்கவே கோரமாம் நடுமையத்திற்
பரிசுத்த வெளியாகி யுதிக்குமதைப்
பார்க்கவே காரொத்த நிறமதாகும்
பறந்தோடும் வாசியைத்தா னதுக்குள்வைத்து
நேர்க்கவே ஓடாமல் நிறுத்திப்பாரு
நிலையாத பிறப்பறும்பூ ரணமுட்கொள்ளும்
ஆர்க்கவே அடியான வேதாந்தத்தின்
ஆதியென்ற பொருளொருவ ரறியொண்ணாதே. (58)

அறியவொண்ணா பிர்மரந்த்ர மென்றும்பேரு
அதினுடைய நிறந்தானும் படிகவர்னம்
நெறியொண்ணாச் சுத்தமுள சொரூபமாகும்
நித்யபரி பூரணத்தின் நேர்மையாகும்
பறியொண்ணாச் சச்சிதா னந்தமாகும்
பகரறியா நிரஞ்சனமாய் வித்தும்கோவாம்
தெறியொண்ணா நிற்பரசா தீபதீயாம்
தெரியதனுச் சூட்சப்பிர சோதியீதே. (59)

தேயென்றே யிருபத்தி நாலாய்நின்ற
 தெளிவான காயத்திரி தனைச்சேவித்து
வாயென்றே வாசியைநீ யிருத்திவைத்து
 மனந்தனனைப் பொறிவழியே போகொட்டாமல்
சீயென்றே யிருத்திக்கும் பித்துக்கொண்டு
 சிற்சொருப காயத்திரி தனைச்சேவிக்கப்
பூயென்றே பிறப்பறுப்பூ ரணத்திருப்பாய்
 போக்குமில்லை வரவுமில்லை பொருளுண்டாச்சே. (60)

பொருளாகி மேலேறித் துவாதசந்தான்
 போக்கோடே பதினொன்றும் பரித்துப்பாரு
அருளாகி யுன்மனியோ டெட்டுச்சத்தி
 அருளான பரையதொன்று பரமதொன்று
தெருளான பதினொன்று செப்பினேனுன்
 செப்பரிது காரணந்தா னடியேன்காணேன்
கருளான நதியே மூாயிரத்தில்
 நாட்டினூர் நன்னறிவை நான்காணேனே. (61)

காணாத மார்க்கமெல்லாங் காணும்நேராய்க்
 கடுசாக முனைமூக்கிற் கடித்தாற்சாரும்
ஊணாத ஊணிநற் பிடரிக்குள்ளே
 உத்துப்பா ருறுதியுட னுரிமைகாணும்
கோணாத குண்டலியோ தனதைநோக்கிக்
 கூர்ந்துபார் பதினொன்று மொன்றுங்காணும்
நாணாத நடுமையம் நோக்கினுக்கால்
 நற்சிவமாம் ருத்திரனொளி பானுகோடி (62)

பானுன நூல்சொன்ன படியேவாய்க்கும்
 பறந்தோடும் வாசியொடு பழகும்போது
தேனான வாசிவரு கிறதைப்பார்த்தால்
 திறமாகக் காக்குமோ நீறுக்காய்த்தானும்
தானுன் நாய்க்குமென்ன தேங்காய்தானும்
 தக்குமோ யோகசித்தி பார்க்குங்காலம்
கோணுன பரத்தினுட முடிவைப்பாரு
 குடியிருந்த வாசியுட முறையைக்கேளே. (63)

கேளுமூ லத்திற்கும் பிட்டுவகாரத்தைக்
கீழ்போற்றிச் சிகாரம்போ காமல்ரேசி
நீளுரே சித்துப்பூ சித்துப்பாரு
நிர்மலமாங் குண்டலியில் நந்திகாணும்
வாளுநீ நந்திவந்து வசனிப்பார்பார்
மகத்தான சித்தியெட்டு ஞானந்தானும்
நாளுநீ வாசிவைத்து மந்த்ரமகாரத்தை
நலமாகக் கண்ணுற்றே நாடிடாயே, (64)

நாடியே மூலத்தைத் தாண்டிப்பின்பு
நலமான கஞ்சனுட பதியிற்கூடி
ஓடியே வகாரத்தை யுறுதிநோக்கி
ஒளிவான சிகாரத்தி னுள்ரேசிக்கப்
பாடியே பண்டான பிறவிபோகும்
பண்பாக நான்முகனைக் கண்டதாலே
மாடியே கஞ்சனுட பதியைத்தாண்டி
மாவிருக்கும் பதியூடே மருவிநில்லே. (65)

மருவியே வகாரத்தை யுட்பூரித்து
மாதவமாஞ் சிகாரத்தை யுள்ளேரேசி
பருவியே பஞ்சநரை திரையும்போக்கிப்
பாலகனாய்ப் பதினாறு வயதுமாவார்
உருவியே மால்கடந்து ருத்திரன் வீட்டில்
உணர்வான வாசியைநீ யுருக்கித்தாக்கு
தருவியே சிகாரத்தை யுள்ரேசிக்கச்
சடந்தானுஞ் சிவப்போடிச் சித்தியாமே. (66)

சித்தியாம் ருத்திரன்றன் பதியைத்தாண்டி
தெளிவான மயேசனுட பதியிற்புக்கி
அத்தியாம் வகாரமதை யாமற்பூரி
அதுக்குள்ளே சிகாரத்தை யுள்ரேசிக்கப்
பத்தியாஞ் சிறுபிள்ளை தானுவார்கள்
பாருள்ளங் கைநெல்லிக் கனிபோலாகும்
துத்தியாஞ் சிவலோகம் வைத்துப்பாரு
துடியாகுங் குளிகையெல்லாஞ் சுருக்கிலாமே. (67)

சுருக்கான மயேஸ்வரத்தின் பதியைத்தாண்டி
சூழ்ந்தசதா சிவத்தின்வடத் தேகாலூணி
மருக்கான சிகாரத்தை வைத்துப்பாரு
மகத்தான சித்தரொடு கெவுனமாகும்
செருக்கான மனோன்மணிமா தாவின்பாதம்
திரமான வாசிவைத்த படியேபார்க்கப்
மெருக்கான மெஞ்ஞான நிராகாரந்தான்
மெய்யான வாசியுந்தான் நீயுமாமே. (68)

நீயான குருபதத்தில் நின்றாயானால்
நீட்டான சிவயோக வாசியூட்டு
தாயான பூரணமுஞ் சர்வதெரிசனமாம்
சதமான வகாரசிகா ரத்தின்மார்க்கம்
வாயான வஸ்துவைத்தான் வைத்துமங்கே
மதியோடே பார்மனதில் மகத்தாஞ்சித்தி
தீயான நீக்கமிட மற்றுநின்ற
சிறந்திடுமே பூரணந்தான் சித்துமாமே. (69)

சித்தாகப் பாய்ந்தேனு னண்டந்தன்னிற்
றெளியண்டத் தின்றிரஞ் சொன்னார்நந்தி
அத்தாக அண்டியஞ்சு தனித்தடுக்காய்
அதுந்தோன்றி யிருந்ததுந்தான் அடுக்குமாகி
பத்தாக நுழையென்றார் பாட்டர்தாமும
பாலித்த சொரூபத்தை வாயில்வைத்துக்
கத்தாகக் கமலினியைக் கரத்திற்கட்டி
"களஞ்சோதி யண்டம்போல் நுழைந்திட்டேனே. (70)

நுழைந்திட்டேன் நிருவிகற்ப நிறையாம்யோகி
நுவல்ஞானி சதகோடி சித்தர்கோடி
திழைந்திட்டுத் திகட்டாதே பார்த்துநின்றேன்
சித்துத்தா னுனக்கென்று லாச்சுதென்றார்
குழைந்திட்டு கோடியறு பதுமாச்சென்றேன்
குறிதபின்னம் சித்தின்னம் பாரென்றார்கள்
மழைந்திட்டு நுழைந்தேன்பின் னோரண்டத்தில்
மகத்தான சித்தரைக்கை கூப்பினேனே. (71)

கைகூப்பிக் கடியதோர் பதுமைபோலக்
கையினாற் றடவினேன் கைதட்டாது
ஐகூப்பி நிராகாரத் தடைந்தபேர்கள்
அரியோரைக் கண்டஞ்சி வலமும்வந்தேன்
பைகூப்பி யரியவடுக் கொன்றுதன்னிற்
பாய்ந்தேனுன் முடியேறிப் பரிந்துபோந்தேன்!
செய்கூப்பி அண்டமெல்லாஞ் சோதித்தேன்நான்
சீக்கிரமாய் மறுவண்டம் பாய்ந்திட்டேனே. (72)

பாய்ந்திட்டே னண்டத்தில் நுழைந்துபார்த்தேன்
பலகோடி சித்தர்கள்தான பாலித்தார்கள்
ஆய்ந்திட்டு அளந்திடுநூ லார்தான்சொன்னார்
அய்யனே யெனக்கேட்டே னடிவணங்கி
வாய்ந்திட்ட சிவனுமையால் தனக்குச்சொன்னார்
வாகேழு லட்சத்தைக் கரைகண்டோநான்
தோய்ந்திட்ட யிந்தநூந் பெருமைமெத்த
சுருக்காமற் போனதென்ன வெனக்கேட்டாரே. (73)

கேட்டதற்கு உத்தரந்தான் சித்தர்சொன்னார்
கிரந்தத்தைச் சுருக்குதற்குச் சிவனாலாக
மாட்டாது வேறான சாஸ்திரத்தில்
மகத்துவமாம் சுருக்குண்டோ வென் றுகேட்டேன்
சூட்டுதற்குச் சித்தர்கள்தான் சொன்னமார்க்கம்
சுருதிநந்தி தொகுப்பெல்லாந் தேர்ந்துபார்த்துக்
கேட்டதற்கு ஏழுலட்சங் கிரந்தந்தன்னைக்
கிருபைவைத்துக் கல்வெடிபோ லிசைந்திட்டாரே. (74)

இசைந்திட்டா ரேழுலட்சங் கிரந்தந்தன்னை
இயல்பாக ஆயிரமா யிசைந்துவைத்தார்
பசைந்திட்ட நூலெங்கே யிருக்குதென்றேன்
பாங்கான தெட்சனபா கத்திருனும்
அசைந்திடுநூற் றறுபதா மண்டந்தன்னில்
அமைத்துவைத்தார் சித்தர்கள்தான் படிப்பாரென்றே
கசைந்திட்ட ஏடுதனி லென்னசொல்லும்
கருமத்தை கடாக்ஷித்துச் சொல்லென்றேனே. (75)

என்றுமே படிக்கின்ற நூலிற்றானும்
ஏற்றமாம் பயனெல்லாஞ் சொல்லுமோதான்
நின்றுமே சாரணையுங் குருத்தான் நூலில்
நிகழ்ந்துமோ பதினாறு அங்கந்தானும்
அன்றுமே யெட்டெட்டும் பலசித்தோடு
அயராம லாடிடலா மற்றோர்க்கிட்டா
நன்றுமே தேங்காமற் றேங்கும்யோகம்
நலமான பூரணமும் லயிக்கமாமே. (76)

லயிக்கும்பூ ரணத்திற்றாங் காமற்றாங்கும்
நயமான சொரூபத்தைக் காட்டும்பாரு
அயிக்குமே நூலாரார் கையிலுண்டு
அவருடைய பேர்தன்னைச் சொல்லுமென்றேன்
சயிக்குமே வாசிக்குக் குருவுமான
காரணமாம் நந்தியவர் காட்டும்நூலே
தியக்குமே சித்தருக்குக் கொடுத்தார் நூல்கள்
திருமூல ரறைந்தநூல் திடமென்பாரே. (77)

திடமான நூலிற்செப் பினதும் சொல்லாய்
தியக்கான சாரணையைக் கட்டுமார்க்கம்
குடமான குடோரியொடு லவணமுந்தான்
கொடிதான பரிக்குருவுஞ் செந்தூரங்கள்
தடமான சலனமொடு சத்துச்செம்பு
தனிப்பகண்ட குளிகையொடு செயநீராகும்
கடுவான திராவகமும் இனக்கூட்டந்தான்
கடிதான மூலிமகா அவிழ்தந்தானே. (78)

அவிழ்தமொடு வஸ்துவது பதினேழங்கம்
அடங்கலுஞ்சொன் னாரெண்ணா யிரத்தினுள்ளே
எவிழ்தமொடு யேழுலட்சங் கிரந்தப்போக்கை
இசையாயென் பாட்டீரெண்ணா யிரமாய்ச்சொன்னார்
கவிழ்தமெண்ணா யிரந்திரட்டிச் சுருக்கமாகக்
கதித்தையா யிரமாகப் பின்னுமத்தை
முவிழ்தமூவா யிரமுமா யிரமாய்ச்சொன்னார்
மூந்நூறும் முப்பதுமூன் றென்றென்றாரே (79)

என்றாரே சாற்றினதோர் நூலேழைத்தான்
　　எழுலட்சங் கிரந்தத்தின போக்கையெல்லாம்
கன்றாரே கருமபுரசம் போற்றிரட்டிக்
　　கருவெல்லாங் கண்டுணர்ந்த படியேசொன்னார்
நின்றாரே தந்தைகா லாங்கிநாதர்
　　நிகழ்த்தினார் சகலநூற் பார்த்துத்தேர்ந்து
அன்றாரே அகண்டம்போ லஞ்சகாண்டம்
　　அறையக்கேட் டண்டமெல்லா மளாவினேனே. (80)

அளாவினேன் நூற்றாறுபா னண்டந்தன்னில்
　　அய்யர்நந்தி சாஸ்திரமும் அளந்துபார்த்தேன்
துளாவினேன் பாட்டருட யேழுநூலைத்
　　துதிசெய்தேன சுருதியாம் வாக்கியத்தைக்
களாவினேன் காளாங்கி நாதர் நூலைக்
　　கருத்திருத்துச் சனகாதி நால்வர்நூலும்
விளாவினேன் ரிஷிகள்சித்தர் நூலையெல்லாம்
　　வெட்டவெளியாய்த் தூற்றி வீசினேனே (81)

வீசினேன் எழுகாண்ட மிடுக்காய்ச்சொன்னேன்
　　வெட்டவெளி யாகுதற்கு நிகண்டுசொன்னேன்
தூசினேன் சூஸ்திரமெழு நூறும்சொச்சம்
　　சொன்னதன்றி நிகண்டாறுபத் தேழுநூறு
பூசினேன் யோகத்துக் குறுதிசொன்னேன்
　　பூட்டுகிற லெட்சயத்தின் போக்குச்சொன்னேன்
ஓசினேன் மந்திரத்தி னுருவுஞ்சொன்னேன்
　　உறுதியாம் வாசியென்ற யோகந்தானே. (82)

தானாகக் காயத்தை உறுதிபண்ணு
　　தனித்ததோர் வாசிவைத்து அமைத்தங்கங்கே
பானாவென் னேரமுந்தான் பழக்கமாகிப்
　　பார்த்துநீ தெளிந்தாக்கால் தேகந்தூக்கும்
தேனாகத் தெளியாத காலத்திற்றான்
　　சித்தெட்டு மெய்யாது சித்தியாது
வானாக வாசிவைத்து உரைக்காதார்க்கு
　　மருவாது பூரணந்தான் வெளியாகாதே. (83)

வெளியாக வாசியைத்தான் வரவழைத்து
வீட்டுக்கு ளங்கங்கே வைத்திட்டுத்தான்
தனியாக வைத்திட்டு சாதித்தாக்கால்
சந்தித்து வாசியுமீ சனுமொன்ருகும்
வழியாக வாசியைப்போல் சித்தொன்றில்லை
மாசித்து சிவனவனும் வாசியொன்றில்
ஒளியாக வாசியது உயிரைமீட்கும்
உறுதியாம் சிவயோகத் தண்மைதானே. (84)

உண்மையா மிதுபோல வெளியிற்சித்தி
உத்தமனே பின்னென்று மில்லையோதான்
பண்மையாய்ப் பல்லுயிராங் காலமெல்லாம்
பார்த்தாலுங் கிட்டாது பாரிவில்லை
துண்மையாய்ச் சொல்லுயர்ந்த வாசிதானும்
சுருதிமுடிந் திடஞ்சுழுகு சூட்சமாகும்
வண்மையாம் வாதிசித்தி நிஷிகள்யோகி
வாசியைப்போற் சித்தியிலலை மதித்துநோக்கே. (85)

நோக்கவே சோம்பினல் நுட்பங்காணர்
துணுக்கத்தில் வாதம்வந்து வெய்திடாது
பார்க்கவே சோம்பலாய் நின்ருயானல்
பரமுந்தான கிடையாது பாழாஞ்சென்மம்
பேக்கவே வாசியையும் விட்டாயானல்
பிறவியாஞ் சாகரத்தி லழுந்திப்போவாய்
நீக்கவே வாசியைத்தான் நிறுத்துவோர்க்கு
நிஷ்களமாய்ச் சோதியொளி யாகுங்காணே. (86)

காணவே பரத்தினடி கண்ணேயாகும்
காண்பதரி தரிதுகண் ணெட்டானென்றீர்
பாணவே பரத்தினடி பார்க்குமமார்க்கம்
பண்பட்ட கண்ணை முனை மூக்கில்வைத்து
நாணவே காலையசை யாமல்நோக்கி
நாவிலொன்று சொல்கதிக்க வெறும்பாழாகும்
மாணவே மனோமணித்தா யொளிபோலாக
வரும்பட்டப் பகற்கோடி ரவியொப்பாமே. (87)

ஒப்பல்ல ஒப்பதிக பூரணந்தான்
உகமையாங் கரையில்லை பார்த்திட்டாக்கால்
கப்பல்ல களங்கற்ற பூரணந்தான்
கரையற்று நின்றதொரு வொளிபோதந்தான்
நிப்பல்ல நின்றபெண் பிள்ளைகாட்ட
நிறையற்ற நிற்குணந்தான் மோனமாகும்
முப்பல்ல மோனமாம் சமாதியுத்து
மூனாசி தனைமூடி முத்தியாமே. (88)

முத்தியாங் கானகத்தி லிருந்தாலென்ன
மூகையான கடுவூரில் வாழ்ந்தாலென்ன
தத்தியாந் தானமென்ன தன்மமென்ன
சாவென்ன பிழைப்பென்ன சாந்தியானால்
வத்தியாம் வானமென்ன அண்டமென்ன
வாருதியும் பொய்யாச்சு மனகன்றானால்
புத்தியாம் பொய்யாமோ கண்டதெல்லாம்
பிரிதியுற்ற சாங்கத்தாற் பொய்யென்பாரே. (89)

என்பதே கண்ணூரக் கண்டதெல்லாம்
எய்யாமற காணாதே போனதென்ன
அன்பதே அய்யர்பதம் வாசிவைத்து
அடைந்தார்க்குக் காணாது அசைவில்லாதால்
நன்பதே காணுமது நடனந்தானும்
நலமாக வூணதச நாதந்தோனும்
துன்பதே சுருதிமுடிந் திடமுந்தோனும்
சுத்தசை தன்னியமாம் போதபரமே. (90)

போதமே நோக்கவுந்தான் எளிதோசொல்லு
புக்கியே வாசிவைத்து நிலைத்துப்பாரு
நீதமே மவுனமதாய் நிலைத்துவுண்ணு
நிலையான கண்ணுக்கு அடுக்கடுக்கச்
சாதமே முறையுடன்றப் பாதுநில்லு
தப்பாமற் பார்க்கவுந்தான் செயலோசந்தி
ஓதமே செயலூடி யொளியுதாகும்
உறுதிமுப்பாழ் வெளிதாண்டி முடிவுமட்டே. (91)

முடிவுனக்கு மேலாதி யொன்றுமில்லை
முக்கியமாம பராபரமு மில்லைகண்டாய்
எடிவெனறு லிதுக்கொக்கப் பின்னொன் றில்லை
ஏகமென்பார் காணுர்க ளெல்லையெல்லை
துடிவுசொனன சூட்சவராட் டியனுங்கேளு
தூயகண்டந் தானில்மன வடியைவைத்தான்
படிவுபண்ணி யெட்டுள்ளாய்ப் புகுந்துமுடிப்
பயனறிந்து சாதிக்க வல்லோர் தானே. (92)

வல்லோர்கள் பார்ப்பார்கள் வராட்டியந்தான்
வாய்க்குமோ யெல்லோர்க்கும் எளிதோஞானம்
பல்லோர்கள் பரையைவராட் டியைத்தான்பார்ப்பார்
பாங்குமயிர்ப் பாலமெருப் பாறுதாண்ட
நல்லோர்மா யந்தவிடு பொடியதாக்கித்
தரிக்கின்ற வாசியையுஞ் சாந்தம்பண்ணி
மல்லோர்கள் மார்க்கமறு தலமுந்தாண்டில்
மந்தியாம் மற்கடக மிறந்துபோமே. (93)

மற்கடகம் ஐம்புலன்றான் மாண்டுபோகில்
மாசத்தி பரைசுடர்தான் கோடிபானு
கற்கடகம் கண்டப்பால் வெளியைப்பாரு
கடிவெளிக்கு அடியில்லை முடிவுமில்லை
உற்கடகம் முடிக்குவெளி யில்லைகாணு
ஊணவே படியில்லை மனந்தானுண்ணும்
புற்கடகம மனந்தானே மகத்துவமித்தனையும்
பெருவழியைத் தாண்டிடக்கூ டித்துத்தானே. (94).

கூடித்து மனந்தான்மா யத்திற்கூடிக்
குழப்பியே அலைந்ததினுற் குறிகூடாது
வாடித்து மனந்தான்போ தத்திற்சொக்கி
மாறாத கருணைக்குள் வாழ்ந்தார்சித்தர்
காடித்து மனமாறாக் கருணையாலே
கண்டிக்க வாய்க்குமெளி தாமோசொல்லு
மாடித்து மாறாத கருணையாலும்
வாச்சுதே மெய்ஞ்ஞான சித்திதானே. (95)

சித்தியாய் மாருத கருணைக்குள்ளே
ஜெகஜால விதனைதயெனத் தெளிந்திட்டார்கள்
சித்தியாய் மவுனயோ கத்தில்நின்று
தெளிந்திட்டார் தெளிந்திட்டார் சைதன்யத்தில்
சித்தியாம் பெரியோர்க்கு மறஞென்றில்லை
சிகரமாம் வாசியுஞ்சொற் படியேகேட்கும்
சித்தியாம் மனவாசற் பெரியோர்கட்குச்
சிற்சொலரி தாம்பிரம விசாரமாமே. (96)

பிரமவிசா ரத்தைப்பே சிடவேதாந்தம்
பேசும்வே தாந்தமனு நாலதாகும்
பிரமவிசா ரந்தையுமே பேசபதினெட்டும்
பேரான அறுபத்து நாலுகலைநானும்
பிரமவிசா ரத்தையுமே தொண்ணூற்றாறும்
பேசுவதால் நீபேணு மற்றஞானம்
பிரமவிசா ரத்தைப்பே ரறியாமாந்தர்
பேரான மாயைதன்னி லழுந்துவாரே. (97)

அழுந்துவார் தானென்ற ஆங்காரத்தால்
அவ்வேரைப் பிடுங்காதா ரறியமாட்டார்
வழுந்துவார் மவுனியென்ற வாசியோர்கள்
மாசற்ற பிரமவிசா ரத்தைக்காண்பார்
மழுந்துவார் பிறப்பில்லை மரணமில்லை
வாசியுமே சித்தித்த மகததோர்க்குத்தான்
எழுந்துவார் காயசித்தி யோகசித்தி
எழிலான வாதசித்தி யேத்தந்தானே. (98)

வத்தமாம் ரசவாதி சித்தர்தன்னை
இடும்பாகக் காணுமற் றூஷித்தாக்கால்
கூத்தமாம் ரவிகோடி நரகில்வீழ்வார்
கொடும்பசியால் வருமையாற் றியங்குவார்கள்
காத்தமாம நரகமொடு சொர்க்கந்தானும
நன்மையா மிதுரெண்டுஞ் சொல்லக்கேளு
மாத்தமாம் மலத்திலே புழுக்குழாங்கள்
மகத்தாகச் செனித்ததுபோல் நரகந்தானே. (99)

தானென்ற கோபம்வந்த முறைமையாலே
தாக்கான செனனந்தான் பலவுமாகும்
தேனென்ற செனனமதாய்ச் செனிப்பதெல்லாம்
திகைப்பான கோபமது கொடும்பாவந்தான்
மானென்ற சொர்க்கத்தின் வழிதானேது
மகத்தான மானிடர்க ளாய்ச்செனித்துப்
பானென்ற முன்செய்தபோ பலத்தினாலே
பராபரத்தோ டொன்றில்மகா சுகிர்தந்தானே. (100)

தானான பூரணத்தின் மேன்மைபாரு
தளிரான தீபம்போற் றானுந்தேகம்
கானான கண்டிப்புங் கண்டிடாது
கத்தியுமோ நடுவோடுங் கைதட்டாது
கோனான மனவாசி யோடேவொன்றில்
கூராத பூரணமுன் குறிப்பாய்த்தோன்றும்
நானான சாயைகண்டங் கொழித்திப்போடும்
நலமான நிர்மலங்கற் பூரத்தீயே. (101)

கற்பூரத் தீபம்போ லொளியுமாகும்
கடிதான பூரணம்வா வென்றேகூவும்
பற்பூரம் பாவின்வா சனைதான்போகும்
பலவான துன்பமொடு ஆபத்தும்போம்
அற்பூரக் காலமது அழியாதாகும்
அதிமாய மிலையண்ட மந்தண்டத்தில்
உற்பூரத் தோயவெரி முகத்தருக்கு
உறவாடல் மெத்தவுண்டு உண்மையாமே. (102)

உண்மையாப் பலியாது யோகந்தானும்
உறுதியாம் பசுவான நீசருக்குப்
பண்மையாம் பாவமாம் பாவிக்குத்தான்
பலியாது கொலைசெய்த பாவிக்கொக்க
வண்மையாம் மத்திபமாம் புத்தியானோன்
மருளான மகாயோகி மகத்தாம்முடன்
எண்மையாய்த் தூஷகனு யேற்றும்பொய்யோன்
இடும்பனு மழும்பனொடு சோபந்தானே. (103)

தானான பெண்ணைப்பார்த் தேங்கிச்செல்வோன்
 தான்கற்ப வரைதப்பு மப்பாபாவி
தூனான சோகவிகா ரந்தான் சோம்பன்
 துணையான மூத்தோனைத் தந்ததாயை
ஆனான அருவருப்ப தாகவைவோன்
 அதீதமாம் வீணரற்ப ரானதூரன்
வேனான வெறுமைவெகு துஷ்டமூர்க்கன்
 வெரும்பிலுக்குக் குருத்தோஷி பொய்யனாமே. (104)

ஆமேயக் கிரமந்தா னடங்காக்காமன்
 அழும்பனும் எரிமுகத்த னரியபாண்டி
தீமைதுடுக் கானசுசி யில்லாச்சண்டாளன்
 சிவவேடந் தெரிசிக்கிற் றாஷிப்போன்றான்
வாமேவு கோள்பொய்யோன் லோபியீனன்
 மகத்தான யீனங்கன் வாதிதர்க்கன்
மாமேவு மாங்கிஷமே புள்ளைத்தின்னிபோன்
 மதுபாகி யிவர்களுக்கு யோகம்பொய்யே. (105)

யோகமா மிவர்களுக்கு யீந்தாற்பாவம்
 யுபமில்லா மங்கையரு ழுழலுவானே
யாகமா மிவர்களருச் சிக்கலாகா
 யாரியாய்ப் பிரமகத்தி யணுகும்பாரு
காகநூல் கற்பத்தைச் சூட்டலாகா
 கண்காணாத் தூரத்தே கடிசாய்நில்லு
நாகநூல் ஞானத்தே நவிலலாகா
 நாட்டினால் நரகெய்தி நலுங்குவாயே. (106)

நலங்கவே யாருக்குக் கொடுப்பதென்றால்
 நாதாந்தி வேதாந்தி ஞானவான்கள்
மலங்கவே அவதூதி தர்மசீலன்
 மகத்தான சிவயோகி தவமார்க்கத்தார்
துலங்கவே சுத்ததசை தன்யத்தோர்கள்
 சொல்மொழியை மாறாத தூமையாளர்
கலங்கவே கர்மானுஷ் டானமுற்றோர்
 கற்புடைய மங்கையரைக் கருதார்தாமே. (107)

தாமென்ற அன்னையப்ப னைப்பூசிப்போர்
தமையடைந்த எளியோரைத் தற்காபபோர்கள்
ஏமென்றெவ் வுயிருந்தம் முயிர்போலெண்ணி
இரங்குவோ ரம்புதப்பி யிகழ்ந்திடாதார்
வாமென்ற வாசியுடன் வாதித்தாடும்
மதியோர்கள் வாமத்தின் வழியில்நிறபோர்
ஆமென்ற அப்பினுட வுப்புப்போலே
அடைந்தோர்க்கு அடங்கலும்போ திக்கலாமே. (108)

போதித்து யோகத்தின் பொருளைக்காட்டிப்
புகழான ஞானத்தின் பொருளைச்சொல்லு
ஆதித்து அமர்ந்தாக்கா லதிற்பிழைப்பான்
அல்லாட்டாற் பேயாவான் தஷ்டையீன்ற
சோதித்து நாள்வரைக்குங் கற்பஞ்சூட்டு
துடியான வாதத்தின் சூட்சனுசொல்லு
காதித்து அருளோடு பொருளுங்காட்டு
கைமுறையாய்க் குளிகையொன்று சூட்டிநீட்டே. (109)

நீட்டுகின்ற யசபைநிறைந் தமுதங்காட்டும்
நீங்காத பூரணத்தை யுத்துப்பாரு
நாட்டுகின்ற எட்டுகால் தன்னிற்சேர்த்து
நடித்துமே கண்டத்தே நின்றுகூடி
ஆட்டுகின்ற ஆடல்நிறை கதிர்தனக்கே
ஆண்மைகதி ரேதமுனை மூக்கில்நின்று
ஊட்டுகின்ற யோகியின்றன் னிடத்தேயோடும்
உதித்ததொரு ஞானியருக் குற்றபதமதுவே. (110)

பதமான மாந்தர்செத்த முறையைக்கேளு
பதியான அம்புவியில் முழங்குஞ்ஜீவன்
நிதமான உறக்கம்கெடு வீதியோடல்
நிறைந்திடுஞ்சை யோகங்கொட் டாவிபோதல்
இதமான முப்பதறு பதுமாயோடும்
இதமான புரியஷட மூவொன்றாக
கதமான நாட்குநாட் சிரணித்து
நாடியே நமன்பதிக்கு வெய்துவாரே. (111)

நாடுமிவ னிறந்தோடி நமனுக்கெய்வார்
நலமான வாசிநிறைந் துள்ளேவாங்கில்
ஆடுதிரு நடனமுமம் பலமுங்காணும்
ஆட்டினுட் குறிப்புறுன மேலோகீழா
நாடுமூ லாதாரம் தொந்தோமெனறே
நவில்தலமா றருகியது சுழியிஞேடே
பூடுகபா லம்புகுந்து பதத்தில்மேவி
புகுதுமண்ட லத்திதமா யிரத்தியெட்டே. (112)

எட்டாக மண்டலமுட் டிககவிழ்ந்து
யிதமாகக் கைகண்ட யோகங்காணும்
கட்டாகக் கபாலத்தே கடந்துமெய்யைக
கதிர்போலே புகையோடே துவாதசாந்தம்
உட்டாக வுண்டசபை யையறிந்து
உயரமுக டேறக்க பாலங்கல்லாம்
இட்டாகக் கடுங்கனலே மிகவுமுண்டு
யீதெல்லாந் தெரிசனமா மேருங்காணே. (113)

ஏறுமே லென்றிர்கண் மூக்கிலாச்சு
யேறியே வாசிகொண்டு மனத்தோடேனு
ஊறுமங்கென் றுன்னிநா லுருகும்பாழில்
ஒளியோடு பூரணந்தான் கோடிபானு
தேறுதீ பச்சுடர்திக் கெல்லாங்காணும்
தெவிட்டாத முனைகாசி சிறக்கும்நாலு
வீறுவுரைந் திடுயோகத் தாலேமுட்டி
மிகக்கடந்து பொருட்காணும் ஞானமானே. (114)

ஞானந்தான் பதநாலாம் ஒளியுமாச்சு
நலமான வானந்தான் யோகமாச்சு.
பானந்தான் பருமநிகல் லூறலாகும்
பரவுமுப்பா ழைக்கடந்து பாருதியை
தானந்தான் பார்க்கபரம் பொருளுமாச்சு
சாதித்து யேறிடவே வெறும்பொய்யாச்சு
தோனந்தான் தோத்தரித்துச் சத்திமனோமணியைச்
சுகமுற்றுப் பூரணத்தைக் கண்டிட்டேனே. (115)

கண்டிட்டுச் சுழிமுனையில் மவுனமோட்டிக்
கண்மூடி விழியிரண்டும் நினைவில்நோக்கப்
பண்டிட்டு விசும்புபளிச் சென்றுதோணும்
பராபரமா மணித்தாயும் பரியொன்றீவாள்
அண்டிட்டு அதிலேறில் வெளியாய்க்காட்டும்
ஆண்மையாம் போதத்தி லடுத்துநிற்கும்
துண்டிட்டுப் பரத்தினடி தன்னிற்கட்டு
சுருதிமனோ மணித்தாயும் வாவென்பாளே. (116)

வாவென்ற சடமெல்லாம் பிரமன்கூறு
மறைந்துநின்ற ரெத்தாமசம் மாலின்கூறு
போவென்ற துதிக்குள்ளே புரியஷ்டந்தான்
புகழான சூட்சமென்ற தேகங்கேளு
சேவென்ற சிகாரந்தான் சிவன்றனென்று
சேர்த்துமேல் வகாரமயேஸ் வரந்தானென்று
தாவென்ற அகாரம்சதா சிவன்தானென்று
சார்ந்துநின்ற விந்துவதன் மேலுமாமே. (117)

மேலான விந்துவின்மேல் நாதமொன்று
மிக்கவதின் மேற்சததி யொன்றுகேளு
சாலான யிதன்மேலே சிவன்தானென்று
சத்திசிவ ஞரென்னில் வாட்டியந்தான்
பாலான வதின்மேலே பரைதானென்று
பாருமிந்த எட்டிலோர் புரியட்டந்தான்
மாலான எட்டில்பிறப் பிறப்புமாச்சு
வாறுன புரியஷ்ட மார்க்கந்தானே. (118)

மார்க்கந்தான் புரியஷ்டக் கூத்தேகூத்து
மகத்தான கோடிசென்ம மெடுத்தேயாடும்
ஏர்க்கபுரி யஷ்டத்தேழ் வரையாத்தோற்றம்
எங்கும்விரிந் தாடப்பிர பஞ்சமாச்சு
மார்க்கந்தான் புரியஷ்டப் பரவான்கூத்துப்
பண்பாக விதையறிந்து கூர்ந்துபாரார்
தீர்க்கந்தான பார்த்தறிந்த பெரியோர்தாமும்
திறத்தோடே தள்ளியதின் மேல்நிற்பாரே. (119)

நிற்பான பரைமேலே முப்பாழ்கேளு
நீங்கியொன் று வெளிப்பாழா மதுக்குமேலே
உற்பான வெளிபாழாய் நிற்கும்பாரு
உயர்ந்துமே லதைத்தாண்டி யுரைக்கக்கேளு
விற்பான வெளியொளிப்பாழ் விரைந்துபாரு
மிகுமூன் று வரைதாண்ட அணைத்தாய்நிற்பாள்
தற்பான மொழியுடையாள் தமரின்வாசல்
தனிப்பரந்தான் போதமது வொன்றாய்ப்பாரே. (120)

போதமது தானென் று மவட்கேட்டாரு
பூரான தண்டமென்ற தவட்கேபேரு
சேதமென்ற தவளடுக்க அவளேபோதம்
சேர்ந்தணுகில் தமர்க்குள்ளே சேரலாகும்
ஆதமது கண்டவர்க ளகண்டவீதி
ஆதியில்லை யந்தமில்லை யறியப்போகா
நேதமது போதமது வென்னசாரும்
நோறிந்து மனக்குரங்கு நேரொட்டாதே. (121)

நோரதென் றிசைத்தகிவ யோகிதானும்
நினைத்துன்னிப் பரையளவு மோடினாலும்
காரான பிறவிவந்து வெய்துமெய்தும்
கருவில்வந்து பிறந்தாலும் யோகியாவான்
பாரான யளவுபுரி யஷ்டமாச்சு
பண்பான வரைகடந்து வெளிப்பாழுற்றால்
ஆரான வெளிப்பாழை யகண்டமென் று
ஆர்ச்சித்து பார்த்தாக்காற் பிறக்கொட்டாதே. (122)

ஏதென் று பிறக்காம லதுக்குள்நின் று
இன்னமொரு வரையேற விதுவேயென்பான்
வாதென் று அதுக்குள்ளே மயங்கியேங்கி
மற்றுமொரு வரையேறி விதுதானென்பான்
தீதென் று வரைதிறந்து அதின்மேலேறச்
சேர்ந்துநின்ற வுன்மனையை யிதுதானென்பான்
யாதென் று ரவிகோடி வன்னிகோடி
யறிவான மதிகோடி யரிந்துபாரே. (123)

பரிந்துபார் மூதற்பா ழிற் பூதம்பூதம்
பரிவாகச் சித்தித்தால் வாதியாவான்
எரிந்துபா ரிரண்டாம்பா ழடுத்திட்டாக்கால்
எட்டெட்டு மறுபதுநா லானசித்தன்
முரிந்துபார் மூன்றும்பாழ் புக்கினுக்கால்
மூச்சான வாசியது பிறந்ததானம்
நரிந்துநால் பரிந்துபோ மிடமுங்கண்டால்
நமனடுங்குங் கோணவிடம் நாட்டிடாயே. (124)

நாட்டிப்பார் நிராகாரந் தன்னிற்சொக்கி
நலமாகக் குழைந்துள்ளே புகுந்தாயானல்
தாட்டிப்பார் தானென்ற நாமம்போச்சு
சாஸ்திரத்தி லாராய்ந்த பொருளும்போச்சு
சூட்டிப்பார் சுழுத்தியைப்போ லுறக்கமாச்சு
தூங்குவார் மாடுபோ லொன்றுங்காணார்
தாட்டிப்பார் சடம்போகஉ படல்புகுந்தால்
தனித்தசிவன் போல்வாழ்வாய் நீயுங்காணே. (125)

காணவே ஆடியதோர் கூத்தைப்பார்த்துக்
கருத்துறைத்த பின்புதான் வாதம்பாரு
பாணவே ஆதாரம் நோக்கியேறு
பரதத்தா லாடியதோர் கூத்தைத்தானும்
நாணவே வாசியுட நடப்பைக்கண்டால்
நடனமாங் கூத்ததுவுங் கண்முன்காணும்
தாணவே நடனத்தின கூத்துக்கண்டால்
தடிகதோர் சாவதுவும் பொய்யாய்ப்போமே. (126)

போமென்று சொன்னதொரு ஆறுதாரம்
போக்கான தளத்தில்நிற்கு மட்சரந்தான்
ஓமென்ற ஐம்பதட் சரமேயாச்சு
உத்தமனே யொன்றங்கே காணேங்காணேம்
ஆமென்ற வாசானை யடுத்துக்கேளு
அதுவறிந்து சொன்னுக்கால் குருவேயாகும்
நாமென்று அறியவெனு விரண்டுங்கெட்டான்
நலமான ரெண்டுகெட நாதனுமே. (127)

காமெனப்போ இறதும்வரு இறதும்ரெண்டாம்
நலமான வேறெழுத்து எங்கேயென்றால்
கோமென்ற குருபதத்தி லயிக்கமாகக்
கூடியே மருவிநின்று ஹூமென்றாகி
வாமென்ற வாசியினாற் சிகாரமாகி
வாசியுட னொன்றிடவே சிங்கென்றாச்சு
தேமென்ற வோரெழுத்தால் வாசியாச்சு
சிவனாச்சு சடமாச்சு அண்டமாச்சே. (128)

ஆச்சென்ற ஓரெழுத்தாற் கெற்பமாச்சு
அரகரவுற் பனமுமொடுக் கினமுமாச்சு
ஓச்சென்ற யெழுத்தாலே ஒளியுமாச்சு
உள்ளடங்கச் சோதியைப்போல் நந்திநந்தி
தேச்சென்ற யெழுத்தடங்கிற் சோதிகாணும்
தேகமுமோ விளக்கொளியாம் சிந்தையில்லை
தாச்சென்ற சந்திரனும் பானுமொன்றாம்
தயங்காதே சுழிமுனையிற் பேணிக்கூடே. (129)

கூடவே முப்பாழும் மூன்றுவீதி
குறிப்பாக மூன்றையும்நீ கூடிச்சொக்கு
நாடவே நாலுக்கு ளடக்கம்பாரு
நலமாக வேணிபழு வாகக்காணும்
ஏடவே தளத்தோடு எழுத்துப்பாரு
யேறினால் முப்பாழை கடந்துபோகும்
பாடவே பரத்தில்மனோ மணியாந்தாயும்
பரிவான அமுதமொடு பாலிப்பாளே. (130)

பாலிப்பா ளதுகடந்தால் நிராகாரந்தான்
பார்த்துமே தெளிந்தபின் பறந்தேயேகில்
போலிப்பாள் தெளிவான போதபோகம்
போக்கோடே யென்குருவு மதுக்குட்சென்றார்
ஏலிப்பா ழிதுகடந்து யேறிப்போனேன்
யிளைப்பாறி யிதுகடந்து மவுனத்தேறில்
சோலிப்பாள் சிலம்பொலியிற் புக்கிஞானம்
சுகமெல்லாங் காலாங்கி அய்யர்க்காச்சே. (131)

அய்யரென்ற காலாங்கி நாதருந்தான்
அறியாத சிறியோர்க்கு அறிவுதந்தார்
உய்யரென்ற உடற்பொருளோ டாவிமூன்றும்
உதகத்தாற் கொண்டவர்க்குப் பலந்தானென்றேன்
செய்யரென்ற சிலம்பொலிக்கு எவரும்வந்தார்
சிரசுவைத்து அவர்பதத்திற் சரணஞ்செய்தேன்
எய்யரென்று ஏனையாண்டு ஞானங்காட்டி
ஏழமையாம் சஞ்சலத்தை யோட்டினாரே. (132)

சஞ்சலத்தை யேயோட்டி வாதங்காட்டிச்
சார்ந்திடவே யென்னையாண்டு குளிகைகாட்டி
மஞ்சலத்தில் வாசியென்ற குதிரைகாட்டி
மனமடக்கிப் பூரணத்தி னந்தங்காட்டி
தெஞ்சலத்திற் சித்தரெல்லாம் பணியக்காட்டி
தேசிகரா மென்குருவும் நடனத்தெய்தில்
கஞ்சலித்துக் கண்களித்தேன் கருணைகூர்ந்தேன்
கருணைமைந்த ரென்றுரைத்துக் கடாட்சித்தாரே. (133)

ஆறென்ற புலனறுத்தால் மனமொன்றாச்சு
அதிகமன வாயுவெனப் பூசித்தோங்கும்
போரென்ற வாயுமேல் மனதுயேறிப்
பொறிகடந்து நெறிகடந்து போக்குந்தாண்டி
கூரென்ற ஆறேடு பதமுந்தாண்டி
கொடிதான முப்பாழின் போக்குந்தாண்டி
மாறென்ற மணித்தாயைச் சரணம்பண்ணி
வைத்துப்பார் நாலுக்குள் மருவிப்பாரே. (134)

மருவியே முந்தமுந்தி மூலம்நீதான்
வாசிகொண்டு பாசசியதில் மாட்டியேறும்
உருவியே குதிரையின்மேற் கொண்டாயானால்
உருப்பான நாலைவிட்டா விலக்கமில்லை
அருவியே முன்பின்னுங் கீழுமேலும்
அழலென்ன தழலென்ன மதிதானென்ன
கருவியே கண்கொள்ளாக் காட்சியாகுங்
கண்கொள்ளாப் போதகத்தைக் கண்டிடாயே. (135)

கண்டிட்ட மனதாலே தவமுமாச்சு
கலந்தவுயி ராவதுவும் மனமேயாச்சு
மண்டிட்ட வாயுமேல் மனமுமாச்சு
மகத்தான சஞ்சலத்தால் மனம்பேயாச்சு
அண்டிட்ட தீப்போல மனமேசென்று
அகண்டத்திற் சென்றதென்று லதுதான்போதம்
மண்டிட்ட மனம்விட்டால் ஞானம்போச்சு
வாசியைத்தான் நழுவவிட்டால் யோகம்போச்சே. (136)

யோகத்தை விடுகாதே மவுனம்பார்க்க
உற்பனமாய்ப் புத்தியுள்ளா னென்றுசொல்லி
காகத்தைக் காலாங்கி நாதர்தாமும்
கடாட்சித்து முன்னேதான் பிராணாயாமம்
மோகத்தை முதிர்ந்தபின்பு மொழிந்தசொல்லு
முந்தினதோர் மூலத்தி லகாரமீசன்
தாகத்தை யுகாரமது சத்தியாச்சு
தனித்திரண்டுங் கூடுவது மவுனமாமே. (137)

மவுனமா மூலத்தை முந்திமுந்தி
மருவினாற் பளிச்சென்று லிங்கங்காணும்
நிவுனமாம் லிங்கமது நந்திநந்தி
நேராக யெட்டிதழும் விரிந்துகாணும்
உவுனமா மதைவிட்டுச் சுழினையோடே
ஓகோகோ அனாகதத்தின் மவுனமோட்டு
சுவுனமா மசைந்துநிற்க மவுனத்தாலே
சோமசடை யசைந்தாட நடனங்காணே. (138)

காணமே லேறியாக் கினையினுள்ளே
கருத்தூணி மவுனத்தே தாக்கினாக்கால்
பூணவே சதாசிவன்றான் நடனஞ்செய்வான்
பூரணமாய்ச் சிவகாமி யிருந்துபார்ப்பாள்
ஆணவே அவ்விடத்திற் கலந்துநித்தம்
அணுகினா லம்பலத்தி லடையலாகும்
மாணவே அதைவிட்டு அறிவின்மூலம்
மதிததேற வாசியுட முறைமைகேளே. (139)

முறைமையா யறிவுக்குள் மவுனமூணி
முதிர்ந்துமனந் தேறமட்டுந் திறமாய்நில்லு
திறமையா யறிவென்று லெளிதோமைந்தா
தேறினதுந் தவறினதும் அதுக்குட்பாரு
அறிவையா யறிவினுட மூலங்கண்டால்
அசடில்லை கற்பூரந் தேகமாச்சு
சிறுமையாய் நாலையத்துச் சிவன்தான்வந்து
திரட்டியன்னங் கொடுங்கையிலே வுண்ணலாமே. (140)

உண்ணலா மென்றுநித்தம் மூலத்துள்ளே
உறுதியா யொவ்வொன்று யுரைச்சுக்காணு
எண்ணலா மினத்தோடே வரிசையோடு
யேமாற வில்லாம லேற்றியாடு
கண்ணலா யட்சரத்திற் கருத்தைவைத்துக்
கருதுகின்ற மந்திரத்தைச் செபித்துவுண்ணு
பெண்ணலாம் புலனையவ வெரிருக்கும்
பேரான வீட்டில்வைத்துப் பூட்டிப்போடே. (141)

பூட்டிட்டு நாலாக வெளியினுள்ளே
புகழ்கின்ற சோதியைப்பார் பொருளுந்தோன்றும்
கூட்டிட்டு ஒவ்வொன்றாய்க் கடந்துகூடு
கொழுகியதோர் மூன்றான அரையினுள்ளே
மாட்டிட்டு மேற்கண்ணின் மணித்தாய்பாதம்
மருவிநின்ற கொலுக்காணக் கண்ணுண்டோசொல்
மீட்டிட்டு மேலான பதந்தான்சென்றால்
வேதாந்த முடிவான வெளியுமாச்சே. (142)

ஆச்சென்ற வெளியிருண்ட வெளியேயல்ல
ஆதியாம!உன்மனத்தாய் விளக்காய்நின்றாள்
ஓச்சென்ற ஒளியென்றாள் ஒளியுமல்ல
ஓகோ ?கா யிருவருந்தா னென்றில்நின்றால்
காச்சென்ற நிராகாரங் காணுங்காணும்
கண்டுடனே மனதூணிக் கலந்துபோகும்
வாச்சென்ற விளக்கொளியில் விட்டில்வீழ்ந்து
மாண்டதுபோல் மனஞ்சென்று மருவுந்தானே. (143)

மருவினுல் முத்திமுத்தி மைந்தாகேளு
மற்றதெல்லா முத்தியல்ல மருவுமார்க்கம்
புருவினுல் மனஞ்செயித்தாற போக்குமில்லை
பூணுட்டால் பேய்ககூத்தா மெல்லாம்மாயை
உருவினுல் யோகத்திற் கிதுவேமார்க்கம்
உண்மையாய்ப் பார்த்தபடி யுறுதிசொன்னேன்
இருவினை விந்தமுறை யேறறுவாசி
ஏருட்டால் யோகமெல்லா மிடுக்குத்தானே. (144)

தானன நாதவொலி நின்றுவோங்கச்
சமத்தான பூரணத்தைச் சுழன்றுசொக்கி
வானன மனமிருந்த நிராகாரத்தை
வாய்திறந்து சொல்லுதறகு நாமமேது
பானன குணமோநிரஞ் சனமோகாணேன்
பாங்கான கரையில்லாப் பதியோகாணேன்
ஊனன மூலத்தில் நின்றுயேறி
ஓடினே னுற்பனத்தைக் கண்டிலேனே. (145)

உற்பனமாம் பூரணத்தின் கரையோகாணேன்
உயர்ந்துநின்ற சனகாதி நால்வர்காணுர்
விற்பனமாம் மூலகுரு தானுங்காணுர்
மேன்மையாஞ் சுகர்முதலாய்ச் சித்தர்காணுர்
நிற்பனமாம் நிஷ்களத்தின் கரையைச்சொல்ல
நிலையான வேதாந்தம் விளம்பக்காணேன்
அற்பனமாம் மனமோடி காடிச்சென்றால்
அவடத்தே லயித்துநின்று அழுந்தலாமே. (146)

அயிச்சுநின்று அழுந்துவது யெவ்வாறென்னில்
அன்னமிஞ்சி வலுவுண்டா மாண்மைபோல
சுயிச்சுநின்று சொக்குவது யெவ்வாறென்னில்
சோதியா மமுதமுண்ட தூய்மைபோலக்
குயிச்சுநின்று அழுந்துவது யெவ்வாறென்னில்
கோரக்கர் கற்பமிஞ்சுங் கூர்மைபோல
இயிச்சுநின்று இம்மூன்று மொப்புமல்ல
யேத்தமாம் ஆனந்தம் போதைதானே. (147)

தானெங்கே பார்ப்பதென்றால் மூலம்பாரு
 தருகுறும்ப மிலேச்சருக்குத் தோணுச்சோதி
ஆனெங்கே ஆதார நிலையுங்காணும்
 ஆட்டான முப்பாழுங் கடந்துபோகும்
கூனெங்கே தமர்வாசற் குள்ளேபுக்கில்
 கோடிமதி கோடிரவி கூறொண்ணுது
பூனெங்கே பூரணத்தின் கரையோகாணேன்
 பூந்துடனே காந்தயம்போற் பொருந்தும்பாரே. (148)

பொருந்துவது யெவ்வாறு யென்றுபேசி
 பெருந்தீப முண்டதிரி போல்நெய்யாகும்
வருந்துவது வருணசலம் ரவியுண்டாப்போல்
 மகரனஞ்சு வர்னமுண்ட படிகம்போலத்
தருந்துவது சலத்தடங்குங் குமிழிபோலச்
 சத்தம்பின் கூடுவிட்டுக் கெட்டாப்போல
ஒருந்துவது மொடுங்குவது மிதுவேமார்க்கம்
 உத்தமனே மனத்தோடு உண்ணுஉண்ணே. (149)

உண்ணுமுண்மை பானமா தாரமாச்சு
 உண்மையாஞ் சார்ந்ததெல்லாம் யோகச்சார்வு
வண்ணுமுண்மை விவேகமென்ற வாளுமாச்சு
 வாய்திறக்கா மவுனமன்றே மனதுக்கின்பம்
நண்ணுமுண்மை ஞானத்துக் கோடும்வீதி
 நவிலாத திடமல்லோ மகத்தாம்வீரம்
புண்ணுமுண்மை பூரணமாம் பொறியைத்தள்ளு
 போக்கோடே மவுனத்திற் பூட்டிநில்லே. (150)

நில்லாமல் மடவார்பால் மாயத்தூடல்
 நிரிதலையாங் கொள்ளிமையத் தெறும்புபோலாய்க்
கல்லாமற் காமுகனுய்த் திரிந்திடாதே
 கமதான பாழர்சை தொடர்ந்ததென்றால்
வல்லாமல் விழிகண்டு வலையிற்சிக்கி
 மற்றதுமே சமாதிவிட்டுக் கழன்றுயானல்
அல்லாமலொன்றுமில்லை நீயுங்கெட்டாய்
 அதிஷ்டமிருந் தாலாமென் றறிந்துகொள்ளே. (151)

கொள்ளவே கெவுனமதாய்ப் பறந்தமார்க்கம்
　　கூறுகிறேன் துலேதூர பேகிவந்தேன்
மெள்ளவே பொதிகைமலே சென்றபோது
　　மேலான முனிசித்த ரிருக்ககண்டு
உள்ளமகிழ்ந் தொவ்வருவ ரெழுந்துபோற்ற
　　உவந்துமே யானுமவர் களையுமபோற்றக்
கள்ளமிலா தவர்கள்தனித் தனியேயோகம்
　　கடுமையாய்ச் செய்துபெற்ற ஞானமாமே. (152)

ஆமப்பா ஞானமெல்லா மெனக்குச்சொன்னூர்
　　அவர்களுக்கு அந்தரங்கம் யானுஞ்சொன்னேன்
வாமப்பா அகஸ்தியமா முனிவர்தானும்
　　மகிழ்ந்தென்னைப் போதரிஷி யென்றழைத்தார்
தாமப்பா பாட்டர்திரு மூலரென்னைத்
　　தான்ஞான ரிஷியென்றூர் மற்றேரெல்லாம்
ஓமப்பா யோகமஹா ரிஷியென்றூர்கள்
　　ஓகோகோ அவர்களிடம் விடைபெற்றேனே. (153)

பெற்றேனே பேரதனைப் பெற்றுக்கொண்டு
　　பெருமையுள சதுரகிரி மலேக்குமேலே
நற்றேனே பாய்ந்தோடும் அருவியோடை
　　நாற்புரமுந் தானுண்டு நானுஞ்சென்றேன்
பற்றூசை யில்லாத சட்டைநாதர்
　　பலம்பெற்ற கோரக்கர் தன்னைக்கண்டு
கற்றேனே மூலிகையு மவர்க்குச்சோன்னேன்
　　கண்டவருக் குறறதிது பலிக்குந்தானே. (154)

பலிக்குமே நினைத்ததெல்லாங் கலிகாலத்திற்
　　பலங்கொண்ட தெய்வமகா லிங்கர்தன்னைச்
சலிக்காமற் கண்டுதெரி சித்தபேர்க்குத்
　　தனையரொடு சகலபாக் கியமுண்டாம்
ஒலிக்குமே உலகத்தார்க் குதவிமெத்த
　　உண்மையாம் சுந்தரனு மங்கேபாரு
சொலிக்குமே சதுரகிரி மலேயைப்பற்றி
　　சொன்னூரென் னையர்நூல் காட்டினேனே. (155)

காட்டியே அவர்களிடம் விடையும்பெற்றுக்
　　ககனமதிற் கெவுனமதாய்ப் பறந்துசீன
காட்டிலே சென்றிருந்தேன் அங்குற்றோர்க்கு
　　நாற்றொழிலுங் கற்றுவைத்தே யொருமையாக
வீட்டிலே சித்துகளை யாடச்செய்தேன்
　　விளையாட்டாய் மலைவனத்திற் சஞ்சரித்தேன்
பாட்டிலே உபதேச மிதனைச்சொன்னேன்
　　பார்ப்பவர்க்கு மெய்ஞ்ஞானம் பலிக்குந்தானே. (156)

போகர் உபதேச ஞானம் ௨௫௰.

முற்றிற்று

போகமகா ரிஷீஸ்வரர் ஞானசாஸ்திரங்கள் நம்மிடம் அநேகம் ஓலையேட்டுப்பிரதிகளிருப்பினும் தற்போது இதிற்சிலதை அச்சிட்டிருக்கிறோம். மற்றவைகள் இரண்டாம்பாகத்தில் வெளியிடக்கூடும்.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீபோகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீனஆச்சிரமம் கைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமி யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

நாற்பத்துமூன்றாவது

காலாங்கிநாதர் திருவாய் மலர்ந்தருளிய

உபதேச ஞானம் ௪௩.

ஆதியென்ற ஜோதிரிஷி பாதங்காப்பு
அனாதியென்ற சுயரூப வடிவேகாப்பு
நீதியென்ற பராபரியாள் பாதங்காப்பு
நிச்சயமாய் நாதாந்த வெளியேகாப்பு
கோதில்லா மகரிஷிகள் முதலாயுள்ள
கோடான கோடிசித்தர் பாதங்காப்பு
சோதியென்ற பரவெளியைக் கருத்துள்வைத்து
சொல்லுவேன் ஞானமுடன் யோகந்தானே. (1)

போகரிஷி யுந்தனுக்குச் சொன்னநூலை
உலகமதில் வெளியிலே விட்டிடாதே
ஏகமதாய் வயித்தியமா யிரமுஞ்சொன்னேன்
இயல்பாக ஞானசாத் திரமுந்நூறும்
சாகசமா யுன்றனுக்குச் சொல்லிவைத்தேன்
தன்மையுடன் நன்றாகத் தெரிந்துபாரு
பாகமுடன் ஞானமுப் பத்துநாலும்
பக்ஷமுட னுன்றனுக்குச் சொல்லுவேனே. (2)

பச்சமுடன் காலாங்கிமுனியேயென்று
பரிவுடனே மகரிஷிக ளாசிர்மத்தில்
இச்சையுட னிநூலின் மகத்துவத்தை
இயம்பிடவே வேணுமென்று காத்திருந்தார்
அச்சமய மவர்களுக்கு இந்தஞானம்
அறிவுபெறச் சொல்லிவைத்தே னருமையாக
எச்சமயத் தோர்க்குமிந்தச் சாத்திரத்தை
இயல்பாகத் தெரியவென்றே இயம்பினேனே. (3)

இயம்பினேன் ஞானநிஷ்டை யோகந்தன்னை
இதுபோது மென்றவர்க ளியம்பிப்போனார்
சுயம்பாக உன்றனுக்கு அநேகநூலைத்
தோணவே சுருக்கமதாய்ச் சொல்லிவிட்டேன்
ஜெயம்பெறவே இந்நூலின் மகத்துவத்தைத்
தெரிந்துநீ யாருக்கும் வெளிவிடாதே
நயமாக விந்நூலைத் தெரிந்ததாலே
நவகோடி சித்தர்பசு பதியென்றாரே. (4)

பதியான கமலமடா அண்டத்தாதி
பாதாதி கேசமுதல் நன்றாய்ப்பார்த்து
விதியான வெழுத்தறிந்து கமலக்கண்ணால்
மெஞ்ஞான தீபமதை வேண்டிக்கொண்டு
கெதியான மோக்ஷமென்று நடுவேநின்று
கேசரத்தின் சிலம்பினுட நாதங்கண்டேன்
மதியான மதிதனையே ரவியிற்சேர்த்து
மகத்தான சிவயோகத் திருந்துபாரே. (5)

இந்நூலை பெற்றுமன துறுதிகொண்டு
யேகாந்த மூலமதின் சுடரிற்சென்று
விருந்திடுமே காட்சரத்தைப் பார்க்கும்போது
விளம்புதற்கு அரிதான சோதிபோல
வருந்தியந்த முக்கோண வட்டமீதில்
மார்க்கமுடன் கண்டனடா மௌனத்தாயை
அருந்தவமா யவள்பதததைப் பூசைபண்ணி
ஆதியே காக்ஷரத்தை யறிந்தேன்பாரே. (6)

பாரப்பா யேகமென்றக் கரத்தைக்கொண்டு
பருவமாய்த் திசைநாதங் கண்டுதேறி
நேரப்பா நின்றபொரு ளொன்றேசூக்ஷம்
நிலையறிந்த மூலமடா வாசிவாசி
ஆரப்பா அறிவார்கள் வாசிநேர்மை
அடங்கிநின்ற போதமடா ஆவிஆவி
தேரப்பா ஆவியென்ற வன்னியாலே
தேறுவதால் நின்றேகம் பிரமமாச்சே. (7)

ஆச்சப்பா தேகமென்ற பிரமந்தானும்
ஆதியே காக்ஷரமென் றறிந்துகொண்டு
மூச்சப்பா பேச்சாகி நின்றசப்தம்
முழங்கிநின்ற சப்தமது அடங்கும்வீடு
பேச்சப்பா பேசாமல் மௌனவீடு
பேரண்ட மானதொரு வீட்டிலேதான்
நீச்சப்பா நிலையாத வன்னிவன்னி
நிசமான வன்னியடா யேகமாமே. (8)

ஏகமென்ற வன்னியடா மூலவன்னி
யேகாந்த வன்னியடா ஆவியாச்சு
பாகமென்ற ஆவியடா சீவனாச்சு
பதிவான சீவனா தாரமாச்சு
ஆகமென்ற ஆதாரம் பிரமமாச்சு
அரகரா பிர்மமென்று லார்தான் காண்பார்
யோகமென்ற வாசியடா சிவயோகந்தான்
ஒளியான தீபமடா யேகமாமே. 9)

ஆமப்பா யேகமென்றால் மூலாதாரம்
ஆனதொரு பீடமடா அண்டமாச்சு
தாமப்பா தன்னிலையாய் நின்றஅண்டம்
சார்வான அண்டமடா கமலமாச்சு
காமப்பால் கசிந்தொழுகுங் கமலமீதில்
கால்வாசி வாசியென்ற சர்ப்பமீதில்
ஙாமப்பா சரமேத்தி யண்டஞ்சுத்தி
நாதாந்த பூரணத்தைக் கண்டேன்பாரே. (10)

கண்டதொரு காட்சியென்ன அண்டபிண்டம்
கருவான ரவிமதியுஞ் சேர்ந்தமூலம்
ஒன்றான மூலமடா மவுனபீடம்
ஓங்காரக் கம்பமடா நந்திவீடு
பண்பான வீடறிந்து சுழினைமேவி
பார்மகனே போதமென்ற ஞானத்தீயைக்
குன்றான தீயதுதா னுநதியுந்தி
குருவான செந்தியடா சிகாரமாச்சே. (11)

சிகாரமென்ற வாசியடா மகாரத்துள்ளே
　　சென்றுசதா சிவத்துடனே சேர்ந்துகொண்டு
நகாரமென்ற பிரமாவே நானதானென்று
　　நாதாந்த பூரணமா யேகமானுர்
அகாரமென்ற உகாரமடா யெட்டிரண்டும்
　　அடங்கியது மொன்றுன பாததீச்சை
மகாரமென்ற மவுனமடா வாலைவாலை
　　மகத்தான ஆவியடா யேகமாச்சே. (12)

ஏகநிரா மயமான சோதிமூலம்
　　எழுத்தேகம் பூரணமாய் நின்றமூலம்
ஆகமென்ற மூலமடா ஆவிஆவி
　　அஷ்டாங்க யோகமதுக் காதியாகும்
வேதமென்ற வாசியதுக் குயிராம்வன்னி
　　வேதாந்த வன்னியடா மூலத்தீதான்
பாகமென்ற முதலதுவே மூலாதாரம்
　　பராபரமாய் நின்றகண பதிதான்பாரே. (13)

பாரான கணபதிதான் யேகரூபம்
　　பத்திகொண்ட மூலவன்னி பிரமபீடம்
நேரான வன்னியென்று லஞ்சுமொன்றுய்
　　நிறைந்துநின்ற மார்க்கமடா யார்க்குந்தோணு
கூரான பிரமமடா விந்துவிந்து
　　குருவான விந்துவடா தண்ணீர்தண்ணீர்
மாராத கெங்கையடா தண்ணீர்தண்ணீர்
　　மந்திரமா யுருவேற மார்க்கங்சேளே. (14).

மார்க்கமென்ன சொல்லுகிறேன் மதியாங்கெங்கை
　　மனதிரிம்ம யானமதி கங்கைதன்னைத்
தீர்க்கமுள்ள செடமான ரவியினுள்ளே
　　சேர்ந்துநின்ற மார்க்கமடா சொல்லக்கேளு
ஆர்க்குமிது வுரையாதே மைந்தாமைந்தா
　　அரகரா மதிகதிரி லடங்குஞசோதி
பாக்கவென்று லேசாகும் பாரமில்லை
　　புத்திகொண்டு மதிகதிரிற் பூரச்சுவாயே. (15)

பாச்சுவது யென்னவென்றால் மகனேகேளு
பக்குவமாய்க் கெங்கையென்ற தண்ணீர் தன்னை
தாச்சியில்லா வயலூரா மடைதிறந்து
தயங்காம லாறுமா நிலத்திறபாச்சு
காட்சியென்ற கண்காட்சி தன்னால்மைந்தா
கனமான நில்மாறுங் கனகமாகும்
மூச்சான வாலையது அண்டத்துள்ளே
முக்கியமாய் நின்றசிவ யோகமாமே. (16)

யோகமென்ற சிவயோக மார்க்கமுன்னம்
உறுதியே காட்சரத்தி னுண்மையாகும்
தேகமென்ற அஞ்சுபஞ்ச பூதமொன்றாய்ச்
சேர்ந்துநின்ற வுருவாரம் யோகயாச்சு
ஆகமென்ற தேகமதுக் குறுதியென்ன
அரகரா விந்துவென்ற அமுதசாரம்
பாகமென்ற சாரமதி னுறுதிகொண்டாற்
பத்திகொண்ட தேகமறி முத்தியாச்சே. (17)

முத்தியென்ற மோட்சமது யென்னவென்றால்
முனையான சுழிமுனையென் முக்கோணத்திற்
பத்திகொண்ட மூலவன லதிலேசென்று
பதிவான புருவநடுக் கமலமீதில்
சித்திகொண்ட தீபமடா முத்திமோக்ஷம்
சிவசிவா சிவபஞ்சாட் சரத்தின்கூறு
சத்தியமாய்ச் சரமறிந்து மாறுமற்றான்
தாயான வாசியது தயங்கிப்போச்சே. (18)

தயங்கிமன முழன்றுசட முடையாமற்றான்
தன்னகமாய் நின்றதொரு மூலத்தீயை
இயங்கியதோர் வாசியினா லூதியூதி
யெழுந்ததொரு ஆவியடா மாயாரூபம்
இயங்காத ரூபமதைக் காணவென்றால்
திருவான புருவமத்தி தீபந்தன்னில்
மயங்காமல் நீநிலைத்துப் பார்த்தாயானால்
வாழலாம் வெகுகோடி காலந்தானே. (19)

தானான தீபமது வென்னவென்றால்
　　தன்னறிவே அறிவான போதம்போதம்
தேனான போதமது அமுதபோதம்
　　சிவசரா சரங்களெல்லாம் ஜெனித்தபோதம்
கோனான குருவிருந்த நாதமான
　　குருவான சத்தமடா மாயாரூபம்
ஊனான ரூபமதை யாட்டிவைத்து
　　ஓரெழுத்தாய் நின்றதொரு ஆவிதானே. (20)

ஆவியென்ற பிராணனது புருவமீது
　　அடங்கினால் மறுபிறவி யுண்டாம்பாரு
ஆவியென்ற பிராணனது முக்கோணத்தி
　　லடங்கினால் மறுபிறவியில்லையில்லை
ஆவியென்ற பிராணனது மூலத்துள்ளே
　　அடங்கினால் வெளியொளியா யமர்ந்துநிற்கும்
ஆவியென்ற பிராணனது அறுகோணத்தில்
　　அடங்கினால் வெளியோட வெளியாய்ப்போமே. (21)

வெளியான பிர்மாதி லோகத்துள்ளே
　　வேணபடி திரிவார்க ளொன்றேசூட்சம்
வழியான சூட்சமது வென்னவென்றால்
　　மார்க்கமுடன் சொல்லுகிறேன் அகாரதீட்சை
ஒளியான தீட்சையிலே மனதைவைத்து
　　உறுதியுட னமுதரச பானங்கொண்டால்
கழியாது தேகமது காந்திமீறுங்
　　கருணையுட னெந்நாளும் வாழலாமே. (22)

வாழ்வதற்கு அமுதரச பானங்கொண்டால்
　　வாசியென்ற ஆவியது பிரகாசிக்கும்
கால்வைக்கு மேவலுக்குங் கண்டுலங்கும்
　　கமலமல வமுதரசங் கசிந்துகாணும்
மேல்வெளுக்கும் மெய்ஞ்ஞான தீபங்காணும்
　　மெய்ஞ்ஞான தீபமது தெரியாதையா
ஆள்வதற்குக் குருவுதவி யதிகமுண்டாம்
　　அகாரமென்ற மந்திரத்தை யறிந்துமாறே. (23)

மாறும்வித மறியாம லுலகமெல்லாம்
மாண்டுதடா மதிமயக்க மானதாலே
தேறுவது யின்னமொரு செய்திகேளு
திருவான பிராணயக் கருவைச்சொல்வேன்
நேறுவது சுழிளையிலே மனக்கண்ணுடி
நினைவாகி சிகாரமதில் ரேசிரேசி
சேருவது வகாரமதாற் பூரிபூரி
சிந்தைகண்டு கண்டமதி லங்கென்றானே. (24)

ஊணுவது கண்டமதி லங்கென்றாணி
யுறுதியுள்ள கும்பகமென் றறியலாகும்
தோணுவது சிய்யெனவே ரேசகமதாகும்
துருவமுடன் வாவெனவே பூரகமதாகும்
பூணுவது அங்கெனவே கும்பகமேயாகும்
புத்தியுடன் சத்தியமாய்க் கண்டுதேர்ந்தால்
ஆணுவங்க ளற்றுதடா வாசிமீறி
அறிவான தீபமடா ஆவிபாரே. (25)

பாரப்பா பரப்பிர்ம பீடந்தன்னில்
பதியான மனோமணியைக் கண்டுபோற்றி
நேரப்பா சுழிளையிலே மனக்கண்ணுடி
நினைவறிந்து ருத்திரனைக் கண்டுபோற்றி
ஆரப்பா அறிவார்கள் சொல்லக்கேளு
ஆதியென்ற அட்சரத்தால் சிம்,றிங்;கென்று
தேரப்பா மனதறிவாற் செபிக்கும்போது
சிந்தைமன மொன்றாகத் தெளிவாய்நில்லே. (26)

தெளிவான மனதறிவால் மைந்தாநீயும்
திருவான புருவமையத் தெளிவினாலே
நெளியாமல் விபூதிதனைக் கையில்வாங்கி
நேர்மையுடன் விருத்தமதாய் நிறுத்திமைந்தா
ஒளியான சுழிளையிலே மனதைவைத்து
உகந்துநீ சிங்,றிங்,கென் றுருவேசெய்து
விழியான தெளிவான விபூதிதன்னை
மெய்க்கநீ சகலசித்தும் விளையும்பாரே. (27)

பாரப்பா சித்தினுட மகிமைகேளு
 பதிவான விபூதிதன்னை தியானம்பண்ணி
காரப்பா சற்குருவை மனதிற்கொண்டு
 கருணையுள்ள விபூதிதனைக் கடாக்ஷித்தாக்கால்
வீரப்பா கொன்றதொரு நோய்கள்தீரும்
 விஷமுதலாய்க் கசநோய்கள் விட்டுப்போகும்
நேரப்பா நின்றபொரு டன்னைவேண்டி
 நிச்சயமாய் நின்றபிணி நீறும்பாரே. (28)

பாரான சிவமகிமை தனக்குமைந்தா
 பத்திகொண்டு முகப்பிணியைப் பகரக்கேளு
நேரான விந்துரசந் தன்னைவாங்கி
 நிசசயமாய்ச் சுத்திசெய்து வைத்துக்கொண்டு
பேரான பிரிதிவியாம காதச்சுண்ணம
 பிரியமுடன் நவநீத மாகச்செய்து
வீரான விந்துரசந் தனலில்மைந்தா
 வேதாந்த நவநீதஞ் சரியாய்ச்சேரே. (29)

சேர்த்துநன்றாய்க் கல்வமதில் வைத்துக்கொண்டு
 சிவசிவா கமலரசந் தன்னில்நீயும்
காத்துநன்றாய்க் கையதனாற் பிசைந்துபாரு
 கருவான காதவிந்து ஒன்றாய்க்கூடி
பாத்திபனே மெழுகதுபோற் றிரண்டுபோகும்
 பதிவான அம்மணிக்குத் தமர்தான்செய்து
தோத்திரமாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணிச்
 சுத்தமுள்ள கெங்கைதனில் வைத்துக்காரே. (30)

காத்துநன்றாய் மறுதினத்தி லெடுத்துப்பாரு
 கண்மணியே கெவுனரச குளிகையாகும்
பாத்திபனே குளிகைமணி தன்னைவாங்கிப்
 பத்தியுள்ள செபமாலை யாகச்செய்து
தோத்திரமாய் மனோமணியைத் தொழுதுகொண்டு
 சுத்தசெப மாலைதனைக் கையில்வாங்கிச்
சாத்திரத்தின் பாகமதாய்ச் செபமேசெய்தால்
 சதாகோடி மந்திரமுஞ் சித்தியாமே. (31)

சித்தியுள்ள செபமாலை முத்திமோக்ஷம்
  சிவசிவா நாதவிந்து சேர்ந்ததாலே
முத்தியுள்ள மோக்ஷமது ஆச்சுமைந்தா
  முகமணியே தங்கமணி யங்கமாச்சே
சத்தியமாய்க் கொங்கணவ னுபதேசித்த
  தன்மையினால் ராஜரிஷி கடேசியானேன்
பத்திகொண்ட சிலம்பொலியைக் கண்டதாலே
  பராராஜ ராஜரிஷி யென்பார்பாரே. (32)

பாரப்பா ராஜரிஷி யாதியந்தம்
  பரமான முக்கோண சிகாரவீட்டில்
சேரப்பா யிருந்தரசு ஆண்டுகொண்டு
  நிலையான புருவமையச் சுழினைக்கேகி
மேரப்பா அண்டபதந் தன்னிலேதான்
  மெஞ்ஞான தீபமதை மெய்யுட்கொண்டு
தேரப்பா மனந்தேறி மூலாதாரம்
  சிவசிவா ஆதாரம் நந்திவீடே. (33)

வீடறிந்து நந்தியுட மரபிற்சென்று
  வேதாந்த சிவதபங்கள் செய்துகொண்டு
கூடறிந்து பிர்மாவைக் கண்டுபோற்றிக்
  குறிப்புடனே மாலினுட கூட்டிலேகி
காடறிந்து ருத்திரனைக் காணவேண்டி
  நாலான காலறிந்து வாசியேறி
சூடறிந்து முச்சுடரிற் செல்லும்போது
  சுழல்காற்றி லகப்பட்ட துரும்பானேனே. (34)

காலாங்கிநாதர் உபதேச ஞானம் ௱௪

முற்றிற்று.

மதுரை தென்திருவாலவாயன் கோவிலிலிருக்கும் இருளப்பையா வென்ற சிவஞானத்தையா அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிலானது.

உ

குமரன் றுணை.

நாற்பத்து நான்காவது

காலாங்கிநாதர் திருவாய் மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் உகூ

திருவுமை பாதம்போற்றிச் சித்தர்கள் பாதம்போற்றி
அருவுரு வாகிநின்ற ஐங்கர னடியைப் போற்றிக்
கருவதாம் நூல்கட்கெல்லாங் கைநெல்லிக் கனியதாகும்
குருவதா மிருபத் தஞ்சின் வகைதனை யறிந்துகூடே. (1)

கூடாத சூதங்கட்டக் குறுக்கதி லொன்று சொல்வேன்
தேடாத வாதத் துக்குச் செயமான பெலவானுகும்
நாடாளுஞ் சூத ராஜன் நலங்கிய நிமிளை ராணி
ஓடாத தளத்து ராஜன் ஓங்கிய வங்கமென்னே (2)

வங்கத்தைக் கண்டால் சூதம் வாய்சோர்ந்து கையுஞ்சோர்ந்து
பங்கத்தின் மரபைப்போக்கிப் பதையாமற் சாகும் சாகும்
சிங்கத்தின் கையுற் சிக்கும் சிறுகெஜ மாச்சுதப்பா
பங்கத்திற் பங்கம பினனும பண்ணியே கொல்லுந் தானே. (3)

தானென்ற வங்கச்சுண்ணம் சாற்றுவேன் கடிசாய்க் கேளு
வானென்ற வங்க மொன்று வைத்துநீ சட்டிக்குள்ளே
கானென்ற பச்சைச் சூதங் காட்டதில் நாலுக்கொன்று
கோனென்ற யிணங்கல் சுண்ணங் குறியாகச் சமனுய்த் தூக்கே. (4)

தூக்கியே வைத்துக் கொண்டு சுகமாக உருகும் போது
தாக்கியே போட்டுப் போட்டுத் தயங்காமற் கிண்டு கிண்டு
ஆக்கிய சோறு போலே அடங்கலும் பொடியே யாகும்
வாக்கியே நிறுத்துக் கொண்டு வாள்பூரம் முக்கால் சேரே (5)

சேர்த்துநீ கருவை வார்த்துத் திறமாக அறைத்து வில்லைப்
பேர்த்துநீ உலர வைத்துப் புகழ்பெற வூதிப் போடு

ஆத்துநீ சுண்ண மாகும் அதிற்பாதி வீரம் போட்டுக்
கோத்துநீ யரைத்து நன்றாய்க் குறுகிட வில்லை கட்டே. (6)

கட்டிய வில்லை தன்னைக் கடுகவே தனலில் வைத்து
ஒட்டியே வூதிப் போடு வுறுதிகாண் வங்கச் சுண்ணம்
மட்டியா மாண்ப ரேகேள் மாட்டிடு சூதத் துள்ளே
கொட்டிய தயிர்தா னாகுங் குமுறவும் ஊறுங் காணே. (7)

காணிந்த வங்கச் சுண்ணங் களஞ்சிடை கருவை வார்த்துத்
தோணிந்தத் துருசு யெட்டிற் சுகமாகப் பூசு பூசு
பூணிந்த வூரல் போகும் பொருந்திய வுருவாய்க்கட்டும்
வாணிந்தக் கனலி லூது மகத்தான சுண்ண மாமே. (8)

ஆமிந்தச் சுண்ணத் தாலே அஞ்ஞாறு குளிகை யாகும்
ஆமிந்தச் சுண்ணத்தாலே அடங்கலுஞ் செயிக்க லாகும்
ஆமிந்தச் சுண்ணத்தாலே ஆடலாம் சகல வேதை
ஆமிந்தச் சுண்ணத்தாலே அடங்காத மணித்தா யாமே. (9)

ஆமிந்த வங்கச் சுண்ண மாடிடும் வித்தை கேளு
காமிந்த நிமிளை மேலே கட்டுநீ யிடைக்குப் பாதி
போமிந்த ரவியிற் போடு புகழ்பெற வூது வூது
ஓமிந்த நிமிளை தானு முருவாகச் சுண்ண மாமே. (10)

சுண்ணத்தின் மார்க்கஞ் சொல்லத் தொலையாது யென்று லப்பா
பண்ணத்தில் நிமிளைச் சுண்ணம் பாச்சிடு சூதத் துள்ளே
கண்ணத்தி லாணும் பெண்ணுங் கபளீத்து முத்த மிட்டு
ஒண்ணொத்து ரெண்டுஞ் சேர்ந்து உருவாகக் கட்டும்பாரே. (11)

பாருமே நிமிளைச் சுண்ணம் படுமுன்னே யெல்லாஞ் சாகும்
கோருநீ சவாதி னோடே குளப்பியே கரத்தில் வைத்துச்
சாருநீ சரக்கைத் தொட்டுத் தனித்தனி லோகத் தூட்டு
ஆருநீ யுரைசெய் யாதே அடங்காத பொன்னு மாமே. (12)

பொன்னுமா மாத்துத் தானும் புகழாக யிருபத் தஞ்சு
பன்னுமாம் நிமிளை தானும் பராபரை நாதம் பார்த்துச்
சென்னுமாஞ் சூதந் தன்னைச் சேவிக்குந் திசைக ளெட்டுந்
துன்னுமா மாந்தி யோடுஞ் சராமறைச் சுயமு மாமே. (13)

சுயமான யீயம் மூன்றிற் சூட்டிடு சூதமொன்று
வயமான கரண்டிக் குள்ளே மருவியே யுருகும் போது
சயமான யிணங்கன் கண்ணந் தாக்கியே சமனுய்ப் போட்டுச்
சொயமாகக் கிண்டு கிண்டு தூக்கியே யெடுத்து வையே. (14)

வைத்திட்ட யிடைக்கு முக்கால் மாட்டிபூ ரணமாந் தன்னைப்
பைத்திட்ட கருவா லாட்டிப் பதருமல் வில்லைபண்ணிக்
கைத்திட்ட மாக வூது கடுஞ்சுண்ண மாகு மப்பா
தைத்திட்ட சுண்ணம் பாதி தாக்கிநீ வீரஞ் சேரே. (15)

சேர்த்தியே வில்லை பண்ணிச் சீகவே யுலர்த்தி யூது
போத்தியே சுண்ண மாகும் போக்கதில் மெத்த மெத்தக்
காத்தியே புலிதா ளுட்டைக் கவ்வின வாறு போலே
சோத்திலே வுப்புப் போலத் துடியாமற சூதஞ் சாமே. (16)

சாமிந்தச் சூதம் போலத் தனித்தனி சாக்க தெல்லாம்
தாமிந்த வகையைக் கண்டு தாமெனக் கருளிச் செய்தாள்
ஓமிந்த மூலத் துள்ளே வுதிக்கின்ற நந்தி சொல்ல
வாமிந்த மூர்த்தி தானும் வகையெல்லாம் வழங்கி னாரே. (17)

வழங்கிய யீயம் போல வரிசையாய் நாகம் வைத்துத்
தழங்கியே முடித்தா யானுற் றனிப்புலி நாகச் சுண்ணம்
முழங்கிய சூதத் திட்டு மூர்ச்சித்துச் சூதஞ் சாகும
அழங்கிய பாசா ணங்க ளறுபதுங் கட்டுந் தானே. (18)

தானென்ற நாகச் சுண்ணஞ் சாத்திடத் தங்க மேலே
வேனென்ற தங்க மூன்றும் விளங்கிய சுண்ண மொன்று
கானென்ற கருவாற பூசிக் கனக்கவே வாட்டி யூதி
வானென்ற தங்கந் தானும் மலர்ந்தது சுண்ண மாமே. (19)

சுண்ணத்தைக் காணக் காணச் சூதத்துக் கிடுப்புப் போகும்
யெண்ணத்தைத் தொட்டாலுந்தா னேறிப்போய் வேதை யோடும்
பண்ணத்தைச் சரகுகை யெல்லாம் படுமுன்னே சாகுஞ் சாகும்
கண்ணத்தை வேதைக கேத்த கடுஞ்சுண்ணந் தங்கம் பாரே. (20)

பாருநீ வங்கச் சுண்ணம் புரிவான நாக மொன்று
தாருநீ யீய மொன்று தனியொக்க வுருகும் போது

வாருநீ சமனுய்ச் சூதம் வளமான கரண்டிக் குள்ளே
கோருநீ யிணங்கன் சுண்ணங் குமட்டியே மூன்றும் போடே. (21)

போட்டுநீ கிண்டு கிண்டு பொடியாகும் பாரு பாரு
காட்டுநீ யிடைக்கு முக்காற் கற்பூரச் சுண்ணம போட்டு
மாட்டுநிச சாரச் சுண்ணம் வளம்பெற விராகன் மூன்றுங்
கூட்டுநீ கருவா லாட்டு குறையாமல் வில்லை பண்ணே. (22)

பண்ணிய வில்லை தன்னை பக்குவ மாக ஊது
புண்ணிய வானே யானுற் பொருமாது சுண்ண மாகும்
எண்ணிய படியே எல்லா வவிழ்தமு முடிக்க லாகும்
கண்ணிய சுண்ண மூன்றுங் கருத்துளோர்க் கிதனை யோதே. (23)

ஓதிட வகிலத் துள்ளே உயர்வுள சுண்ண மாகும்
காதிட சூதத் துள்ளே காட்டுமுன் கொண்டு போடு
ஊதிட அண்டத் தூடே வுருகிய மெழுக தாகும்
ஆதிட சுண்ணம் பட்டா லறுபத்து நாலுஞ் சாமே. (24)

சாகிற முறைமை யெல்லாம் சாற்றுவே னப்பா கேளு
வேகிற வீட்டுக்குள்ளே விழுந்தவன் பிழைப்பா னோசொல்
ஆகிற சரக்கதொன்று அப்பனே கட்ட வேண்டிற்
பாகிற அண்டத் தோட்டைப் பச்சைதான் சொன்னேன் போடே ()

போட்டுநீ சுண்ணத் தோடே புகழாக அரைத்துக் கொண்டு
நீட்டுநீ பாசா ணத்தில் நிலைக்கவே பூசிப் பூசி
ஆட்டுநீ யிணங்கன் தோறும் அதுக்கது பச்சை கூட்டி
ஊட்டுநீ வாட்டி வாட்டி வூதிடச் சுண்ண மாமே. (26)

ஊதிடச் சுண்ண மாகும் ஊதாட்டா லுருகி நிற்கும்
வாதிட வந்தா னென்றால் வாதாடி வேதை யோடும்
சூதிட வூதி வந்தாற் சொட்டொன்று போட்டு ஆடு
கோதிட வங்கம் நாகம் கூடிய ஆண்மை தானே. (27)

தானென்ற மூன்றி னாலே தனித்தனி சூதங்கட்டும்
தானென்ற மூன்றி னாலே சகலமும் வேதை யாகுந்
தானென்ற வேதை யாலே தனிக்கட்டுச் சுண்ண மாகும்
தானென்ற மூன்றை விட்டுத் தியங்கினர் வாதி பாரே. (28)

வாதிக்கு மூக்குக் குச்சி வங்கமும் நாக மப்பா
வாதிக்கு மூக்குப் போகும் மருவிய ரசந்தா னப்பா
வாதிக்கு மூக்குப் போகும் மருவிய துருசு ராஜன
வீதிக்கு வரநாட் போகும் விளங்கிய சாரந் தானே. (29)

காலாங்கி நாதர் ஞானசூஸ்திரம் உகூ

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் கே. ரா. ம. கணபதியா பிள்ளை யவர்களிட மிருந்த ஏட்டுப் பிரதியின் படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை.

நாற்பத்தைந்தாவது

காலாங்கிநாதர் திருவாய் மலர்ந்தருளிய

ஞான விந்த ரகசியம் ௩௰

சீருலவும் சதுர்மறைக்கு மெட்டடாகிச்
சித்தறிந்து நின்றவர்கட் கொளிவுமாகி
ஏருலவும் அண்டபிண்ட மிரண்டுமாகி
எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் இறைவனாகிப்
பேருலவும் பிரணவசற் குருவுமாகிப்
பேச்சற்ற மோனமெய்ஞ் ஞானமாகிப்
பாருலவும் வித்துவஸ்து வாகிநின்ற
பரவெளியின் சரணமலர்ப் பாதவீடே. (1)

வீட்டிலே பெண்டுமக்க ளோடிருந்து
விளையாடிக் கொண்டிருந்தால் வருமோஞானம்
நாட்டிலே யீதறியா தநேகம்பேர்கள்
ஞானமென்ன வாதமென்ன யோகமென்ன
ஏட்டிலே சுரைக்காயென் றிருத்தாலத்தை
என்செயலாம் கறிசமைக்க ஏதுவுண்டோ
பாட்டிலே யிருந்தென்ன பலிக்குமோதான்
பகருவேன் ஒளிமலையிற் பாய்ந்துயேறே. (2)

ஏறப்பா கண்மூக்கு மத்திக்குள்ளே
இதமாகப் பார்த்திருந்தாற் பசிதானுண்டோ
மாறப்பா அடிமுடியும் நடுவுங்காணும்
மயங்காமல் நாலுமதற் குள்ளேசேரும்
தேறப்பா இம்முறையார் பார்க்கப்போறார்
தெளிவான தாயெனக்குச் சொன்னவித்தை
வீறப்பா அலைந்தாலுஞ் சொல்வாருண்டோ
விளங்குமித் நூலினுட தொழிலைப்பாரே. (3)

பாரப்பா வேதமுறைப் பதியிற்பாரு
பதினாறும் பனிரண்டும் அதுதான்வேதம்
மூரப்பா அஞ்செழுத்திற் பிறந்தவேதம்
முகமதன்பின் னஞ்செழுத்தின் விபரங்கேளு
வேரப்பா அ. இ. உ. எ ஒ. அஞ்சும்
விதமான வேதமென்ற தாய்தானப்பா
சாரப்பா நால்வேத மதினாலாச்சு
சத்திசிவ மென்றறிவீர் நாவினாலே. (4)

நாலென்று சொன்னமொழி யேதென்றாக்கால்
நல்லமனம் புத்தியாங் காரஞ்சித்தம்
வாலென்றுந் தலையென்றும் அதுதானப்பா
வசியென்ற எழுத்துதலை வாசலாச்சு
கோலென்று சுழிமுனைதான் நடுவதாச்சு
குலமிடையும் பின்னுமடி முடிதானாச்சு
பாலென்று அமுதமையாம் நினைவதாச்சு
பதினாறும் பனிரண்டும் பதிந்துபாரே. (5)

பாரப்பா ஒளிக்கப்பா லொன்றுமில்லை
பதிகடந்து அப்புறத்தே போனாயானால்
சீரப்பா உன்னிடத்தி லூணிப்பார்த்தால்
செகமெல்லாஞ் சிற்றண்டத் துள்ளேகாணும்
ஊரப்பா உலகத்தி லுள்ளதெல்லாம்
உன்னுடம்பிற் றனித்தனியே காணலாகும்
காரப்பா கல்லுமரங் குளங்கள்கோவில்
கண்மூக்கு மத்திகருக் காணலாமே. (6)

கருத்திலே காணுமடா வேதாந்தங்கள்
காலென்றுந் தலையென்றும் மாறிச்சேர்த்தால்
பொருத்திலே காணுமடா சத்திமூலம்
பொல்லாத தோஷிகட்கு மெய்யாய்ப்போகும்
வருத்தினா லானந்த மெனும்பால் காண்பாய்
வண்டரெல்லாம் வாய்வீணாய்த் தள்ளுவார்கள்
குருத்துக்குள் ளிலைபூகாய் பழமுமாகும்
குருத்தார்க்குக் குலைசாயுங் குறியேகாப்பு (7)

காப்பான சதுரகிரி மகத்துவத்தைக்
கழறுகிறே னோர்நினைவாய்க் கண்டுதேரு
மூப்பான நந்திதிரு மூலருக்கு
மொழிந்திடவே அதையெனக்கு முறையதாகத்
தாப்பான குகையுமதன் வழியுகண்டு
தான்போதல் வெகுஅருமை தவத்தோர்க்கெய்தும்
தோப்பான இடங்கள்பல விருட்சமுண்டு
துறவுநீ ரோடைபல தோன்றுந்தானே. (8)

தானான வேதங்கள் நான்குமொசனறாய்ச்
சார்ந்திங்கோ ருருவாகச சமைந்ததாலே
வேனான பெயர்சதுர கிரியிதன்றே
விண்ணவரும் பண்ணவரும் எண்ணிலாரும்
தேனான மகாலிங்க ரடியைப்போற்றி
செய்துசதா சேவித்து யோகநிஷ்டை
ஊனான வுடலெடுத்தோர் புரிவதாலே
உயர்முனிவர் சித்தரெனப் பேருற்றாரே. (9)

பேருற்ற சதுரகிரி நாலுபக்கம்
பிரிவுண்டவ் வழியுமெத்தக் கடினமப்பா
சேருற்ற மூன்றுபக்கம் பாதைதானும்
சிவசிவா அடவிவழி சிரமமெத்த
நேருற்ற தெற்குவழிப் பாதைசற்றே
நிகழ்த்துவேன் மலையினடி வாரந்தன்னில்
நீருற்ற வோடையுள தோணிப்பாரை
நிலைகண்டு ஆற்றோரம் சென்றுபாரே. (10)

சென்றந்த ஆற்றுவழி நிறமதாகச்
சேர்ந்திருக்குஞ் சிறுமலைக ளநேகமுண்டு
குன்றந்தச் சாய்வோரம செல்லும்பாதை
கூடினால் நவசித்தர் குகையொன்றுண்டு
நின்றந்தச் சித்தர்களை மனத்துளெண்ணி
நிதானமா யவ்வழியே போகவேணும்
ஒன்றந்த வழிவடக்கே கொஞ்சத்தூரம்
உயர்ந்திருக்கும் மலையருகிற் குகையைப்பாரே. (11)

பாரப்பா அக்குகையி னுள்ளேசெல்லப்
பாம்பாட்டிச் சித்தருமங் கிருப்பார்கண்டு
தேரப்பா நீவணங்கி யதனைமேற்காகத்
திரும்பவே அத்திரியின் குகைதானுண்டு
நேரப்பா ஆற்றாடே அத்திலூற்றும்
நிலைகாணு ரங்கேற்றம் நெடுங்காடப்பா
ஆரப்பா அறிவார்கள் அதைக்கடக்க
அதிகமாங் கற்கரட்டின் பாதைதானே. (12)

பாதைவழி நோய்கா தாந்தச்சித்தர்
பதியான குகைதெரியும் பார்த்துக்கொண்டு
வேதைநீ யடையாம லுள்ளேசென்றால்
வேதாந்தச் சித்தருடன் குதம்பைச்சித்தர்
போதையுள்ள ஞானசித்த ரடிவணங்கிப்
போற்றிவிடை பெற்றுவர மிருகண்டேயர்
வாதையில்லா வழியில்மகா தவமேசெய்து
மகப்பேறு பெறுவதற்கு மகஞ்செய்தாரே. (13)

மகஞ்செய்த இடத்தைவிட்டு வழியேகூடில்
வரரிஷியின் குகையாகும் ரிஷிகட்கெல்லாம்
சுகஞ்செய்த குகையிதப்பா அதனுட்சென்றால்
சுத்துமிரு காதவழி வெளியாய்த்தோன்றும்
பகஞ்செய்த தவசித்தர் யோகசித்தர்
பதஞ்சலியார் வியாக்கிரம ரகப்பைச்சித்தர்
ஜெகஞ்செய்த ராஜரிஷி வியாசர்தாமும்
சிறப்பாக அதிலிருந்து தெளிந்தார்பாரே. (14)

பாரப்பா அதைக்கடந்து அப்பாலேகிப்
பார்க்கவே கோரக்கர் குண்டந்தோன்றும்
தேரப்பா கஞ்சாவை அதிறகடைந்து
சித்தர்முனி யொவ்வொருவ ருக்குமீவார்
நேரப்பா அதனருகே குகைதானுண்டு
நிலையாகச் சிவயோகஞ் செய்வாரங்கே
கோரப்பா கோரக்கர் தம்மைக்கண்டு
கொண்டானே ஞானமிர்த மூண்டோன்றனே. (15)

உண்டப்பா இன்னமொரு அதிசயந்தான்
உலகத்தி லுள்ளோர்க ளறிகுவந்து
குண்டப்பா கோரக்கர் தீர்த்தமாடிக்
கொள்ளவே எப்பிணியு மகன்றுபோகும்
மண்டப்பா கரமிரண்டு மொன்றாய்க்கூட்டி
வாரிநீர் மூன்றுகை யுண்ணப்போதை
கொண்டப்பா செனமசா பல்யமாகும்
கோரக்கர் தனைப்போற்றக் குணமுண்டாமே. (16)

உண்டான குகைதனிலே முனிவர்சித்தர்
ஒற்றுமையாம் யோகிகளுங் கற்பமுண்டு
பண்டான வைத்தியமும் வாதப்போக்கும்
பலதீயில முறைகெவுன குளிகைசெய்து
கண்டான பின்ரசத்தை மணியாய்க்கட்டி
கவலையது விவலையிலா திருந்துவாழ்வார்
பெண்டான சமசார வாழ்க்கையுள்ள
பேரங்கே சென்றாலும் பெருமைதானே. (17)

பெருமையாங் கோரக்கர் குண்டாவோரம்
பிறங்குமொரு தீர்த்தமதிற் றானஞ்செய்து
அருமையாங் குண்டாநீ ரள்ளியுண்ண
அவன்செய்த பாவமெல்லா மகன்றுபோகும்
ஒருமையா யுளத்திற்கோ ரக்கர்தம்மை
உன்னியே துதிசெய்ய வாழ்வுண்டாகும்
வெருமையுளார் கண்களுக்குக் காணமாட்டார்
வேண்டிநீ போய்ப்பார்க்க வேணுந்தானே. (18)

தானப்பா செம்பாறை வழியோயேற்றத்
தானாகும் அவ்வழியே சென்றாயாகில்
மீனப்பா வாழ்ந்திருக்குஞ் சுனையனந்தம்
விரும்பிப்பார் தெற்கோரம் குகையொன்றுண்டு
கானப்பா மச்சமுனி யதிலேவாசம்
காதவழிக் கப்பாற்கீ ழோரம்பாரு
வேனப்பா கயிலாசச் சட்டைநாதர்
வெகுகாலம் நிஷ்டைபுரி குகையிதாமே. (19)

ஆமப்பா அவ்வழியே தொடர்ந்துசெல்ல
ஆற்றோரம் தென்கிழக்குத் திசையோர்பாகம்
தாமப்பா ராமரிஷி குகையுமுண்டு
தாப்பான இடமறிந்து வாசஞ்செய்தார்
போமப்பா அதைக்கடந்து போனாயானால்
பூத்திருக்குங் கருநெல்லிக் காடுதாண்டி
வாமப்பா இடைக்காடர் குகையில்வாசம்
வல்லபமோ சொல்லவெளி தல்லகாணே. (20)

காணப்பா கணக்கிலடங் காதகோக்கள்
கன்றுகளை யருகழைத்து அமுதமூட்டும்
ஆணப்பா யெருதுடனே குகையில்வாசம்
அதனிஷ்டம் போல்மேய்ந்து அங்கேசேரும்
தாணப்பா மகாலிங்க ரங்கேவந்து
தண்ணமுத முண்டுதினந் தானேபோவார்
ஏணப்பா பசுக்களெலாம் தவயோகிக்கும்
எனக்குமே பாலமுதம் வழங்கிற்றம்மா. (21)

வழங்கிடவே யானுமுண்டு வடகீழ்பாகம்
மலைமீது குகைகண்டு சிலதுகாலம்
கிழங்குபல சருகுகனி யருந்திப்பின்பு
கெவுனசித்த ருடன்கூடிக் கொண்டிருந்தே
கழங்குபல தயிலவர்க்க ரசமதோடு
கற்பமுறை சிலசெய்தே சித்தர்க்கீய்ந்தேன்
தழங்குமந்தச் சித்தருக்குக் கொடுத்தமீதம்
தயிலகற்ப மோரிடத்திற் றாபித்தேனே. (22)

தேனப்பா அத்தயில முயிர்சஞ்சீவி
தெவிட்டாத கற்பமது தேகசித்தி
தானப்பா யிருக்குமிட முனக்குச்சொல்வேன்
தயங்காதே பாறையொன்று குறுக்கேதோன்றும்
வேனப்பா கரைகாணுச் சுனைமூன்றுண்டு
வெகுமுனிவர் சித்தர்களு மங்கேவாசம்
பானப்பா பாவிகளுக் கீயாதென்றே
பலாவடியிற் பாறையொன்றுறத் தூக்கிவைத்தே. (23)

தூக்கியே குழிதோண்டிச் சிலைமண்ணைச்
சுத்தியே பதனமதா யுள்ளேவைத்து
நீக்கியே யிருந்தகற் பாறைதன்னை
நீம்புதெரி யாமலதை மூடிப்பின்பு
நோக்கியே தேவியையும் கருப்பனையும்
நொடிக்குள்ளே தருவித்துக் காவல்வைத்துப்
பாக்கியே யிருந்தநிந்தத் தயிலந்தன்னைப்
பாதுகாத் திருங்களெனப் பகர்ந்திட்டேனே. (24)

பகரவே சித்தர்களும் வெகுபேரையா
பகலிரவு பிரியாமற் காத்திருப்பார்
சிகரமறி சித்தர்முனி முத்தர்வந்தால்
திறந்தெடுத்துக் கொடுங்களென்று செப்பிவந்தோம்
அகரமோ டுகரமறி யாமூடர்க்கும்
அரும்பாவி கருமிகட்கு மிதுகிட்டாது
ஓகரமறிந் தோர்க்கிதனைச் செய்துவைத்தோம்
உண்மையுள போகனென்றே வுரைசெய்தேனே. (25)

உரைசெய்த மலைமீது வழிமார்க்கத்தில்
ஒப்புவமை சொலவரிது பலவிநோதம்
வரையிலுள மூலிகையோ அநேகங்கோடி
மகாலிங்கர் மகத்துவத்தை வழுத்தொணாது
தரையிலெம் மலையுமிந்த மலைக்கொப்பாமோ
சாற்றரிய கயிலாச கிரியிதாகும்
இரையளவோ இமயமலை யிதற்கீடாமோ
என்றுநந்தி யெனக்குண்மை யியம்பினாரே. (26)

இயம்பியதோர் கருப்பணனை யங்கேகண்டு
ஏகுவாய் கீழ்த்திசையை நோக்கிச்சென்றால்
சுயம்புவாய் மகாலிங்கர் கோவிலுண்டு
சுரர்லோகக் கற்பதரு அங்கேவுண்டு
நயம்புரியு மெனவணங்கி அருகேசுந்த
ரனையுமே நீகண்டு கிழக்கேசென்றால்
பயம்புரியுங் குளிராட்டித் தோப்புமுண்டு
பலகுகையுங் கருநெல்லிச் சுனையுமுண்டே. (27)

உண்டப்பா குகையிற்கன் னியர்களுண்டு
உருமாறும் பச்சிலைக ளங்கேயுண்டு
கண்டப்பா கோவிலுக்கு மேற்குப்பாகம்
காதவழிக் கப்பால்நீ சென்றாயானால்
பண்டப்பா என்னையர் குகையுந்தோன் றும்
பாட்டனடா உனக்குதிரு மூலர்தானும்
அண்டப்பா அவரையும்நீ வணங்கிக்கொண்டு
அப்பாற்போ ஜனகர்குகை யங்கேகாணே. (28)

காணவே கொங்கணரும் ராமதேவர்
கருவூரார் பிரமமுனி கூர்மானந்தர்
தோணவே அக்குகையிற் கண்டுவந்தால்
சோதிவிருட் சங்களுமுன் கண்ணிற்காணும்
பூணவே கீழ்கற்ற மரையுமுண்டு
புரிசடைபோ லிலையிருக்கு மதனையுண்ணு
நாணவே ரசவாதம் வேறேயில்லை
நாம்கண்ட முறையின்னும் செப்புவோமே. (29)

செப்புமழு கண்ணிதொழு கண்ணிமூலி
சிறந்ததொழிற் பலசெய்யுங் கருத்தநொச்சி
தப்புரைசொல் லேனங்கே மஞ்சள்நீராய்த்
தானிருக்குஞ் சுனைகண்டு அந்நீருண்டு
அப்படியே பலவிடங்க ளங்கேயுண்டு
ஆச்சரியம் வெகுபேர்க்குத் தெரியாதப்பா
ஒப்பரிய சஞ்சீவி மலையிதென்றே
உரைத்தார்கள் பெரியோர்க ளிதனைத்தானே. (30)

காலாங்கி நாதர் ஞானவிந்த ரகசியம் ௩௰
முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீபோகமகா ரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் கைலாசபரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ தேண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிட மிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலாயது.

௳

குருவே துணை.

நாற்பத்தாறுவது:

காலாங்கிநாதர் திருவாய் மலர்ந்தருளிய

இந்திர சால ஞானம் சசு

திருவாக்குந் திருமூலர் காப்பாமென்று
திருக்காப்பைத் திறந்துமன தொன்றதாக
ஒருவாக்கால் வசியமுதல் மறைப்புவாதம்
ஓரைந்தாம் அஞ்சனத்தின் கிரியைமாற்றங்
குருவாக்கால் இந்திரமா சாலவித்தை
குளிகையொடு பலதொளில்கள் கிரியைக்கெல்லாம்
தருவாக்காய் நினைத்ததெல்லாம் ஆடிக்கொள்ளத்
தந்திமுக னெந்தைபதங் காப்பதாமே. (*)

பொன்னதனை யுரைகல்மன தொன்றதாகப்
போகமருள் கிருபையுன தில்லமாக
இன்னமறி விதியினுப சாந்திசெய்து
யிருவினையு மற்றதிரு மூலநாயன்
சொன்னமொழி கமலமுனி யறிந்துசொன்ன
சூட்சமதை யறிந்தவர்க்குச் சித்தியாகக்
கன்னல்தனு மாரனவன் றன்னைவெல்லக்
கருதுமொழி பார்த்தருள்வா ளாத்தாளென்னை (1)

ஆத்தாளே பிராணவத்தா ளாகப்பேசி
அப்பேச்சுக் குள்ளிருந்து அம்மாவென்று
பூத்தாளே பூரணமே யென்றுசொல்லிப்
பூவாசம் சுவாசமதி லேற்றிக்கொண்டு
மூத்தாளே யிளையாளென் றழைத்துநீயும்
முன்னூறும் முப்பதுமே தந்தாயென்று
காத்தருள்வ துன்பேரிற் கடன்தானென்று
கடைக்கண்ணு லொளிபார்த்து வெளியைப் பாரே. (2)

வெளிபார்க்கப் பார்க்கவெளி வெளியாய்ப்போச்சு
வேதமுறை சாஸ்திரங்கள் பொய்யாய்ப்போச்சு
ஒளிபார்க்கப் பார்க்கமனத் தெளிவதாச்சு
உலகமுதற் பிரபஞ்ச வாழ்க்கைபோச்சு
வழியார்க்கப் பார்க்கவழி யிந்தப்பேச்சு
வாய்ப்பேச்சாற் றெரியாதென் றொழிந்துபோச்சு
தெளிவாச்சு தென்றல்லோ யிந்தப்பேச்சு
செப்பினேன் தேகசித்தி முத்தியென்றே. (3)

முத்தியென்று சொன்னமொழி சத்யவாக்கு
மொழிந்தமறை நூலான துலகமார்க்கம்
சத்தியிவ ளாடிநின்ற குமட்டுமார்க்கந்
தனையறிய மாந்தருக்கு யிந்தமார்க்கம்
புத்தியில்லா ரறிவதெந்த மார்க்கஞ்சொல்லும்
புல்லுமுதல் விருட்சமது முளைத்துநின்ற
பத்திவைத்து வேர்மூலம் வித்தின்மூலம்
பார்த்தறிந்து கொண்டவர்க்குச் சித்திதானே. (4)

சித்தியென்ற பொருளரிய வற்றுப்பாரு
சிவபொருளு மதுவாகும் நவமேயாகும்
வித்தியது மனோவிர்த்தி அகாரவிர்த்தி
விவேகவிர்த்தி மூன்றுமொன்றாய்க் கண்டபேர்க்குச்
சத்தியிவ ளாடிநின்ற காலைக்கண்டு
தனகாலென் றறிந்துகொண்டு தன்னைப்பார்த்து
வெத்தியென்று வேதத்தை வென்றேனென்று
விளம்புமொழி பதினெட்டுப் பேருந்தானே. (5)

பதினெட்டுப் பேருமொரு பேரேயாகும்
பக்கமொரு பக்கமிரு பக்கமாகும்
சதிரிட்டுப் பார்த்துயிதை யறிந்தாயானால்
சண்முகமு மொருமுகமா யமுதமாகும்
பிதிரிட்டு வோடுமது வமுததாரை
பிங்கலையாற் றமர்வாச லூடேசென்று
விதியெட்டு ரெண்டெனவே பார்த்துக்கொள்ள
வேதன்விதி பொய்யாச்சு விரைந்துபாரே. (6)

விரைந்துபார் மெய்ஞ்ஞானக் கிரியையொன்று
    விளம்புகிறே னுளம்பதிந்து நன்றாய்க்கேளு
உரைந்துபார் தசநாதத் தோடேயொன்று
    ஓமென்ற பிரணவத்தோ டாகிதோன்றும்
திரைந்துபா ரறிவோமென் றுரைத்துநீயும்
    நீதியுடன் நூற்றெட்டு விசையேமாறில்
இரைந்துதச நாதமது குமிழிபாயும்
    இன்பமுற்றுப் பீங்கானில் வாங்குவாங்கே. (7)

வாங்கியதிற் பீங்கானில் விட்டுக்கொண்டு
    மவுனத்தால் வாவெனவே நடுவைமாறி
காங்கதியா மென்றஓம் சுழிநேநோக்கி
    நானென்ற பதிநோக்கித் தன்னைப்பார்த்து
ஆங்குதிகொண் டுயரேறி யறிவில்நின்று
    அம்மாளை நவமிமுத லாக்கிக்கொண்டு
பீங்கானி விருத்ததைநீ சிரேஷ்டஞ்செய்யப்
    பேசுகிறேன் நீயறிவாய்ப் பேச்சைக்கேளே. (8)

கேளடா முக்காலும் பேச்சுப்பேசக்
    கேசரமாய்ச் சரமடக்கப் பேசலாமோ
நாளடா முப்பத்தி ரெண்டேநாளில்
    நானிருந்தேன் பதினெண்பேர் பேச்சைக்கேட்டு
வேளடா மன்மதன்றன் ரூபங்கண்டு
    விஷயமென்று உட்கொண்டு பார்த்துக்கொண்டேன்
கோளடா ஒன்றுமில்லை யில்லைபாரு
    கூச்சமற்றுப் பேச்சுக்கால் காணலாமே. (9)

பேச்சுக்கா லிருந்திடம்நீ காணுதற்கு
    பின்னும்நீ முன்னும்நீ நானேதென்று
மூச்சுக்கா லற்றவிடந் தன்னைப்பாரு
    முன்னவன்றான் முன்னின்ற மூலம்பாரு
ஏச்சுக்கா லேச்சுவிடு முலகப்பேச்சு
    இயம்பாதே இயம்பினுல் மூச்சேகொல்லும்
போச்சுக்கா லென்றுசொல்லிப் போகவிட்டு
    பொய்யாகப் போகாதே முன்னூல்பாரே. (10)

மூன்றாலாய்ச் சொன்னமொழி யிந்நூலாகும்
மூலர்பிள்ளை காலாங்கி யென்பேராகும்
என்னூலாய்ச் சொன்னமொழி யறிந்துகொண்டால்
இடையூறு தடையொன்று மில்லையில்லை
இந்நூலைக் கொங்கணன்று னறியவென்று
என்னிடமாய் வந்திருந்து அறிந்துகொண்டார்
தன்னூலாய்க் கடைக்காண்ட மைஞ்ஞூறுள்ளே
தான்பாடி வைத்தபொரு ளறிந்திலாரே. (11)

அறிந்துபா ரென்பேரை முக்கால்சொல்லி
அக்காலை யெண்கால்கொண் டிருகாலோடி
அறிந்துபா ரங்கிகால் ரெண்டுமொனமாய்
ஆச்சுபா ரிருபேரு மென்பேராச்சு
அறிந்துபார் கருவியெல்லாம் பற்பமாக
ஆச்சுதடா அரைவாசி முக்காலாகி
அறிந்துபா ருன்பேருமென்பேராச்சு
ஆயிரத்தெண் கமலமதி லிருந்துதானே. (12)

தானென்ற கமலமுனி யானேன்பாரு
சகலசித்தர் மெய்க்கவுமெய்ச் சித்தனானேன்
மானென்ற வாலைசிறு பெண்ணாள்தேவி
மாசித்த னென்றெனக்குப் பேருஞ்சொல்லி
தேனென்ற அமுதகலை யூட்டிவைத்துச்
செகசால வித்தையெல்லாந் தெரியச்சொல்லி
வானென்ற வெளிகாட்டி வெளியிற்குள்ளே
மனதடங்கிச் செய்யெனவே வழுத்தினாளே. (13)

நாளொன்றுக் கிரவுபக லிரண்டுவேளை
ரண்டுமொன்றாய்க் கண்டதிரு மூலநாயன்
தாளென்று மெனையழைத்தா ரழைத்தபோது
தாளநின்றே னவர்க்குநான் பிள்ளையானேன்
கேளென்று முன்பின்னாய்ப் பின்னுமுன்னாய்க்
கேசரத்திற் போய்மீளச் சூட்சஞ்சொன்னார்
பாளென்ற முப்பாழுக் கப்பாளென்னைப்
பகரதிதாய் நின்றபதி தன்னைத்தானே. (14)

தன்னைத்தா னறிந்தபின்பு பின்னைக்கேளு
தலைவனென்ற மூலகுரு தன்னையாறும்
என்னைப்பா ருன்னைப்பா ரென்றுசொல்லி
யெதுத்துவரு மிடகலையை யிறுத்திப்பாரு
பொன்னைத்தான் தேடிமெத்தப் புதைத்துவைத்துப்
புத்தியற்ற வுலகத்தோர் செத்தாரையா
தன்னைத்தா னறியாம லுலகத்தோர்கள்
சாஸ்திரத்தைப் பாராத மடையர்தானே. (15)

மடையனென்ற எழுத்தறிந்து மடக்கிக்கொண்டு
மாசற்ற சித்தர்வெளி யேற்றம்பார்த்து
இடைகண்டு திறமுனையி லாடிநின்ற
யெம்பிரான் யெழுத்தறிந்து கண்டுகொள்ளத்
தடையொன்று மில்லையடா புத்திகேளு
சற்குருவாந் திருமூல ரென்னைப்பெற்ற
விடையமதைப் போகருக்கு யானுஞ்சொன்னேன்
விளம்பினதைக் கொங்கணர்க்குச் சொன்னார்பாரே. (16)

சொன்னமொழி காலுபே ரந்தமூலம்
சோதித்து கண்டவர்க்கு யிந்தமூலம்
கன்னல்மொழி தீங்கருப்பாய்க் கொள்ளவாங்கும்
கண்ணுமனக் கண்வெளியா யொளுயைக்காட்டும்
விண்ணமது ஒருநாளு மில்லைப்பாரு
விளம்பினசொற் பொய்யாது மெய்யைப்பாரு
முன்னமொரு காரணத்தாற் பொதிகைமேவும்
மோனகுரு மொழிபாடல் தன்னைப்பாரே. (17)

பாருநீ பூரணநூல் தீட்சைபாரு
பகரிது பூசையிது நூறும்பாரு
தேறுநீ சட்டைமுனி ஞானம்பாரு
சித்தியுள கொங்கணர்ப்பட் சணியைப்பாரு
மாருநீ மச்சமுனி சொன்னபாடல்
மகாசித்தி யவர்சொன்ன பாடலெல்லாம்
கோருநீ யொருகோர்வை யாகத்தானே
கோர்த்துநீ பலநூலும் பார்த்துகொள்ளே. (18)

கொள்ளுவது யெந்தனுட நூலைப்பார்த்துக்
 கொண்டவனே சித்தன்மெய்ஞ் ஞானியாவான்
தள்ளுமது பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம்
 சகலகுரு தானவனுஞ் சொன்னதெல்லாம்
எள்ளளவுந் தப்புமொழி யில்லைசொன்னேன்
 ஏதுபோ வென்றுவிட்டா லொன்றுமில்லை
துள்ளுமரி பெலிவெட்டித் தொழுவின்வாசல்
 தொழுத்திறந்து காலியைநீ பிடித்துக்கட்டே. (19)

கட்டுமொழிப் பேச்சாலே யொன்றுமில்லை
 கணபதிதா னிருபதத்தைப் பூசைபண்ணிச்
செட்டியெனுஞ் செவ்வேளைத் தினமும்போற்றித்
 திரிசூலி நீலிகர கபாலிவீரி
கட்டழகி திருவாக்கு மூலங்கேட்டுக்
 ககனவெளி கேசரத்திற் பாய்ந்துயேறத்
தொட்டகுறி தொடுகுறிபோ லிந்தநூலிற்
 சொன்னபொரு ளறிந்தவனே சித்தனாமே. (20)

சித்தனென்று சொன்னகருச் சொல்லக்கேளு
 சிற்றின்ப மாகுமது மவுனவித்தை
முத்தனென்ற பெரியோர்க ளறிந்துகொள்வார்
 முன்னவனை முன்னிறுத்தி யென்பேர்சொல்லி
சித்தம்வைத்துப் புத்திகொண்டு உத்துப்பாரு
 சிவசிவா வசியசிவா வென்றேசொல்லி
நித்தமுமே அஸ்தஞ்சித் திரையாஞ்சோதி
 நீயறிவாய் சித்தின்பங் கொண்டிடாயே. (21)

கொண்டபெண்ணை விட்டாக்காற் கோளைகோளை
 கோசிகற்குத் தவமுடித்த குருவாமின்னூல்
அண்டமொடு பிண்டமுத லிரண்டுமொன்றாய்
 ஆடிநின்ற பூரணத்தி னுட்டுக்காலைக்
கண்டுகொண்ட பேர்க்கல்லோ காலன்மாண்டான்
 கருதுமொழி தனையறிந்து கருவைப்பாரும்
மண்டலங்க ளூன்றுகதிர் மதியாமக்கி
 மவுனத்தி னடியென்று காண்பலாமே. (22)

காணும லுலகத்தி லலைந்துசெத்த
கண்குருடற் கியம்பிவிட்டேன் கண்டுதேரு
தோணுமற் சடமெடுத்த பாவியுன்னைச்
சொரூபசித்தி யாவதற்குச் சொன்னேன்கேளு
வாணுளை மாயாதே நூலைப்பாரு
மயக்கமாய்ச் சொன்ன திரு மூலநாயன்
கோணுமல் நின்றுரைத்த கருத்தானெனனைக்
கூப்பிட்ட சத்தமட்ட புவனமாச்சே. (23)

புவனுதி சக்கரமாய் முடிந்தபேச்சுப்
பூரணமாய்ப் போகருக்கு யானுஞ்சொன்னேன்
கவனுதி சித்தர்மெச்ச யெழுநூறுள்ளே
கருக்குருவாய்த் தெளிவாகப் பாடிப்போட்டார்
நவனுதி சரக்குமுதற் கட்டுமார்க்கம்
நண்பான கொங்கணர்க்கு எடுத்துக்காட்டி
அவனுசி நுணிமூல மாணிமூலம்
அகஸ்தீச ரடிமுடியுங் காட்டினுரே. (24)

காட்டினுர் கொங்கணர்க்குப் போகர்தானும்
கண்கருத்தாய்ப் பெற்றபிள்ளை யானதாலே
மூட்டினுர் மூதண்ட கடாகமட்டும்
மூவரையும் ஆறுவரை தாண்டியேற
மாட்டினுர் சிலம்பொலிகேட் டுள்ளேசெல்ல
வாவென்முர் க்ஷணத்திலே மீண்டுவந்தார்
எட்டினு லெழுதியிதைக் காணலாமோ
யேகமொரு மூலவர்க்க மானேம்நூலே. (25)

நூல்பார்த்துக் கொண்டமன மாண்டிற்சித்தி
நுனிமூக்கிற் கண்ணேக்க வைத்துப்பாரு
கால்பார்த்துக் கொண்டுவழி நடக்கவேணும்
கண்ணுண்டாய்ப் பார்க்கவல்லோ யிந்தநூலில்
மால்பார்த்து நின்றவிடஞ் சொன்னேன்மைந்தா
மகராசி திருவாளுள் செங்கண்மாலாய்
நால்பார்த்துக் கொண்டுகதி பெறுவாயென்று
நன்மொழியாய்ச் சொன்னமொழி யிந்தநூலே. (26)

இந்தநூ லறுநூ றெட்டிதன்னில்
இன்பதுன்ப மிருவினையும் அற்றுப்போக
வந்தநூல் தனையறிய மார்க்கஞ்சொல்லி
மாலிருந்த பதிசொல்லி மாயைநீக்கி
முந்தநூல் மறைபொருளாய் நின்றமார்க்கம்
முந்நூறிற் சொல்லிவிட்ட குறையுஞ்சொன்னேன்
அந்தநூல் தனைப்பார்த்து அடக்கங்கொள்ள
ஐயனே யானுரைத்தே னறிந்துபாரே. (27)

அறிந்துகொள்ள எந்தநா ளிந்தநாளென்
றூரூரி லுள்வீதிக் குள்ளேசொல்லி
அறிந்துகொள்ள உள்ளபடி கள்ளமன்றி
அதீதத்தோ டானந்த மார்க்கஞ்சொன்னோம்
அறிந்துகொள்ள மாட்டாமற் போனாயானால்
அடித்துப்பால் புகட்டுவாரோ அறிவேபிள்ளாய்
அறிந்துகொள்ளப் புனல்கனல்கால் வெளியோடொன்றாய்
அடிமூல மூலகுருதன்னைப் போற்றே. (28)

போற்றுவது கேட்டுவிசை தியானமூலம்
போதறிவாய் ரெண்டுபத்து மொன்றைக்கொண்டு
போற்றுவது கேளுசித்தி நீயேயென்று
பூத்தமலர்ப் பூவாலர்ச் சனையேசெய்து
போற்றுவதுக் கிப்படியே மவுனத்தாலே
போதமுடன் கொண்டேத்திக் கொண்டாயானால்
போற்றுவது சித்தர்நவ மூலங்காட்டிப்
புகலுவார் மெஞ்ஞானந் தன்னைத்தானே. (29)

தன்னைப்போற் சொரூபசித்தி செய்வாருன்னைத்
தர்க்கமிட்ட சித்தரைநீ யடக்கிக்கொள்ள
முன்னைப்பூ வர்ச்சித்த பெலத்தினாலே
மூலகுரு வுபதேச யெழுத்தினாலே
தன்னைத்தான் மெச்சமனத் திடத்தினாலே
சகலகுரு தேசிகனா யிருப்பாயென்று
உன்னைத்தா னுயிர்த்தென் கலையின்மீதில்
உச்சிதமெய்ச் சித்தனென்று அறிந்துதானே. (30)

தானென்றிவ் வளவும்வே தாந்தமார்க்கம்
 தனையறிய மெய்ஞ்ஞான யோகமார்க்கம்
வேனென்ற தேபூசை கிரியைமார்க்கம்
 மேதினியோர் கொண்டாடுஞ் சரியைமார்க்கம்
கானன்று யுரைத்துவிட்டே னுனக்குத்தோணு
 நற்குருவாந் திருமூலர் மெய்க்கமெய்க்கக்
கோனென்ற யீசன்மால் பிரமன்மெய்க்கக்
 கூறுகிறேன் வசியமுதல் மாற்றந்தானே. (31)

மாற்றமொடு வாதமுதல் ஞானக்கூறும்
 மாந்த்ரீக மென்றஅஷ்ட கர்மமார்க்கம்
சாற்றுகிறேன் நன்றாக இந்த்ரஜாலம்
 சமாதிகற்பங் கைபாக முறையுஞ்சொல்வேன்
ஏற்றமுள்ள வாசிசிவ யோகமார்க்கம்
 எல்லோர்க்கும் மேலான ஞானமார்க்கம்
பார்த்தறியச் சரியையொடு கிரியைமாற்றம்
 பகருமொழி குருவருளாற் பாடுவேனே. (32)

பாடுகிறேன் கமலத்தி லறிவுள்ளோர்க்குப்
 பக்தியுடன் மனதாகத்து பார்ப்போர்க்கெல்லாம்
பாடுகிறேன் சிவபக்த னன்பர்க்காகப்
 பாடிவைத்த பொருளறிந்து கொள்வோர்க்கெல்லாம்
தேடுபொரு ளிதுவென்று சிந்தைபூண்டு
 சிவசிந்தை வைத்துயிந்த நூலைப்பார்த்து
யாடுகிற கருவறிந்து கருவைக்கண்டு
 பரகெதியைப் பெற்றுபலன் பெறுவார்தாமே. (33)

தாமென்று நினையாமல் மறவாமற்றான்
 தனித்திருந்து நாற்கோண மிட்டுப்பின்பு
ஆமென்ற ததுக்குளிரு கோணமிட்டு
 அதற்குள்ளே ஸ்ரீகோணம் நன்றாய்ப்போட்டு
நாமென்ற நமசிவய மதனைமாறி
 நற்குருவை அங்குளத்தில் நன்றாயுன்னி
ஓமென்ற பிரணவத்தோ டாதிதன்னை
 உற்பனங்கொண் டொருநூற்றி யெட்டுந்தானே. (34)

எட்டுமுத லொன்றிரட்டி பதினெட்டான
ஏகவுப கிடமாகப் பார்த்துக்கொண்டு
கட்டநடு வணையேறி நடுவில்நின்று
நமசிவய யவசிமந வென்றேமாறி
கெட்டெழுத்தைக் கொண்டோத வசியமாச்சு
நிலமுதலாய் வெளியடக்க மூலத்துள்ளே
விட்டகுறை யுனக்குமிது வாச்சுபோச்சு
மெய்மறந்து திரியாதே வசியர்தானே, (35)

வசியமிது வசியம்ஜெக வசியமாகும்
மாதவத்தோர்க் கெய்துமிது கருமிக்கில்லை
கசியுமிது நாதாந்தக் கருணையாகும்
கைகண்ட சித்தியிது கருதினேன்பார்
விசிதமிது அறிந்தோதி ஜோதிபாரு
மேதினியோ ருனைக்கண்டால் வணங்கிக்கொள்வார்
ரிசிகளொடு முனிவோர்கள் துதிப்பாருன்னை
நீசமத்த ஞனுக்கா லறிவாய்ச்செய்யே. (36)

செய்யவிது யெனையீன்ற மூலநாயன்
செப்புமொழி கேட்டுநன்றாய்ச் செய்துபார்த்தேன்
வையமதைப் படைத்தளித்த மாதாவென்னை
வசியத்தால் வாவெனவே அழைத்தாள்கேளு
உய்யும்வழக யெனக்குமவள் கண்ணைக்காட்டி
ஓடிப்போ வென்றுசொல்லி நின்றாளாத்தாள்
கைதவத்தால் மெய்யறிந்து சித்தனாகி
காலாங்கி யெனப்பேரும் பெற்றேன்பாரே. (37)

பெற்றெடுத்த மூலகுரு தனச்குப்பிள்ளை
பேருலகை யீனறெடுதத தாய்க்கும்பிள்ளை
உற்றகுரு வறிந்துகொள்வா ரெனக்கும்பிள்ளை
ஒருபதிலே மனமடங்கி நின்றேன்பிள்ளை
பெற்றதொரு மாதாவை வணங்கிக்கொண்டு
பேரறிவாய் நின்றபிள்ளை யெனதுபிள்ளை
கற்றுணர்ந்த பெரியோர்கள் சித்தரெல்லாங்
காலாங்கி பிள்ளையென்றால பிடிப்பார்காலை. (38)

கால்பார்த்துக் கொண்டாலே உயரவைத்துங்
கதியிருந்து பதிகாட்டும் மதியைக்காட்டும்
மால்பூத்த வுந்திதிரு நந்திவாழ்க்கை
மவுனநிலை பதிகாட்டும் விதியைக்காட்டும்
மேல்பார்த்துக் கீழ்நோக்கி விண்ணைப்பார்த்து
மேலான பரவெளியை தன்னுற்காட்டுங்
கால்பார்த்துக் கடைத்தேற வேணுமல்லாற்
கதிமுத்தி காலைவிட்டா வில்லைதானே. (39)

இல்லையென்று சொல்வதெந்த விதந்தான்கேளு
யேறுதலை யுனைவந்து தாக்கும்போது
தொல்லையென்று சும்மாநீ யிருந்தாலுந்தான்
தூக்காமல் விடுவதில்லை யுன்னைக்கண்டாய்
அல்லல்வினை யிருவினையு மொன்றாய்நின்ற
ஆனந்த திரிகோணச் சூட்சந்தன்னில்
வல்லவர்க ளறிந்துகொண்டு ரெண்டினாலே
வாசிதிரு வாசிதனி லேறுவாரே. (40)

ஏரென்ற ரிஷபமதி லீசனேறி
யிருகாலை மடித்துமடி மீதில்வைத்துக்
கூரென்ற திருகூரு மொன்றாய்க்கொண்டு
கூத்தாடிக் கொண்டதிருக் கூத்தைப்பாரு
வாரென்ற பூண்முலையாள் தேவிவாலை
வாதாடி யீசனையும் வென்றசூட்சம்
பாரென்று சொல்லியிந்த நூலிற்பாடி
புதித்துவைத்த பொருளறிந்து கண்டுகொள்ளே. (41)

கொள்ளைமனம் பூண்டகரு மத்தைச்சுத்திக்
கூறுகிறேன் பாருறுதி யொருதிசொன்ன
கொள்ளுறுதி மச்சமுனி பச்சம்வைத்துக்
கொண்டுசித்தி பெற்றதொரு மறைப்புவித்தை
கள்ளமன்றிக் கண்டபே ரொருவரில்லை
கண்டுபா ருனக்குமெதி ரொருவரில்லை
எள்ளளவுந் தப்புமொழி யல்லக்கேளு
யேழரையி லெழுவாரக் தாரமென்றேன். (42)

தாரமென்று வாரமென்று இரண்டுமொன்ருய்த்
தனித்துநின்ற விடமதிலே விந்துசேர்த்து
மாரனென்று நின்றவித்தை மறைப்புவித்தை
வையகத்தில் வைபவமாய் வளரும்பாரு
கூறுமென்ற வெனதுமொழி கேட்டாயானல்
கூறுகிறே னுற்றுணர்ந்து கேளுகேளு
மாரனென்று நின்றபொருள் நீயேயாச்சு
மறைப்புவித்தை நீயாச்சு யின்னங்கேளே. (43)

இன்னமுமே சொல்வேனே ரண்டத்தெண்ணெய்
இருகாலு மரைப்படியில் மருந்தைக்கேளு
சொன்னமொழி யறிந்துகொண்டு இந்த்ரகோபம்
சோதனையி லாழாக்குத் தொகுப்பாய்வாரு
வின்னமதுக் கோளுமில்லை குளியான்றன்னை
விசிதமுடன் சிரங்கையொன்று போடுபோடு
முன்னைமொழி தப்பில்லை நாதவிந்து
மூலமிது திருமூலஞ் சேர்த்துக்கொள்ளே. (44)

சேர்த்துநீ யிந்திரமாங் கோபந்தன்னைத்
சேர்த்துதுகை சொல்லவில்லை யைம்பத்தொன்ருய்
சேர்த்துநீ யேகமொன்ரு யாகும்பக்கம்
சோவிட்டு அடுப்பேத்தித் தீயைமூட்டி
பார்த்துநீ யாழாக்காய்க் குறுகமட்டும்
பாரத்தீ போடாம லெரித்துவாங்கு
மூர்க்கம்வைத்து தலசிகெற்ப மண்டையோட்டில்
மூலகுரு வருளாலே அதனில்வாரே. (45)

வாருநீ கூறுமொழி பிசகாமற்ருன்
வார்த்தபின்பு சூட்டடுப்பிற் சட்டியேத்தி
கூருநீ சிவாயகுரு நீயேயென்று
கொண்டேத்திக் கொண்டீசத்தி மேலேநீயும்
சேருநீ சிரவோட்டைச் சட்டிதன்னிற்
சேர்த்தபின்பு மேலொரு சட்டிமூடிப்
பாருநீ வேடுசுத்தித் தீயைமூட்டிப்
பாரத்தீ போடாம லெரியிடாயே. (46)

எரித்திடாய் ஒருசாமஞ் சென்றபின்பு
என்மகனே ஆறியபின் அதையெடுத்துப்
பிரித்திடாய் மைமெழுகு போலிருக்கும்
பிசகாது இதன்பெருமை உனக்குச்சொல்வேன்
சிரித்திடாய் இதையெவர்க்கும் வெளிவிடாதே
சிமிழெருமைக் கொம்புதனிற் செய்யச்சொல்லி
உரித்திடாய் சிமிழதனிற் பதனம்பண்ணி
உற்றகாரியமனைத்தும் முடிக்கலாமே. (47)

ஆமென்ற ஜாலவித்தை மார்க்கமெல்லாம்
அப்பனே சொல்லிவைத்த படியேநீயும்
தாமென்ற எத்தொழிலுஞ் செய்யலாகும்;
சரியான பேர்க்கிதுவும் பலிக்கலாகும்
ஓமென்ற படிசெய்து வருவாயானால்
ஓகோகோ சித்தருனைக் காண்பாரப்பா
நாமென்ற பேருமக்குக் கொடுத்தோமிந்த
நாட்டிலே செய்துநீ தெளிந்திடாயே. (48)

காலாங்கிநாதர் இந்திரசால ஞானம் ௨௱

முற்றிற்று.

மதுரை திண்டுக்கல்ரோட் பொடிக்கடை வியாபாரம் சேலம் வேங்கடசாமி நாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை.

நாற்பத்தேழாவது

காலாங்கிநாதர் திருவாய் மலர்ந்தருளிய

ஞான பூஜாவிதி அ௰.

ஆதியிலே அமைத்தவிதி யெழுத்தினாலே
அருள்பெருகுந் திருமூலர் பாதம்போற்றி
நீதியுடன் பூசைவிதி தன்னைமைந்தா
நேர்மையுடன் கைம்முறையாய்ப் பாடுதற்குப்
போதமெனும் ஞானபூ ரணமேகாப்பு
பூரணமாய் நின்றமனோ மணியேகாப்பு
சோதியெனுங் கருணைவிழி மலர்க்கண்ணான
சுந்தரமாய் நின்றகண பதிகாப்பாமே. (*)

ஆமப்பா பூசைவிதி மார்க்கந்தன்னை
அன்புவைத்துக் கைமுறைக ளதிகஞ்சொன்னேன்
ஓமப்பா கைமுறைக ளதிகஞ்சொன்ன
உண்மையுள்ள பூசையது நுணுக்கம்மெத்த
வாமப்பா லகிரியினாற் சித்தர்கூடி
வந்தார்கள் திருமூலர் பாதந்தன்னிற்
சோமப்பா லுண்டுவந்த கெதியைப்பார்த்துத்
தொழுதுநின்ற காரணமே தென்றார்பாரே. (1)

என்றமொழி தனையறிந்து சித்தரெல்லாம்
என்குருவே பூசைவிதி முறைகள்மெத்த
அன்றண்டர் பதந்தெரியச் சூட்சமாக
அன்புவைத்துக் கடாக்ஷியுமென் றடிபணிந்தார்
நின்றுபதம் பணிந்தவகை யறிந்துகொண்டு
நேமமுடன் பூசைவிதி சுருக்கமாகக்
கண்டுகொண்ட வகையறிந்து சொன்னேனப்போ
கயிலாசச் சித்தரெல்லாம் வணங்கினாரே. (2)

வணக்கமுடன் பூசைவிதி சுருக்கமாக
வகையுடனே சொன்னவகை தன்னைக்கேளு
இணக்கமுடன் மூலமதில் வாசிபூட்டி
ஏகாந்த ருத்திரரைக் கண்டுபோற்றித்
தனக்குறுதி யானரவி மதியைக்கண்டு
சதாசிவனார் மனோமணியைத் தியானம்பண்ணி
எனக்குறுதி யுனதுபதந் தாயேயென்று
ஏகாந்தமாகவேநீ யிருந்துகொள்ளே. (3)

இருந்துகொண்டு நவகோணம் நன்றாய்ச்செய்து
ஏகாந்த நவகோணந் தன்னிலேதான்
வருந்தினதோ ரட்சரத்தைச் சொல்லக்கேளு
மறிவாதே ஐயுங்கிலியுஞ் சவ்வென்றேதான்
அருந்தவமாய்ச் சிவயநம அஞ்சுங்கூட்டி
ஆகவஞ்சும் மூன்றுமடா யெட்டுமாச்சு
விரிந்தவொரு யெட்டெழுத்து மெண்கோணத்தில்
விபரமுடன் தானெழுதி நடுவேகேளே. (4)

கேளப்பா நடுவான முக்கோணத்திற்
கெணிதமுடன் விந்தெழுதி விந்துக்குள்ளே
சூளப்பா ஓங்கார மதனுட்போடு
சுழித்தநடுச் சுழியெழுத உயிருமாச்சு
காலப்பா கட்டான நவகோணந்தான்
கருணையுள்ள நவக்கிரக மென்றுபேரு
மேலப்பா நவக்கிரக மேலாகத்தான்
விந்துவென்ற வளையமது மூன்றுபோடே. (5)

போடப்பா முதல்வளையம் இதழ்தானெட்டு
புகழான மறுவளையம் பதினாறாகும்
நாடப்பா அதன்மேலே யிருபத்தேழு
நன்மையுள்ள இதழைம்பத் தொன்றுமாச்சு
தேடப்பா இதழைம்பத் தொன்றிலேதான்
திருவான அட்சரத்தைச் செப்பக்கேளு
சூடப்பா அட்சரந்தா னைம்பத்தொன்றும்
சுத்தமுடன் தானெழுதி யின்னங்கேளே. (6)

கேளடா நால்வாசற் கோட்டைகட்டிக்
கிருபையுள்ள பஞ்சகர்த்தாள் காவலாகத்
தேளடா அச்சரத்தைத் தியானம்பண்ணிச்
சிவகலை யுண்டாகச் செபமேசெய்து
வாளடா சக்கரந்தா னுறுதியாச்சு
மகிமையுள்ள நவக்கிரக மானவீடு
மீளடா அவ்வீட்டுக் கெதிராகத்தான்
மேன்மைபெறும் ரசிதமென்ற கும்பம்பாரே. (7)

பாரப்பா கும்பத்தில் நூலணிந்து
பத்தியுடன் கெங்கைபூ ரணமாய்விட்டுத்
தேரப்பா மாங்குழையுந் தேங்காய்சாத்தி
சிவசிவா நாற்புறமுஞ் சவாதணிந்து
சேரப்பா அச்சதையு மதனிற்சாத்தித்
திருவிருந்த கும்பமதை மைந்தாகேளு
நேரப்பா ப்ச்சரிசி நிறப்பிவைமந்தா
நேர்மையுள்ள கும்பமதை வைத்துக்கேளே. (8)

கேளப்பா களஞ்சிதங்கத் தகடடித்துக்
கெட்டியா யதனிலொரு விந்துபோட்டுக்
கேளப்பா விந்துவதின் நடுவிலேதான்
கிருபையுடன் றிங்காரஞ் சுழியுஞ்சாத்திக்
கேளப்பா அத்தகட்டைக் கையிலேதான்
கேள்மகனே சிவசிவா வென்றுமைந்தா
கேளப்பா கும்பமதி னுள்ளேபோட்டுக்
கெணபதியும் மஞ்சளினு லறுகுசாத்தே. (9)

சாத்தியதோர் கணபதிக்குச் சொர்ணபுஷ்பம்
சாத்திநன்றய்க் கும்பமதி னருகேவைத்து
மூர்த்திகரமாவதற்கு மைந்தாகேளு
முத்திபெறும் அட்சதைவு மென்றுசாத்திப்
பாத்திபனே சுழிமுனையில் மனக்கண்வைத்து
புத்தியுடன் வாசியினுல் மூலத்தேகி
ஆத்துமத்துக் குயிரான குருவைப்போற்றி
அமுதரச வர்க்கம்பால் பழமும்வையே. (10)

வையப்பா தாம்பூலங் கமலமீதில்
மார்க்கமுடன் வசிகரமெ மென்றுமைந்தா
கையாரத் தானெடுத்து முன்னேவைத்துக்
கருணைபெற அட்சதையும் மலர்கள்வாரி
மெய்யப்பா ஓம்சிவா சிவாவென்றேதான்
விருப்பமுட னர்ச்சனைகள் செய்துகொண்டு
செய்யப்பா தேங்காய்கள் பெலிகொடுத்துச்
சிந்தைமன தொன்றாக அறிவில்நில்லே. (11)

அறிவான மனதுடனே சிம்சிம்மென்று
அப்பனே தூபமுடன் தீபங்காட்டிக்
குறியான உபசாரஞ் செய்துகொண்டு
குணமான மணியோசை சங்கினோசை
விறிவான சேகண்டி யோசைசெய்து
மெய்த்தவமாய்ப் பத்தியுடன மைந்தாநின்றால்
செறியான புருவநடு சுழியைப்பார்த்து
நின்றிலங்குங் கற்பூரத் தீபந்தானே. (12)

தானான தீபமொடு சிலம்பினோசை
தன்னகத்திற் காணுமடா உண்மையாகக்
கோனான பஞ்சகர்த்தாள் சத்தியோடு
குணமாக வசனிப்பார் முன்னேநின்று
தேனான அமுதரச மீய்வார்மைந்தா
செம்மையுட னவர்பதத்தைப் பூசைசெய்து
ஊனான தேகமடா முத்தியாக
உறுதியுடன் வாசியினால் மூலம்பாரே. (13)

பாரப்பா வாசியினால் மூலம்பார்த்துப்
பதிவான ருத்திரனார் பதியிற்சென்று
நேரப்பா பூரணமாய் மலர்க்கண்சாத்தி
நின்றிலங்குஞ் சுழிமுனையை நீதான்பாரு
பேரப்பா அண்டரண்ட பதங்கள்காணும்
மேன்மைபெறச் சிவயோகத் திருந்துகொண்டு
காரப்பா கண்டமதில் அங்கிகன்றாணிக்
கருணையுடன் சடாட்சரந்தை அறிந்துவோதே. (14)

ஓதுவது சடாட்சரந்தா னென்னவென்றால்
உண்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
ஓதுவது ஓம்ஒம் சிவயநமவென்று
உண்மையுடன் நூற்றெட்டு உருவேசெய்து
ஓதுவது புருவநடுக் கமலமீதில்
ஒழுங்கான வாசிமல ருகந்துசாத்தி
ஓதுவது பூரணமே தாயேயென்று
உண்மையுடன் தோத்திரங்க ளுகந்துசெய்யே. (15)

உகந்துநின்ற தோத்திரங்கள் செய்தாயாகில்
உண்மையுள்ள நவக்கிரக முறுதியாகும்
அகந்தெளிந்து நவக்கிரகந் தன்னில்நின்று
அன்புடனே நவக்கிரக பூசைசெய்தால்
ஜெகந்தெளிந்த குருவருளைக் காணலாகுஞ்
சிவசிவா சிவபூசை கோடிக்கொக்கும்
முகந்தெளிந்த குருபரனைக் காணலாகும்
முத்தியென்ற வாசியினால் யோகம்பாரே. (16)

பாரப்பா சிவயோகத் திருந்துகொண்டு
பக்தியுடன நவக்கிரக பூசைசெய்தால்
நேரப்பா நின்றஅனுக் கிரகந்தோன்றும்
நினைவாக அனுக்கிரகத் துள்ளேசென்றால்
மேரப்பா அண்டபதந் தன்னிலேதான்
மெய்ஞ்ஞான தீபமடா கண்ணிற்காணும்
காரப்பா தீபமதைக் கண்ணிறாலே
காத்ததினாற் சொற்கபதங் காணலாமே. (17)

காணவே சொற்கபத மென்னவென்றாற்
கருவான முக்கோணஞ் சிகாரவீடு
தோணவே அவ்வீட்டிற் காணவென்றாற்
றருவமுடன் நவக்கிரகப் பூசைசெய்து
பூணவே மூலமதில் வாசிபூட்டிப்
புத்தியுடன் ரவிமதியைக் கண்டுதேறிப்
பேணவே அனுக்கிரகங் கண்டாயானாற்
பெரிதான சொற்கபத மதுதான்பாரே. (18)

பாரான மூலமதைக் காணவேணும்
பதிவான வாசிதனை யறியவேணும்
நேரான வாசிதனை யறிந்துகொண்டு
நேமமுடன் சிவயோகஞ் செய்யவேணும்
கூரான சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
குறியான தொடுகுறியைக் காக்கவேணும்
பேரான மூலமடா ஆறுதாரம்
பெருமையுள்ள நவக்கிரகப் பூசைபண்ணே. (19)

பண்ணப்பா நவக்கிரக பூசைதன்னிற்
பதிவான மானதமாம் பூசைகேளு
விண்ணப்பா தானோக்கி மலர்க்கண்சாத்தி
மேலான இடதுகையில் விபூதிவைத்து
நண்ணப்பா விபூதியைநீ நிரப்பிமைந்தா
நலமான நவகோணம் நன்றாய்க்கீறி
முண்ணப்பா நடுவான முக்கோணத்தில்
முதலான விந்துஓங் காரம்போடே. (20)

போடப்பா ஓங்கார மதனுள்மைந்தா
பொருந்திநின்ற சுழியெழுதிப் போதமாக
நாடப்பா அஞ்செழுத்தில் மூன்றுங்கூட்டி
நன்றாக உருச்செபித்து நாட்டியுன்னிக்
கூடப்பா வாசியினால் மூலம்பார்த்துக்
குருவான பதிநோக்கித் தியானஞ்செய்து
ஊடப்பா வாசிநின்ற விடத்திலேதான்
உண்மையுடன் ரேசகபூ ரகமும்பண்ணே. (21)

பண்ணப்பா கும்பகத்தில் மனதைவைத்துப்
பதிவான சுழிமுனையைப் பத்தியாக
நண்ணப்பா குருவருளாற் பார்த்தாயாகில்
நடுநின்ற தீபமடா தோணுந்தோணும்
உண்ணப்பா நின்றதொரு தீபங்கண்டால்
யுத்தியுள்ள பூசையடா மவுன்பூசை
விண்ணப்பா நிறைந்ததொரு மோனபூசை
வேதாந்த மானதமாம் பூசைதானே. (22)

தானென்ற மானதமாம் பூசைசெய்து
தன்மையுள்ள பூதியைநீ சாந்தமாகக்
கோனென்ற குருவருளாற் பூசமெய்யிற்
குணமாகப் பணவிடைதா னுள்ளேகொண்டால்
நானென்ற ஆணுவங்க ளகன்றுபோகும்
நாதாந்த தேகமது மத்தியாகும்
தேனென்ற அமுதரசஞ் சித்தியாகும்
சிவசிவா சிவயோகத் திருந்துபாரே. (23)

பாரப்பா யின்னமொரு கருவைக்கேளு
பரியான தகட்டில்நவ கோணமிட்டு
நேரப்பா நடுவான முக்கோணத்தில்
நிறைந்துநின்ற சுழியெழுதிச் சிகாரம்போட்டுப்
பேரப்பா அஞ்செழுத்தில் மூன்றுங்கூட்டிப்
பிலமாக நூற்றெட்டு உருவேசெய்து
காரப்பா அத்தகட்டைக்குளிசத் தூட்டிக்
கருணையுடன் கைதனிலே கட்டிப்பாரே. (24)

கட்டிகன்றாய் விபூதியைநீ பூசினாக்கால்
கலந்துநின்ற ரோகமெல்லாங் காணாதோடும்
இட்டமுடன் தேகவச்ர காயமாகும்
ஏகாந்தத் தோஷமெல்லா மெடுபட்டோடும்
சட்டமுடன் நவக்கிரகச் சார்பினாலே
சகலபிணி விஷமுதலாய்த் தானேதீரும்
திட்டமுடன் நவக்கிரகந் தேகந்தேகம்
திருவான அனுக்கிரகங் குருவின்வீடே. (25)

வீடான நவகோண மிட்டுக்கொண்டு
விபரமுடன் நடுவான முக்கோணத்திற்
சூடான அச்சரத்தின் பெருமைகேளு
சுபமுண்டாங் காரியத் தகட்டிலேதான்
வாடாமற் றானெழுதி மைந்தாகேளு
வரிசையுட னெட்டெழுத்தைத் தியானம்பண்ணித்
தேடாகச் சிசுக்களுக்குக் கட்டினாக்காற்
செகத்தினிலே நின்றபல தோஷம்போமே. (26)

போமப்பா யின்னமொரு கருமானங்கேள்
புத்தியுடன் தாம்பூரத் தகட்டிலேதான்
தாமப்பா தன்னிலையைத் தியானம்பண்ணிச்
சங்கையுடன் நவகோண மிட்டுக்கொண்டு
ஓமப்பா அச்சரந்தா னெட்டெழுத்தை
உறுதியுடன் றானெழுதி நடுக்கோணத்தில்
ஆமப்பா ஓம்கிலி றீங்கென்றேதான்
அழுத்திமிகத் தானெழுதி யந்தம்பாரே. (27)

அந்தமென்ற சுழிமுனையில் மனக்கண்ணூட்டி
அன்புடனே சடாட்சரத்தை யுருவேசெய்து
சொந்தமுட னத்தகட்டைத் தியானம்பண்ணிச்
சுருக்காக மானிடர்க்குக் கட்டினுக்கால்
பெந்தமென்ற மயக்கமொடு பித்துந்தீரும்
பிசாசுமுதற் பில்லிசூ னியமுந்தீரும்
பந்தமுள்ள காசமுதற் சிலவிஷங்கள்
பறக்குமடா நவக்கிரகப் பதிவதாலே. (28)

பதிவாக இன்னமொரு கருமானங்கேள்
பரித்தகட்டில் நவகோண மிட்டுக்கொண்டு
கெதியாக எட்டெழுத்தைச் சுத்திப்போட்டுக்
கிருபைபெறும் நடுவான முக்கோணத்தில்
விதியான அட்சரந்தான் ஓம்றீங்கென்று
விபரமுடன் றானெழுதி விண்ணைநோக்கி
மதியான ரவிமதியைச் சுழினைக்கேற்றி
மார்க்கமுடன் சற்குருவைத் தியானஞ்செய்யே. (29)

செய்யப்பா யெந்திரத்தைக் குளிசஞ்செய்து
திருவான பெண்களுக்குக் கட்டினுக்கால்
மெய்யப்பா சொல்லுகிறேன் கெற்பரோகம்
மெய்யான தேகமாம் வாய்வுதீர்ந்து
கையப்பா உதவுவது போலேமக்காள்
காரிகைக்குக் கெற்பமுண்டாங் கண்ணைக்காண்பாள்
பொய்யப்பா போகாது மெய்யேநிற்கும்
புத்தியுடன் நவக்கிரக பூசைபண்ணே. (30)

பண்ணுவது யின்னமொரு கருமானங்கேள்
பார்மகனே வெள்ளியத் தகட்டிலேதான்
தண்ணுறவாய் நின்றநவ கோணமிட்டுத்
தன்மையுட னெட்டெழுத்தைச் சுத்திப்போட்டுக்
கண்ணுமனக் கண்ணிதனுல் முக்கோணத்திற்
கருணையுடன் சிவாசிவா நீங்கென்றிட்டு
உண்ணுவது சடாட்சரத்தை உருவேசெய்து
உறுதியுடன் மனதறிவாற் றியானம்பண்ணே. (31)

பண்ணப்பா குருபரனைத் தியானம்பண்ணிப்
பதிவான யெந்திரத்தைக் குளிசமாடி
நண்ணப்பா வயல்களிலே அழுத்தினுக்கால்
நன்றாகக் கோளன்றி விளையும்பாரு
பெண்ணப்பா திரளாம லுருப்பேதித்தாற்
பெண்களுக்குக் கட்டினுல் நன்மையாகும்
எண்ணப்பா நிறைந்தஅனுக் கிரகத்தாலே
இகத்திலுள்ள அதிசயங்க ளின்னங்கேளே (32)

இன்னங்கேள் கருமானஞ் சொல்வேனையா
ஏகாந்தத் திருமூலர் கடாக்ஷத்தாலே
சொன்னமொழி தவறாமல் மனக்கண்ணாலே
சோதியென்ற ரவிமதியைச் சுழினைக்கேற்றி
முன்னமே சொன்னதொரு முக்கோணத்தில்
முத்திதரும் வாசியினுற் புருவத்தேகி
நன்னயமாம் நவக்கிரக பூசைபண்ணி
நன்மைபெற வனுக்கிரக கடாக்ஷம்பாரே. (33)

பாரப்பா தங்கம்வெள்ளி செம்புமூன்றும்
பதிவாக வுருக்கியதைத் தகடாய்த்தட்டி
நேரப்பா தகட்டில்நவ கோணமிட்டு
நேர்மையுட னெட்டெழுத்தும் நினைவாய்நாட்டி
ஆரப்பா லறிவர்நடுக் கோணந்தன்னில்
ஆதியென்ற விந்துமோங் காரம்போட்டுக்
கூரப்பா ஓங்காரந் தன்னில்மைந்தா
குழியான சுழிபதிலே குணமாய்ப்போடே. (34)

போட்டதொரு சக்கரத்தை வைத்துநன்றாய்ப்
புனிதமுடன் பூசித்து மைந்தாகேளு
நாட்டமுட னுருச்சிலைக ளடியில்வைக்க
நன்மையுடன் சத்திவளர்ந் திருக்கும்பாரு
தேட்டமுடன் நவக்கிரகச் சித்தினாலே
சிவகளையு முண்டாச்சு தெளிவுமாச்சு
ஆட்டமென்ற ஆட்டமெல்லா மெட்டெழுத்தாம்
ஆதியென்ற அட்சரந்தான் மூலமாமே. (35)

ஆமப்பா வெட்டெழுத்து மூலமாச்சு
ஆதியென்ற மூலமதைச் சொல்லக்கேளு
ஓமப்பா அஞ்செழுத்துச் சிவமுமாச்சு
உறுதியுள்ள மூன்றெழுத்து சத்தியாகும்
தாமப்பா சத்திசிவ மொன்றாய்க்கூடிச்
சகலகரு மாந்திரிகம் இதுதான்பாரு
காமப்பால் கனற்பாலைக் கொண்டோர்க்கெல்லாங்
கருவான வெட்டெழுத்துஞ் சித்தியாமே. (36)

சித்தியுள்ள வெட்டெழுத்துந் தினமேயோதிச்
சிவசிவா குருபதியிற் சேர்ந்தாயாகில்
முத்தியுள்ள தேகமது சித்தியாகும்
மூர்க்கமுள்ள வாசியது அகலாதையா
புத்தியுடன் ரவிமதியைத் தினமும்நோக்கிப்
புண்ணியனே நடுவான சிகாரவீட்டில்
நித்தியமும் நினைவாக நேமமானால்
நின்தேக மமுதமென்ற தேகமாமே. (37)

ஆமப்பா யின்னமொரு கருவைக்கேளு
ஆதியென்ற வெட்டெழுத்தின் அருமைதன்னைத்
தீமப்பா தன்னிலையில் மனக்கண்வைத்துத்
தயவாக மூன்றெழுத்தைத் தியானம்பண்ணி
ஓமப்பா பிணியாளர் வந்துநின்றால்
உத்தமனே பூரித்து உண்மையாக
நாமப்பா விபூதியைநீ கடீர் கூதித்தாக்கால்
நாடிநின்ற பிணிகளெல்லாம் நசித்துப்போமே. (38)

போகுமடா பொல்லாத நோய்களெல்லாம்
புத்தியுடன் பூரணமா யிருந்துகொண்டால்
ஆகுமடா நவக்கிரகஞ் சித்தியாகும்
ஆதியென்ற மூலமதில் வாசிபூட்டி
வாகுடனே புருவமதில் மலர்க்கண்சாத்தி
வரிசையுடன ஓம்கிலியும் சவ்வென்றோத
ஏகுமடா பில்லிமுதல் விஷங்களெல்லாம்
ஏகாந்த நடுவணையி லிருந்துபாரே. (39)

பாரப்பா சித்துவகை சிலதஞ்சொல்வேன்
பார்தனிலே மானிடர்க்குப் பகரவேண்டாம்
தேரப்பா மனதறிவாற் றெளிந்துகொண்டு
சிந்தைமன மொன்றாகத் திரமாய்நின்று
நேரப்பா நின்றதொரு சல்லிமூலம்
நிசமான மூலமதை யார்தான்காண்பார்
பேரப்பா பேசாத மூலந்தன்னைப்
பெருமையுள்ள மவுனமதாய்ச் சொல்லக்கேளே. (40)

கேளப்பா மூலமென்று லுந்திப்பூடு
கெணிதமுள்ள தாமரைநற் கொடியில்மைந்தா
தாளப்பா தாமரையோ ரிதழின்பூடு
தன்னகத்தில் நடுவாகி நின்றமூலம்
கோளப்பா யில்லாத சல்லிமூலம்
கொடியான மூலமடா முதலாம்மூலம்
ஆளப்பா அந்தரமாய் நின்றமூலம்
அடிமுடிக்கும் நடுவான ஆதியாமே. (41)

ஆதியென்ற மூலமதிற் பிரமதேவர்
அடங்கிநின்று தவசிருந்தா ரறிந்துகொள்ளு
சோதியென்ற குருவருளால் மைந்தாநீயுஞ்
சொல்லாதே தாமரையின் கொடியைவாங்கி
நீதியுடன் நன்மையதாய்க் கரிக்கிக்கொண்டு
நிச்சயமாய்க் கல்வமதில் வைத்துமைந்தா
சாதியென்ற ஆவினுட நெய்யாலாட்டிச்
சவாதுடனே புனுகுபச்சை சரியாய்ச்சேரே. (42)

சேர்த்துநன்று யரைத்துவொரு சிமிழில்வைத்துச்
சிவசிவா சற்குருவைத் தியானம்பண்ணிப்
பார்த்திபனே ரேசகபூ ரகமுஞ்செய்து
பதிவான கும்பகத்தில் மனதைவைத்துக்
காத்துநன்றாய் ரவிமதியைச் சுழினைக்கேற்றிக்
கருணையுடன் மைச்சிமிழைக் கரத்திலேந்திச்
சூத்திரமா யஞ்சனு தேவிதன்னைச்
சும்சும்சி வாயமென்று தொழுதுநில்லே. (43)

தொழுதுகொண்டு பணவிடைதான் மையெடுத்துச்
சோதியென்ற பருவமதிற் றிலதம்போட்டுத்
தொழுதுகொண்டு எட்டெழுத்தை யுருவேசெய்து
சுந்தரம்போல் நீயிருக்கும் போதில்மைந்தா
தொழுதுந்தன் சமுகமதைக் கொண்டோர்க்கெல்லாம்
சூழ்வினையும் பழவினையுஞ் சுத்தமாகும்
தொழுதுநின்று பிசாசுதலை விரித்தேயாடும்
தோணுத ஏவல்பில்லி தொலைந்துபோமே. (44)

போமப்பா சகலபிணி பிசாசுயெல்லாம்
பொருந்திநின்ற மையுறுதி கண்டதாலே
நாமப்பா சொல்லுகிறேம் தூரதிஷ்டி
நன்றாகத் தோணுமடா நாட்டம்பாரு
தாமப்பா நவக்கிரக சித்தினாலே
தன்மையுட னின்னுமொரு கருவைக்கேளு
நாமப்பா சொன்னமொழி தவருதையா
நடுவான காலாங்கி வாசிதானே. (45)

வாசியென்ற அண்டமடா பேரண்டத்தில்
மார்க்கமுடன் ஞானியண்டக் கருவைவாங்கி
நேசமென்ற அண்டமதி ஞேட்டிற்பூசி
நினைவாக ரவிதனிலே காயவைத்துப்
பாசமென்ற கமலையுட நெய்யால்மைந்தா
பத்தியுடன் தீபமது பதிவாய்வைத்து
வாசமென்ற அணடமதி ஞேட்டிலேதான்
மையேத்தி மையெடுத்த வரிசைதானே. (46)

வரிசையுடன் மையெடுத்துச் சவாதுகூட்டி
மார்க்கமுடன் ரேசித்து வைத்துக்கொண்டு
உரிசையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
உண்மையுடன் புருவமதிற் றிலதம்போட்டுப்
பரிசமுடன் வாசியினால் மூலம்பார்த்துப்
பத்தியுடன் சிவயோகத் திருந்தாயாகிற்
கரிசனமா யுன்சமுகங் கண்டபேர்க்குக்
கருத்தில்வெகு பயனுசெனிக்குங் கருவைப்பாரே. (47)

பாரப்பா கற்பவிதி யொன்றுகேளு
பக்தியுள்ள கண்மணியே பதிவாய்நீயும்
ஆரப்பா அறிவார்க ளண்டக்கரு
ஆதியென்ற ஞானியடா அண்டந்தன்னில்
நேரப்பா நின்றகரு ஞானியண்டம்
நிசமான அண்டமடா முதலாம்வைப்பில்
காரப்பா அகப்பட்ட அண்டம்வாங்கிக்
கருவாகக் கட்டுதற்கு வகையைக்கேளே. (48)

வகையான கைபாகஞ் சொல்லக்கேளு
மார்க்கமுள்ள அமுரியது படிதானென்று
தகையாகப் பசுவின்பால் படிதானென்று
தகரான வெள்ளையின்பால் படிதானென்று
திகையாதே இளநீர்தான் படிதானென்று
செம்மையுடன் நாலுமொன்றாய்ப் பாண்டத்திட்டு
நகையாதே கருஞானி அண்டந்தன்னை
நாட்டமுட னதிற்போட்டு அவித்திடாயே. (49)

அவித்திடவே அண்டமெல்லாங் கட்டிப்போகும்
அப்பனே தானெடுத்து வைத்துக்கொண்டு
குவித்ததொரு அண்டமதின் றோடுபோக்கி
குறியொன்று சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
செவித்ததொரு வெள்ளைமஞ்சட் கருவிரண்டுஞ்
செம்மையுடன் வெவ்வேறே பதனமாகத்
தவித்துமிக வாடாதே பீங்கான் தன்னிற்
சாதகமாய வைவதத்மறு சேறிகேளே. (50)

சேதியென்ன மலைத்தேனை வாங்கிநன்றாய்ச்
செம்மையுடன் பீங்கான்றன் கருவில்விட்டு
ஆதியென்ற ரவிமுகத்தில் நவநாள்வைத்து
அப்பனே தானெடுத்துப் பார்த்தாயாகிற்
பேதியா தேயிருக்குஞ் சோதிபோலே
பிலமான பத்தியினாற் பதனம்பண்ணிச்
சோதியென்ற சற்குருவைத் தொழுதுபோற்றித்
துருவமென்ற பதிதனிலே யிருந்துகொள்ளே. (51)

கொள்ளுகிற விதமென்ன வென்றால்மைந்தா
குணமாக வுதயாதி தன்னிலேதான்
நள்ளுறவாய் வெள்ளையென்ற கருவிலேதான்
நன்மையுடன் பணவிடைதா னெடுத்துக்கொண்டு
உள்ளுணர்வாய் கொண்டதின்மேல் மைந்தாகேளு
உண்மையுடன் மாலையிலே சொல்லக்கேளு
விள்ளுகிறேன் மஞ்சளென்ற கருவிலேதான்
விரைவாகப் பணவிடைதா னெடுத்துக்கொள்ளே. (52)

எடுத்துநிதம் அந்திசந்தி கொண்டால்மைந்தா
ஏகாந்தத் தேகமது இறுகிக்கட்டும்
தொடுத்துநின்ற வாசியது நடங்காதையா
தொடுகுறியிற் றீபமது துலங்கும்பாரு
அடுத்துநின்ற விந்துவது இறுகிப்போகும்
ஆனந்த மதியமுத அருவிபாயும்
கடுத்துநின்ற காலனவன் விலகிப்போவான்
கயிலாசத் தேகமதா யிருக்கும்பாரே. (53)

இருக்கின்ற வெள்ளைமஞ்சட் கருவிரண்டும்
ஏகாந்த நாதவிந்து வென்றும்பேராம்
உருக்கமுடன் தினந்தோறுங் கொண்டுவந்தால்
உறுதியென்ன தேகம்வஜ்ர காயமாகும்
பெருக்கமுள்ள நாதவிந்தா லெடுத்ததேகம்
பேசாதே அண்டமதாற் கெட்டியாச்சு
திருக்கருத்து மனதுருமை யாகக்கொண்டாற்
றிரமான பஞ்சகர்த்தாள் தீர்க்கமாமே. (54)

தீர்க்கமுள்ள மூலமடா ஆருதாரம்
திருவான நவக்கிரக மானதேகம்
மார்க்கமுள்ள நவக்கிரகந் தனக்குமைந்தா
மகத்தான அனுக்கிரக மதிகமாகும்
மூர்க்கமுள்ள அதிகமடா சோதிசோதி
முனையான சுழினையடா தீபவீடு
ஏர்க்கையுட னத்தீப வீட்டிலேதான்
இருக்குதடா மதியமுத மறிந்துகொள்ளே. (55)

இருந்துகொண்டு வாசியினால் மூலம்பார்த்து
எழுந்ததொரு வாசியினாற் புருவத்தேகி
அருந்தவமாய் முக்கணனைக் கண்டுபோற்றி
ஆதியென்ற நவக்கிரக பூசைபண்ணித்
திருந்தியதோர் பூசையினாற் குருவைக்கண்டு
சிவசிவா அடிமுடியே தென்றேனப்போ
வருந்திமிகக் கேட்டதினால் மூலநாயன்
மார்க்கமுடன் நாதவிந்து யென்றார்பாரே. (56)

பாரப்பா நாதவிந்து அண்டமாச்சு
பதிவான அண்டமடா பிண்டம்பிண்டம்
நேரப்பா அண்டபிண்ட மொன்றாய்க்கூடி
நிலைத்ததொரு முட்டையென்ற பேருமாச்சு
காரப்பா அண்டமென்ற முட்டைதன்னைக்
கருக்குருவாய்க் கண்டுநிதங் கொண்டாயானால்
ஆரப்பா உனக்கிடு சொல்லப்போறேன்
அண்டரண்ட பதங்கடந்த சித்தனாமே. (57)

சித்தமென்ற செபதபத்துக் குறுதியென்ற
சிவசிவா சிவயோக நிஷ்டையாகும்
முத்திதரும் நிஷ்டைதனக் குறுதியான
மூர்க்கமுள்ள கற்பமடா அண்டக்கூரு
பத்தியுட னண்டமென்ற கற்பங்கொண்டாற்
பாலகனே நவக்கிரகம் பதிவாய்நிற்கும்
சுத்தமுடன் நவக்கிரகம் பதிவாய்நின்றாற்
றோணுமடா அனுக்கிரக சோதிதானே. (58)

சோதியென்ற செகசோதி சோதிசோதி
 துருவமென்ற புருவநடுக் கமலமீதில்
ஆதியென்ற விந்துவடா கமலத்துள்ளே
 அடங்கிநின்ற போதமதை யென்னசொல்வேன்
சாதியென்ற சராசரத்துக் குறுதியான
 சார்வான வாசியடா ஆவியாவி
நீதியுடன் ஆவியடா பிராணனுச்சு
 நிசமான பிராணனடா நாதவிந்தே. (59)

விந்தான நாதவிந்து ஒன்றுய்க்கூடி
 மேலான நவமணிபோற் றிரண்டுதையா
சந்தான மானநவ மணியேமைந்தா
 தாரணியிற் காண்பவர்க ளாருமில்லை
சிந்தாமற் சிதறுமல் வாசிதன்னைத்
 திர்க்கமுடன் கட்டியொரு மணியாய்வாங்கிப்
பந்தானந் தழைக்கவொரு மணியாய்வைத்துப்
 பத்தியுடன் நவக்கிரக பூசைபண்ணே. (60)

பூசையிலே மனதுறுதி யாகவேணும்
 புத்தியுட னமுதரசங் கொள்ளவேணும்
நேசமுடன் வாசியிலே நிலைக்கவேணும்.
 நிலைத்தாலும் நிருவிகற்ப சமாதிவேணும்
வாசமுடன் சமாதியிலே நிலைத்தாலுந்தான்
 மணிநாதச் சிலம்போசை கேட்கவேணும்
பாசமுடன் சிலம்போசை கேட்டாலுந்தான்
 பத்திகொண்டு குருபதத்திற் பதிவாய்நில்லே. (61)

பதியான பதியதுதான் புருவமத்தி
 பாலகனே ஆவியது ஒடுங்கும்வீடு
விதியான ஆவியது சொலிக்கும்வீடு
 வேதாந்த ருத்திரனுர் பதியைப்பார்த்துக்
கெதியான பதியிதுவென் றறிந்துகொண்டு
 கேள்மகனே அப்பதியில் நாட்டமாக
மதியான ரவிமதியின் செயலினாலே
 மார்க்கமுட னிருந்துகொண்டு யோகம்பாரே. (62)

பாரப்பா யின்னமொரு கருவைக்கேளு
பதிவான தாமரையின் கொடியைவாங்கிக்
காரப்பா தேனதிலே யூறப்போட்டுக்
கருணையுட னெட்டாநா ளெடுத்துமைந்தா
தேரப்பா கண்ணீராற் கழுவிப்போட்டுச்
சிவசிவா ரவிதனிலே காய்ந்தபின்பு
நேரப்பா சுழிமுனையில் மனதைவைத்து
நேமமுட னிரையளவாய் நறுக்கிக்கொள்ளே. (63)

நறுக்கியே நன்றாகக் குளிசம்பண்ணி
நாட்டமுடன் நறுக்கினதோர் மூலம்வைத்து
இருக்கிநன்றாய் நவகோணந் தன்னில்வைத்து
இன்பமுடன் செபதபங்கள் செய்துகொண்டு
பெருக்கமுட னக்குளிச மெடுத்துமைந்தா
பெலமான மவுனத்தில் தியானம்பண்ணி
உருக்கமுடன் சாம்பிராணித் தூபங்காட்டி
யுண்மையுடன் வலதுகையி லணிந்துகொள்ளே. (64)

அணிந்துகொண்டு பூரணமா யிருந்துமைந்தா
அன்புடனே குருபரனைத் தியானம்பண்ணிக்
கனிந்துந்தன் கரமதனால் மேலேதொட்டாற்
கடிதான விஷசுரமுங் காணுதோடுந்
துணிந்துவரும் பசாசுகளை யுந்தன்வாயால்,
தூரப்போ வென்றுசொன்னா லோடிப்போகும்
பணிந்துந்தன் பாதமதைக் கண்டோர்க்கையா
பலபிணியும் விஷசுரமும் பாழாய்ப்போமே. (65)

பாலான முப்பாலை யறியவேணும்
பருதிமதி கடரொளியைப் பார்க்கவேணும்
காலான வாசியிற்சென் றேறவேணும்
கற்பூரத் தீபமதைக் காணவேணும்
மேலான மதியமுதங் கொள்ளவேணும்.
வேதாந்தச் சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
நூலான நூல்முறைகள் பார்த்தாலுந்தான்
நுணுக்கமுட னறிவுபூ ரணமாய்நில்லே. (66)

நில்லப்பா பூரணமாய் நின்றுகொண்டு
　　நிசமாக இன்னமொரு கருவைச்சொல்வேன்
செல்லப்பா சாதிக்காய் சாதிப்பத்ரி
　　திருவான வால்மிளகு கிராம்புகூட்டி
மெள்ளப்பா மிளவருப்பாய்ச் சூரணித்து
　　விசையான ஆனந்த மூலிவாங்கிக்
கொள்ளப்பா நெய்யாலே வறுத்திடித்துக்
　　குணமான சூரணமாய்ச் செய்துகேளே. (67)

கேளப்பா முன்பொடிக்கி நாலிலொன்று
　　கிருபையுடன் மூலிகையைக் கூட்டிமைந்தா
கேளப்பா யிருபொடியு மொன்றாய்க்கூட்டிக்
　　கெண்திதமுடன் சர்க்கரையும் வெல்லஞ்சேர்த்துக்
கேளப்பா அதுக்குரெட்டி யொன்றாய்க்கூட்டிக்
　　கிருபையுடன் தானிடிக்கும் போதிலேதான்
கேளப்பா மெழுகதுபோற் றிரண்டுபோகும்
　　கேள்வியென்ன பூரணலே கியமுமாச்சே. (68)

ஆச்சப்பா பணவிடைலே கியமுங்கொண்டு
　　அருளான புருவமையம் பார்க்கும்போது
மூச்சப்பா அறிவுபூ ரணமாய்நின்று
　　முனையான சுழிமுனையில் வாசியேறிப்
பேச்சப்பா பேசாத வாசியாலே
　　பெருகிநின்ற தீபமது கண்ணிற்காணும்
காச்சப்பா அத்தீபச் சுடரிலேதான்
　　காச்சினற் றேகமது கசடுபோச்சே. (69)

போச்சப்பா வாய்வோடு மூலச்சூடு
　　பொல்லாத நெஞ்செரிவு பொருமல்காந்தல்
நீச்சப்பா நீர்த்தோஷங் கபாலக்குத்து
　　நினைவுகெட்ட வயிற்றுவலி நீங்கிப்போகும்
மூச்சப்பா முன்னிலையா யடங்கும்வீட்டில்
　　முத்திகொண்டு நவக்கிரக பூசைசெய்தாற்
பேச்சப்பா பேசாத மவுனங்காணும்
　　பேரான குருபதியிற பெலமாய்நில்லே. (70)

பெலமான நவக்கிரகப் பூசைபண்ணப்
பேருலகெல் லாமுனது வசமேயாகும்
தலமான நடுமனையாம முக்கோணத்தில்
சார்ந்துகொண்டு வாசியினால் மூலத்தேகி
நலமான புருவநடுக் கமலமீதில்
நாட்டமுடன நின்றுகெதி கொண்டாயானாற்
குலமான நவக்கிரக வீட்டிலேதான்
குருவான ஆதாரந் தோணும்பாரே. (71)

தோணுமடா ஆதாரம் மூலாதாரம்
துருவமென்ற ஓங்காரம் மேலாதாரம்
காணுமடா கருணைவிழிக் கண்ணுற்பாரு
கமலமென்ற ஆயிரத்தெண் மலருக்குள்ளே
தேனுடனே அமுதரசம் வடியுமப்பா
தெகிட்டாதே நீயிருந்து கொண்டுதேறு
ஊனுடனே உயிர்சேர்ந்து சித்தியாகும்
உத்தமனே பத்தியுட னுகந்துகாணே. (72)

காணப்பா நவகோணந் தன்னைவைத்துக்
கருணையுடன் மானதமாய்ப் பூசைசெய்து
பேணப்பா மூலமதிற் சிம்சிம்மென்று
பிலமான வாசியினால் மூலம்பார்த்தால்
கோணப்பா யிந்தவிடங் கண்ணிற்காணும்
குருவான திருமூலர் பாதம்போற்றிப்
பூணப்பா கண்டமதில் அங்கென்றாணு
புருவமையம் முக்கணனைப் போற்றிக்காரே. (73)

காத்துநீ மனதுருமை யாகமைந்தா
கருணைபெற ரேசகபூ ரகமுஞ்செய்து
போத்திமிகக் கும்பகத்தில் நின்றுகொண்டு
புத்தியுடன் மனதறிவால் மைந்தாநீயும்
ஆத்துமத்துக் குயிராகி நின்றமூலம்
ஆதார மூலமடா முக்கோணத்திற்
பாத்திபனே ஓம்கிலியுஞ் சவ்வென்றேதான்
பதிவாகச் செபிக்கவனற் பதீதுந்தானே. (74)

தானென்ற அனல்மீறி முதுகுவோரக்
தானேறிப் பாதாதி கேசமட்டும்
ஊனென்ற தேகமெல்லாஞ் சொலிக்கும்பாரு
ஒக்கும்பஞ் சாக்கினியென் றுறுதிகொண்டு
கோனென்ற புருவமையச் சுழிமேல்நின்று
குருவான பதிநோக்கி நின்றாயானால்
வானென்ற அண்டமதிற் றீபங்காணும்
மானதமாந் தீபமதில் மகிழ்ந்துநில்லே. (75)

நில்லப்பா அய்யுங்கிலியுஞ் சவ்வென்றேதான்
நேமமுடன் மனதறிவால் நின்றால்மைந்தா
ஒல்லப்பா நினைத்ததெரி சனமுமாகும
உலகத்தின் நடத்தையெல்லாம் உள்ளங்காணும்
செல்லப்பா ஆதார மூலந்தோன்றும்
சிவசிவா திருநடனஞ் செவியிற்கேட்கும்
வில்லப்பா அந்தவொலி சிலம்பினோசை
வேதாந்த ஓசையடா நாதந்தானே. (76)

தானென்ற நாதவிந்தா லெடுத்ததேகந்
தன்னறிவாற் றன்னையறி யாதபாண்டம்
வீனென்ற பாண்டமடா நிலையாக்கேணி
விசையில்லா நீர்க்குமிழி யானதேகம்
ஊனென்ற ஆசையிலே ரவியோதேய்ந்து
உழன்றமதி மேலாகி உறுதிகெட்டுப்
பூனென்ற போக்குவரத் தறியாமற்றான்
புத்திகெட்ட சடமதனைப் போத்துவாயே. (77)

போத்துவது பூரணத்தாற் போற்றவேணும்
பொருந்திநின்ற நவக்கிரகம பார்ககவேணும்
காத்துநின்று வாசியிறசென் றேறவேணும்
கற்பூர தீபமதைக் காணவேணும்
ஆத்துமத்து நிலையறிந்து கொள்ளவேணும்
அந்தநிலை பொன்றுமிட மறியவேணும்
பூத்தமலர் வாசனைப்போற் புருவமீதிற்
புத்தியுடன் நீயிருந்து பூசைபண்ணே. (78)

பண்ணப்பா பூசைவிதி சக்கரந்தான்
பதிவான நவகோண முத்திமோட்சங்,
கண்ணப்பா மோட்சமது புருவமத்தி
கருவான ரவிமதிசென் றிருக்கும்வீடு
விண்ணப்பா மேலான பிரமவீடு
மேலான வீடதுதான் முப்பாழாகும்
உண்ணப்பா ஒன்றாகி முன்பின்னாகி
யுத்திதரு மணிவீடு மோட்சவீடே. (79)

வீடான வீடதுதான் மோட்சவீடு
வேதாந்த அமுதரச மிருக்கும்வீடு
நாடான நவக்கிரகம் பொருந்துமவீடு
நாதாந்த திருநடன மாடும்வீடு
கூடான வீடுகுடி யிருந்தவீடு
குடிபெலத்து யிருந்ததொரு குருவின்வீடு
மேடான அண்டமடா அண்டவீட்டில்
விண்ணொளியுந் தன்னொளியு மேவமுற்றே. (80)

காலாங்கிநாதர் ஞான பூஜாவிதி அ௰.

முற்றிற்று

காலாங்கிநாதர் ஞான சாஸ்திரங்கள் நம்மிடம் அநேகம் ஓலை ஏட்டுப்பிரதிகளிருப்பினும் தற்போது இதிற் சிலதை அச்சிட்டிருக்கிறோம். மற்றவைகள் இரண்டாம்பாகத்தில் வெளியிடக்கூடும்.

மதுரை, வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை.

நாற்பத்தெட்டாவது:

கமலமகாமுனி திருவாய் மலர்ந்தருளிய

ஞான சைதன்யம் ௰அ.

மூலமுத லாகிநின்ற ஆயிபாதம்
முச்சுடராய் நின்றதொரு சோதிபாதம்
தாலமதிற் றென்மலைவா ழாசானபாதம்
தவருமற் போற்றியிந்த நூலைச்சொல்வேன்
கோலமணி பூரகமே சேர்ந்துவாழும்
குறித்துநின்ற சித்தருட பாதம்போற்றி
மாலயனுந் தேவர்களுங் காணொணாத
மவுனமென்ற பூரணமே காப்புத்தானே. (1)

தானென்ற காட்டத்தில் அவ்வும்உவ்வும்
சாதகமாய் மவ்வோடே சிவ்வும்வைத்துத்
தேனென்ற மன்மதிலே இவரிருந்து
தெளிவாக அஞ்செழுத்தைச் சிறக்கப்போடு
கானென்ற முச்சுடரும் விகைகந்தோளாறும்
கருதிப்பார் சுழிமுனையிற் கனிந்துநித்தம்
தானென்ற பூசையிலே மதுவையுண்டு
சாதகமா யாண்டொன்றி லுடனேசித்தி. (2)

சித்திக்க வேணுமென்றால் மதியைப்பாரு
திறமாகக் கதிர்பாரு தீபம்பாரு
புத்திக்குப் பிராணாய முடனேசித்தி
பாங்கான கண்டத்தில் ஜோதிகாணும்
முத்திக்கும் சிலம்பொலியைச் சொல்லார்சொல்லார்
முனையான பூரகரே சகமுங்காணும்
எத்திக்குந் திரியாதே மைந்தாகேளு
இன்பமுற்றுக் குருபதத்தை யினிதாய்க்காரே. (3)

காரப்பா பனிரண்டு வருஷங்காரு
கனமான வார்த்தைசொல்லிக் கனிந்துபாரு
நேரப்பா குருவுக்குப் பணங்கள்கேட்டால்
நீணிலத்தில் முப்பொருளைத் தாரைவாரு
பேரப்பா யெடுத்தாக்கா லென்னவுண்டு
பேர்பெரிய பிராணயக் குறியைக்கேளு
சீரப்பா பெரியோர்கள் சொல்லார்சொல்லார்
செத்தவனபோற் காத்திருந்து சேவைசெய்யே. (4)

செய்யையிலே கும்பகத்தில் வாசிவைத்துத்
திறமாக ரேசிக்க வெளியுங்காணும்
வையகத்தில நடத்தையெல்லா முன்னேபார்க்கில்
வகைவகையாய்க் காணுமடா மைந்தாகேளு
உய்யபொருள் கண்டதெல்லாம் உடனேகாணும்
உசிதமென்ற வாசிதனைக் கும்பித்திட்டு
தையமென்ற மேல்வீடு ஆரூர்தானே
தருகமலங் காணுமடா சாருவாயே. (5)

சாரவே யினனமொரு குறியைக்கேளு
சாயையென்ற வாசிதனை முன்னேகேளு
தீரவே யின்னமொரு குறியைக்கேளு
தேகமெல்லாம மூலமதாய்த் தானேதோத்தும்
ஆரவே யின்னமொரு அங்கங்கேளு
அப்பனே ரவிமதியுந் தெரிந்துபாரு
காரவே கயிலையெனு மேரிற்றனும்
கதிரோனும் பெற்றபொருட் காட்சியாச்சே. (6)

ஆச்சப்பா பிராணயம் செய்யும்போது
அசதியா யுறங்கிவிட்டால் தேகம்போச்சு
பேச்சப்பா மேகமென்ற சூடுமீறும்
பெருமையுடன் மூன்றெழுத்தைத் துணையாய்ச்சேரு
பாச்சப்பா ராக்காலம் அப்பியாசிக்கப்
பாலோடு சர்க்கரையு மமுதமுண்ணு
மூச்சப்பா உன்னுள்ளே தள்ளுதல்லு
முதண்ட லேகியத்தைக் களஞ்சுகொள்ளே. (7)

கொள்ளடா சாயையென்ற பராபரந்தான்
கூறியதோர் காலையிலே கடிகைஅஞ்சு
மெள்ளடா அந்திமுந்தி கடிகைஅஞ்சு
மூனேயோடு பதினாறு மாதமபாரு
புள்ளடா தீபமதிற் கடிகைபாரு
புனிதமென்ற சோதியிலே யெழுத்தைப்பாரு
எள்ளளவுந் தப்பாது பிராணயந்தான்
இரவியிலே நடுநேரம் தீட்சையாமே. (8)

தீட்சையிலே மனிதருட வாசமாக
திறமாகச் சினேகிதர்தா னிருக்கலாகா
தீட்சையிலே மயக்கமுடன் வெளியேயாகா
ஜெனமில்லா தரைவீட்டிற் செய்யவேணும்
தீட்சையிலே வஞ்சமெட்டுஞ் செய்யுமுன்னே
சிவமான வாதமது அனுபோகித்தால்
தீட்சையது பலியாது ஆறேற்கேளு
சிவசொத்தால் மாயையது யேறொட்டாதே. (9)

யேறயிலே யிவ்வளவும் அடக்கிப்போட்டு
இதமாகச் சோதியிலே தூருந்தோன்றும்
தூறமிலே சுடரிலொரு கம்பந்தோன்றும
துய்யதொரு கம்பத்தில் நந்திதோன்றும்
பேறயிலே நந்தியிலே உலகந்தோன்றும்
பெருமையுடன் வைத்தபொருளெல்லாந்தோன்றும்
தேறயிலே இரண்டாண்டிற் சிவமுங்காணும
திறமான தாயுமங்கே காணுவாயே. (10)

காணுவாய் சூரியன்றன் மண்டலத்திற்
கனிகண்டாற சந்த்ரனுட மண்டலந்தான்
பூணுவாய் நட்சேத்திர மண்டலந்தான்
புதுமையுள்ள அண்டத்திற் சென்றுயேறி
தோணுவா யிவ்வளவும் தவறுவாசற்
சூட்சமென்ற எழுத்தாலே அடைத்துப்பாரு
பாணியா யெழுத்திலகு வித்தையெல்லாம
பாரையின்மேல் விரைத்திட்ட வித்துமாச்சே. (11)

வித்தான அட்சரந்தா னென்பதையா
விள்ளாரகள கண்டாலும் அறியோமென்பார்
சுத்தியவர் பதம்போற்றித் தொண்டுசெய்து
நாடியவ ரிட்டதொழில் மேலாய்ச்செய்து
வைத்திருந்த பொருள்களெல்லாம் தாரைவார்த்து
வகையாகப் பன்னிரண்டு வருஷங்காரு
செத்தசவ மானாலும் யெழுப்பிச்சொல்வார்
ஜெகஜாலத் தொழில்களெல்லாம் சித்தியாமே. (12)

ஆமப்பா அகப்பிரமம் பிடித்தமட்டை
ஆகாத வழியோர்க்கு அறைந்திடாதே
ஓமப்பா யெழுத்தெண்ணிக கோளைப்பாரு
உத்தமனே கருமியென்று லோட்டிப்போடு
தாமப்பா குணமிருந்தால பறறவேண்டாம்
தருதரும்பல பாவியவன் பெருமைபேசி
காமப்பா வாய்ப்பேச்சால் மயங்கசசெய்வான்
காதவழி துத்தியே தருமஞ்செய்யே. (13)

செய்யயிலே முந்திமுந்தி கணேசன்பூசை
திறமான மனோன்மணித்தாய் மயேசன்பூசை
தொய்யயிலே சுப்பிரமணியன் வடுகன்பூசை
சுகமாகச் சித்தருட பூசைசெய்து
சய்யயிலே நவகோண மேருபூசை
சதாசிவமாஞ் சிதம்பரத்தின் பூசைபண்ணு
பய்யயிலே யிவ்வளவும் பூசைபண்ணி
பரமான பிராணயஞ் செய்துநோக்கே. (14)

நோக்கையிலே ஆவின்பால் நித்தங்கொள்ளு
நோகாம லரைவிட்டி லிருந்துபண்ணு
தேக்கையிலே பௌர்ணையும் பஞ்சமியுந்தொட்டு
தெளிவான சிரவணமாந் தீட்சைகொள்ளு
பார்க்கையிலே பஞ்சுபொதி தீப்பட்டாப்போல்
பத்துமடா மானுக்கா பலிதமாகும்
சேர்க்கையிலே கமலங்கைசை தன்யருமைம்
திறமாகப் பதினெட்டின் பாகந்தானே (15)

பஞ்சயோகநிலை.

பாங்கான நகாரவித்தை மவுனயோகம்
பரமகர வித்தைகுண் டலியினயோகம்
ஆங்கான வகாரவித்தை வாசியோகம்
அழகான சிகாரவித்தை சிவயோகம்
ஊங்கான யகாரவித்தை அகசியோகம்
உற்றுப்பார் ஓங்கார மவுனம்பாரு
வாங்காம லிப்படியச் சரங்கள்கண்டு
மாட்டுவா யுயிர்நிலையும் நாட்டுவாயே. (16)

நாட்டுவாய் மவுனமது நடுக்கண்பாரு
நலமான பரியங்கி மூலம்பாரு
ஊட்டுவாய் குண்டலிதான் நடுவாம்மூலம்
உத்தமனே வாசியது புருவமையம்
தீட்டுவாய சிவயோகம ஒளியைப்பாரு
சிங்கென்று வங்கென்று தெளிந்துபாரு
ஆட்டுவாய் இந்தவிதம் யோகம்பார்த்து
அப்பனே அதிசூட்சம் பத்தியேறே. (17)

ஏற்றுவார் உச்சிநடு மலையின்மட்டும்
இதமான கயிலைமலை யேறுமட்டும்
தேற்றுவா ரடிமலையின் நடுவுங்கண்டு
சிங்கென்றும் மங்கென்றும் கூவிக்கொண்டு
வாற்றுவா ரருமென்று வாசிபார்த்து
வகையான ஓரெழுத்தைத் தொட்டுக்கொண்டு
போற்றுவார் பூரணமே யென்றுசொல்லி
புகழ்பெரிய உம்மென்று ஊணிப்பாரே. (18)

கமலமகாமுனி ஞானசைதன்யம் ௱௨
முற்றிற்று.

சதுரகிரி சுந்தரமகாலிங்கசுவாமி கோவில் தேவஸ்தான மானேஜர் சாப்டூர் கந்தசாமிபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின் படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

நாற்பத்தொன்பதாவது

கமலமகாமுனி திருவாய் மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் எசு.

அருளான சோதி யகண்டம் பராபரம்
பொருளான விந்து நாதம் புரிந்திடும்
பருவா பருவம் பருவத்திற் சேர்ந்திடும்
தருவான வீரம் சவுக்காரந் தானே. (1)

சவுக்காரத் தாட்டுச் சகலசித் தாதியும்
சவுக்காரத் தாட்டுச் சகலகுரு வுக்கும்
சவுக்காரத் தாட்டுச் சகல கெவுனமுஞ்
சவுக்காரத் தாட்டுத் தானன ஞானமே. (2)

தானன ஞானஞ் சவுக்கார வீதியில்
தானன சித்தி சகல மருந்தெலாம்
தானன மூலஞ் சாதிக்கில் யோகமாந்
தானுஞ் சவுக்காரஞ் சாகாத காலுக்கே. (3)

காலுக்கு வெண்ணெய் கழற்ற வகைகேளு
மேலுக்குச் சருகு விசையானசுண் ணஞ்செய்
சால்சிப்பி சுண்ணத்திற் சாரஞ் சமனிடை
சிலகந் நீராம் செயப்பனி வையே. (4)

வையாய் சருகினுள் மாக்கிஷந் தன்னை
மெய்வெடி யுப்பில் வேண்டிக கொடுத்திடு
கையாரச் சேர்ரீ ரிரண்டு கலந்திடு
வெய்யிலில் வைக்க வெண்ணெய்யுப் பாச்சே. (5)

உப்பினி லொன்று வுரத்திடுஞ் சீனத்தை
உப்பினி லெட்டொன் றுணாத்திடு பூரத்தை

அப்படி வீர மதனிடை சேர்த்து
முப்பூவுங் கூட்டி முழப்புடம் போடே. (6)

போட்டிடுச் சுண்ணம் புகழான சாரஞ்சேர்த்
தாட்டிடு நீராஞ் சவுக்காரத் திட்டரை
யாட்டியே போதி லதிலெண்ணெய் மேலே
கூட்டியே யொகக்க குமட்டி வடியுமே. (7)

வடிந்தபி னந்தச் சவுக்காரந் தன்னைக்
கடிந்தே யுருட்டிக் கடுவெய்யிற் போடு
தடிந்ததி லெண்ணெய் தானங் குண்ணும்
படிந்தே பிறகு பார்க்கநல் வெண்மையே (8)

வெண்மைய தான விருதா மடிப்பொடி
யுண்மையாம் விந்து நாதம்விட் டாட்டித்
தண்மைத் தழலிற் றுருட்டி யாட்டி
எண்ணெய்க ளெல்லா மெங்கே பறந்ததே. (9)

பறந்தசவுக் காரம் பண்புநீ ராச்சு
கறந்திடு மண்டநீர்க் காரமே லாக்கி
உறந்திடச் சுண்ண மோகடுஞ் சுண்ணம்
இறந்த வழலையா லெல்லா மிறக்குமே (10)

எல்லாச் சரக்கு மிதனுளே கட்டும்
எல்லாச் சரக்கு மிதில்மெழு காகும்
எல்லாச் சரக்கு மிதிற்களங் காது
எல்லாச் சரக்கு மிதினுறச் சண்ணமே. (11)

சுண்ணம்வெண் காரந் துடியான வெள்ளையும்
குண்ணுந் துருசு கூட்டிடச் சுண்ணமாம்
தண்மையா மூன் றுஞ் சரியாகக்கூட்டி
வண்ணமால் தேவி வளையக் கவசியே. (12)

கவசத்தை வாட்டிக் கனலில்வைத் தூது
தவமொத்த வியந் தானுகுளு சோதிக
கவமில்லை வேதை யாடுமுகங் கெழு
சிவமாங் களங்கஞ் செயுமுறை பாரே. (13)

பாரப்பா நாகம் பரிவா யொருபலம்
தாரத்தி னீயத் தான்முக் களஞ்சி
நேரப்பா சூதம் நேர்கண் டிடைக்குச்
சேரப்பா தங்கம் நாலுக்கொன் றாகவே. (14)

ஒன்றாய்ப் பொடித்து வுதகம் பிறந்திட
நன்றாய்ச சயவீ ரங்கிடை கூட்டிச்
சென்றால் மகாகுரு செயநீ ரிதாச்சு
ஒன்றான கார மோர்களஞ் சிட்டே. (15)

இட்டபின் னீரா யிதுமுறை கேளு
தொட்டியும நாகமுஞ் சூதமுங கூட்டி
வெட்டினி நீரால் விசைய வரைத்திடு
கொட்டக் களங்க மாங்குகைக் குள்ளே (16)

குகைபி லுருகையிற் கொடுத்திடு காரத்தைத்
திகையு மினிககபிற சோதனுவீ ரத்தைக்
குகைபின னிறக்கிக குளிர வுலர்ந்தபின
ஜெகத்தி லடங்காத தெளிந்த களங்கமே. (17)

களங்ககல் வத்திற் கட்டாய்ப் பொடித்து
உளங்கொடு தாக்க வுயர்ந்தசவ் வாதிடு
வளங்கொடு வெண்ணெய் மாட்டி யரைத்திடு
தளங்கொளுந தங்கச் சிமிழில வழித்திடே. (18)

வழிந்திடு மந்தக் களங்க மெழுகை
ஒழித்திடு லோகத்தி லூன்றித் தடவியே
செழித்த புடத்திற் செந்தீய்ப் பிடித்தபின்
பழுத்திடும் லோகம் பதினெட்டு மாத்தே. (19)

மாத்திது கண்டிடும் வழலையினாலே
மாத்திது கண்டிடும் வளர் தங்கத தாலே
நீர்த்துறை கண்டது நிலைவீரத் தாலே
போததுரி தாரப் பொன்மயங கண்டதே. (20)

கண்டேன் வழலை கா ணத் தாலே
விண்டேன் குருக வெளியைய தாகும்

கொண்டே னதன்மேற் போகாப் புனலைத்
திண்டாடி வேகாத் தலையது பட்டுதே. (21)

பட்டிடு பச்சையில் வீரத்தைக் கூட்டி
ஓட்டிய சீதான் றேவிக்குப் பூசிப்
பட்டிட வாட்டி பகர்சுபண்ணம் வீரத்தா
லிட்டிடு வ்கைமி றக்கிடுஞ் சுண்ணமே. (22)

சுண்ணம் நிமிளையைத் தொடுமுன் னிறந்திடும்
சுண்ணம் நிமிளையாற் சோர்ந்திடுஞ் சாரந்தான்
சுண்ணத்தி னாலே தருசது சுண்ணமே
சுண்ணப் பெருமையைச் சொல்ல வொண்ணாதே. (23)

சுண்ணத்திற் சாரஞ் சேர்க்கச் செயநீர்
வண்ணென சரக்கும் மிதில்மெழு காகும்
தன்மை தருசுதான் சாகாத காலால்
வெண்மை பிறந்தவே காத்தலை யாச்சே. (24)

ஆச்சப்பா சுண்ணத்தா லாடமுடி யாது
பேச்சப்பா வாதிபெரு மைக்கு நாவேது
போச்சப்பா பூரணம் புக்கிவெளி யோடி
வாச்சப்பா போச்சு வகாரத் துரைதானே. (25)

துரையாந் தருசு சுண்ணத்தின் வேலைகேள்
திரமான தாரஞ சேர்த்திடு சூதம்
அறமான லிங்கம ஆரப்பொடி காந்தமும்
நிறமான நாகமுன் னேரசம் பாகமே. (26)

பாகமாய் வீரனும் பாண்டிமால் தேவியுந்
தாகத் தருசுக் குருவெட்டி லொன்றும
வேகமுன னீரில் விளங்க வரைத்திடு
வ்காய்க் குகையில் வைத்து வுருககிடே. (27)

உருக்குங் களங்கத்தி லூட்டிடு காரத்தைப்
பெருக்கிய கல்வத்திற் பேராய்ப பொடிதநிடு
தருகருஞ் சவ்வாது தானிட் டரைததிடு
பெருக்கிய வெண்ணெய்பாற் பேரா மெழுகே. (28)

மெழுகொரு மாவிடை மிக்கச்செம் பாயிரல்
கொழுகிக் கொடுக்கக் கூராமஞ் ஞாற்று
எழுபது மாற்று யிணையாம் வழலையாற்
பழுதறப் பார்க்கப் பலிக்கும் வகாரமே. (29)

வகாரத்தில் மீறும் வாய்வுச் சரக்கிது
யகாரத்தி னாலே யடங்கிய பூரண
முகாரத்தி னாலே யொளிர்ந்த வேகாந்தலை
மகாரத்தி னாலே வளர்ந்த மவுனமே. (30)

மவுனத்தி னுட்கரு வாகுங் கிளிஞ்சிநீர்
மவுனத்தி னாலே வளமாஞ் சருகுதான்
மவுனத்தி னாலே வளர்ந்த முருகுதான்
மவுனவூர் சாரம் வளமான வுப்பிதே. (31)

உப்பின் சருகினுள் ளூணு முறவாறு
லுப்பது சுண்ண மோரிடை சீன
முப்பினிற் பாதி யுறவாக சேரத்து
உப்பா மருமீ ருறவா யரைத்திடே. (32)

அரைப்பாய் ரவியி லதிலே பொடித்தூளாம்
விரைப்பாய் பீங்கானில் மேவிச் சமாதுவை
யுரத்தே வருநீ ருசிதப் பனியிலே
கரத்தே சருகு தான்பூ வமுரியே. (33)

அமுரியிற் காச்சி யடவாகக் கட்டிப்போக்
குமுர வுலையிற் கொடுங்கனல் தாக்கிடு
திமிரிச் சருகுச் சிறந்திடு சுண்ணமாக்
தமுரியிற் சாரநீர் தான்வார்த் தரைத்திடே. (34)

அரைத்திடும் வில்லை யாதவன் கண்டபின்
விரைத்த வுலையில் விளங்கவே யூதிடு
தரத்துடன் சுண்ணத் தான்கடுங காரமாம்
வருத்துஞ் சருகு வகையறி வாரே. (35)

அறியாச் சருத வதிசுண்ணத் தெட்டொன்று
பிரியாத சினம் பேதித் தரைத்திட

விரியாத குக்குடம் வெள்ளைக் கருவினிற்
பிரியா தெருக்கம் பாலது விட்டிடே. (36)

விட்டிட நீரா மேவி யரைத்திடு
வொட்டிய வில்லை யுறவாய் வெயிற்போடு
திட்டமாஞ் சுண்ணஞ் சிறந்த கடுங்காரம்
மட்டியா சாரம் வளமாய்ச் சரிகூட்டே. (37)

கூட்டிப் பொடித்துக் குமுறப் பனியில்வை
நீட்டிய நீராம் நிலைக்கபூக் கூட்டி
மூட்டிய பூத்தான் முதல்பத்துக் கொன்றிடு
வூட்டுமூர் சாரம் நீருக்குப் போட்டிடே (38)

போட்டிட்ட ரெண்டும் புகழ்பெறுஞ் சேநீர்
மாட்டுஞ் சரக்கெல்லா மதியாமற் கொன்றிடும்
தாட்டிகச் சேநீர் தானிது ரெண்டும்
மூட்டு வகைக்கு முறைசொலக் கேளே. (39)

கேளப்பா சாரமுஞ் சாரந் துவைத்துவை
தாளப்பா ரெண்டுந் தனியே ரவியுற
நீளப்பா சேர்த்து நிலைக்கட் டாச்சு
தேளப்பா கொட்டிய சேர்நீ தானே. (40)

தானொரு மண்டலஞ் சார்ந்தபின் கேளு
வனமாம் பாறையுப் பதுபாக்குப் போல
தானே யுடைத்துச் சமரச மாக்கி
யூனீர் சருகுநீ ருறத்தோய்த்து வைத்திடே. (41)

வைத்திடு நீகால் மண்டல் மப்பா
வைத்து முலர்ந்தபின் வகைசொலக் கேளு
வைத்து முலர்ந்த சீனமுஞ் சாரமும்
வைத்துநீர் விட்டு மாட்டி யரைத்திடே. (42)

அரைத்து மெழுகு மப்பாறை யுப்புக்கு
விரைத்த கவச மென்ன பொதித்திடு
விரைதது மிதன்மேல் மாட்டுங் கவசங்கேள்
கரத்தே துருசுவெண் காரமுங் கூட்டே. (43)

கூட்டிடு நேராய்க் கூறுமுன் னீர்விட்
டாட்டிக் கவசிநீ யப்பா வெயிற்போடு
நீட்டிய சுண்ணம்பூ நீறதுங் கூட்டி
யாட்டிக் கவசித்து வப்பா புடமிடே. (44)

புடத்தின் வகையைப் புகலுவேன் கேளு;
திடத்தி லுசாஞ் சிறுநீர் பிசைந்து
இடத்தே பரததி இதிலுப்பை வைத்துத்
தடத்தே பிசைந்தமண் தானே பொதிந்திடே. (45)

பொதிந்தே வராகிப் புடமிட் டெடுத்திடு
யுதிர்ந்தால் மறுபடி உயர்புடம் போட்டிடு
பொதிந்த குருவாற் புகழான கல்லுப்புப்
பதிந்தே யொடுங்கிப் பதையாமற் கட்டுமே. (46)

கட்டிடு முப்புக் கனகதுரைக் கப்பால்
ஒட்டிட வாண்பிள்ளை யுண்டோசொல் வாதிகள்
திட்டங் களங்கமே செப்புவேன் கேளு
மட்டிய வீரம வளமான லிங்கமே. (47)

லிங்கமுஞ் சூதமும் நேராந் துருசுடன்
தங்கமுந் தாரமுஞ் சாரமுங் காரமும
சிங்கமென் றேவருஞ சீர்கொண்ட கல்லுப்பும்
வங்கமுங் கூட்டி மாட்டி யரைத்திடே. (48)

அரைத்திடு மெல்லா மளவொன் றதாக
அரைத்திடு ஆவனீ ரப்பா சருகுநீ
ரரைத்து வுருட்டி யப்பா குகையில்வை
இரைத்தே குகையி லிருகுங் களங்கமே. (45)

களங்கத்தை வாங்கிக் கல்வத்தி லிட்டு
வளங்கப் பொடிதது வகையான வெண்ணெய்
துளங்க வரைத்துத் திடியான மெழுகதை
வளங்காய் ரவிமதி வாய்ப்பா யுருக்கவே. (50)

உருகி யதன்பத்துக் கொன்றிடு மாத்திரை
தருவிது மாத்துத தப்பாது யெட்டுப்

பெருகிய தங்கப் பெருமைக்கி தொக்கும்
பருகிய வுப்புப் பாராய் களஙகமே. (51)

களங்கத்தி லுப்புக் கடுங்கார மேத்தி
வளங்கவே யூது மகத்தான சுண்ணமாம்
உளங்கொண்ட சார மோட வதைத்திடு
விளங்கொண்ட நீராம் வீரம் பொடித்திடே. (52)

இடுபூரந் தன்னை வாரியிட் டூதிடு
தொடுதா ளகந்தான் சுண்ணம தாயிடும்
படும்வாங்க நீறும் பாரிங்கி யிளையும்
விடுசார மீதில் மேவிக் கவசியே. (53)

கவசம் புடத்திற் கடுங்காரச் சுண்ணமாந்
திவசத் தருசுக்குச் செல்லப் பொதிந்திடு
தவமீறு சுண்ணமாந் தங்கமுஞ் சுண்ணமாஞ்
சிவலிங்து சுண்ணஞ் சிறந்த குருவிதே. (54)

குருவொடு சீனம் புழுகொடு பூரம்
குருவொடு வீரமுங் கூட்டிக் குளித்துக்
குருமீறு சுண்ணங் கோடானகோடி
குருவொடு காரஞ் சவாதையுங் கூட்டே. (55)

கூட்டியு ருக்கணம் கோடான கோடி
தேட்டமி ரதத்தைச் சுண்ணஞ் செய்யாட்டால்
ஈட்டுள்ள வாதி யெடுத்த சரக்குகள்
பூட்டவு மாட்டான் பொன்னுமங் கில்லையே. (56)

இல்லாத திஞேடே இருந்து மனமுறை
வல்லதோர் கற்பம் வழலையை வாங்கு
நல்லுற்ற தேகம் நலமான வச்சிரம்
வெல்லுமே சித்தி வேடங்கள் பூண்டிடே. (57)

பூண்டிடுக் தீட்சை புகழுமுறை கேளு
ஆண்டரி யோடு வளவாக வெண்ணிப்பார்
பூண்டதி சந்திரன் புரியட்டீ மாகும்
தாண்டவ மாடுஞ் சத்தி யெழுத்திலே. (58)

எழுத்து முறையை யெவர்க்குஞ்சொல் லார்கள்
எழுத்துத் தசந்தா னெட்டிரண் டறியார்
எழுத்தினில் ரெண்டே யிதமா முகாரம்
எழுத்துக்குப் பின்னெல்லா மிசைந்திடுஞ் சத்திக்கே. (59)

சத்தியின் றீட்சை தானிது வாகும்
முத்தி சிவமா மெழுத்து முதலாய்.
பத்து முன் றீட்சை பகருவ தாகுஞ்
சித்தியாம் பஞ்சாட் சரத்தின் தியானமே. (60)

சரமான நூலைத் தானே யறிந்து
திரமான யோகஞ் செலுத்தப் பலித்திடும்
பரமான சந்திரன் பாரிட்ட வாய்வுத்
திருந்திடா தியானத் திருந்திட யோகமே. (61)

யோக மிருந்தென காலாங்கி யென்றே
யோக மிருந்தென் னுறவாம் பராபரம்
பாகம தாகப் பரிபூ ரணத்தைத்
தாகத் தருந்தினேன் சார்ந்தேன் கமலமே. (62)

கமலம தாயிரத் தெட்டையும் கண்டபின்
கமலமுனி யென்றுங் காலாங்கி யென்றும்பேர்
விமல னுரைத்தார் மெய்ச் சித்தனென்று
நிமலனென் னந்தி நேர்கொண்ட வாறே. (63,

வாருங் கணேசன் மலரடி விந்துவாம்
வாருங் கணே சன் மலரடி நா தமாம்
வாருங் கணே சன் குககுட முட்டைபோல்
வாரா யிருந்த வகையறி யாரே. (64)

அறியா ரறிந்தபி னப்பேது மண்ணேது
தெறிவான தெய்வேது சிந்தையி லுன்னிப்பார்
பிறியாத விண்ணேது பேசும் பராபரம்
மறியாத பேருக்கு வகாரந் தெரியாதே. (65)

தெரியா மயேசுரன் சிந்தை கலந்து
அறிவை அறிந்தபின் னுறிக் கணேசனும்

பிரியாத குண்டலிப் பேராய் வளர்ந்தவன்
சிறியாரைப் போலே தெளிந் திருந்தேனே. (66)

இருந்திடு மாதியை எவரு முரைத்திடார்
வருந்தும் பராபர மாயையை விண்டிலார்
திருந்துமன் ஞதஞ் சிவசத்தி யொன்று
யிருந்தவ ரூப விலஙகுரு கண்டிடே. (67)

கண்டிடு மட்ட சித்தியின் கூற்றையுங்
கண்டிடு தத்துவந் தொண் ணூறே டாறுங்
கண்டிடும் வாசி கைவச மாகையாற்
கண்டிடு மேகம் மல்லாவைக் காணவே. (68)

அல்லாவி ஞத மாரு முரைத்திலர்
சொல்லவும் வேண்டாம் சுருதி முடிந்திடஞ்
செல்லுஞ் சிவத்தைச் சேர்ந்திடுஞ் சத்திதான்
வல்லமை யொன்றய் வளர்ந்த மவுனமே. (69)

மவுனத்தி ஞலே வளராதி யந்தமும்
மவுனத்தி ஞலே வளர்ந்த பராபரம்
மவுனத்தி ஞலே வளர்பஞ்ச பூதமும்
மவுனத்தி ஞலே வளரா று தெய்வமே. (70)

ஆறு தலத்தோ ரதிகமவு னத்தாற்
கூறு மகண்டங் கொடிமுடி சாகரம்
வேறொன் று மில்லை விளைந்தமவு னந்தான்
தேறு மொழியிதைச் சித்தர் விள்ளாரே. (71)

விள்ளார் மவுன மெய்க்கக் கொலுவது
விள்ளார் சிவசத்தி மேவிக் கலந்தது
விள்ளார்க ளப்பா வெட்ட வெளியது
விள்ளார் மயேசுரன் மேவின் ரூபமே. (72)

மேவுஞ் சிவன்ருன் வேதாந்தச் சத்தியை
மேவுஞ் சிவன்ருன் வெளிபோலத் தோன் றுங்
கூவிய கோழிக் குறிகண்ட போது
ஆவி னடிமுடி யந்தத்தி லாதியே. (73)

ஆதி யனாதி யறிவா லறிந்தபின்
மேதினி தன்னில் விதியுனக் கில்லை
சாதியைப் பார்க்கத் தானவ னவ
னோதி யறிந்த வுரையிது பாரே. (75)

உரைபாட லப்பா வுரைத்தெழு நூறு
தரைஞான முன்னூறு தானது சொன்னேன்
வரையாய்க் குறுக்கியே வைத்தே னெழுபதஞ்
சருகாதி வாதச் சவுக்காரந் தானே. (75)

தானென்ற கார சார மறிந்தவர்
தானென்ற வுப்புத் தானெழு மங்கமாய்த்
தானென்ற வாதியாஞ் சகலசித் தாதியுந்
தானவ னாகத் தான்பிண்ட முத்தியே. (76)

கமலமகாமுனி ஞான சூஸ்திரம் எசு

முற்றிற்று

கமலமகாமுனி ஞான சாஸ்திரங்கள் நம்மிடம் அநேகம் ஓலை யேட்டுப் பிரதிகளிருப்பினும் தற்போது இதிற் சிலதை அச்சிட்டிருக் கிறோம மற்றவைகள் பின்பாகங்களில் வெளியிடக்கூடும்.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த வத்திராயிருப்பு கருப்பணத்தேவர் அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

ஐம்பதாவது:

இடைக்காட்டுச் சித்தர் திருவாய் மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் எழு

காப்புமுதல் கடைசியென்ற கடையில்நின்று
கடைச்சரக்கைக் கண்டுகொள்ளக் காப்பிற்பாடி
காப்புமுதல் முதற்சோதது நடுவில்நின்று
கணபதிதா ளிருசரணங் காப்பாமென்று
காப்புமுதல் முதற்கோரக்கநாதர்
கபலமுனி போகரிஷி பாதங்காப்பு
காப்புமுதல் அறிவுபெறச் சொன்னஞானம்
கண்டறியச் சால்வதியுவ காப்பதாமே.

கண்டாகும் ஞானமெழு பதுவாமிந்நூல்
காணுவது மிகவரிது கண்டால்நன்மை
கொண்டாகும் நயமுயிரே குடிபோயவாழும்
குணமில்லாத தேகமதைக் கோவிலாக
விண்டாகும வேதாந்த மார்க்கந்தன்னில்
வித்தையிது சுத்தவெளி வேணுமென்றால்
பண்டாகும உலகோருக காகச்செய்த
பறபலசாஸ் திரவேதம பலனும்டாரே. (1)

பார்த்தறிய வேணுமதை யறிவில்லாத
பாமராக்குச் செய்தகட்டுப் பாடேயென்ற
சாத்தியமா யிருக்காதே யுண்மைசொன்ன
சகத்தியை மறந்துபல சமயசசேறறிற்
பேய்த்தனமாய் விழுந்தல்லோ அநேகர்மாண்டார்
பேரறிவார் சிவயோக முடிவைக்கண்ட
மாத்திரமே ஞானம்வரப் புத்தியீதே
மககளே சீவன்முத்தி வாய்க்குந்தானே. (2)

தானென்ற வேதத்தின் முடிவில் நிற்கும்
தமருள்ளே பேரொளியைக் காணவென்றால்
வானென்ற மூலதலம் முளைத்தெழுந்த
வகாரமே கம்பத்தின் முடிவிலேறி
மானென்ற காலமதன் மேலேநோக்கு
மனத்துள்ளே காரணபூ ரணமுந்தோணும்
கோனென்ற குருவருளால் ஞானங்கண்டு
குறிப்பறியச் சித்திக்கும் குணமாய்க்காரே. (3)

வேறுசந்தம்.

ஞா ன க ற் ப ம்.

காருலாவும் மேகமே கங்கைசத்தி யோர்சிவம்
பாருலாவும் வீட்டினுப்பு பண்புவருப் பாகநீர்
சீருலாவும கங்கையாற் றெளிந்தவெள்ளை யுபபிலே
நீர்கலந்த போதிலேதான நீடுலாவுஞ் சுண்ணமே. (4)

சுண்ணமென்ன உப்படா சுருக்கறிந்தோன் வாதியாம்
எண்ணமென்ன அறுவகையி விச்சரக்கு முற்குரு
வண்ணமென்ன வண்டுடன்மின் வண்டுசுததி யாவர்காண்
சண்ணுமென்ன அறுவகைச் சரககுநீர்விட் டாட்டிடே. (5)

ஆட்டியே புடத்திடுசல் லாதிமா குருவடா
மூட்டுமெட்டு வகைபுரிந்த மூர்த்திசற் குருவடா
நாட்டுமிந்த வோரிடை நாதமண்டத் தோரிடை
தீட்டுரோம மோரிடை செவிப்பினு மவ்விடை (6)

அவ்விடை யறுவகைச்சே நீருட னரைத்திடச்
சவவிரககற பூரமுஞ் சவ்வாதுமொரு மாவிடை
இவ்வகைதன மூனறுசாம மேவியே யரைத்தபின்
செவவலின் புடமிடத் தெளிந்தசுணண மானதே. (7)

ஆனமான நாகமே யடக்கவகை யொன்றுகேள்
ஆனநல் மணததவளை அராவடிநத தைலமாம
ஏனமாய்ச சுருக்கிட யிருகுமந்த நாகமே
தேனமாயத தெளிந்தசுண்ணஞ் செவ்வறவிரங் கூட்டியே. (8)

கூட்டியாட்டி யப்பியேகற் குக்குடப் புடமிட
வாட்டமில்லாச சுண்ணமாம் வளர்சிறப்பு நாகந்தான்
நாட்டமாவின் பாலிலே நாலுசாம மூறவே
போட்டமண்கீழ் மேலதாய்ப் பொன்றுநீரு லாவுமே. (9)

நீரைவிட் டெழுதரம் நேசமாய்க் கழுவியே
வாரமீறு வாட்டமிலலாச் சுண்ணமோ டரைத்தபின
சீரதாய் முழப்புடமிட் டிடவேசுண்ண மாமடா
காரசாரஞ் சுண்ணமாங் கதிரவன் முகத்திலே (10)

முகத்திலே தெளிந்தகார மூர்க்கதிரி கோணமால்
செகத்திலே யடங்கிடாச்செந் தூரமாகற் செம்பிலே
மகத்தாமீவேதை யைம்பதுக் கொன்றிடவே தங்கமாம்
சகத்திலேகற் சாரச்சுண்ணந் தாவுமே துருசிலே. (11)

துருசுமூன்று சாமம்வெயிலிற் றூேன்றவேநற் சுண்ணமாம்
வரிசைபெற்ற சிங்கியாகும் வகையதாயோர் சட்டியில்
இரதமுட்ட விட்டபின் நீருமா விடையிட
இரவிகாணச் சுண்ணமாம் மேருதங்க மீதிலே. (12)

தங்கம்நூறு வெளளிநூறு தானேசேர்ந் துருக்கையில்
பொங்கமான சூதச்சுண்ணம் போட்டிடோரு மாவிடை
வங்கம்நூறு கூட்டியே வளமுட னுருக்கினல்
துங்கமானே யொன்றிடச் சோதியாஞசெந் தூரமே. (13)

செந்தூரந்தான் மாவிடை செம்புவெள்ளி நூறிலே
செந்தூரங் கொடுக்கவே தெளிந்தமாற்றறு ஞூறதாம்
இந்தவேதை பொய்யல்ல யெந்தன்கண்கள கண்டது
கொந்துலாவு சத்திசெய்து கூறுவேன் பலன்களே. (14)

கூறுகின்ற சத்தியென்ன கூறவேனுன் செய்திகேள்
மீறுநீல வுப்புச்சுண்ணம் வீரமும் சரியதாம்
நீறுபண்ண வேயடி நிலமைசத்தி சிவமெனக்
கூறுவேனுன் மித்துரு சத்துருக் குலங்களே. (15)

குலமதான சீனசத்தி கொண்டசவுச் காரமே.
உலவுகினற சிவமடா உற்றுணர்ந்து பாரடா

விலவெடியுப் புளுசிவம மீறுசத்தி புளியடா
பலனகறியுப் பேசிவம் பாருகங்கை சத்தியே. (16)

சத்தியுவ ருப்படா தான்சிறுநீர் சிவமதாம்
மூத்திரிலவுப் பேசிவம் மூழங்குகவலை சத்தியே
சித்தியான தொளைடா சிவக்கொழுஞ்சிக் காய்லே
உத்தகுரு வண்டேசிவ முண்மைசத்தி மினமினி. (17)

மின்மினியே சத்தியாம் விளங்குகூத மேசிவம்
தன்மனவி கெந்தகந் தான்சவ்வீரஞ சிவமதாம
உன்மனவி விஙகசத்தி யுற்றகூடன சிவமதாம்
இன்னூர்பெண்டில் மாவின்தேவி யினபஅரி தாரமே. (18)

தாரமா மஞசட்கரு சத்திசிவம வெள்ளைதான்
தீரமண்டச் சவவுமே சிவனமுதஞ சத்தியாம்
வாரகாக மேசிவம மணத்தவளை சத்தியாம
கூரபூரம் சத்தியால குணர்த்திடும்பூ நாகமே. (19)

குணர்த்தியான தேசிவம் கோரோசனையே சத்தியாம்
இணக்கா யுருவிசத்தி யிலகுகல்லுப் பேசிவம்
பணப்பூ நாக மேசிவம் பத்திசத்தி பாலடா
வணக்கவெண் காரஞ்சிவம் மானகவச் சாரமே. (20)

சாரமேநற் சத்தியாக தளித்தரோம மேசிவம்
வாரமாம் செவிப்பிசின் மனவியான வாரடா
ஆரமண்டத் தோடேசிவம் ஆதிகஙகை சத்தியாம்
வீரியந்தான் வெள்ளைகஞசு மேவுநற் றுருசதே. (21)

துருசல்லோ சிவமடா சோதிபூரஞ் சத்தியாம்
வரிசைதுத்த பெண்ணடா மணப்புணர்வு தேனடா
பொரிகாரமுஞ் சிவமடா புகழுஞ்சீனக் காரமே
திரைநுரையே சிவமடா சிலமாசத்தி மேவவே. (22)

மேவுகின்ற சிப்பியோடு விமலனுகு முட்கரு
மேவுசத்தி கற்சுண்ணம் விமலனுகுங் கங்கைதான்
மேவுசத்தி யாமடா வெள்ளையப்பு ரேகமே
மேவுகங்கை சத்தியே விரும்புமித் துருக்களே. (23)

மித்துருச்சேர் மானத்தை விள்ளுமவகை கேளடா
உத்தமோர் வழிலதா ஹுருப்படுத்து முவராடா
சத்துருவை விள்ளுறேன் தனித்தவாதி கேளடா
சுத்தரவி யாலுமே சுருக்குத்தண லாகுமே. (24)

ஆகுமோர் குருவடா அறிந்துணரும் வாதிகாள்
பாகுகறி யுப்பதொன்று பார்நிலவுப் பொன்றுடன்
ஏகருட ஞென்றடா யிதையறு நீராலேயில்
மோகமா யரைத்துவில்லை முழப்புடததிற் சுண்ணமே. (25)

சுண்ணமோடு வீரமுஞ் சுருக்குநீரா லாட்டியே
எண்ணமான துருசில்மேவி யிரவிகாணத் தழலிலே
வண்ணமாக வாட்டவே வளர்ந்துகுரு வாகுமே
தண்ணிக்குத்தா னீருமே சற்றும்பசுப் பில்லையே. (26)

பசுப்பில்லாத துருசுநீரு பாச்சவகை கேளடா
உசுப்புநாக வாய்த்தண்ணீ ரூறிக்கெந்தி மெழுகதாம்
ரசத்துடனே கூட்டியே சுருக்கிடச்செந் தூரமாம்
வசிப்பில்லாத தங்கமாம் வளர்ந்தவெள்ளி நூறிலே. (27)

வெள்ளியொன் றுருக்கவே மேவுதுருசு நீறிட
வெள்ளியது கட்டியே விரியுமே கலிப்பதாய்
வெள்ளீயத்தில் வெள்ளியை மேவவுங் கலித்திடும்
அள்ளியதோர் சூதமிட்டு ஆட்டிநீ யரைத்திடே. (28)

அரைத்தவெள்ளி வெள்ளீயமம் மானைச்சூத மாட்டிடச்
சரியிடை யரைத்துருட்டித் தானஞ்சுண்ணக் குகையிலே
நெரியவைத்துப் புடமிட நிசமதான சுண்ணமாம்
வரிசையான மாரசங்க ளஞ்சுநூ றுருக்கவே. (29)

உருகின முகத்திலே யொருமாநீரு மேவிடத்
திருவிளையா டாடலாம் செம்புநூறு சேர்த்தபின்
அருமையான வெள்ளிமாற் றறுபத்தாற தாகுமே
வரிசைபெற்ற வெள்ளியிற்றுன் மாறறுவகை சொல்லவே. (30)

சொல்லுகிறேன் வெள்ளிநூறு தோய்ந்துருகும் போதிலே
நல்லகெந்தி சூதமும் நலம்பெரு செந்தூரமே.

வள்ளதோர் களஞ்சியிய மாத்தாயிரத் தெட்டதாம்
சொல்லவொண்ணுச் சோதியாந் தொடுதத காரியம்மிதே. (31)

காரியங் களஞ்சியிற் கெவுரியிடை தாக்கிப்பின்
பூரியிடை சேர்க்கவந்தப் பொன்னெருங்கு மப்பனே
வீரமொன்று நருசுசீரு மேவுதஙகச் சுண்ணமாம்
பூரிசுண்ணஞ் சூதமோடு போட்டரைக்கச் சுண்ணமே. (32)

அரைத்தசுண்ணச் சூதமே யடங்காவேதை யப்பனே
வரைக்கொடு முடியெலாம் வளர்ந்ததங்க மாகுமே
கரைக்கடங்கா வேதையைத் கண்டுபோர்த்த துண்மைகாண்
குருக்களோ துருசுச்சுண்ணங் கோடாகோடி வேதையே. (33)

வேதையான சற்குரு விள்ளுகிறேன் கேளடா
நீதியாங் கடல்நுரை நீர்விட்டாட்டி யூதவே
ஆதிச்சுண்ண மாமடா யாருமுவர்ப் பூவடா
காதமடி கூடவேதான் நல்லசுண்ண மாகுமே. (34)

சுண்ணமோடு வீரமுஞ் சூடனுஞ் சரியதாய்
எண்ணமா மறுவகை நீரைவிட் டுலாவவே
வண்ணமாய் முழப்புடம் வழகைவேநற் சுண்ணமாம்
எண்ணெண்ண சரக்கெலா மிதிலேசுண்ண மாகுமே (35)

கண்ணத்துக்கு வழலைவேணுந் தூயநீர்க்கும் வழலைவேணும்
எண்ணமுள்ள கட்டுகட்கும் இசைந்ததோர் வழலைவேணும்
வண்ணமாய்ச் செந்தூரத்துக்கும் வாய்ப்புள்ள வழலைவேணும்
உண்ணுநற் களங்கத்துக்கும் உரைத்த வழலைவேணுமே. (36)

வழலைவேணும் மெழுகுக்கும் வாய்த்ததோர் புடத்துக்கும்
வழலைவேணுஞ் சாரணைக்கும் வரிசையான பற்பத்துக்கும்
வழலைவேணுஞ் சிநசிக்கும் வாயுவேகக் குளிகைக்கும்
வழலைவேணு மப்பாசவுக் காரமல்ல வழலையே. (37)

வழலையென்ன வென்றுசொல்ல வாதிநீதான் கேளடா
வழலைநில வுபபடா வாய்த்தகறி யுப்படா
வழலைமூல மடியடா வாறுமூன் றிங் குருவடா
வழலையிதை விட்டவர் மட்டைவாதி யாவரே. (38)

ஆவதும் அழிவதும் ஆகிநில வுப்படா
ஆவதும் அழிவதும் ஆனகறி யுப்படா
ஆவதும் அழிவதும் அடியினமூலத் துப்படா
ஆவதும் அழிவதும் ஆகநீரி லுபபதே. (39)

உப்பறிந்தோன் ஞானவாதி யுற்றுணர்ந்து பாரடா
அப்பிலே விளைந்தவுப்பு ஆதியான வாரடா
தப்பிலா துவர்க்கடுச்கச் சார்ந்தநில வுப்படா
செப்பினே மறந்துகொள்வீர் தேகநீ ருலாவுமே. (40)

உலாவுகின்ற கங்கைதா னுசிதமான வேதைதான்
பலாபலன்கள் காணவேதான் பத்திலொன் றுவிள்ளுவேன்
குலாவுகின்ற கோசபீசங் கோரோசனை தேனுடன்
உலாவுஉண்டை செய்துவேதை யுறபனம்பொய் யாதகதே (41)

பொய்யாதொரு குருவருடா புகழ்நிறுத்தும் வலுமைகேள்
மெயயாகுரு வண்டுடன் மினமினி யுலாத்தியே
கைமுறை யுவருப்பென் றுகறியுப்பொன் றுங் கூட்டியே
செயயநீ ரறுவகைச் சேநீர்விட்டு ஆட்டிடே. (42)

ஆட்டிசில்லை சேர்க்கவே யானவீர பூரமும்
கூட்டியே முழப்புடங்கொள்ளநல்ல குருவிதாம்
நீட்டுரோமம பிசினுடன் சொறுகூட்டித் துருசிலே
மூட்டியேதீ யாட்டவே முடிந்தகுரு வானதே. (43)

குருவிதோர் களஞ்சிதன்னை வீரத்தினுங் கூட்டியே
இரவிகாணத் தளவிலே வாட்டிப்பின் னெடுக்கவே
திருவுலாவு வீரநீரு வெள்ளீயத்தி லீயவே
இருநூறு மாகுமிதுக கெதிராயாணி யில்லையே. (44)

ஆணிதானோர் மாவிடை வீரநீ ரதனையே
பேணிமா தகத்திலை கவசமே பிலக்கவே
காணவே யெரியிடிற கடியசுண்ணச சிங்கியாம்
பாணராம சூதபற்பம் பொடியதனிற் பாத்திடே. (45)

பாரப்பா ரசபறபததைக் செம்பிற்பணந் தாக்கவே
சேரபபா குருமாவிடை நூறறுகொள றுசேர்க்கவே

ஆரப்பா யிதன்வேதையை யறிந்தவரே யோகியாம்
சேரப்பா தொழிலிறங்க மாற்றுயிரம் நிசமதே. (46)

நிசமதா யொருகுரு முடிந்தசித்திரம் கவில்வேன்
வசமதா மண்டத்தோ டோரிடை நிலஉப்பும்
பிசகிலாத தாகுமவ் விடைசூட னுமை கூட்டியே
பசையவெள்ளைக் கருவுடன்தா னூட்டியே பகருவாம். (47)

ஆட்டிவீரங் கூட்டியே யறுவகைநீர் விட்டுமே
சூட்டிமுழப் புடமிடச் சுண்ணமாகு மப்பனே
நாட்டமாயோர் சரக்கினில் நயந்துகாண் பிக்கவே
கோட்டிதா னிலாக்கட்டு பிலத்திடும் குருவதாம் (48)

குருக்களுஞ்சி வெள்ளியை யிருபதிற் கொடுக்கவே
விருப்பமா யதுபத்துத் தங்கமாய் விளங்குமே
கருவிலாதோர் வித்தையும் கட்டிடவு மாட்டார்கள்
கருவதாம் நிலவுப்பதைக கைவிட்டார்கெட் டார்களே. (49)

கெட்டவே யொருகுரு முடிந்தசித்ரங் கேள்டா
அட்டலோக முமபழுத் திடவேவகை விள்ளுவேன்
வெட்டமு வெளிநிலத்தில் விளங்கும்பார் பூநாகமே
தொட்டவடி சண்டவா பொன்னடியைச் சொல்லுவாம். (50)

வேறு.

சொல்லும்பூ நாகத்தன்னைத் துணிவுட னறியமாட்டார்
வல்லசெக கரிசலதன ளில் மணலுணடு வளருமடாரு
நல்லதோர் நிலத்துகெல்லாம நாகருமு முகுதிபுணடு
அல்லது வனதிடபூநா கந்தனை யறிகதுபாரே. (51)

பாரப்பா பூநாகந்தான பராபர வஸ்துவாகும்
சேரப்பா ஆவிக பானிற செனநிடச சுத்தியாகும்
ஆரபபா யிதுக்கிடேதா னுதியாம வழலையொபபாம்
சேரப்பா கதியுபபொனறு சீர்நில வுபபுங்கூட்டே. (52)

கூட்டுவா யட கறபூரங் கொடியதோர் வீரம்நாகம்
ஆட்டுவாய் செநீ விட்டு அதிலவில்லை யிரவிகாண
மூடடுவாய் முழுப்புடநதான் முக்கிய குருவுமானூர்
தாட்டிகச் சரக்கையெல்லாஞ் சரமெனச் செப்புவாரே; (53)

செப்புவாய் வீரங்கூட்டித் தெளிமாக தத்திலேற்றி
ஒப்புட னிரவிகாண உலர்ந்தபின் னெரியிட்டேதான்
செப்பமா யெடுக்கச்சுண்ணந் தெளிவுகண் பார்க்கப்போமோ
அப்பிலே நீறுமெந்தச் சரக்கையும் கட்டிக்கொல்லும். (54)

கொல்லுமக் குருவொன்றேதான் கூறுவேன் சிப்பிப்போக்கு
நில்லென்று நிறுத்துந்தங்கம் நிசமுண்டாய் வைக்குமப்பா
நல்லதோர் குருமுடிக்க நயமுடன் சொல்லக்கேளு
வல்லமை சிப்பியொன்று வளர்வெடி யுப்புங்கூட்டே. (55)

கூட்டுவாய் நிலவுப்புத்தான் கூறிய கறியுப்புத்தான்
காட்டமாய்ச் சூடனுந்தான் நயமுள்ள வீரங்கூட்டி
ஆட்டுவாய் சரியதாக அறுவகைச் சேநீராலே
மூட்டுவாய் வில்லைதட்டி முழப்புட மதிகம்போடே. (56)

போட்டபின் சிப்பிச்சுண்ணம் பேர்க்கேது நீக்கேதப்பா
தாட்டிகக் கருநாகத்திற் றடவியே வெயிலிற்போடப்
போட்டபின் னொடிக்குமுன்னே புகழ்நல்ல சுண்ணும்பாகுங்
காட்டிய வங்கச்சுண்ணம் லிங்கத்தைக் கட்டிக்கொள்ளும் (57)

கட்டின லிங்கந்தங்கம் கதித்துட னுருகியாடுந்
திட்டமாய் வெள்ளிநூறு திடமிந்தக் குருதானென்று
இட்டமா யுருக்கிவாங்க இருபது மாத்துப்பொன்னும்
விட்டதோர் வங்கங்கோடி வேதையுங் கோடியாமே. (58)

கோடிகா லந்தான்வாழ்கக் கூறிய கற்பம்விள்வேன்
நீடிய கீழ்க்காய்நெல்லி நிசமுடன் சூர்ணஞ்செய்து
நாடிய தினங்கள்பார்த்து நல்லநாட் பொருந்தும்நாளிற்
காடியிற் கொள்வீராகிற் பத்தியங் காக்கவேண்டாம். (59)

வேண்டியே வருஷம்பத்து யிப்படிக் கொள்வாயாகில்
நீண்டமால் மாண்டாலுந்தான் நிசகற்பந் தப்பாதுண்மை
காண்டகு தேவரம்பை கனபணி விடையும் செய்வாள்
ஆண்டிடுங் கோடிகாலங் கூற்றிலைநடனம் ஆள்வான் (60)

ஆளிய தேவரோடு அருளுரு ரிஷிகளெல்லாம்
வாழியாய்க் கணங்கள்சூழ வாழ்ந்திடுஞ் சிவாயவென்பார்

ஊழிதா னுலகுக்கெல்லா முற்றதோர் கோவென்பார்கள்
நீளிய காலமெல்லாம் நிமலனும் முற்றுங்காப்பான். (61)

காப்பதோர் சரக்குக்கெல்லாங் கட்டிடுஞ் சேநீர் சொல்வேன்
ஏப்பதோர் பஞ்சபூத மெழுவகைப் பிறப்புங்கூட்டிக்
கூப்புடன் பாதிசேநீர் குருவென மொழியவேண்டி
யார்க்குமே பிழைக்கும்புத்தி யன்புடன் சொல்லக்கேளே. (62)

சொல்லக்கே ளுப்புமூன்றுந் துடியதாய்ச் சுண்ணம்பண்ணி
நல்லதோர் சுண்ணமொன்று நாலாகும் வெடியுப்புத்தான்
அல்லக்கே ளிந்துப்பொன்று அப்பனே சூடனொன்று
வல்லொத்த புளிதான்நாலு வடிவுள்ள சீனமொன்றே. (63)

ஒன்றுதா னின்னங்கேளு உற்பனந் திரைநுரையை
நன்றியாய்ச் சுண்ணமபண்ணி நயமுடனொன்றுகூட்டிக்
கன்றிடுங் கோழிவெள்ளைக் கருவினிற் றண்ணீராக்கச்
சென்றிடு மெருககம்பாலஞ் சென்றிடத் தண்ணீராமே. (64)

நீரதை விட்டுரெண்டு சாமமே யரைத்துக்கொண்டு
நீரது வுலரவில்லை நேயமா யனலில்வாட்டிச்
சீரதாய்ப் புடத்திற் போட்டுச் சென்றெடு சுண்ணமப்பா
பாரதாய்ச் சுண்ணம்பாதி சாரத்தைப் பொடித்துவையே. (65)

வைத்திடு பீங்கானிற்றான் வளமிரு பதுநாளிற்றான்
உத்ததோர் தண்ணீர்காணு முற்பனச் சலத்திலேத்தான்
சுத்தியாய் வீரம்பூரம் சுருக்குட னுரமுமொன்றாய்ப்
பத்துக்கு ஒன்றிற்பாதி பண்புடன் பொடித்துப்போடே. (66)

போடப்பா சேநீரென்னப் புகழ்பெறு சரக்கையெல்லாம்
சாடியே கொன்றுபோடுந் தாரமு முருகியாடும்
ஆடிய சூதங்கட்டு மபபனே கருக்களெல்லாம்
ஓடிடும் வேதைகோடி புயிர்கொலலும் பழிசெய்யும்மே. (67)

செய்யப்பா சேநீர்போக்குத் திடமுட னுருஞ்சொல்லார்
மெய்யப்பா யிந்தத்தண்ணீர் வேதையே சரககின்வேதை
பொய்யல்ல வுமைதன்னாணை போக்கிதிற் கவர்கள்கோடி
ஐயனே மகத்தானசேநீ ரம்பல மாடுந்தானே. (68)

தானவனாகச் சொல்வேன் தண்ணீரிற் சூதங்கட்டி
ஏனமா யுருக்கிக்கொண்டு கைதனிலிருகக வேதான்
வானமு மண்ணுமொன்றாய் வளர்ந்தவ ரிவர்தானென்பார்
ஆனதோர் குளிகைவாயி லடைக்கவே யதிகச்சித்தன். (69)

சித்தனுங் கெவனசித்தி தேகங்கள் வச்ரகாயம்
முத்தியா யறிந்துவாத முன்னிற்கச் சிதம்பரத்தைப்
புத்தியாய்ப் பூசைசெய்தாற் புகட்டுவார் மதுவின்றுப்போல்
உத்தமா வுனக்குப்புத்தி யுவரடி யுகந்துகாரே. (70)

இடைக்காட்டுச் சித்தர் ஞானசூஸ்திரம் எய

முற்றிற்று.

மதுரை இராமாயணச்சாவடித்தெரு இருளப்பக்கோனாரவர்கள் குமாரர் (இராமசாமிக் கோனாரவர்களிடமிருந்த) ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

ஐம்பத்தோராவது:

இடைக்காட்டுச் சித்தர்

பாடல் ௱௩௰.

காப்பு.

கலிநிலைத்துறை.

ஆதி யந்த மிலாத வனாதியைத்
தீது றும்பவந் தீப்படு பஞ்சுபோல்
மோது றும்படி முப்பொறி யொத்துறக்
காத லாகக் கருத்திற் கருதுவாம்.

தாண்டவராய்க்கோன் கூறுதல்.

எல்லா வுலகமு மெல்லா வுயிர்களு
எல்லாப் பொருள்களு மெண்ணரிய
வல்லாளனாதி பரமசிவனது
சொல்லா லாகுமோ கோனாரே. (1)

வானியல்போல வயங்கும்பிரமமே
சூனியமென்றறிந் தேத்தாக்கால்
ஊனியலாவிக் கொருகதியில்லையென்
றோர்ந்துகொள்ளுவீர் கோனாரே. (2)

முத்திக்கு வித்தான மூர்த்தியைத்தொழுது
முத்திக்குறுதிகள் செய்யாக்கால்
சித்தியும்பத்தியுஞ் சத்தியுமுத்தியுஞ்
சேரலாகுமோ கோனாரே. (3)

தொல்லைப் பிறவியின் றொந்தமுற்றறவே
சோம்பலற்றுத்தவஞ் செய்யாக்கால்
எல்லையிற்கடவு ளெய்தும்பதமுனக்
கில்லையென் றெண்ணுவீர் கோனாரே. (4)

ஆரணமூலத்தை யன்புடனேபர
மானந்தக்கோலத்தை யின்புடனே
பூரணமாகவே சித்தித்து மெய்ஞ்ஞான
போதத்தைச் சார்ந்துகொள் கோனாரே. (5)

காலாகாலங் கடந்திடு சோதியைச்
கற்பனைகடந்த வற்புதத்தை
நூலாற்பெரியர் சொன்னநுண்பொருளை
நோக்கத்திற்காண்வலு கோனாரே. (6)

சொல்லருஞ்சகள நிட்களமானதைச்
சொல்லாமற் சொல்லாமற் கோனாரே
அல்லும்பகலும் அகத்திலிருந்திடில்
அந்தக்கண்கிட்டுமோ கோனாரே. (7)

சூரியன்வாள்பட்ட துய்யபனிகெடுந்
தோற்றம்போல்வெவ்வினை தூள்படவே
நாரியிடப்பாகன் றாள்நெஞ்சிற்போற்றியே
நற்கதிசேர்ந்திடு கோனாரே. (8)

மும்மலநீங்கிட முப்பொறிக்கெட்டாத
முப்பாழ்கடந்த வப்பாழைச்
செம்மறியோட்டிய வேலையமைத்துஞ்
சிந்தையில்வைப்பீரே கோனாரே. (9)

பஞ்சவிதமாயைச் சஞ்சலம்பறக்கப்
பற்றறநின்றதைப் பற்றியன்பாய்
நெஞ்சத்திருத்தி யிரவும்பகலுமே
நேசித்துக்கொள்ளுவீர் கோனாரே. (10)

நாராயணக்கோன் கூறுதல்.

கோச்சகம்.

சீரார் சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச் செந்தேனைப்
பாராதி வான்பொருளைப் பஞ்சவுரு வானவொன்றைப்
போன விண்ணொளியைப் பேரின்ப வாரிதியை
நோத வெந்நாளும் நெஞ்சிருத்தி வாழ்வேனே. (11)

கண்ணுண் மணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப்
பெண்ணுருவிற் பாதியினைப் பேசரிய முப்பொருளை
விண்ணி னமுதை விளக்கொளியை வெங்கதிரைத்
தண்ணளியை யுள்ளில்வைத்துச் சாரூபஞ் சார்வேனே. (12)

கண்ணித்தரு.

மனமென்னு மாடடங்கிற் றண்டவக்கோனே முத்தி
வாய்த்ததென் றெண்ணேடா தாண்டவக்கோனே. (13)

சினமென்னும்பாம்பிறந்தா றண்டவக்கோனே யாவுஞ்
சித்தியென்றேநினையேடா தாண்டவக்கோனே. (14)

ஆசையெனும்பசுமாளிற் றண்டவக்கோனே இந்த
அண்டமெல்லாங் கண்டறிவாய் தாண்டவக்கோனே. (15)

ஓசையுள்ளடங்குமுன்னர் தாண்டவக்கோனே மூலத்
தோங்காரங்கண்டறிநீ தாண்டவக்கோனே. (16)

மூலப்பகுதியறத் தாண்டவக்கோனே உள்ளே
முளைத்தவேர்பிடுங்கேடா தாண்டவக்கோனே. (17)

சாலக்கடத்தியல்பு தாண்டவக்கோனே மலச்
சாலென்றேதேர்ந்தறி தாண்டவக்கோனே. (18)

பற்றே பிறப்புண்டாக்குந் தாண்டவக்கோனே அதைப்
பற்றாதறுத்துவிடு தாண்டவக்கோனே. (19)

சற்றேபிரமத்திச்சை தாண்டவக்கோனே உன்னுள்
சலியாமல்வைக்கவேண்டுந் தாண்டவக்கோனே. (20)

அவித்தவித்து முளையாதே தாண்டவக்கோனே பத்தி
அற்றவர் கதியடையார் தாண்டவக்கோனே. (21)

செவிதனிற்கேளாமறை தாண்டவக்கோனே குரு
செப்பில்வெளியாமல்லவோ தாண்டவக்கோனே. (22)

கட்டளைக் கலித்துறை.

மாடும் மனைகளும் மக்களுஞ் சுற்றமும் வான்பொருளும்
வீ[illegible]களும் வெண்பொன்னுஞ் செம்பொன்னும் வெண்கலமும்
கா[illegible]களுங் கல்லாம பணியுங் கரிபரியும்
தேடும்பல பண்டமும் நில்லா சிவகதி சேர்மின்களே. (23)

நேரிசை வெண்பா.

போகம்போம் போக்கியம்போம் போசனம்போம் புன்மைபோம்
மோகம்போம் மூர்க்கம்போம் மோசம்போம் - தாகம்போம்
வேதமுத லாகமங்கண் மேலான தென்றுபல்கால் (24)
ஓதுபிர மத்துற்றக் கால்.

தாண்டவராயக்கோன் - தரு.

தாந்திமித்திமி தந்தக்கோனாரே
தீந்திமித்திமி திந்தக்கோனாரே.
ஆனந்தக்கோனாரே அருள்
ஆனந்தக்கோனாரே.

ஆயிரத்தெட்டு வட்டமுங்கண்டேன்
அந்தவட்டத்துள்ளே நின்றதுங் கண்டேன்
மாயிருஞாலத்து நூற்றெட்டும் பூர்த்தேன
மந்தமனத்துறுஞ் சந்தேகந்தீர்த்தேன தா, (25)

அந்தக்கரண மெனச்சொன்னு லாட்டையும்
அஞ்ஞானமென்னு மடார்தவன்காட்டையும்
சந்தத்தவமென்னும வாளினல்வெட்டினேன்
சாவாநிருக்நிடக் கோட்டையுங்கட்டினேன். தா, (26)

மெய்வாய்கண்மூக்குச் செவியெனு மைந்தாட்டை
வீழுஞ்சுவையொளி யூறோசையாங்காட்டை
எய்யாமலோட்டினேன வாட்டினே னோட்டினேன்
ஏகவெளிக்குளளே யோகவெளிக்குள்ளே. தா, (27)

பற்றிரண்டுமறப் பண்பற்றே னன்புற்றேன்
பாலையுமுட்கொண்டேன மேலையாகக்கொண்டேன்
சிற்றின்பநீக்கினேன் மற்றின்பநோக்கினேன்
சிற்பரஞ்சேர்ந்திட்டேன் தற்பரஞ்சார்ந்திட்டேன். தா, (28)

அண்ணாக்கையூடே படைத்தேயமுதுண்ணேன்
அந்தரங்கத்தையு மப்பொழுதேயெண்ணேன
விண்ணாளுமொளியை மேவிப்பூசைபண்ணேன்
மெய்ஞ்ஞான மொன்றன்றி வேறேயொன்றை நண்ணேன். (29)

மண்ணுதிபூதங்க ளைந்தையுங்கண்டேனே
மாயாவிகாரங்கள் யாவையும்விண்டேனே
விண்ணுளுமொளியை மெய்யினுட் கொண்டேனே
மேதினி வாழ்வினை மேலாகவண்டேனே. தா, (40)

வாக்காதியைந்தையும் வாகாய்த்தெரிந்தேனே
மாயைசம்பந்தங்க ளைந்தும்பிரிந்தேனே
நோக்கருப்யோகங்க ளைந்தும்புரிந்தேனே
நுவல்மற்றைந்துயோக நோக்கம்பரிந்தேனே. தா, (31)

ஆறுதாரத் தெய்வங்களோடு
அவருக்குமேலான வாதியைத்தேடு
கூறுனவட்ட வாநந்தத்திற்கூடு
கோசமைந்துங்கண்டு குன்றேறிக் கூத்தாடு, தா, (32)

நாராயணக்கோன் கூறுதல்.

தந்தனத்தானனே.

ஆதிபகவனையே பசுவே அன்பாய்நினைப்பாயேல்
சோதிபரகதிதான் பசுவே சொந்தமதாகாதோ (33)

எங்கும்நிறைபொருளைப் பசுவே யெண்ணிப்பணிவாயேல்
தங்கும் பரகதியில் பசுவே சந்தத்சாருவையே (34)

அல்லும்பகலும்நித்தம் பசுவே யாதிபதந்தேடில்
புல்லுமேமோட்சநிலை பசுவே பூரணங்காண்பாயே (35)

ஒன்றைப்பிடித்தோர்க்கே பசுவே உண்மைவசப்படுமே
நின்றநிலைதனிலே பசுவே நேர்மையறிவாயே. (36)

எல்லாமிருந்தாலும் பசுவே யீசனருளிலையேல்
இல்லாததன்மையென்றே பசுவே யெண்ணிப்பணிவாயே ()

தேவனுதவியன்றிப் பசுவே தேர்ந்திடில்வேறொன்றிலை
ஆவிக்கும்மாவியதாம் பசுவே அத்தன்திருவடியே (38)

தாயிலுமன்பனன்றோ பசுவே சத்திக்குள் ளானவன்றான்
நேயமுடையவர்பால் பசுவே நீங்காதிருப்பானே. (39)

முத்திக்குவித்தானோன் பசுவே மூலப்பொருளானோன்
சத்திக்குறவானோன் பசுவே தன்னைத்துதிப்பாயே (40)

ஐயன் றிருப்பாதம் பசுவே அன்புற்று நீபணிந்தால்
வெய்யவினைகளெல்லாம் பசுவே விட்டோடுங்கண்டாயே. ()

சந்திரசேகரன்றாள் பசுவே தாழ்ந்துபணிவாயேல்
இந்திரன்முன்முதலோர் பசுவே ஏவல்புரிவாரே. (42)

கட்புலன் காணவொண்ணுப் பசுவே கத்தனடியிணையை
உட்புலன்கொண்டேத்திற் பசுவே யுன்னதமெய்வாயே (43)

சுட்டியுங்காட்டவொண்ணுப்பசுவே சூனியமானவஸ்தை
ஒட்டிப்பிடிப்பாயேல் பசுவே உன்னைநிகர்ப்பவர்யார் (44)

தன்மனந்தன்னுலே பசுவே தானுவைச்சாராதார்
வன்மரமொப்பாகப் பசுவே வையத்துரைப்பாரே. (45)

சொல்லொன்றுநற்பொருளாம் பசுவே சோதியைப்போற்றுக்கால்
இல்லெனறு முத்திநில்ல பசுவே எப்பொருளுஞ்சொலுமே. ()

கண்ணிகள்.

பலரோகேளைத்தல்.

கண்ணின்மணியைக் கருதியபேரொளியை
விண்ணின்மணியை விளக்கொளியைப்போற்றீரே. (47)

மனவாக்குக் காயமெனும் வாய்த்தபொறிக்கெட்டாத
தினகரனைநெஞ்சமதிற் சேவித்துப்போற்றிரே. (48)

காலமூன் றுங்கடந்த கதிரொளியை யுள்ளத்தால்
சாலமின்றிப்பற்றிச் சலிப்பறவேபோற்றீரே. (49)

பாலிற்சுவைபோலும் பழத்தின்மதுப்போலும்
நூலிற்பொருள்போலும் நுண்பொருளைப்போற்றீரே. (50)

மூவர்முதலை முக்கனியைச்சர்க்கரையைத்
தேவர்பொருளைத் தெள்ளமுதைப்போற்றீரே. (51)

தூயமறைப்பொருளைச் சுகவாரிதியமுதை
நேயமுடனுளு நிலைபெறவேபோற்றீரே. (52)

சராசரத்தைத்தந்த தனிவானமூலமெனும்
பராபரத்தைப்பற்றிப் பவமறவே போற்றிரே. (53)

மண்ணுதிபூதமுதல் வகுத்தவொருவான்பொருளைக்
கண்ணுரக்காணக் கருத்திசைந்துபோற்றிரே. (54)

பொய்ப்பொருளைவிட்டுப் புலமறியவொண்ணாத
மெய்ப்பொருளைகாளும் விருபபுற்றுப்போற்றீரே. (55)

எள்ளிற்றயிலம்போ லெங்கும்நிறைபொருளை
உள்ளிறறுதித்தே யுணர்வடைந்துபோற்றீரே. (56)

நெஞ்சோடு கிளத்தல்.

பூமியெல்லா மோர்குடைக்கீழ்ப் பொருந்தரசாளுதற்குக்
காமியம்வைத்தாலுனக்குக் கதியுளதோகன்மனமே. (57)

பெண்ணாசைகொண்டு பேணித்திரிந்தாக்கால்
விண்ணாசைவைக்க விதியிலையேகனமனமே. (58)

மேயும்பொறிகடமை மேலிடவோட்டாற்குவினை
தேயுமென்றேநல்வழியிற் செல்லுநீகன்மனமே. (59)

பொன்னிச்சைகொண்டு பூமிமுற்றுந்திரிந்தால்
மன்னிச்சைமோக்கம வாய்க்குமோகன்மனமே. (60)

பொய்யானகல்விகற்றுப் பொருள்மயக்கங்கொள்ளாமல்
மெய்யானஞானகல்வி விரும்புவாய்கன்மனமே. (61)

பேய்க்குரங்குபோலப் பேருலகிலிச்சைவைத்து
நாய்நரிகள்போலலைந்தால நன்மையுண்டோகன்மனமே. (62)

இரும்பையிழுக்குங்காந்தத் திபற்கைபோற்பல்பொருளை
விருமபினாதாலவைநிலையோ விளம்புவாய்கன்மனமே. (63)

கறபநிலை யாலலவோ கற்பகாலங்கடத்தல்
சொற்பநிலை மறறநிலை சூட்சங்காண்கன்மனமே. (64)

தேகமிழப்பதற்குச் செபஞ்செய்தென் றபஞ்செய்தென்
யோகமட்டுஞ் செய்தாலென் யோசிப்பாய்கன்மனமே. (65)

சாகாதிருப்பதற்குத் தான்கறகுங்கல்வியன்றோ
வாகானமெய்க்கல்வி வகுததறிநீகன்மனமே. (66)

அறிவோடுகிளத்தல்

எல்லாப்பொருள்களையு மெண்ணப்படி படைத்த
வல்லாளன்றனனை வகுததறிநீ புல்லறிவே. (67)

கட்புலனுக்கெவ்வளவுங் காணாதிருந்தெங்கும்
உட்புலனாய் நின்றவொன்றை யுற்றறிநீபுல்லறிவே. (68)

விழித்திருக்கும் வேளையிலே விறைந்துறக்கமுண்டாக்கும்
செழித்திலங்கு மான்மாவைத் தேர்ந்தறிநீபுல்லறிவே. (69)

மெய்யிலொருமெய்யாகி மேலாகிக்காலாகிப்
பொய்யிலொரு பொய்யாகும் புலமறிநீபுல்லறிவே. (70)

ஆத்துமத்தின்கூரான அவயவமே யுன்னுடனே
கூத்துபுரிகின்ற கோளறிவாய்ப் புல்லறிவே. (71)

இருட்டறைக்கு நல்விளக்கா யிருக்குமுன்றன்வல்லமையை
அருட்டுறையினிருத்திவிளக் காகுநீபுல்லறிவே. (72)

நல்வழியிற்சென்று நற்பதவியெய்தாமல்
கொல்வழியிற்சென்று குறுகுவதேன் புல்லறிவே. (73)

கைவிளக்குக்கொண்டு கடலில்வீழ்வார்போல
மெய்விளக்குன்னுள்ளிருக்க வீழ்குவதேன்புல்லறிவே. (74)

வாசிக்குமேலான வான்கதியுன்னுள்ளிருக்க
யோசிக்குமேற்கதிதா னுனக்கரிதோ புல்லறிவே. (75)

அன்னையைப்போ லெவ்வுயிரு மன்புடனேகாத்துவரும்
முன்னவனைக்கண்டு முத்தியடைபுல்லறிவே. (76)

சித்தத்தொடு கிளத்தல்.

வேறு சந்தம்.

அஞ்ஞானம் போயிற்றென்று தும்பீபற—பர
மானந்தங்கண்டோமென்று தும்பீபற
மெய்ஞ்ஞானம் வாய்த்ததென்று தும்பீபற-மலை
மேலேறிக்கொண்டோமென்று தும்பீபற (77)

அல்லல்வலையில்லையென்றே தும்பீபற-நிறை
ஆணவங்களற்றேமென்றே தும்பீபற
தொல்லைவினை நீங்கிற்றென்றே தும்பீபற-பரஞ்
சோதியைக் கண்டோமெனத் தும்பீபற. (78)

ஐம்பொறியடங்கினவே தும்பீபற-நிறை
அறிவேபொருளெனவே தும்பீபற
செம்பொருள்கள் வாய்த்தனவே தும்பீபற-ஒரு
தெய்வீகங் கண்டோமென்றே தும்பீபற. (79)

மூவாசை விட்டோமென்றே தும்பீபற-பர
முத்திநிலை சித்தியென்றே தும்பீபற
தேவாசை வைத்தோமென்று தும்பீபற-இந்தச்
செகத்தை யொழித்தோமென்றே தும்பீபற. (80)

பாழ்வெளிநோக்கியே தும்பீபற-மாயைப்
பற்றற்றோமென்றேநீ தும்பீபற
வாழ்விடமொன் றெய்துமனத் தும்பீபற-நிறை
வள்ளல்நிலை சார்ந்தோமெனத் தும்பீபற. (81)

எப்பொருளுங் கனவென்றே தும்பீபற-உல
கெல்லாமழியுமென்றே தும்பீபற
அப்பிலெழுத் துடலென்றே தும்பீபற-என்று
மழிவில்லாதாதியென்று தும்பீபற. (82)

குயிலோடு கிளத்தல்.

கரணங்க ளொருநான்கு மடங்கினவே-செட்டக்
காமமுதலோராறு மொடுங்கினவே
கரணங்களொருநான்குங் கண்டனமென்றே-நிறை
சந்தோஷமாகவே கூவுகுயிலே. (83)

உலகமோக்காளமென் றூதுகுயிலே-எங்க
ளுத்தமனைக் காண்பரிதென் றூதுகுயிலே
பலமதம்பொய்ம்மையென் றூதுகுயிலே-எமு
பவமகன்றிட்டோமென் றூதுகுயிலே. (84)

சாதனங்கள் செய்தவர்கள் சாகார்குயிலே-எல்லாத்
தத்துவங்கள் தேர்ந்தவர்கள் வேகார்குயிலே
மாதவங்கள் போலும்பலன் வாயாக்குயிலே-மூல
மந்திரங்களாலமகிமை வாய்க்குங்குயிலே. (85)

எட்டிரண் டறிந்தோர்க்கிட ரில்லைகுயிலே-மன
மேகாமல்நிற்கில்கதி யெய்துங்குயிலே
நட்டணையச் சார்ந்தறிந்து கொள்ளுங்குயிலே-ஆதி
நாயகனைநினைவில்வைத் தோதுகுயிலே. (86)

மயிலோடுகிளத்தல்.

ஆடுமயிலே நடமாடுமயிலே-எங்கள்
ஆதியணிசேடனைக்க வாடுமயிலே
கூடுபோகுமுன்னங்கதி கொள்ளுமயிலே-என்றுங்
குறையாமல் மோனநெறி கொள்ளுமயிலே. (87)

இல்லறமேயல்லவென் றாடுமயிலே-பத்தி
இல்லவர்க்கு முத்திசித்தி யில்லைமயிலே
நல்லறமே துறவறங் காணுமயிலே-சுத்த
நாதாந்தவெட்டவெளி நாடுமயிலே. (88,

கற்றாரைப் போல்மனதைக் காட்டுமயிலே-வரும்
காலனையுந் தூரத்தி லோட்டுமயிலே
பற்றாடுருவவே பாயுமயிலே-அகப்
பற்றுச்சற் றில்லாமற் பண்ணுமயிலே. (89)

அன்னத்தொடுகிளத்தல்.

கண்ணிகள்.

சிறுதவளை தான்கலக்கிற் சித்திரத்தினிழல்மறையும்
மறுவாயை தான்கலக்கில் மதிமயங்குமடவனமே. (90)
காற்றில்மரமுறியுங் காட்சியைப்போல் நல்லறிவு
தூற்றிவிடிலஞ்ஞானந் தூரப்போமடவனமே. (91)
அக்கினியாற் பஞ்சுபொதி யழிந்திட்ட வாறேபோல்
பக்குநல்லறிவாலே பாவம்போ மடவனமே. (92)
குளவிபுழுவைக்கொணர்ந்து கூட்டிஅருப்படுத்தல்போல்
வளமுடையவுன்மனதை வசப்படுத்து மடவனமே. (93)
அப்புடனே யுப்புச்சேர்ந் தளவுசரியானதுபோல்
ஒப்பறவே பிரமமுட னொன்றிநில்லு மடவனமே. (94)
காய்ந்தஇரும்புநிறங் காட்டுதல்போ லாத்துமத்தை
வாய்ந்திலங்கச்செய்து வளம்பெறுநீ மடவனமே. (95)

புல்லாங்குழலூதல்.

வேறுசந்தம்,

தொல்லைப்பிறவி தொலைக்கார்க்குமுத்திதான்
இல்லையென் றூதுகுழல்-கோனே
இல்லையென் றூதுகுழல். (96)

இந்திரபோகங்க ளெய்தினுந் தொல்லையென்
றந்தமா யூதுகுழல் கோனே
அந்தமா யூதுகுழல். (97)

மோனநிலையினில் முத்தியுண்டாமென்றே
கானமா யூதுகுழல்-கோனே
கானமா யூதுகுழல். (98)

நாய்போற்பொறிகளை நாளுவிதம்விட்டோர்
பேயனென் றூதுகுழல்-கோனே
பேயனென் றூதுகுழல். (99)

ஓடித்திரிவோர்க் குணர்வுகிட்டிடும்படி
சாடியேயூதுகுழல்-கோனே
சாடியேயூதுகுழல். (100)

ஆட்டுக்கூட்டங்களை யண்டும்புலிகளை
ஓட்டியேயூதுகுழல்-கோனே
ஓட்டியேயூதுகுழல். (101)

மட்டிக்குணமுள்ள மாரீசநாய்களைக்
கட்டிவைத்தூ துகுழல்-கோனே
கட்டிவைத்தூ துகுழல். (102)

கட்டாதநாயெல்லாங் காவலுக்கெப்போதும்
கிட்டாதென் றூதுகுழல்-கோனே
கிட்டாதென் றூதுகுழல். (103)

பெட்டியிற்பாம்பெனப் பேய்மனதடங்க
ஒட்டியேயூதுகுழல்-கோனே
ஒட்டியேயூதுகுழல. (104)

ஏனதென் றும்பானென் றுமில்லாதிருக்கவே
தனதாகவூதுகுழல்-கோனே
தனதாகவூதுகுழல். (105)

அற்றவிடமொன்றே யற்றதோடுற்றதைக்
கற்றேனென் றூதுகுழல்-கோனே
கற்றேனென் றூதுகுழல். (106)

பால்கறத்தல்.

வேறு சந்தம்.

சாவாதிருந்திடப் பால்கற சிரம்
தன்னிலிருந்திடும் பால்கற
வேவாதிருந்திடப் பால்கற வெறும்
வெட்டவெளிக்குள்ளே பால்கற (107)

தோயாதிருந்திடும் பால்கற மூன்
தொல்லைவினையறப் பால்கற
வாயாலுமிழ்ந்திடும் பால்கற வெறும்
வயிறுறவுண்டிடப் பால்கற. (108)

நாறாதிருந்திடும் பால்கற நெடு
நாளுமிருந்திடப் பால்கற
மாறாதொழுகிடும் பால்கற தலை
மண்டையில்வளரும் பால்கற. (109)

உலகம்வெறுத்திடும் பால்கற மிக
ஒக்காளமாகியே பால்கற
கலசத்தினுள்விளை பால்கற நிறை
கண்டத்தினுள்விழப் பால்கற. (110)

ஏப்பம்விடாமலே பால்கற வரும்
ஏமன்விலகவே பால்கற
தீப்பொறியோய்ந்திடப் பால்கற பர
சிவத்துடன்சாரவே பால்கற. (111)

அண்ணாவின்மேல்வரும் பால்கற பே
ரண்டத்திலூறிடும் பால்கற
விண்ணூட்டியில்லாத பால்கற தொல்லை
வேதனைகெடவே பால்கற. (112)

கிடைகட்டுதல்.

வேறு சந்தம்

இருவினையாமாடுகளை யேகவிடுகோனே உன்
இடக்குமனமாடொன்றை யடக்கிவிடுகோனே. (113)

சாற்றரியநைட்டிகரே தற்பரத்தைச்சார்வார் நாளும்
தவமவமாய்க்கழிப்பவரே சனனமதில்வருவார். (114)

அகங்காரமாடுகள்மூன் றகற்றிவிடுகோனே நாளும்
அவத்தையெனுமாடைந்தை யடக்கிவிடுகோனே. (115)

ஒருமலத்தையெனுமாட்டை யொதுக்கிச்சுட்டுகோனே உடன்
உறையுமிரு மலந்தனையு மோட்டிக்கட்டுகோனே. (116)

மும்மலத்தையெனுமாட்டை முறுக்கிக்கட்டுக்கோனே. மிக
முக்காலநேர்மையெல்லா முனபறிவாய்கோனே. (117)

இந்திரியத்திரயங்களை யிறுக்கிவிடுகோனே என்றும்
இல்லையென்றேமரணக்குழ லெடுத்தூதுகோனே. (118)

உபாதியெனுமூன்றாட்டை யோட்டிவிடுகோனே உனக்
குள்ளிருகருங்கள்ளமெல்லா மோடிப்போங்கோனே. (119)

முக்காயமாடுகளை முன்னங்கட்டுகோனே இனி
மோசமில்லைநாசமில்லை மூத்தியுண்டாங்கோனே. (120)

கன்மமலமாடுகளைக் கடக்கக்கட்டுக்கோனே மற்றக்
கன்மத்திரயப்பசுவைக் கடையிற்கட்டுகோனே. (121)

காரணகோமூன்றனையுங் கால்பிணிப்பாய்கோனே நல்ல
கைவசமாஞ்சாதனங்கள் கடைப்பிடிப்பாய்கோனே. (122)

வேறுதரு.

பிரமரந்தரத்திற்பே ரொளிகா ணெங்கள்கோனே வாய்
பேசாதிருந்துபெரு நிட்டை சாரெங்கள்கோனே. (123)

சிரமதிற்கமலச்சேவை செரிந்தெங்கள்கோனே முத்தி
சித்திக்குந்தந்திரஞ்சித்தத் தறியெங்கள்கோனே. (124)

விண்ணாடிவஸ்துவை மெய்யறிவிற் காணுங்கோனே என்றும்
மெய்யேமெய்யிற்கொண்டு மெய்யறிவிற்செல்லுங்கோனே. ()

கண்ணாடியுன்னுள்ளே கண்டுபார்த்துக் கொள்ளுங்கோனே-ஞானக்
கண்ணானதிக்கண்ணாடி காணவொண்ணா தெங்கள்கோனே. ()

சூனியமானதைச் சுட்டுவா னெங்குண்டுகோனே புத்தி.
சூக்ஷுமமையதைச் சுட்டுமென்றெண்ணெங்கள் கோனே. (127)

நித்தியமானது கோபடிலே நிலைகோனே என்றும்
நிறகுமென்றேகண்டு நிச்சயங்காணெங்கள்கோனே. (128)

சத்தியும்பரமுந் தன்னுட்கலந்ததேகோனே நிட்டை
சாதிக்கிலிரண்டுந் தன்னுளளே காணலாங்கோனே. (129)

மூகைபோலிருந்து மோனத்தைச் சாதியெங்கள்கோனே பர
மூலநிலைகண்டு முட்டுப்பிறப்பறுகோனே. (130)

இடைக்காட்டுச் சித்தர் பாடல் ௱௩௰,
முற்றிற்று.

மதுரை தலைவிரித்தையா மடம் நரசிங்கஞ்சேர்வைகாரரென்ற கருத்தச்சேர்வைகாரர் அவர்களிடமிருந்த ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

ஐம்பத்திரண்டாவது:

புண்ணாக்குச் சித்தர் திருவாய் மலர்ந்தருளிய

முப்பூச் சுண்ணச் செயநீர்.

ஆதி மயமா மரனார் திருவருள்
சோதி மயமாஞ சோமன் திவலையிற்
போத மயமாம் பூரண நாமம்
நீதி யறியார் நிலவுப்புக் காலே. (1)

காலடி சத்தி வழலையுப் பாகும்
மாலடிசுத்தத் துருசு வெழுக்கும்
வாலையிற செல்லு மெழுபிறப் பப்பா
மாவிந் திரியம் மட்டாச் சரமே. (2)

சரமான சுத்தி சத்திக்கு தப்பா
பரமாஞ் சிவத்துக்குப் பரம விரவியாம்
திரமாம் வழலைச் சென்று மரியார்
அரனும் பரித்த அடியினிற் காணே. (3)

அடியாரு குட னரையிடை கூட்டி
வெடியுப்பு நாலுடன் இந்தொன்று கூட்டித்
திட்ன்புளி நாலுடன் சினமொன் றுக்கிப்
படியே அரைக்கப் பழச்சாறு விட்டே. (4)

சாறுவிட் டேயொரு சாம மரைத்தபின்
மீறிய வில்லை வெயிலவன் கண்டபின்
வீறிடு சித்துக் காடையிற் சுண்ணம்
மூறிடுந் தண்ணீர் சாரத்தைக் கூட்டே. (5)

சாரமொன் றுகத் தயவாய் நொருக்கி
வீரப் பனியி லிருக்கச் செலமாகும்

வாரச் செலத்தின் வளர்பூர மொன்றுக்கும்
வீரமொன் றுக்கும்விள் பத்துக் கொன்றே. (6)

பத்துக் கொன்றாகப் பொடித்திடு பண்பாய்
சித்துக்க ளாடுக் தெருவிற் போனாலும்
மொத்தச் சரக்குக ளெல்லா மொடுக்கிடும்
அத்தமுங் காணு மடியொன்றி னாலே. (7)

ஒன்றான மூலம் வழலையுப் பாகும்
அன்றிச் சிவலை யாரு மறிந்திலர்
குன்றாய் வளருங் கூத்துக் கிதாகும்
நன்றான வாதம் நல்கிடக் காணே. (8)

காணுப் பொருளைக் கண்டவர் ஞானி
பூணு பரணம் பொன்னடி மூலம்
வீணு யிராது வெட்டவெளி காண
வாணுள் பெண்ணுடன் ரண்டும்பே ராமே. (6)

ரண்டான பேரையும் நயமா யறியார்
பெண்டை யறிந்தாலும் பித்தனைக் காணார்
தொண்டன்தான் கண்டாற் சுகசித்த னவான்
எண்டிசை யெல்லா மிருப்பவ னாமே. (10)

இருக்கின்ற சட்டை முனியுமென் மகன்காண்
கருக்குழி வித்தையைக் காட்டினேன் நானே
வெருக்கிய மூலர்க்கும் பிள்ளைக்கும் வழிசொன்னேன்
குரு வெனக்கப்பா நந்தீச ராமே. (11)

ஆமப்பா ஆவியுஞ் சொல்லப் பொருள் கண்டேன்
நாமப்பா கண்டதை நாட்டினேன் பத்தர்க்கு
ஏமப்பா பிழையுங்கோ வென்றுநான் பாடினேன்
வாமப்பா மதியமுதங் கொண்டவர் வாதியே. (12)

வாதந்தான் காண வளர்சத்தி தனக்கும்
நீதியாய்ச் சிதம்பரம் நித்தியல் பூசித்தே
வாதக்கா மிந்த வளர்பூசை செய்திடில்
ஆதி யடிமூல மறிரெண்டுங் காண்பான். (13)

வேறு.

ரெண்டேஆண் பெண்ணேயாகும் நலம்பெறச் சரக்கைக்கொல்லும்
உண்டெனக் குருவைக்காரு வுரையெந்த னூல்தானப்பா
அண்டத்தை நீரதாக்க அருள்குரு முடிக்குஞ்செய்தி
விண்டிட்டேன புவியோர்வாழ்க வேதைகள் சொல்லுவேனே. (14)

சொல்லுவேன் கருவைக்கேளு தாணிப்புள்ள சிவத்தின் சுண்ணம்
சொல்லுவேன் கறுநீரலே தூடிகெடி ரெண்டுசாமம்
சொல்லுவேன ஆட்டிவில்லை சூட்டிக்கக் கெசபுடத்திற்
சொல்லுவேன் சுண்ணமாச்சு இடையினிற் சொல்லக்கேளே. (15)

கேளப்பா கல்லுப்பைத்தான் கெடியாகச் சுண்ணம்பண்ண
வாளப்பா ரெண்டுசாம மாட்டியே வில்லைசெய்து
சூளப்பா ரவியிற்காணத் தோய்ந்தபின் கெசபுடத்தில்
ஆளப்பா வுப்புச்சுண்ணம அரகரா குருவாணுரே. (16)

குருகரி யுப்புச்சுண்ணங் கூர்கில வுப்புச்சுண்ணம்
அருளடிச் சுண்ணகூட னரியதோர் சீனக்காரம்
சரியிடை யாகத்தாககித் தானதை யாட்டிநன்றாய்ப்
பருதியிற் காய்ந்தபின்பு பருவில்லை யாகக்கூட்டே. (17)

கூட்டியே வில்லையாக்கிக் குக்குடப் புடமேபோடத்
தீட்டிய சுண்ணமப்பா சிறந்ததோர் சுண்ணத்தோடே
ஆட்டிடச் சாரம்நாலுக் கொன்றிட்டு வைக்கச்சேநீர்
ஊட்டிட வீரம்பூரம் உரமொடு பொடித்துப்போடே. (18)

போட்டபின் னிந்தநீரைப் பூரத்திலாட்டி நன்றாய்
ஆட்டியீ ரேழுசாமம் அப்பனே அரைத்துவில்லை
சூட்டியே ரவியிற்கண்டாற் சுண்ணமா மூன்றுநாளில்
நீட்டியே சிப்பிதன்னில் நிசமதா யடைததுவையே. (19)

வையப்பா சிலைமண்தான் வளமதாய்ச் செய்துகொண்டு
செய்யப்பா காடையிற்றான் திடமுள்ள சுண்ணமாகும்
மெய்யப்பா செயநீருக்கு வீரத்தை மட்டாய்ப்பாதி
அய்யப்பா சரக்கையெல்லாம் அதட்டியே கொன்றுபோடும். (20)

கொன்றிடும் பூரத்தண்ணீர் கொடுத்ததோர் வீரத்தாட்டி
நன்றிடுந் துருசுககப்பி நாலுநா ளறுநீர்சூத்தித்

துன்றிடு மஞ்சாம்காளிற் சார்குரு புடத்திற்போட
நன்றிகொள் துருசுச்சுண்ணம் நல்லதோர் சிங்கிக்காமே. (21)

சிங்கியாக் துருசுச்சுண்ணஞ் செயநீரு வைத்தபின்பு
எங்குள்ள சரக்குக்கட்டு மிசைந்ததோர் மெழுகுமாகும்
அங்குள்ள சுண்ணமெல்லாம் ஊதிடச்சுண்ண மாமே
வங்கத்தி லப்புச்சுண்ணம் வகையுடன் நிமிளைக்கப்பே, (22)

காணலாங் காரசாரச் சுண்ணத்தைக் காய்ந்ததப்பு
ஊணவே ஊதச்சத்து யியமா யுருகும்பாரு
மேனியாம் தாரச்சத்து யியமா யுருகுமப்பா
வானியா மடையனீய மப்படியண்டமீயம். (23)

ஈயந்தான் சிப்பியீயம் பாசாண மீயமாகும்
ஈயந்தான் லோகமப்பா ஏமமு மீயமாகும்
ஈயந்தா னெட்டுமீய மட்டமிக் கிண்ணமாச்சு
ஈயந்தான் கிண்ணந்தன்னிற் சரக்கெல்லாஞ் சணத்திற்கட்டும். (24)

கட்டியசரக்கை யெல்லாம் கிண்ணத்திற் சாரநீரிற்
றிட்டமா யெட்டெட்டுள்ள சரக்கெல்லா மெழுகதாகும்
அட்டலோகங்கள் வேதை யறுபத்தி நாலுபேரும்
இட்டறுபத்துநாலு மெழுகெல்லாஞ் சரியாய்த்தூக்கே. (25)

தூக்கியே துருசுங்கூட்டிப் பீங்கானில் வைக்கநீராம்
போக்கினி லாரார்சொல்வார் புகழ்பெற்ற நீரின்போக்குத்
தாக்குள்ள மலையும்பொன்னுஞ் சதபேதி ராசபேதி
ஆக்கிய நீரினாலே அண்டமுந் தண்ணீராமே. (26)

தண்ணியாந் தங்கமெல்லாந் தண்ணியாம் வேதைகோடி
மண்ணில்லை மரமுமில்லை மலைகளும் பொன்னாய்ப்போகும்
கண்ணினாற் பார்க்கலாகா காயந்த வேதையப்பா
வண்ணமாய்க் கேட்கவேதை பார்க்கவே மனத்திற்செல்லே. (27)

செல்லப்பா வாதங்காணச் சிரத்துட னமுதங்கொள்வாய்
அல்லப்பா பகலுமில்லை அரனிவ னாகுமப்பா
வெல்லப்பா காயசித்தி சடலத்தைச் சுத்தியேது
வல்லமை கற்பங்கொள்வாய் வளர்கின்ற கற்பந்தானே. (28)

வேறு.

கற்பமேது கர்பமேது காசினியிற் பத்தரே
அற்பமேது சத்தசாக ரங்களேது காணவே
வெற்பமிப்ப தேதடா விளங்குபத்தரேதடா
வற்பமான தெய்வடா வண்டர்நெஞ் சறியவே. (29)

நெஞ்சமேது அங்கமேது நிலையிருந்த தேதடா
கொஞ்சு பெண்களேதடா குறிப்பறியா மட்டையா
வஞ்சியர்தன் னல்குலேது மானமேது நாரியர்
கொஞ்சவாச லானது குடிகெடுக்குங் குழியிதே. (30)

சிந்து.

குழியை நம்பாதே பானக்
குழியை நம்பாதே (பானக்குழியை)
குழியிதான கிட்டிக்கம்பு கொண்டுகை நெருக்கிய
குழியை வாய்த்திரியும் பத்தர் குறிப்பறியா மட்டைகாள். (குழியை)

செத்துக்கெட்டுப் போனவுடல் சிலகாலங்கள் வாழ்வது
ஒத்துப்புணர் பெண்ணாசைகொண்டு ஒகிரியிதே சிவனேது
உத்துணர்ந்து பாரடா உண்மையான மூலத்தை
பத்தரென்ற பேர்களேது பாருலகில் மயங்கியே, (32)

ஓடுகின்ற சிவனேது உத்துணர்ந்து பாரடா
நாடுகின்ற நரகமேது சொர்க்கமேது நல்வினை
தேடுகின்ற தீவினைதா னேதடா செகத்திலே
மூடஞானி ஞானிகாள் முக்கிய மிகுதியே. (33)

முயக்கிய பூலோகமு முற்றியென்பார் செற்றவர்
மெய்க்குளாம் பிதிர்க்களேது விண்புலம்பு மட்டைகாள்
கைக்குள்வெண்ணெ யிருக்கிறதோர் காயமொன்று மறிவிலார்
சயக்கிய சங்காத்தமேது தீர்த்தமேது ஞானியே. (34)

ஞானிஞானி நானென்பான் நற்சடல மறிகிலான்
மானிபங்க ளேதடா மாநிலங்க ளேதடா
மேனியாவ தேதடா மின்னார்கொங்கை மீறியே
தானவனு யிருந்தவர்கள் தானுணற மீறுமே. (35)

மீறுகின்ற சடலமதில் மேவுஞ்சதை யேதடா
ஊறியே பருத்தகொங்கை யுனுத்தரை மயக்கவே
கூறுள்ள மெய்யிலேதான் பருத்ததோர் சிலந்திதான்
நீறியோர் பிதிங்கிருய நிலையிருந்த மகிமையோ. (36)

மகிமையான தேவரேது வல்லமைக ளேதடா
மகிமையான முனிவரேது ரிஷிகளேது கற்பத்தால்
மகிமையாவ தேதடா மற்றதெல்லாஞ் செத்தது
மகிமையாகும் வாதமும் மருளநின்ற வண்ணமே. (37)

வண்ணமானஜீவசெந்து மார்க்கமாவ தேதடா
எண்ணமான விருக்ஷமேது யெல்லாங் கற்பமாகுதே
பண்ணமானதேவர்களும் பாரில்வந்து வாழ்பவர்
எணணியமித் தேவரும்பர் என்னும்வாத திண்ணமே. (38)

என்றுசொல்லி விளங்கவேஇராமாயாண மென்றுமே
கன்றெனப் புராணகாவி யங்களான சோதிசம்
மன்றுள்ளோர் மயங்கவே வாவிடுத்த திக்கெல்லாம்
என்றுமேசா காதபுத்தி யென்பதேயுன் யோகமே. (39)

யோகமும் அறியவேணும் உற்பன மிருக்கவேணும்
ஆகமுந் தியானமு மறிந்துணர்வர் ஞானமாம்
யோகவஸ் திவனென யிருக்கலாமென் றெனக்குத்தான்
மோகமே தவிர்த்துஞான யோகமீறும் பாரிலே, (40)

பாரிலே பிறந்திருக்கப் பாரமில்லை யப்பனே
சீருடன் துறவிலே சென்றிருப்ப தருமைகாண்
ஏருலவு சத்திபாத மிணைபுரிந் திரியடா
காருலவு பூரணங் கண்டசெய்தி யுண்மையே. (41)

உண்மையான வழலையுப்பு உத்தபூ மகத்துவம்
உண்மைகறி யுப்புடன் உருசையை யறிந்தவர்
அண்ணலாங் குருவெனக்கு அண்டநீர் மகத்துவம்
வண்ணமான ரண்டுபேரும் வாய்திறக்க நீதியோ. (42)

நீதியான பூரணம் நிலையறிந்தோன் வாசியாம்
ஆதிமூல மடியடா அருளிருந்த சத்தியாம்

சோதியாங் குருக்களும் கருக்களும் வெளியதாய்
வாதமே பொய்யாதடா மகிழ்ந்துபாரு சத்தியே. (43)

சத்தியா மடியடா தனக்குப்போம் பூரணம்
உத்ததோ ரிக்துப்புடன் உணர்வழலை யுப்படா
சித்தியான போதமே சிறந்திருக்கு மாகநீர்
முத்திபெற்ற போதிலே முப்புமறி வார்களே. (44)

முப்புவு முடிந்தபின் முதல்வனை சிவனடா
அப்புவளர் போதிலே அடக்கலாகு சாக்கெலாம்
ஒப்பமான அண்டத்தி லொடுக்கியயென் னுலப்பா
அப்பனே கருக்கிருக்கண் டானவாறு சத்தியே. (45)

புண்ணாக்குச்சித்தர் மீப்பூச் சுண்ணச் சேயநீர் சரு.

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் க. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

ஐம்பத்துமூன்றாவது:

புண்ணாக்குச்சித்தர்பாடல்

தேவிமனோன்மணியாள் திருப்பாதங்காணவென்று
தாவித்திரிந்தேனே ஞானம்மா
சரணஞ்சரணமென்றே. (1)

அஞ்ஞானமுங்கடந்து அறிவைமிகச்செலுத்தி
மெய்ஞ்ஞானங்கண்டுகொண்டால் ஞானம்மா
விலையிலாரத்தினமடி. (2)

முட்டையினுள்ளே முழுக்குஞ்சிருப்பதுபோல்
சட்டையாந்தேகத்துள்ளே ஞானம்மா
தானுயிருநிற்பதடி. (3)

விட்டகுறைவாராமல் மெய்ஞ்ஞானந்தோராமல்
தொட்டகுறையானதினால் ஞானம்மா
தோன்றுமெய்ஞ்ஞானமடி. (4)

தம்முளறியாமல் சகத்தைத்தெரியாமல்
சம்சாரமெய்யென்று ஞானம்மா
சாகரத்திலேயுழல்வார். (5)

இஷ்டர்க்குபதேசம் எந்நாளுஞ்சொல்லிடலாம்
துஷ்டர்க்குபதேசம் ஞானம்மா
சொன்னால்வருமோசம். (6)

முத்திபெறுவதற்கு முதலாய்நினைத்தவர்க்கும்
நித்திரையும்விட்டு ஞானம்மா
நினைவோடிருக்கணுமே. (7)

நினைவைக்கனவாக நீயெண்ணியேபார்க்கில்
சினமாய் வருமெமனும் ஞானம்மா
தெண்டனிட்டுப் போவானே. (8)

யோகவிளக்கொளியா லுண்மைதெரியாமல்
மோகமெனுங் குழியில் ஞானம்மா
மூழ்கியே போறார்கள். (9)

சாஸ்திரங்கற்றறியாச் சாமியார் தானுகி
ஆஸ்திதேடநினைத்து ஞானம்மா
அலைவார வெகுகோடி. (10)

பூச்சும்வெறும் பேச்சும் பூசையுங்கைவீச்சும்
ஏச்சுக்கிடந்தானே ஞானம்மா
ஏதொன்று மில்லையடி. (11)

பிணத்தையலங்கரித்து பெண்கள்தலைவிரித்து
கணக்கைத் தெரியாமல் ஞானம்மா
கலங்கியழுதாரடி. (12)

மேளங்கள்போடுவதும் வெகுபேர்கள்கூடுவதும்
நாளையெண்ணுமலல்லோ ஞானம்மா
நலிந்தேயழுவாரடி. (13)

கோவணமுமிரவல் கொண்டதூலமிரவல்
தேவமாதாமிரவல் ஞானம்மா
தெரியாதலைவாரே. (14)

செத்தவரைமயானஞ் சேர்க்கும்வரையில்ஞானம்
உத்தமர்போலப் பேசி ஞானம்மா
உலகிற்றிரிவாரடி. (15)

காட்டிலிருந்தாலுங் கனகதவஞ்செய்தாலும்
காட்டுங்குருவில்லாமல் ஞானம்மா
கண்டறியலாகாதே. (16)

நல்லவெளிச்சமது ஞானவெளிச்சமது
மில்லாவெளிச்சமது ஞானம்மா
மினவெளிச்சமடி. (17)

சம்சாரமென்றுஞ் சாகரமாமென்றும்
இம்சையடைவோர்கள் ஞானம்மா
யிருந்துபயனுவதென்ன. (18)

காத்தடைத்து வந்ததிது கசுமாலப்பாண்டமிது
ஊத்தச்சடலமிது ஞானம்மா
உப்பிலாப்பொய்க்கூடு. (19)

அஞ்சுபேர்கூடி யரசாளவேதேடி
சஞ்சாரஞ்செய்ய ஞானம்மா
தானமைத்த பொய்க்கூடே. (20)

புண்ணாக்குச்சித்தர் பாடல் உம

முற்றிற்று.

மதுரையைச்சேர்ந்த சாமநத்தம் கிராமம் மடத்திலிருக்கும் செல்லச்சாமியா ரவர்களிடம் வாங்கிய ஓலையேட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

ஐம்பத்து நான்காவது:

கோங்கணர் திருவாய் மலர்ந்தருளிய

சூட்ச தெரிசன ஞானம் கூ.

சொல்லுகிறேன் சூட்சத்தின் மகிமைகேளு
சுருதிவழிக் கெட்டாத சூட்சமப்பா
வெல்லுவையோ சொல்லுதற்குப் பிள்ளாய்பிள்ளாய்
வேதாந்த சித்தாந்தப் பரையினுள்ளே
அல்லுபக லற்றமகா மேருநுனியுச்சி
ஆதித்தன் மதியுதித்த பரவெளிக்குள்
நில்லுமயிர்ப் பாலம்கெருபீ பாறுக்கப்பால்
நேர்பரத்து அகாரநடுக் கொம்புதானே. (1)

கொம்புநுனி மேலேதான் வளைத்தாற்போலக்
குவிந்தமுனை முக்கோணக் கதவுமயிரளவு
சம்புபதந் தூக்கிநின் றுடுமென்று
சாற்றினேன் மனமுன்னி யறியமைந்தா
இன்பமற அங்கென்றே சுடரிருக்கி
இறையளவு கதவுபிரட் டிருத்தியூனி
அம்மெனவும் சுடர்க்கலையை யேத்தும்போது
அரகரா வெனமுழங்கும் நடனங்காணே. (2)

காணுவது ஆதித்தன் மதிமுழக்கம்
கதவடைத்து ஏறினவர் கழிவார்தானும்
பூணுவது மண்டலங்கள் மூன்றுக்கப்பால்
புரியுஞ்சா க்ரங்கணீர் கணீரென்றோசை
தோணுவது மதிமுழக்கங் கண்டுதேரு
சூட்சமதிற் சூட்சநடம் புரிந்துமப்பால்
ஆணுமது பெண்ணுமது ரெண்டுமற்ற
ஆக்கினையி லெல்லையெனும் வாசல்தானே. (3)

எல்லையெனும் வாசலுக்கு அடையாளங்கேள்
இருபுறமுங் கூடவெளி வேறாணு
அல்லும்பக லற்றவெளி தொட்டிட்டாட்டும்
அடையாளம் முனைமேலோ ரங்குலத்தில்
சல்லையற்ற கலைகாலுங் கட்டிநின்ற
சற்குருவும் பராபரமாய் நிறைந்தசோதி
வல்லவர்கள் கண்டிருப்பார் சொல்லாரென்றே
மைந்தனே நாசிநுனி நடுவேகும்பே. (4)

கும்பித்து வோங்கையிலே யமுதஞ்சிந்தும்
கொடிதான ஜீவனல்லோ திரட்டுவார்பார்
நம்பிக்கை யாத்தாளே அமுதமீய்வாள்
நலமாகத் திரட்டுவாள் பரத்தில்வாழப்
பம்பூத்த நேர்பரத்தின் வழியேபாயும்
பரிவாக நந்தியின்மே லறுகோணத்தில்
ரெம்பித் துவாரவெளிக் குள்ளேபுக்கும்.
நேராகச் சிகாயமென்று நிலைத்திடாயே. (5)

நிலைக்குநில்லு சுழிமுனையை கட்டநின்றாய்
நேராகத் துவாரத்திற் பளிச்சென்றாற்போல்
இலைக்குறட்டால் யேறுகத்தித் தங்கக்கம்பி
யெழும்புமப்பா பளிச்சென்றே பிரகாசிக்கும்
துலைக்குலையால் நிலைக்குவந்து அமுதமுண்ணும்
சோதியாம் பராபரத்தின் செயலென்றெண்ணு
மலைக்காதி யந்தமில்லா இடத்தமர்ந்து
மகிழ்ந்துநிற்போர் கட்டிநின்ற இடந்தான்காணே. (6)

கொங்கணர் சூட்ச தெரிசன ஞானம் ௬.

முற்றிற்று.

வேதாரண்யம் ஸ்ரீலஸ்ரீ சிவராஜயோகி மௌனகுருசாமியவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது

உ

குருவே துணை.

ஐம்பத்தைந்தாவது:

கொங்கணர் திருவாய் மலர்ந்தருளிய

திருமந்திர ஞானம் ௰௨.

மூலத்தே அவ்வுமென்று முன்னேவூணு
முனைகண்டா லங்கென்று பின்னேவூனு
காலத்தே பளிசசென்றுற சிங்கென்றாணு
கைமுறைதான் மூன்றுவகை காணுங்காணும்
தாலத்தே மின்னலுட னொளிபோற்காணும்
தயங்காதே மனமுள்ளே சாரவூனு
ஆலத்தே வுண்டசிவன் முககண்போல
அடங்காத தீபவொளி யழுத்திப்பாரே. (1)

அழுத்தியங்கே பளிச்செனப் பேரண்டத்தூது
அப்பனே சித்தித்தால் சத்தியாச்சு
வழுத்தியங்கே கும்பகமாம் முனைகோணூது
வாயங்கே மவுனமா மாயைபோகும்
கொழுத்தியங்கே சமைப்பதற்கு தீயும்வேண்டாம்
கூரான சிகாரத்தை யூதுபத்தும் !
சுழுத்தியங்கே நெடும்பாதை யோடியாடச்
சொல்லார்க ளிம்முறையைச் சூட்டிப்பாரே. (2)

சூட்டியங்கே பார்ப்பதற்கு வகையைக்கேளு
சொல்லுகிறேன் பேய்மக்காள் சும்மாவல்ல
ஆட்டியங்கே யிடகலையிற் பூரித்தப்பா
அடைவாக மூலத்தே நினைவாய்க்கும்பி
நீட்டியங்கே பிங்கலையி னுள்ளேரேசி
நேராக மெள்ளமெள்ள யேத்திவாசீ
பூட்டியங்கே உரைத்தாக்கால் நாடிசுத்தி
புகழான வாதபித்தம் வாய்வுபோமே. (3)

போமப்பா மூன்றுவகை நோயும்வெந்து
புகழான காயமுந்தா னிருக்கும்மெத்த
வேமப்பா நல்வினைதீ வினையும்நீறும்
விதமான வைம்புலனும் விரைந்துபோகும்
ஓமப்பா ஓங்காரம் நாதமேலே
ஒருகோடி ரவிபோல ஒளகுமோங்கும்
ஆமப்பா இப்படியே கண்டேன் கண்டேன்
அப்பனே நீங்களுமிப் படிதான்பாரே. (4)

பார்க்கையிலே அவ்வென்று லுவ்வும்கூடும்
பரவியதோர் மகாரத்திற் சேருங்காலம்
ஏர்க்கையிலே உகாரமாய் மேலேயேறும
யிதுகாணும் பிரசாத வித்தைமார்க்கம்
ஆர்க்கையிலே பளிச்சென்று நநதிகாணும்
அப்பனே யிதினோடே வாசிசேரும்
சேர்க்கையிலே அகாரமுடன் மகாரத்தோடு
சிறககவே வாசிரெண்டும் நாதவிந்தே. (5)

நாதமும்விந் தெனவேவா சிக்குப்பேரு
நலம்பெரிய ரவிமதியு மதற்குப்பேரு
வாதமென்றுஞ் சித்தியென்று மதற்குப்பேரு
மருவியதோர் சிவசத்தி யதற்குப்பேரு
போதமென்று மனமென்று மதற்குப்பேரு
பூமியென்றும் விண்ணென்று மதற்குப்பேரு
ஆதியென்றும் அந்தமென்று மதற்குப்பேரு
அருளொளியாய் நின்றதிது ரெண்டுந்தானே. (6)

நின்றான வெழுத்திரண்டு மொன்றாய்க்கூட்ட
நிலையில்லை கலையில்லை நேசமில்லை
ஒன்றான மனமில்லை யொன்றுமில்லை
ஓகோகோ தாழ்வில்லை யுயரமில்லை
கன்றான வெளியில்லை ஒளியுமில்லை
காண்பதுவுங் காணாது மிரண்டுமில்லை
மண்ணான முதறகொண்டு விண்ணுமில்லை
மாசியில்லை தேசியில்லை மதித்திலேனே. (7)

மதியத்து நிதியத்து மனமுமத்து
மருவியதோர் யோகமத்து ஞானமத்து
கொதியத்து கூச்சமத்து லெச்சையத்து
கூடுவதுங் கூடாது மிரண்டுமத்து
பதியத்து போதமத்து பறப்புமத்து
பாழ்வெளிக்குள் முடிவத்துப் பார்ப்பதத்து
உதியத்து ஒடுக்கமத்து வொன்றாய்நின்ற
உத்தமனே யொருபொருளை யுணர்ந்திலேனே. (8)

உணர்வத்து அறிவத்து பொறியுமத்து
ஒன்றென்ற சொல்லத்து ஒன்றுமத்து
பணர்வத்து கெற்பமத்து காய்பூவத்து
பதிந்துநின்ற வேரத்துப் பறப்புமத்து
சுணர்வத்து சூக்ஷமத்து ஜோதியத்து
சுத்தவெளிக் காடுமத்து அலியுமத்து
எணர்வத்த தேதோதான் யானும்காணேன்
யென்மக்காள் ரிஷிகள்சித்த ரியம்பினாரே. (9)

இயம்பரிதாம் பூரணத்தி லடுத்தால்ஞானம்
யிதுக்குமக்காள் கரையில்லை லக்கமில்லை
இயம்பரிதாம் போதமென்பா ரதுவேதென்றால்
யெம்மட்டோ கண்மட்டுக் கெய்தாதென்பார்
இயம்பரிதாம் நிறந்தரந்தா னென்பார்வல்லோர்
என்னவென்று லென்னமோ யென்பாரய்யோ
இயம்பரிதாம் நிர்மலத்தைக் கண்காண்பாரோ
யேதுபோ பேச்சல்ல வென்றுசொல்லே. (10)

சொல்லான சத்தியப்பா யுப்புக்கொப்பும்
சொற்பெரிய யீசனப்பா பூரம்பூரம்
வல்லான தாருசியப்பா மாயைமாயை
மருவியதோர் காரமப்பா யீசனீசன்
கல்லான சத்தியப்பா சாரம்சாரம்
கடியதொரு சூடனப்பா யீசனீசன்
வல்லான ரெண்டினங்கள் வாசியாச்சு
மக்களே சிவசத்தி சுண்ணம்பண்ணே. (11)

பண்ணியதோ ரிரண்டுசுண்ண மொன்றாய்க்கூட்டி
பச்சையிட்டு அறைக்கச்சூ தத்தைக்கொல்லும்
ஒண்ணியதோர் சூதமதைஒண்ணோ டொண்ணு
ஓகோகோ நிஷ்களதேதோ டொக்குமொக்கும்
புண்ணியமாந் தேகமொத்த சீஷனால்
பொருளருளும் கைவசமாய்ப் புகழ்ந்துபாரு
அண்ணியமாய் முன்சொனமித் திரதுக்கொப்பாய்
அறைந்திட்டேன் வேதாந்த மறைந்திட்டேனே. (12)

கொங்கணர் திருமந்திர ஞானம் ௰௨.

முற்றிற்று.

மதுரை திண்டுக்கல் ரோட் பட்டாளம் பெருமாள்நாயுடு அவர்கள் குமாரர் பாலையநாயுடு அவர்களிடமிருந்த ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

ஐம்பத்தாறுவது:

கோங்கணர் திருவாய் மலர்ந்தருளிய

மெய்ஞ்ஞானம் ம்ரு.

ஆமப்பா பிரிதிவியின் கூத்தைத்தள்ளி
அப்பனே அப்புவதன் கூத்தைத்தள்ளி
ஓமப்பா அக்கினியின் கூத்தைத்தளளி
உத்தமனே வாயுவின்கூ ரொக்கத்தள்ளி
சேமப்பா ஆகாசத் தஞ்சுந்தள்ளி
திருந்தவே அறிவுநா மென்றேயெண்ணி
வாபப்பா அஞ்சுவகைக் காரமெல்லாம்
மக்களே நமக்கில்லை யென்றுதள்ளே. (1)

தள்ளப்பா திடமாக வூணிநின்று
தானே நா னுயிருந்து நாமேயென்று
அள்ளபபா அமுதசுக வமுதந்தானும்
அபபனே பொசித்துநின்று சமாதிமூட்டு
விள்ளப்பா தீதுமில்லை பாவமில்லை
விதியில்லை மதியில்லை விரிந்துயேறு
பள்ளப்பா படிநின்ற ஜெனங்களபோல
பலகாலந் திரியாதே பாத்திலூணே. (2)

ஊணப்பா வொன்றுமில்லை யெல்லாம்பொய்யே
உததமனே மனவாக்குககாயமிலலை
தோணப்பா வெகநேர முரைத்துநின்று
சுகமாகச் சமசாட்சி ரூபந்தானய்
விணப்பா மறறசாஸ் திரங்களெல்லாம்
வேதாந்த சாஸ்திரத்திற கொவ்வாதப்பா
ஆணப்பா பெண்ணுமில்லை யெல்லாமகாமே
அகண்டத்தின் மகிமைசொல்ல அடங்காதெண்ணே. (3)

அடக்காது அடங்காது உலகமாயை
அப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
திடங்காணப் பொருந்திநின்ற பெரியோர்பாதம்
தினந்தினமும் பூசைசெய்து திருவேயென்று
செடங்காணத் திருக்கண்ட ஆகமத்திற்
சிக்கவதி லேசமத்துக காமமத்துக்
குடம்போல விகாரமத்துக் குரோதமத்துக்
கூகூகூ லோபமத்து மோகந்தள்ளே. (4)

தள்ளப்பா மதமொடுமாச் சரியந்தானும்
சாதகமா யிரிளையும் சூதையப்பா
விள்ளப்பா டம்பமொடு தர்ப்பந்தானும்
விதமான ஆகாரங் கூடத்தள்ளு
கள்ளப்பா கொண்டிருந்த மயக்கம்போலே
கலந்தவிந்தப் பதிமூணுங் காலனுமே
உள்ளப்பா விதையறிந்து யெல்லாந்தள்ளி
ஒகோகோ சாத்திகத்தில் நின்றிடாயே. (5)

நின்றாக்கால் பிறப்புமில்லை யிறப்புமில்லை
நேரான துயரமில்லை பாசமில்லை
மன்றப்பா நல்வினைதீ வினையுமில்லை
மகத்தான பூரணந்தான் நோக்கமாகும்
குன்றப்பா யிருந்தாலென் கிருந்தாலென்ன
கூறுகப் பதிமூணுந் தள்ளவேணும்
பன்றப்பா பழமுறையிற சொன்னமார்க்கம்
பகுத்தறிந்து வுங்களுக்குச் சொன்னேன்பாரே. (6)

பாரப்பா பதினாலு வுலகமாச்சு
பாழான மாயையொடு கருவுமாச்சு
நேரப்பா வெண்ணாசை நிலைத்துப்போச்சு
நிதியான பொன்னாசை மூடிப்போச்சு
காரப்பா மண்ணாசை கட்டிக்கொண்டு
கலக்குதப்பா உலகமெல்லாங் கவிழ்ந்துபாரு
பேரப்பா இதுவென்ற வல்லாரெல்லாம்
புகழாகப் பதிமூணும் அறுப்பார்காணே. (7)

அறுப்பார்கள் வேரோடே பிடுங்கிப்போட்டு
அப்பனே நித்தியமாய் நினைவையெண்ணி
வெறுப்பார்கள் மனைவிமக்கள் சுற்றத்தார்கள்
வீடுநிதி காடுகரை விளைவையெல்லாம்
உறைப்பாக வறிந்துகொண்டு திடமாய்நின்று
ஓகோகோ நிராசையற்றுச் சமாதியற்று
மறைப்பார்கள் பரலோக ஆசையத்து
மகத்தான பூரணத்தைப் பகுத்துப்பாரே. (8)

பகுத்ததனை யொவ்வொன்று யறிந்துதள்ளு
பாங்கான அறிவதிலே தானாய்நின்றால்
வகுத்துவிட்ட கற்பனைகள் மாய்ந்துபோகும்
வளமான நாமமெல்லாம் நாமாய்த்தோன்றி
தொடுத்துநின்ற நாட்டமெல்லாம் வெளியாய்த்தோன்றுஞ்
சுத்தவெளி தானுமொரு கடுகாய்க்காணும்
சகத்திலே சகமிருககச் சகமில்லாப்போற்
சகத்தோன்றிக் குருவின்பா லறிவைப்பாரே. (9)

அறிவைநீ யறிந்தாலே பிறவிபோச்சு
அடுத்தாப்போற் பரமபதம் நிலையதாச்சு
குறிகுணமு மோகமத மெல்லாமபோச்சு
குறித்துநின்ற நினைவெல்லாம் கூடிப்போச்சு
நெறியோடே பிர்மத்தில் நின்றாயானால்
நீயதுவாய்ப் பரமசுகப் பிர்மமாவாய்
வெறியோடே அலையாதே யனலைத்தூரு
வேதார்தப் பூரணத்தில் அமுதமுண்ணே. (10)

உண்ணப்பா நித்தநித்தம் அறிவிலூணி
ஓகோகோ யான்வேறு தேகம்வேறு
மண்ணப்பா பிரிதிவியோ டைந்தும்வேறு
மாமாயை மாகருவி யெல்லாம்வேறு
கண்ணப்பா அறிவறிந்த கண்ணேகண்ணு
கலங்காதே பரத்தூணி கண்டுதேறு
விண்ணப்பா தானாகி நின்றுவாழ்வாய்
விடாதேநீ விடாதேநீ விட்டாற்போச்சே. (11)

போச்சென்று ஞானத்தை விட்டாயானால்
பிறப்பிறப்பு மாயைவந்து சுத்திமீறும்
நீச்சென்ற சமுசாரக் கடலில்வீழ்ந்து
நீயுமே புழுப்புழுவாய்ப் பொன்றிடாதே
தீச்சென்ற திரணம்போல் துரோகந்தள்ளி
தீராத துயரமெல்லாந் தீர்ந்துயேறு
ஆச்சென்ற அச்சணத்தி லறிந்துநில்லு
அப்பனே யென்மக்கா ளறிவுபோச்சே. (12)

போச்சப்பா அறிவதுதா னனைத்தும்போச்சு
புகழான நாமமெல்லாம் பொடியாய்ப்போச்சு
ஆச்சப்பா அண்டமெல்லாம் கடுகாய்ப்போச்சு
அப்பனே பூமியுட வாட்டம்போச்சு
வாச்சப்பா அனைத்துலகு மிழந்துபோச்சு
மகத்தான வறிவுதா னாகின்றால்
பாச்சப்பா மனம்நிறுத்தி தன்னைக்காண
பாங்கான வெட்டவெளி தோர்ந்தங்காண்பாய். (13)

கொங்கணர் மெய்ஞ்ஞானம் ௱ரு,

முற்றிற்று.

அம்மையநாயக்கனூர் சேகரம் சல்லக்குளம் சோதிடம் செ. சோ. சுப்பையாபண்டார மவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

ஐம்பத்தேழாவது:

கோங்கணர் திருவாய்மலர்ந்தருளிய

சுத்த ஞானம் ௰௬.

அரியஅரி யட்சரத்துக் கருத்தமேது
அந்தரங்கம் ஓமென்னும் அருளங்கேது
பிரியதொரு நாமென்னும் பெருமையேது
பேச்சரிய அவ்வென்னும் பொங்கமேது
உரியதொரு உவ்வெனனும் உண்மையேது
ஓங்காரறீங்கார யெழுத்தங்கேது
அரியதொரு நமசிவய அருளங்கேது
அந்தரங்க வுண்மைதனை யறிவாராரோ. (1)

செப்பினேன் மனத்தாலே தவமுமாச்சு
சேரவிழ லாவதுவும் மனமேயாச்சு
ஒப்பினேன் மாயமெல்லாம் மவுனமாச்சு
ஓகோகோ சஞ்சலத்தால் மனம்பேயாச்சு
அப்புநீ ருப்பதுபோல மனமேசென்று
அகண்டத்திற் சேர்ந்துதென்றா லதுதான்போதங்
கொப்புநேர் மனம்விட்டால் மவுனம்போச்சுக்
கொளகியிந்த நூலைவிட்டால் ஞானம்போச்சே. (2)

போச்சென்று விடுகாதே மவுனமார்க்கம்
புகழ்மூல ரணைப்புத்தி புள்ளானென்றார்
மூச்செனற பிராணாயம் முன்னேபண்ணு
முதிர்ந்தபின்பு செய்கின்ற முயற்சிகேளு
வாச்சுதென்றால் மூலத்தே அகாரமீசன்
மருவிநினறால் உகாரமது சத்தியாச்சு
கூச்சென்று மிரண்டுமொன்றாய்க் கூடநாதன்
குறியொத்த மவுனமிது கூடுகூடே. (3)

கூடப்பா மூலத்தே முந்திமுந்திக்
குறையாமற் பளிச்சென்று லிங்கங்காணும்
நீடப்பா லிங்கமது நந்திநந்தி
நேராக வெட்டிதழும் விரிந்துகாணும்
ஊடப்பா விதையொட்டிச் சுழியினூடே
ஓகோகோ அனுகதத்தில் மவுனமொட்டு
தோடப்பா வசைந்துநின்ற மவுனத்தாலே
சோமசடை அசைந்தாட நடனமபாரே. (4)

பாரப்பா யொட்டியாக் கினையினுள்ளே
பதறாமல் மவுனத்தைத் தாககிநன்றாய்
நேரப்பா சதாசிவனும் நடனஞ்செய்வார்
நிலையான சிவகாமி யிருந்துபார்ப்பாள்
காரப்பா அவ்விடத்தே நித்தநித்தம்
காத்தாககால் அம்பலத்திற் கனியலாகும்
சேரப்பா அதைவிட்டு அறிவின்மூலம்
சேர்ந்தேற வரிசைபின்னஞ் செப்புவேனே. (5)

செப்புவே னறிவுக்கு மவுனமுன்னிச்
சேர்ந்துமலந் தேறுமட்டுந் திறமாய்நில்லு
செப்புவே னென்னவென்று லெளிதோமைந்தா
சேர்கிறதும் தவிர்கிறதும் இதுக்குட்பாரு
செப்புவே னறிவினுட் மூலங்கண்டால்
தேகமது கற்பூர தேகமாச்சு
செப்புவே னுலயத்துட் சிவன்தான்வந்து
திரட்டியன்னங் கொடுக்கையிலே யுண்ணலாமே. (6)

உண்ணலா மென்றுசொல்லி யண்ணருண்டார்
ஓகோகோ நானுமந்தப் படியேயுண்டேன்
அண்ணலார் நாயனந்தப் படியேயுண்டார்
ஆச்சரியம் ஐநூற்றெண் பத்தேழ்வார்சு
கண்ணலாம மனம்படைத்த மாணுகேளாய்க்
கரையேறப் போவதெப்போ கலந்துநீங்கள்
விண்ணெலாம் ஒளிவாச்சு உலாவலாச்சு
விரைந்தோர்க்கு மவுனமென்ற யேணிதானே. (7)

தானென்ற வேணிவித்தை பத்தாந்தீட்சை
சாதகமா யுலகந்தோர் காணார்காணா
பானென்ற மதுவையுண்பார் பூசைசெய்வார்
பலபலவாய் மந்திரத்தைச் செபிப்பார்பாவி
கோனென்ற குருககாணா பொருளுங்காணார்
குவிந்தவிடஞ் சுகங்காணார் குருட்டுவாமி
வானென்ற யிடமெல்லா வாமபீடம்
வாங்கையிலே யானந்த மறிவித்தேனே. (8)

அறிவாவ தேதென்னில் மைந்தாகேளு
ஆருமல்ல ஆருமல்ல ஆத்தாளாத்தாள்
பிரிவாக வதுகடந்தா லகண்டமப்பன்
பெயரென்ன சொல்வேனான் பேணிக்கூடு
அறிவாகக் கூடாட்டால் வாதசித்திக்
கலந்தல்லோ வெகுசனங்கள் மலைந்துபோனார்
நெறியாகச் சொல்லிவந்தேன் காண்டந்தோறும்
நேரான காட்சியிலே மவுனந்தானே. (9)

மவுனமுண்ண மவுனமுண்ண மவுனமொன்று
மகத்தான பூரணந்தான் சொல்லக்கேளு
மவுனமுண்ண மவுனமுண்ண மவுனமாகும்
மாசறற மவுனமது வந்துதோன்றும்
மவுனமுண்ண மவுனமுண்ண மவுனந்தோன்றும்
வளமான ஞானமுத்தி வழியுங்கண்டு
மவுனமுண்ண வரிசையது மக்காள்கேளு
வாய்மூடி வாங்கிநிற்கும் மவுனங்காணே. (10)

காணப்பா மவுனத்தி லடைந்தபேர்கள்
கைக்கெட்டாத் தீபமபோ லொளியாய்க்காணும்
பூணப்பா அறிவினுள்ளே யடைந்தபேர்கள்
புகழான ரவிபோலே கோடாகோடி
ஓணப்பா வண்டகத்தி லடைந்தபேர்கள்
ஒருகோடி ரவிமதியும் வன்னிபோலாம்
தோணப்பா தோன்றும்நா தாக்கள்சோதி
சொற்பெரிய பூரணத்தின் சோதிதானே. (11)

தானென்ற பூரணஞ்சோ தியைத்தான்நோக்கச்
சமாதியுள்ளே யிருந்துரைத்த பிலத்தினாலே
வானென்ற வெளியாம்நா தாக்கள்காந்தி
வாய்திறந்து சொல்லாத ரகசியந்தான்
கோனென்ற யெனையீன்ற நாதனசொன்னார்
குலாவியந்தப் படிசென்று யானுங்கண்டேன்
ஊனென்ற உடம்பெடுத்த மானுக்காகேள்
உன்னியுன்னி யுரைத்துநித்த மோங்கிடீரே. (12)

ஓங்கிடீ ரோங்கிடீர் மவுனம்பூட்டி
ஒகோகோ தேகமுந்திரோ தாயியில்லை
தேங்கிடீர் தேங்கிடீர் மவுனமுண்ணச்
சித்தியில்லை சத்தியில்லை சேரவொன்றாய்
வாங்கிடீர் வாஙகிடீர் கெவுனவீதி
மாசற்ற வொளிதோணும் நாதங்கேட்கும்
தூங்கிடீர் தூங்கிடீர் நாதத்துள்ளே
சுத்தசை தன்யத்தின் தூக்கங்காணே. (13)

சுாணப்பா யிதையொட்டி யோகம்பார்த்துக்
கரையேறற சமுத்திரத்தின் தவளைபோலப்
பூணப்பா யிதைவிட்டு ஞானம்பார்த்தால்
புனிதனே மனக்குரங்கு யிழுத்துச்சண்ணும்
தோணப்பா வதினாலே காண்டாந்தோறும்
சொல்லிவந்தேன் சொல்லிவந்தேன் மவுனமொன்று
தூணப்பா திரும்பாகும மவுனயோகம்
சூட்சத்தை யறியாட்டால் ஞானம்போச்சே. (14)

போச்சென்று போகாம லடியேன்சொன்னேன்
புகழுற்ற பெரியோரே கோபம்வேண்டாம்
ஆச்சென்று முதற்காண்ட மடியேன்சொன்னேன்
அரும்பொருளே தப்புகிலும் அடிமைமேலே
மாச்சென்று கோபம்வந்தால் மைந்தாவென்று
மகத்தான கருணையினால் மாற்றுமாற்று
ஓச்சென்று யின்னாலா லுரைத்ததாமம்
ஓங்கியதோர் மனிதருக்குக் குருவுமாச்சே. (15)

குருபதத்தைப் போற்றியிரு பதியிலொன்றிக்
கூறுன பதியிலேழு வரையும்போற்றிக்
கருவுரைத்த சித்தர்களைத் தினந்துதித்துக்
கரைகண்ட பெரியோர்கள் பதம்பணிந்து
திருவுரைத்த இந்நூலைப் பார்த்தோரெல்லாம
சிவயோகத் தவதேக சித்தியாகிப்
பரவுகின்ற நாளில்பரா பரமுமாவார்
பாடியதோர் முதற்காண்டப் பாவுமுற்றே. (16)

கொங்கணர் சுத்த ஞானம் ௰௬
முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் க. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை.

ஐம்பத்தெட்டாவது

கொங்கணர் திருவாய் மலர்ந்தருளிய

உற்பத்தி ஞானம் உக.

ஒன்றான கயிலைபரம் பரையில்வந்தே
உதித்ததிரு மூலர்குரு பதத்தைப்போற்றி
நன்றான காலாங்கி பாதம்போற்றி
நல்முற்ற போகர்திருப் பாதம்போற்றி
கன்றான கடம்செனித்த விந்தை சொல்வேன்
கருதிக்கேள் காரணத்தைக் கருணனந்தா
தொன்றான பிருதிவியாம் நாதத்துள்ளே
தோன்றுஞ்சுக் கிலமாகுஞ் சலந்தான்கேளே. (1)

கேளப்பா ஆன்மாவாம் வாய்வுகூடிக்
கெடியான சித்தவா காசம்பொங்கி
வேளப்பா ஆங்காரஞ் சிகாரமிஞ்சி
மேவுதற்குப் பெண்மேலே மோகமாகும்
நாளப்பா அஞ்சுக்கும் பலமேதென்றால்
நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
தாளப்பா மனத்தோடே பிராணன்கூடும்
தனியான பிராணத்தி லபானன்றானே. (2)

தானென்ற விந்துவிலே சமானன்கூடும்
தனியான சித்தத்தில் வியானன்கூடும்
கானென்ற ஆங்கார கெர்ச்சிப்போடே
கலந்துநிற்கும் உதானனப்பா கண்டுகொள்ளு
வேனென்ற பத்துமொன்றாய் மனதிற்கூடி
மேவியவன் கலந்துவிந்து விடும்போதப்பா
மானென்ற மவுனபர வசமேயாவான்
மருவியதோர் பெண்ணுக்கும் முறைதான்காணே. (3)

முறையாகப் பெண்ணாணும் மவுனமுற்றால்
மோசமில்லை கெற்பமங்கே தரிக்கும்பாரு
நிறையாக வலத்தோடில் ஆணே ஆகும்
நேராக இடத்தோடிற் பெண்ணே ஆகும்
குறையாகச் சுக்கிலங்கெற் பத்திற்பாயில்
குணமான சுரோணிதந்தான் சுருண்டுகொள்ளும்
கறையாகப் பரந்தவெளி தமருமபோலக்
களக்கொடிக்காய் போற்றிரண்டு சிரசுமாமே. (4)

ஆமப்பா சிரசோடே கையுங்காலும்
அப்பனே தத்துவங்கள் நரம்புச்சென்மம்
ஓமப்பா அஸ்திமுதல் ரோமததோடு
உத்தமனே பதினொன்று வாசல்காணும்
காமப்பா விழுந்தவழி சிரசினோடே
கைமுறைதா யுண்ட அன்ன நீரேசெல்லும்
சேமப்பா நடுமையத் தொப்புளோடே
சென்றதெல்லாம் மலமாகக் கக்குந்தானே. (5)

தானென்ற பதினொன்றற் சடந்தான்முன்னே
சாதகமாய்த் தொடுத்துவரும் மலடெவ்வாறு
ஊனென்ற பெண்ணுக்கு மனதுவேறாய்
உருக்கமுற்று மவுனமுண்ணாப் பாவத்தாலே
கானென்ற மலடாவாள் புருடனுக்குக்
கைமுறைதா னிவ்வகைநீ கண்டுகொள்ளு
தேனென்ற மொழியுடைய வாலைசொன்னாள்
செகமெல்லா மிப்படியே செனித்தவாறே. (6)

வாறான மவுனமென்ன மனத்தாயப்பா
மருவியதோ ரிஷ்டன்மகா விராட்டனென்றும்
தாறான சடமாச்சு அண்டமாச்சு
சாதகமாய் புவனமொடு பதமுமாச்சு
கூறான வுன்மனத்தாய் ஆடுங்கூத்து
கொள்கியிவள் வரைக்குமைந்தாய்ப் பிறப்பிறப்பும்
மாறான தைக்கடந்தால் வாமபோதம்
மைந்தனே பனிரண்டாம் வரையிதாமே. (7)

வரைகண்டு சுகித்தவனே ஞானமூர்த்தி
மகத்தான அம்மகந்தான் சீவன்முத்தன்
நிரைகண்டு மனேலகிக்கச் சொன்னயோகி
நேரான யோகங்கீழ் கிரியையோர்கள்
திரைகண்டு விராட்டன்கீழ் சரியையோர்கள்
செப்புகிறேன் தினங்கீழே விவேகத்தோர்கள்
அரைகண்டு அறுவரையின் மேலேசாய்ப்பாய்
அஞ்சுவரைக் குள்ளதுவும் மனுஷர்தானே. (8)

தானென்ற நால்வரையிற் காட்டில்வாழ்வோர்
தனித்தமூன் றுக்குள்மிரு கங்களாகும்
கானென்ற இரண்டுக்குள் பட்சிசென்மம்
கலந்தொன் றுள் ளூர்வனந்தா பரமுமாகும்
தேனென்ற உமைகேட்க யீசன்சொன்னுர்
செகமெல்லாம் பதினென்றும் வரையிலொன்றும்
பானென்ற பன்னிரண்டே அறிவசர்போதம்
பரிவான வுற்பனத்தைப் பகர்ந்துகாணே. (9)

காணப்பா மேல்தொடுத்துக் கீழ்வாய்சொன்னேன்
கைமுறையாம் பிண்டத்தி லாறுதலஞ்சத்தி
பூணப்பா அண்டத்திப் படியேகாணும்
புகழான புவனத்திப் படியேகாணும்
ஊணப்பா பாதமிப் படியேகாணும்
உற்பனந்தா னுன்மனதாய் உயர்ந்தகூத்து
தோணப்பா யிதுகடந்தா லறிவாம்போதம்
சுருக்குமெத்தச் சுருக்குமெத்தச் சொல்லுவேனே. (10)

சொல்லுகிறேன் மனங்கடந்து அறிவிற்சேர
சொற்பனமென் பாரையோ மக்காள்மக்காள்
மல்லுகிறேன் மலைகளிலே சருக்குமாகில்
வரிசையாய்த் தேடெண்ணெய் யூட்டிக்கூடில்
செல்லுகிறே னென்றுபெரு விரலையூணிச்
செல்லையிலே விழுந்துழன்ற திரமதொக்கும்
வெல்லுகிறேன் எறவா சனைகீழ்நோக்க
வேடிக்கை மெத்தவங்கே விரைந்துகூடே. (11)

கூடரிது சுந்தரானந்தரகேளு
கூடினர் கொள்ளையிட்டா ரகண்டவீதி
ஆடரிது யென்றுசொன்னீர் கண்டமூர்த்தி
அடியேன்க ளேறுதற்கெப் படிநீர்சொல்லும்
மூடரிது உலகத்தோர் ஞானமபார்த்தால்
முன்பிறவி தன்பிறவி யென்றுந்தோணுச்
சூடரிது வாமியென்றால் வஸ்துகல்ப்பம்
சுகமாகக் கொண்டுநித்தம் அறிவான்பாரே. (12)

பாரப்பா வாமியென்றால் அறிவில்வாழ்வார்
பாங்கான சித்தனென்று லகண்டஞ்சேர்வார்
நேரப்பா யிருந்துரைத்துக் கண்டபேர்கள்
நிகழுமொரு அகண்டவரை தழுவுவார்கள்
காரப்பா குளிகையிட்டு அகண்டவீதி
காத்துரைத்த அகண்டவரை காணுங்காணும்
தேரப்பா சொன்னேனுன் ஞானபேர்கருச்
சேர்ந்துமுதற் சிவனுட மூத்திகேளே. (13)

கேளப்பா நாதாக்கள் சமாதிவிட்டு
கெடியாக நடக்கையிலே பூடுமுதற்புற்கள்
தாளப்பா பட்டுடன்நற் சென்மமாகும்
சாதகமாய்ச் சாய்ந்தமரம் கிரியையாகும்
நீளப்பா பழங்கொடுத்த மரந்தான்யோகி
நேராகப் பட்சியொடு மிருகமெல்லாம்
ஆளப்பா அர்ச்சனைநா தாக்கள்கொண்டால்
ஆகாரம் மனோமணியை அடுக்குந்தானே. (14)

தானென்ற பரமறியான் மிலேச்சாளெல்லாம்
சாதகமாய் கெவுனிகருக் கவளமீய்ந்தால்
வானென்ற வெளிகடந்து அறிவிற்சேர
மறுஜென்மம் எடுத்துமுத்தி சேரும்சேரும்
கானென்ற கிரியைதிரி சென்மம்யோகி
கைமுறையாய் மூன்றுசென்மம் யோகந்தாண்டி
கோனென்ற ஞானத்திற் கொழுகுவார்கள்
குறிப்பான பதினொன்று வரைசொன்னேனே. (15)

சொன்னதொரு யோகமொடு ஞானமார்க்கம்
சூட்சமெல்லாஞ் சொல்லுகிறேன் சுந்தராகேள்
பன்னதொரு சடத்தினுள்ளே மூலந்தொட்டு
பருந்தாறு சகரத்தைப் பார்த்துயோகி
கன்னதொரு மதியமுத முண்டுதேங்கி
கலந்துநின்ற மயககத்தை ஞானமென்பார்
என்னவினி யென்னிலிது வல்லமைந்தா
இதன்மேலே மனதுக்கு ஆறுதலங்கேளே. (16)

கேளப்பா புருவமையம் மதியின்வீடு
கெடியான சகஸ்திரந்தான் விந்துமூலம்
ஆளப்பா ஷலைமேல்நா தாககள்காந்தி
அவ்வளவும் மனதுக்கு ஆறுதலமாச்சு
கீளப்பா அதின்மேலே அறிவின்மூலம்
கோராக வெளியொன்று ஒளிதானென்று
சூளப்பா காந்தியொன்று ரவிதானென்று
சொல்லடங்கா நாதமென்ற சொரூபியொன்றே. (17)

ஒன்றான சொரூபத்தில் மூலங்கேளு
உற்றமதி கோடியைப்போற் காந்திகாணும்
தொன்றான கனல்கோடி போலாம்ரெண்டு
சொன்முறையாம் ரவிகோடி போலாம்மூன்று
நன்றான மூன்றுமொன்றாய்க் கூடிப்போனால்
நலமாகக் காணுமப்பா நாலாம்வீதி
பன்றான அஞ்சேது நாதவொலிசொல்லப்
பார்த்துழன்றேன் பார்த்துழன்றேன் திரும்பினேனே.(18)

திரும்பினேன் அப்புறந்தா னேதோயேதோ
சிவன்சொல்லுஞ் சாஸ்திரத்தி லெங்குங்காணேன்
விரும்பினே னகண்டத்திற் சொக்கினோர்கள்
மேன்மையாம் சமாதிவிட்டுப் பசித்துதானால்
இரும்புநேர் சுயம்பான லிங்கந்தோறும்
எத்துமப்பா பெலியிட்டு எந்தன்மக்காள்
அரும்புநேர் சொரூபனேம் பீதுபேரப்பா
அறியாத பிள்ளைகள்தான் மதந்தோர்காணேன். (19)

மத்தாக இருக்கிறதோர் பிள்ளைகட்கு
வருத்திவிப்பீர் வருத்தாட்டால மெத்தக்கொஞ்சம்
சித்தாக ஏமசித்தி ஞானசித்தி
தேகத்திற் காந்திவரக் காயசித்தி
முத்தாகக் குளிகையிட்டுக் கெவுனசித்தி
முத்தலத்தி லானந்தங் கண்டுதாண்டி
ஒத்தாகப் பூரணத்திற்(சிலம்) பொலியைக்காண
ஒருவருக்கு மிடர்வாரா திண்ணந்தானே. (20)

தானென்று சற்குருவாம் போகநாதர்
சாதகமாய்ப் பொருளுக்கு உப்பேயென்றார்
கோனென்று அதைத்தொட்டு மூன்றுகாண்டம்
கூடுகிற மெய்ஞ்ஞான மவுனஞ்சொன்னேன்
வானென்று கடந்துசிலம் பொலியைப்புக்கி
வங்கியங்கே மாறிவந்தேன் மக்காள்மக்காள்
பானென்று ரவிகோடி காந்தியான
பரமகுரு மூலர்பதம் பணிந்தேன்முற்றே. (21)

கோங்கணர் உற்பத்தி ஞானம் உக,
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச்சேர்ந்த தென்கரை வடகரை கோட்டைப் பட்டி நாட்டாண்மை நல்லமநாயுடு அவர்கள் குமாரர் முத்துசாமி நாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

ஐம்பத்தொன்பதாவது:

கொங்கணர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான வெண்பா சகூ.

வெண்பா.

பொங்கு மருள்ஞானம் போதிக்குங் கொங்கணர்தாண்
தங்கியசித் தாந்தத்தை தானுரைக்க—எங்குமுற்ற
தம்பத தடிவாலைத் தாயருளு மோங்காரக்
கும்பத் தடியானே காப்பு. (1)

எட்டவற்கு மெட்டாத வெண்காலுங்கிட்டாத
வட்ட மதிக்கெதிராய் வாராது—விட்ட வெட்டு
வாச லடைத்துவெளி மத்திபத்தி லேயிருக்கு
மீசனடி பெற்றார்க கிது. (2)

காலைப் பிடித்திருந்து கந்தரத்தில் மந்திரத்தை
யோலமிட் டேதினமு முதினாற்—பாலைப்
புசிக்கலாந் தேகமது போகாம லென்றும்
வசிக்கலாங் காணு வகை. (3)

உள்ளே முளைத்த உயர்ந்த பனைபூ லுங்
கள்ளே பொசித்திருக்கக் காயாதே—வெள்ளம்
வருமூ னணைகோத மாட்டாத பேர்க்குக்
கருவுருவு மில்லையே காண். (4)

கொல்ல னுலைமேலே கூத்தாடி தன்மேலே
யில்லனது மேலே யிருக்கிறான்—பொல்லாத
காக்கை யடக்கி கவிலும் படியறிந்தா
லாக்கை யழியா ததது. (5)

அரவா னதைப்பிடித் தாடு மயிலைத்
தரவாளாற் றாவித் தரிக்க—விரவுமருந்
தஞ்சாவூர்க் கோபுரத்தைத் தான்சமைத்த வாசாரி
நெஞ்சில் நினைந்தெக்கால் நில். (6)

வீடுமவ னாகும் வெளியு மவனாகும்
ஓடப் பிடிக்கவவ னெட்டானே—தேடும்
பதிக்கு மவன்பாசம் பற்றறுப்பார் தங்கள்
கெதிக்குமவ னாகுமே கேள். (7)

கூட்டிற் கருக்குருவி கொம்பிற் குதித்தேறி
மூட்டிவிடக் காலை முடக்கினால்—ஆட்டியதோர்
சக்கரமு மேயெய்துந் தன்னையுந் தானறிவன்
இக்கிரகஞ் சித்தி யிது. (8)

தென்னமரத் துச்சியிலே தேங்கா யிருக்கிறதே
என்னமாய் வந்துசுமக் கெய்துமோ—கன்னமிடுங்
கள்ளருட னேதோட்டக் காரனுமே யொன்றானால்
தள்ளுவா ரில்லையுனைத் தான். (9)

ஐவர் சகாயன்வீ டார்க்கு முபகாரி
எய்தான் சமுத்திரைக்கே யெய்துவான்—மெய்தான்
படைப்பவனார் செல்வம் படைப்பவனா ரெங்கும்
படைப்புந் திறப்பு மவன். (10)

சேரகத்துக் குள்ளே திறந்தடைத்த வாசமணி
பூரகத்தே யயறுக்கப் பூரகமாம்—நேரொக்கக்
கும்பித்து ரேசித்துக் கொள்ளும் படியறிந்தால்
தம்பிக்கு மேமதியந் தான். (11)

ஈசுரன்றன் கீழே யிருந்தாக்காற் கண்கட்டி
மீசுரமாஞ் செஞ்சடையின் மேவியது—மேசுரத்தில்
தட்டாணெம் பிட்டான் தலைக்குற்றன் கீழுறுஞ்சி
விட்டிடுவ ரன்பான் வெளி. (12)

பார்கண்டார் கண்டார்கள் பாணியின்பூ மாமலரின்
தார்கண்டா லண்டாது துன்பவினை—சேருசிவ

சூத்திரத்தைப் பார்த்துத் துறைகாண வல்லார்க்கு
வீத்திருக்கத் தோனும் வெளி. (13)

கஞ்சுண்ட செட்டிமகன் கன்றாய் நடுக்கடலில்
அஞ்சுமொரு பத்திலே யாபாரம்—மிஞ்சவொட்டான்
பக்கங் கொடுத்த படிப்படியே வாங்குவான்
செக்கான் முதலுக்குச் செல். (14)

ஆமை கிணற்றி லணில்நுனியின் கொப்பிலே
ஊமை யதைப்பிடிக்க ஒட்டானே—சாமை
யமையாது காத்துறுதி யார்க்குமரி தாகுந்
தமையறிந்தா லொன்றுமிது தான். (15)

வட்ட வெழுத்துவர வாங்கியதை நெட்டெழுத்து
அட்டமா சித்தியுமுண் டாடுதே—கட்ட
நடுவி லொருந்துருவ ராஜ னிருந்து
கடதலையு மொப்பிவிப்பான் காண். (16)

இடுப்புக்கு மேலே யெழுந்தலைக்குங் கீழே
இடுப்பிடத்தில் நீரையதி லேத்து—தொடுத்திட்ட
காலையதில் மாட்டிவிட்டிக் கைமேற் பலன்தோற்றும்
மேலவராய்த் தேடும் விதம். (17)

அத்திக்கு முன்பாக அத்திக்கும் பின்பாக
மத்திபத்திற் குண்டுமணி வாழுதே—சித்திபெறத்
திங்களுக்கோர் பூவைச் சிவனுக்கே யர்ச்சித்தா
லங்க மழியா தது. (18)

வில்லங்க நாணிடைபின் வேதாவி னட்சரத்தாற்
கொல்லங்கே வந்திருந்த கூற்றுவனை—நில்லதிலே
ஆனைகட்டத் தானும் அதுவே கெதியாக
வானமுட்டப் போராய் வரும். (19)

போகுதே யோர்கடகம் போனாலுந் தள்ளுகடை
யாகுதே நாலு மழிர்குதே—யேகாமற்
கேசரத்தின் கால்நடுவங் கேறத்திறமறிந்து
பேசினாற் றேகம் பெலன். (20)

கடதலையிற் சென்றுநிதங் கையாடி வந்தால்
இடபிங் கலையு மிறங்கா—துடையிலே
யெட்டு மிரண்டு மிலிங்கமது தானூற்
கட்டுமே தேகமது காண். (21)

விளிப்பங்கே தூக்கமது மேவுவது மங்கே
களிப்பங்கே காமக் கனிவா—யளிக்க
விருந்ததுவு மங்கேதா னேகமாய் நின்று
பொருந்துவது மங்கே புகல். (22)

தண்ணீர்வி லாங்கு தலைகாட்டும் பாம்புக்கு
விண்ணிலே வால்காட்டும் மீனுக்கு—நண்ணியே
வஞ்சகமே செய்வான் வருங்கருவிக் கூட்டுக்கு
ஞஞ்சிர வாணி யது. (23)

ஆயன் பசுவை யழைக்கவது போய்மீண்டு
மேய்வதுபொன் மேனி விளைபயிரை—வாயாலே
சொல்லாப் பொருளைத் துதித்தின்று போகாது
கல்லாவின் பால்தருமே காண். (24)

இடத்தி விருந்துமே யேத்துவலப் பாகம்
நடத்தையிது பார்க்க நரையா—மடத்திலே
ஆண்டியுந் தாதனு மாகவிரண் டொன்றானூற்
றுண்டும் பரிவராது தான். (25)

பூவி லிளமை புனலிலீ ரெட்டாகும்
மேவுகனல் மின்கால் வெளியாகும்—தாவிய
வானும் புகையாகும் மண்டலங்க ளொன்றாகுந்
தானமறி வார்க்குமது தான். (26)

கன்னி துலாத்தினிடை காண்பதாற் கற்கடகம்
உன்னு மிடபத் துறுமேஷம்—பொன்னின்
வடமாம் விருட்சிகத்தின் வாள்மகரங் கும்பத்
திடமாந் தனுவழியா தே. (27)

துடையடியில் மண்ணதனைத் தோண்டியெலி புக்கா
அடையிடர் பொத்த லறிந்து—புடையார்

பருத்தி தனைத்தின்று பாழாகுதே யுன்
துருத்திபார்த் தூது சுகம். (28)

கட்டாக் குதிரைபெருங் காயக் கடைவழியே
யெட்டுடனே நாலுமா யேகுதே—பொட்டெனவே
ஓடி மறியடா உள்ளே வரவாசி
நாடியதி லேற நலம். (29)

வாய்பிளக்க ரெண்டுமொரு மாவிற் பிளந்தேறீ
நீயாக் குதிரையதி லுண்டாச்சே—சாயாமல்
ஆயக்கால் பத்து அடக்கமதில் நாலுந்
தேயக்கா லக்கால் திறம். (30)

காட்டு முயலுக்கு நாலுகால் நான்பிடித்த
மோட்டு முயலுக்கு மூன்றேகால்—மோட்டுமுயல்
முக்கால் முயலும் முழுமுயலே யானக்கால்
அக்கால் வெளியா மது. (31)

மாதாபி தாவாகி வந்தகுரு தெய்வமுமாய்
நாதாந்த விந்து நடுவாகி—வேதாவின்
ரெண்டை நடுவிருத்தி ரெண்டின்மே லாகவைத்துக்
கொண்டேதக் காணுங் குறிப்பு. (32)

குசவன்மீ காமனையுங் கொல்லாமற் கொல்லப்
புசபலமேற் காற்சூலம் பூட்டி—அசைவான்
உருக்குளியைக் காட்டி யுயிர்வாங்கு மையன்
கருக்குளியில் மீட்டிடுவான் காண். (33)

விண்டவனுங் கண்டிலான் மேலாம் பதத்திருந்து
கண்டவனும் விண்டதுவுங் காணேனே—துண்ட
மதியிலுறு மேலோர வட்டமா மண்டபமோ
துதிசெய் தவனுனேன் சொல். (34)

ஆட்டித் திரிந்தலைந்து அஞ்சு பணங்கொடுத்தாற்
காட்டினேன் ரெண்டு கழிவாச்சு—வீட்டில்
அழியாமல் வைத்த அவமுப் பணமும்
வெளியாகப் போச்சுதே மெய். (35)

அஞ்சுக்குள் ரெண்டை யகத்தார் பெரியோர்கள்
அஞ்சுக்குள் ரெண்டை யகற்றினல்—அஞ்சுக்குட்
காற்றைப் பிடித்துக் கரகத்தி னுள்ளிருத்தி
யேற்றினுற் சித்தா மிது. (36)

தூக்குவீர் மண்ணைத் துரியாதீ தம்மதிலே
தாக்குவீர் காற்சோதி தான்காணும்—நோக்கவுமே
ஒட்டா திருபாம்பை யோர்தலையாய் நீதிருப்பி
விட்டாட்டிற் சித்தாய் விடும். (37)

கேட்டையோ மூலங் கிளர்த்திநின்ற சோதியதைப்
பூட்டிவிடும உத்திரத்தைப் போயூது—காட்டுமது
சித்திரைக்கு மேயனுஷஞ் சேரா திரையிலேயே
முத்திக் கசுபதியே முன். (38)

ஆனி யிருத்துவாய் ஆடிக்குங் கிழாக
வானிபிரட் டாசி வரவைக்கும்—ஊனிலிட்ட
மாசிக்குந் தைகாலம் மார்கழிபைங் கூனிவை
காசியே சித்திரைக்குங் காண். (39)

திருத்துவாய் ஞாயிருடன் திங்களையு மொன்றாய்
இருத்துவாய் செவ்வா யிருக்கும்—பொருத்த
புதனுக்கு நேர்வியாழம் புக்குமே வெள்ளி
பதனஞ் சனியு றுதி பார். (40)

தசமி நவமியாய்ச் சாரேகா தேசி
வசமாய்த் துதிகை வருமே—நிசமாகப்
பஞ்சமி சஷ்டியும் பாரட் டமியோகங்
கஞ்சஞ் சதுர்த்தியுமே கார். (41)

திங்க டனைராகு தீண்டியபின் மோசனமாம்
பொங்குமது நீரிலே போய்மூழ்குஞ்—சங்குமுகத்
தீர்த்தமச டச்சுகிர்தம் சென்மஞ்சா பல்லியமாம்
நீர்த்தா லழிவு நிசம். (42)

நாயமார் சொன்ன நடத்தை யறியாமற்
காயம் பலசரக்காற் கட்டுமோ—தாயிருந்த

வீடு பிடிங்கி வெளிசேர்த்துக் கொள்வார்க்கு
கூடப் பரமாகுங் கூர். (43)

கண்டத்தின் மேலாக் கபாலத்தின் கீழாகத்
துண்டத்தின் மேலாய்த் துலங்குதே—மண்டபத்தில்
வட்டமதி தானும் வயசு கழியாது
அட்டமா சித்து மது. (44)

சுத்தி வருமதியைச் சூரியனுக் குள்ளிருத்தி
நித்தியமும் வந்து நிறுத்தினல்—முத்திதரும்
காம்போதி ராகங் கலைகற்ற வல்லோர்கள்
சாம்பவியுங் கரண்பார்க டான். (45)

சித்தா சனத்திற் சிவலிங்கம் போலிருந்து
வொத்த பொருளை யுணர்வீராய்ச்—சத்தம்
பிறந்திடத்தே நோக்குமே பேரின்ப வீட்டிற்
துறந்தரியஞ் செய்யுந் தொழில். (46)

அன்ன மரையாகும் அப்புக்கால் முன்னுகப்
பொன்னம் பலந்தனிலே போயிருக்கச்—சொன்ன
வுடலை யிருத்தி யுயிரை வருத்தக்
கடல் சுவரும் நந்திவருங் காண். (47)

தள்ளு மபானந் தாக்குஞ் சமரநாள்
கொள்ளுந் துரியக் குரிசிலே—விள்ளரிதாம்
எத்தாப் பிழைக்கவே யெய்தாதொருவருக்கும்
ஒத்தாற் பிழைக்க வுரும். (48)

கூட்ட மணுகாதே கோதயரைச் சேராதே
நாட்டம் நிறுத்தி நடுவணையில்—ஆட்டமது
அகார உகார மனைத்து முடலான
சிகார பதியே சிவம், (49)

கொங்கணர் ஞான வெண்பா சுக,
முற்றிற்று.

மதுரை திண்டுக்கல்ரோட் பாலையநாயுடு அவர்கள் குமாரர் ராமதாசு நாயுடு அவர்கள் ஏட்டுப்பிரதியின்படி அச்சிடலானது.

௨

கடவுள் துணை.

அறுபதாவது:

கோங்கணர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான சைதன்யம் ாயக.

காப்பு.

நேரிசை வெண்பா.

உற்ற பொருளை யொருநூலாய்ச் செய்வதற்குக்
கற்பகத்தின் றாளிணையைக் காப்பென்றிங்—குற்றவர்கள்
பாதமலர் மேற்கொண்டு பாடவொரு பாடுகுரு
நாதனிரு தாளதனை நாடு.

அகண்ட பராபர மான மூலநாத
னடிதொழுது காலாங்கி பாதம்போற்றி
புகன்றுநின்ற போகருட பாதம்போற்றி
புகழ்பெரிய வல்லோர்கள் பாதம்போற்றி
தகன்றுநின்ற சரிதையொடு கிரியையோகந்
தனிப்பெரிய ஞானமொடு நாலுஞ்சொல்வேன்
நிகன்றுநின்ற படிசொல்ல வென்றுறகூடா
கோான பூரணந்தான் நேர்ந்தகாப்பே. (1)

அப்பனே தத்துவத்தைப் பிரித்து நன்றாய்
ஐயைந்தாய்க் கண்டித்து வறியச்சொல்வேன்
அப்பனே தத்துவந்தான் பிறந்துநின்ற
ஆதிமுத லந்தம்வரை தெரியச்சொல்வேன்
அப்பனே சித்தாந்தம் வேதாந்தம் ரெண்டாய்
அறிகிறதோர் தத்துவத்தை வகுத்துச்சொல்வேன்
அப்பனே அஷ்டாங்க முடிவைச் சொல்வேன்
அலையாமல் நாற்பதமும் அறிவிப்பேனே; (2)

அறியவென்றால் வெகுபோக்கு தத்துவமாங்குப்பை
அதைபகற்றி உபநிடத்தி னர்த்தம்பார்த்து
பிரியவென்று லொன்றான வஸ்துக்குள்ளே
பிறந்ததென்ன விரிந்ததென்ன பிரித்துப்பார்த்து
நெறியவென்ற ஆன்மாதா னென்றுகாண
நேராக சாங்கியத்தை அறியவேணும்
தெரியநின்ற சாங்கியத்தை யறிந்தபின்பு
தேகமென்ற சோதனையை யறிந்துபாரே. (3)

பாரப்பா தேகமென்ற சோதனையைக்கண்டால்
பரிவான சீவனொடு ஈசுரனுமாயை
நேரப்பா யிதுமூன்றுந் தெரிந்துபோகும்
நேராகத் தெரிந்தான்மா வதுதானென்று
காரப்பா வேறுநினை வெல்லாம்போக்கிக்
கைமுறையா யனுபோகம் பண்ணப்பண்ண
சேரப்பா ஆன்மாவைப் போலேயாவாய்
தலைவனையுந் தன்னையுந்தா னறியலாமே. (4)

அறிந்தபின்பு ஆன்மாவிற் பிறந்தமாயை
அதினுடைய சொரூபமென்ற ஒளியினுள்ளே
பிரிந்துநின்ற பிரதிவிம்பமீ சுரனுமாச்சுப்
பேரான வீசுரனி லொளிவுண்டாகி
வறிந்துநின்ற சீவனுமா யையோடீசன்
மருவியதோர் சீவன்முதற் சடமென்பார்கள்
தெரிந்துமது வேதென்றாற் பிரபஞ்சமாகி
சேரவிர்த்தி இதில்லயமுஞ சேர்ந்தவாறே. (5)

வாறாக மூன்றுவித மாகநின்று
மருவியந்த மூன்றுக்கும் பிலமேதென்றால்
தாறான ஆன்மாவின் சன்னதிபெலத்தால்
தனிமாயைக் கித்தனைதான் பலமுமாச்சுக்
கூறான மாயையுட பிரகாசமீசன்
கொடியதொரு சீவனைச் சகலமாகி
ஆறாகி யல்லாதாய்ப் பிரபஞ்சமாகி
அப்பனே ஆதிசத்தி விளங்குந்தானே. (6)

தானென்ற சத்தியிலா காயந்தோன்றி
தனிவானில் வாவுவென்ற காலுந்தோன்றி
கோனென்ற வாயுவிலே வன்னிதோன்றிக்
கொடுந்தீயிற் சலந்தோன்றி சலத்தினுள்ளே
கானென்ற பிருதிவியென் னாமமாச்சு
கலந்திந்த வைம்பூதக் கூத்தைக்கேளு
ஆனென்ற ஐயைந்தா யிருபத்தைந்தாய்
அறைகிறே னைந்தையுந்தா னறைகிறேனே. (7)

அறைகிறே னையைந்தாய்த் தேகமாச்சு
அப்பனே யித்தேக மெப்படிதானென்றால்
நிறைகிறேன் தேகத்தின் நிண்ணயத்தைக்கேளு
நேராகச் சொல்லுகிறே னுபாயமெல்லாம்.
முறைகிறேன் ஞாதுருவர் மறிவுக்கப்பால்
முதிர்ந்தறிவுஞ் சமானத்தில் மனதுண்டாச்சு
பறைகிறேன் மனதுக்கும் வியானனுக்கும்
பார்மகனே புத்தியதிற் பிறந்தவாறே. (8)

வாறான புத்திக்கு முதானனுக்கு
மருவியதோர் சித்தமதிற் பிறந்துதப்பா
தாறான சித்தமொடு அபானனுக்குஞ்
சண்டாளக் கோபமங்கே பிறந்துதப்பா
கூறான வாங்காரம் பிராணவாய்வு
கெடியதொரு தேகமங்கே செனித்தவாறும்
வீறான முன்சொன்ன அறிவுமைந்தா
விரிந்தாக்கால் மனமாச்சு விரைந்துகேளே. (9)

கேளப்பா மனம்விரிந்தால் புத்தியாச்சு
கொடியான புத்திநின்று விரிந்துதானால்
நீளப்பா சித்தமென்று சொல்வார்சொல்வார்
நேரான சித்தமங்கே விரிந்துதானால்
ஆளப்பா ஆங்கார மாச்சு ஆச்சு
ஆங்காரம் விரிந்தாக்கால் தேகமாச்சு
தாளப்பா வித்தேகம் பிரபஞ்சமாகி
சகலகுண சகலவர்ண மாச்சுதானே. (10)

காணப்பா முன்சொன்ன அறிவேவமைந்தா
கடியதொரு ஆகாய மந்தாவந்தா
ஊணப்பா வானுக்குள் வானுய்நின் று
வொளியாச்சு அறிவுமைந்தா ஊணிப்பாரு
தோணப்பா வானுக்குள் வாய்வுதோன்றிச்
சுகமான சமானனுந்தான் தோன்றிநிற்கும்
பூணப்பா வானுக்குள் வன்னிதோன்றி
புகழான தோத்திரமுந் தோன்றும்வாரே. (11)

தோன்றியவா னுக்குட்சலத் தோடுசத்தம்
சொல்முறையாய் வானுக்கு பூமிவாக்கு
ஆன்றியதோர் காலுக்கு ளாகாயமனது
அப்பனே வாயுவிலே வியானன்வாய்வு
கான்றியதோர் வாய்விற்கன லோடுதொக்கு
கடுங்கானில் சலமோடு பரிசமாச்சு
பூன்றியவா யுவிற்பூமி பாணிபாதம்
புகழாகச் சொன்னமுறை யறிந்துகொள்ளே. (12)

அறிந்திந்த வக்கினியி லாகாயம்புத்தி
ஆகாவக் கினியில்வாய் வோடுதானன்
பிறிந்துவன் னியில்வன்னி யோடுசட்சு
போான வக்கினியிற் சலமுடனேரூபம்
மறிந்துநின்ற அக்கினியிற் பூமிபாதம்
மருவியதோர் சலத்திலா காயஞ்சித்தம்
கறிந்துநின்ற அப்புவில்வாய் வோடபானன்
கைகடந்த வப்புவன்னி சிங்குவையுமாமே. (13)

ஆமப்பா அப்புவிலப் பொடுரசந்தான்
ஆகாகா அப்புவிலே பூமியோனி
ஓமப்பா பிருதிவியம் பரமாங்கார
மோகோகோ பூமியில்வாய் வொடுபிராணன்
தாமப்பா பிருதிவியாக் கிருணம்வன்னி
தனித்தமண்ணிற் சலத்தோடு கெந்தமாச்சு
வாமப்பா மண்ணுடனே மண்ணுங்கூடில்
மருவிநின்ற வாயுருவா மக்காள்பாரே. (14)

பாரிந்த வைந்தாலே யிருபத்தைந்து
பருவமுடன் தத்துவந்தான பிரித்துச்சொன்னேன்
நேரிந்த யிருபத்து வைந்தேதென்றால்
நேரான வாகாய வாயுவன்னி
காரிந்த சலத்தோடு பூமியைந்துங்
கைமுறையாய்ச் சமானனொடு வியானன்கேளு
ஆரிந்த வுதானனபா னன்பிரானனை.
அப்பனே யிதுவைந்து மறிந்துகொள்ளே. (15)

அறிந்துரைப்பேன் தோத்திரத்தி னோடுதொக்கு
அரியசட்சு சிங்குவையு மாக்கிராணம்
பிறிந்தைந்த தன்றிசத்த மொடுபரிசம்
பேரான ரூபமொடு ரசந்தான்கெந்தி
மறிந்துயி தைந்துமல்லால் வாக்குப்பாத
மருவியதோர் பாணிபா யுருவுங்கேளு
தெறிந்துநின்ற வுபஸ்தமொடு ஐந்துஞ்சொன்னேன்
நேராகத் தத்துவந்தா னிருபத்தைந்தே. (16)

ஐந்தென்ற ஞானந்தோத் திரமாந்தொக்கு
அரியசட்சு சிங்குவையு மாக்கிராணம்
ஐந்தென்ற கருமமெனும் வாக்குப்பாணி
அப்பாபா யுருவதுடன பஷமங்குய்யம்
ஐந்துவை யைந்துதத் துவத்துக்கப்பால்
அப்பனே ஆன்மாவே வஸ்துவாகும்
ஐந்தைந்தாய் நின்றதெல்லா மான்மாவாச்சு
அப்பனே ஆதியொன்று அறிந்துகொள்ளே. (17)

அறிந்தெங்கு மொன்றான வஸ்துவல்லோ
அப்பனே யிரண்டாச்சு அதுமூன்றாச்சு
பிரிந்துமது வைந்தாச்சு யெட்டுமாச்சு
போரகப் பதினேழா யிருபத்தைந்தாய்
மறிந்துமது முப்பத்து ஆறுமாகி
மக்களே தொண்ணூற்று வாறுமாச்சு
தெரிந்துமது சகலமுமாய் ஏகமாகச்
சேர்ந்துமது நித்தியமாய் நின்றவாறே. (18)

வாருக நிர்மலமாய் நிரஞ்சனமுமாகி
மருவியதோர் கிட்களமாய் நிர்கருணமுமாகி
தாருகப் பூரணமா யகண்டமாகி
சகலசெந்து தாபரமுந் தானேதானாய்
கூருகப் பூரணமா யதீதமாகிக
குவிந்தொன்றாய்ப் பின்னொன்று மில்லாதாகிப்
பேருகி வெளியாகி வெளியில்லானாய்ப்
பெருவெளியாய் ஒளிக்குள்ளே ஒளிவுமாச்சே. (19)

ஆச்சப்பா வப்பொருளே யான்றானென்று
அறிந்துகொண்டு நானுமத்து வகண்டமாகி
ஓச்சப்பா யிருப்பார்கள் ரிஷிகள்சித்தர்
உத்தமர்க்கு அடுத்தமுறை யூணிக்கேளு
தோச்சப்பா முன்சொன்ன வஸ்துவைத்தான
சொல்லுவார் பலபலவாய் நாமுஞ்சொல்வோம்
பாச்சப்பா யீசனென்பார் நித்தியனென்பார்
பரிவாக நாதமென்பார் மனதென்பாரே. (20)

பாரப்பா கெகனமென்பார் சத்தமென்பார்
பரிவான நாமமென்பார் புண்ணியமென்பார்
ஓரப்பா வியஷ்டியென்பார் சமஷ்டியென்பார்
உத்தமொரு தத்துவட் சரந்தானென்பார்
காரப்பா வுண்மைமுதற் காரணந்தான்
கைகடந்த யோகமென்பார் சுழுத்தியென்பார்
நேரப்பா லெட்சியமாய் நின்றதென்பார்
நிறைந்துநின்ற தர்ரகமா மென்பார்காணே. (21)

காணப்பா ரேசகமாய்ப் பூரகமுமாகிப்
கதிரொளியாய் நின்றகும் பகமேயென்பார்
ஆணப்பா அநேகவித மாகச்சொன்ன
ஆதியெல்லா மான்மாவி னிடத்தேநின்று
தோணப்பா வெளியாசசு வெளியேதென்றால்
சொற்பெரிய யீசுரர்க்கு நாமமாச்சு
ஊணப்பா யீதிரண்டு யீசுரனுமாய்கை
ஓகோகோ நித்தியமொடு அநித்தியமாச்சே. (22)

ஆச்சப்பா நாதவிந்து வென்பார்கேளு
அப்பனே மனதுபுத்தி யென்பார்கேளு
ஓச்சப்பா சத்தமென்பார் பரிசமென்பார்
ஓகோகோ புண்ணியமும் பாவமென்பர்
வாச்சப்பா நாமமொடு ரூபமென்பார்
வளமான வியஷ்டியொடு சமஷ்டியென்பர்
பாச்சப்பர சத்தோடு சித்ததென்பார்
பரிவான சத்துசர (சொட்) சரமுங்காணே. (23)

காணுநீ அகாரமொடு உகாரமென்பார்
காரணமாங் காரியந்தா னென்றுசொல்வார்
ஊணுநீ ஒன்றென்பா ரிரண்டேதென்பார்
உத்மனே பிரமாணம் பிரத்தியட்சம்
ஆணுநீ சுழுத்தியொடு சொற்பனந்தான்
ஆச்சரியத் தாரகமுஞ் சீவனென்பார்
தாணுநீ கும்பகமும் பூரகந்தான்
சத்தியொடு சிவனின்ற நிலையென்றாரே. (24)

என்றசொல்லு மிரண்டாய்ச் சொல்லப்பட்டு
இருந்ததைநீ கண்டுகொண்டு மூன்றைக்கேளு
அன்றுசொல்ல யீசுரனுஞ் சத்திசிவன்
அப்பனே நாதவிந்து கலையென்றாலும்
பன்றுநின்ற விண்ணோடு வாயுவன்னி
பரிவான சத்தமொடு பரிசரூபம்
நன்றுநன்று நாமமொடு ரூபந்தேகம்
நலமான இம்மூன்றும் நன்றாய்க்கேளே. (25)

கேளப்பா வியஷ்டியொடு சமஷ்டியாகக்
கெடியான பதார்த்தமென்பார் கண்டுகொள்ளு
ஆளப்பா சத்துசித்தா னந்தமென்பார்
அகாரமொடு உகாரமுதல் மகாரமென்பார்
நீளப்பா காரணத்திற் காரியரூபம்
நிலையான சத்தமொடு பரிசரூபம்
வாளப்பா பிரமாணம் பிரத்தியட்சம்
மருவியதோ ரூபமான மென்றுசொல்லே. (26)

சொல்லுவா ரேகமென்றுந் தொய்தமென்பார்
சுகமான திரிபுடியாய் நின்றதென்பார்
மல்லுவார் சுழித்தியொடு சொற்பனமுமாகி
மருவியதோர் சாக்கிரந்தா னென்பார்மைந்தா
அல்லுவார் விலட்சியத்தி லட்சியந்தானென்று
அறிவான லெட்சணந்தா னறிந்துபாரு
சொல்லுவா ரேசகபூ ரகமுங்கும்பம்
செப்பினே னின்னமுண்டு செப்புவேனே. (27)

செப்புகிறேன் வியானனொடு சமானன்கேளு
திறமான உதானனென்று தெரிந்துகொள்ளு
ஒப்புகிறே னிப்படிதான் மும்மூன்றாக
உரைத்ததெல்லா மறிவல்லோ அறிவுமைந்தா
அப்புகிறே னறிவென்றும் அறிவதென்றும்
அறிவிக்கப் படுகிறதுந் திரிபுடியதாச்சு
தப்புகிறே னிதைவிட்டு ஐயைந்தாகச்
சாற்றுகிறேன் சாதகமாய்க் கேளுகேளே. (28)

சாத்துகிறே னறிவோடு மனதுபுத்தி
சாதகமாய்ச் சித்தமாங் காரமைந்து
போத்துகிறேன் சதாசிவனும் மகேசன்ருத்திரன்
புகழாக மாலோடு பிரமனைந்தும
ஆத்துகிறே னார்த்தியொடு பிரியம்பாதி
அப்பனே நாமமொடு ரூபமைந்து
வேத்துகிறே னாகாசம் வாயுவன்னி
வியல்பான சலத்தினொடு பிரிதிவியுமஞ்சே. (29)

அஞ்சாகச் சொல்லுகிறேன் றறியாதீதம்
அப்பனே துரியமொடு சுழுத்திகேளு
பஞ்சாகச் சொற்பனமுஞ சாக்கிரமுமைந்து
பரிவான சமானனொடு வியானன்கேளு
துஞ்சான உதானனபா னன்பிராணன்
சொல்லியது வைத்துமல்லாற் சொல்லக்கேளு
வஞ்சான தோத்திரமுந் தொக்குச்சட்சும்
மருவியதோர் சிங்குவைபாக் கிராணந்தானே. (30)

தானென்ற சத்தமொடு பரிசம்ரூபக்
தணிரசமாங் கெந்திஐந்து சார்ந்துபாரு
வேனென்ற வாக்குடைய பாதம்பாணி
விளங்கியதோர் பாயுருவுங் குய்யமைந்தும்
வானென்ற வசனமொடு கெமனன் தானன்
மருவியதோர் விசர்க்கமா னந்தமைந்து
கோனென்ற யெழுத்தைந்து என்றாலுந்தான்
குறையாமல் ஐயைந்தாய்க் குறித்துக்காணே. (31)

காணப்பா வைந்தாய்நின் றதுதானாறு
கைமுறையா யீசனொடு சிவனுமாச்சு
ஊணப்பா முன்சொன்ன அறிவறிந்த
உத்தமனே யெட்டாகச் சொல்லக்கேளு
தோணப்பா பூமிசலம் அக்கினியும்வாயு
சொற்பெரிய ஆகாய மனமும்புத்தி
ஆணப்பா ஆங்கார மிந்தயெட்டும
ஆச்சரியம் பிரகிருதி நாமமாச்சே. (32)

ஆச்சப்பா பதினேழின் விபரங்கேளு
அப்பனே பஞ்சவிந் திரியமைந்து
ஓச்சப்பா பிராணனொடு சமானனைந்து
உத்தமனே மனம்புத்தி இரண்டுங்கேளு
வாச்சப்பா கனமயிந் திரியமைந்து
வகையான பதினேழுஞ் சூட்சுமலிங்கம்
ஓச்சப்பா சரீரமென் றிதுக்குப்பேரு
உற்றுணர்ந்து பார்த்தவனே யோகியாமே. (33)

ஆமப்பா யிருபத்து ஆறைக்கேளு
ஐம்பூதம் வாயுவைந்து ஞானமைந்து
ஓமப்பா கருமயிந் திரியமைந்து
உத்தமனே அறிவோடாங் காரமைந்து
காமப்பா வெனுஞ்சொல்லற் றிருந்ததொன்று
நலமாக இருபத்து ஆறுங்கேளு
சோமப்பா ஆன்மாவே யென்றுசொல்வார்
சொல்வர்பல பலவாஞ்சாஸ் திரத்திற்கேளே. (34)

சகஸ்திரத்தில் வந்தவகை யிருபத்தாறு
சாதகமாய் முப்பத்து ஆறென்பார்கள்
கோத்திரத்திற பத்தேது வென்றுகேட்டாற்
கொள்கின்ற சத்தமைந்து வசனமிஐந்து
பாதமிரத்தி லாகமைந்தா முப்பத்தாறு
பருவமுட னிதைவிட்டுக் கேளுகேளு :
மாத்திரத்தி லான்மாதத் துவமாமப்பா
வாகாக யிருபத்து நாலுங்காணே. (35)

காணப்பா சிவமாந்தத் துவந்தானைந்து
கைகலந்த வித்தியா தத்துவந்தானேழு
ஆணப்பா ஆகவிது முப்பத்தாறு
ஆனதைவிட்டுத் தொண்ணூற்று ஆறைக்கேளு
தோணப்பா துவாரமது ஒன்பதாச்சு
சுகமான இந்திரியம் பத்துமாச்சு
வீணப்பா விடையமது பத்துமாச்சு
விளங்குதந்த மாத்திரைதான் விடையந்தானே. (36)

தானென்ற ஆதார மாறுமாச்சு
தனிகோச மைந்துமண்ட லந்தான்மூன்று
வானென்ற நாடிபத்து வாயுபத்து
மருவியதோ ரகமெட்டு தாதுவேழு
கானென்ற காணவத்தை நாலுநாலு
கைமுறையா யவத்தைஐந்து குணமோமூன்று
கோனென்ற கோய்மூன்று மலமுமூன்று
கொடியதொரு தொண்ணூற்று ஆறுந்தானே. (37)

தானென்று சித்தாந்தி சொல்வதாகுந்
தயவாக வேதாந்தி சொல்லக்கேளு
கானென்று காண்பதுவு மழியுமையாக்
கருதிப்பார் முன்சொன்ன அறிவுள்விர்த்தி
வானென்று திதியொன்றில் லயமுமாகும்
மருவிநின்ற அறிவுக்குள் பிரிந்துநின்றால்
கோனென்ற லயமாமுன் னறிவுதானும்
கொள்கின்ற ஆன்மாவென் றறிந்துகொள்ளே. (38)

அறிந்துந்தன் மனதையீ சுரனென்றெண்ணு
    வாகாகாச் சமுசயங்க ளில்லையில்லை
மறிந்துநின்று மறிவோடே மனதுகூடி
    மகத்தான பிரபஞ்சம் வளர்ந்ததப்பா
நெறிந்துமனம் போகில்பிர பஞ்சம்போச்சு
    நேரான மனதைமெள்ள லயமேபண்ணு
பிறிந்துநின்ற அறிவல்லோ பிரமமாச்சு
    பேரான வறிவேது அகண்டங்காணே. (39)

காணப்பா அந்தறிவு விண்ணுள் விண்ணாங்
    கடந்துநின்ற வெளிக்குள்ளே வெளியாய்நிற்கும்
ஊணப்பா யிப்படித்தான் தெரிந்தாயானால்
    உலகமெல்லா மாகாய மயமாய்க்காணும்
பூணப்பா இப்படியுன் னறிவேவிண்ணாய்
    புகழ்பெரிய வாகாய மறிவென்றெண்ணி
ஆணப்பா வானந்த மேதோவந்த
    வானந்த மானதுவு மறிவென்றெண்ணே. (40)

எண்ணியதோ ரானந்த மறிவுக்குள்ளே
    இயல்பாக லயமானாற் றுரியாதீதம்
ஒண்ணியதோர் நாதவிந்து வதீதமென்று
    முத்தமனே ஆனந்தா தீதமென்றுங்
கண்ணியதோர் வாக்குமன தில்லாதென்றுங்
    கைகடந்த யறியாத வஸ்துவென்றும்
மண்ணியதோர் காணாத போதமென்று
    மறிவாக வறிந்திருப்பார் பெரியோர்தானே. (41)

பெரியோாக ளாகமத்தைப் பிரட்டிப்பார்த்து
    பேரான வேதாந்த முடிவைப்பார்த்து
பெரியோர்கள் கண்டவர்க்கு யேதுநாமம்
    பேரான சீவன்முத்த ரதீதரென்றும்
பெரியோர்க்கு அமர்ந்தகந்த ரென்றநாமம்
    பேரான ரிஷிமுதலாய் முனிவரெல்லாம்
பெரியோர்கள் சித்தர்திரி மூர்த்தியான
    பேரான தபோதனருந் தேவர்தானே. (42)

தானென்ற யோகிமுதல் மனுஷரெல்லாஞ்
சாதகமாய்ச் சீவன்முத்தர்க் கேவல்செய்வார்
வானென்ற வொளிபார்கக யெளிதோவல்ல
மக்களே யஷ்டாங்க வகையைக்கேளு
கோனென்ற மெய்ஞ்ஞான ரூபமுற்றோர்
கொள்கிமக்கா ளறுபத்து நாலும்பூண்டு
கானென்ற மலைதோறும் சீஷர்வர்க்கம்
கரையில்லை கணக்கில்லை காணுகாணே. (43)

காணப்பா போகருட மரபைக்கேளு
கலந்தயெம கூடமென்ற மலையில்வாசம்
பூணப்பா மூலவர்க்கங் கோடாகோடி
பொற்கிலைபோற் சித்தர்களுங் கோடாகோடி
ஊணப்பா வருணநிறங் கோடாகோடி
யுத்தமனே சங்குநிறங் கோடாகோடி
தோணப்பா மலைதோறுஞ் சித்தர்கோடி
தொகையில்லை புராணத்திற் சொக்கினாரே. (44)

சொக்கியதோர் பருவதத்திற் பதியைவிட்டு
சுகமான வண்ணரைநான் தேடிச்சென்றேன்
மக்கியதோர் சங்குமுகம் வாயுமூலை
மருவியதோர் சுணங்குடைய மரத்தின்கீழே
பக்கியதோர் கொக்கரித்தேன் கற்பைக்கண்டேன்
பாங்காக அவ்விடத்தே யிருந்துவாழ்ந்தேன்
புக்கியதோர் மக்களுக்குச் சாறணையைக்காட்டிப்
புகழான வாயிரந்தான் மணிசெய்தேனே. (45)

மணியிட்டு மக்களைத் திக்கெல்லாம்விட்டேன்
வல்லமையாய்க் ககனத்தூட் ககனந்தாண்டி
அணியிட்டுத் திரிந்தாடி மீளும்போது
வாச்சரியம் ரிஷிகண்டார் பிள்ளையென்ன
தணியிட்ட மூலர்கடைப் பேரனென்றார்
சந்தோஷ முங்களையர் பேரென்னென்றார்
கணியிட்ட வகண்டத்தில் நடனங்கண்ட
கயிலாச கொங்கணர்தா னென்றார்காணே. (46)

காணப்பா மூலவர்க்க மாண்மைமெத்தக்
கைமுறையாய்க் குளிகைசித்தி ஞானசித்தி
பூணப்பா வுதுட்டுமெத்த சுறுக்குமெத்த
வுத்தமனே கயிலைபரம் பரையினாலே
தோணப்பா கேட்டதென்மேற் குற்றங்குற்றஞ்
சொல்சுறுக்சக் கைசுறுக்குத் துடியோமெத்த
ஆணப்பா வேதாந்தமஷ் டாங்கமார்க்கம்
அறிவாயோ வறிந்தாக்காற் சொல்லுசொல்லே. (47)

சொல்லென்று கேட்டவர்க்கு நாவிங்கில்லை
சொக்கினேன் குளிகையிட்ட பசியினாலே
அல்லென்று சொன்னாக்கால் திரும்பிவந்து
அறைகிறேன் கோபத்தை யாறுமாறும்
நில்லென்று சொல்லிவந்தே னகண்டமூர்த்தி
ரோக வஷ்டாங்கம் நிலைக்கச்சொல்வீர்
சொல்லென்று வஷ்டாங்கஞ் செப்பாதேனே
தேசத்தா ரேசுகிறார் செப்பிடீரே. (48)

செப்புகிறேன் சொன்னமுறை தவறாதில்லு
சேர்ந்துநின்ற சாஷ்டியநித் திரையைப்போக்கு
ஒப்புகிறேன் சதாதா ரகத்தில்நின்று
வுரையங்கே கேசரியாம் லட்சியம்பாரு
தப்புகிறே னென்றெண்ணா நித்தம்பாரு
சாதகமாய் விந்துவுன்னைக் கூடிக்கொள்ளும்
நப்புகிறேன் நேமமொடு நேமமைந்தா
நலமான வாசனமும் நாட்டிப்பாரே. (49)

நாட்டியல்லோ பிராணாயம் பிரத்தியாகாரம்
நலமாகத் தாரணையுந் தியானத்தோடு
மூட்டியல்லோ சமாதியொடு வெட்டுங்கேளு
முக்கியமாம் வேதாந்தக் கருவைச்சொல்வேன்
ஆட்டியல்லோ வேமமென்ற கருவைக்கேளு
அப்பனே பத்தையுந்தா னறவேநன்றாய்க்
கூட்டியல்லோ யொறியறிந்த பெரியோர்மைந்தா
கூறுகிற வரிசையைநான் கூறுவேனே. (50)

கூறியதோ ரகண்டமாம் பூரணத்தில்நின்று
குலவியதோ ரான்மாவைப் பரிச்சிக்கின்றாய்
ஆறியதோர் சாதிவர்ணாச் சிரமமெல்லா
மப்பனே விகற்பத்தால் வேற்கூறுக்கி
தேறியதோ ரீங்கிவையை விட்டுவொன்றாய்த்
திறமாக வனுதினஞ்சந் தானஞ்செய்து
மாறியதோ ரிங்கிதோதா னிதுக்குநாமம்
மைந்தனே சத்தியத்தை யறையக்கேளே. (51)

கேளப்பா வான்மாதா னெம்மதத்துங்
கெடியாகக் கண்டிக்கப் படுவதல்ல
ஆளப்பா வாங்கிவையிற் கூடிநின்ற
ஆன்மாவே சொரூபமா யிருக்குஞ்சத்தியம்
நீளப்பா வனுதினஞ் சந்தானம்பண்ணி
நிலைக்கிறதே சத்தியந்தா னோர்ந்துபாரு
வாளப்பா வார்த்திக மறைவேன்கேளு
மகத்தான சரீராதி சுபாவமாசசே. (52)

ஆச்சப்பா வவகரிப்பை விட்டுநின்றால்
லார்த்திக மென்றுசொல்லி யறிந்துகொள்ளு
வாச்சப்பா பிரமமாச் சரியங்கேளு
மருவியதோர் சரீரமது சுபாவமன்றோ
ஓச்சப்பா நானென்ற சொல்லுமற்று
வுத்தமனே லெட்சணமாம் விர்த்திநின்று
வீச்சப்பா பிரமமது சுபாவமாக
விளங்கிநித்தம் பிரமமாச் சரிய (மனது) மாச்சே. (53)

மனத்தாலே தயைசொல்வேன் நன்றாய்க்கேளு
மருவியதோர் சரீரத்தின் வருத்தம்போக்கி
இனத்தாலே சகலசெந்துஞ் சரியாய்ப்பார்த்து
யெளிதாகச் சுபாவவனு போகஞ்செய்தால்
கனத்தாலே கருணைகொண்டாற் றயைபாம்பேரு
கைகடந்த வாட்சேப மறையக்கேளு
தனத்தாலே வேதாந்த மொன்றே செம்மைத்
தனித்தமற்ற நூல்கள்பொய் யென்றுதள்ளே. (54)

தள்ளிநெறி நிற்கவாட் சேபமாச்சு
சாதகமாய்ச் சமயமினி யறையக்கேளு
மள்ளிசுக துக்கஞ்சீ துஷ்டிணங்கள்
மருவியதோர் மானுபி மானம்வந்தந்
தெள்ளியதைச் சொற்பனம்போ லசத்தாயெண்ணிச்
சேராமல் மனதினுள்ளே திறந்துபோட்டு
அள்ளியந்த வகண்டமென்ற தொய்தத்துள்ளே
யப்பனே நிற்கிறது சமையமாச்சே (55)

ஆச்சப்பா திரிதிரைகா னறையக்கேளு
யப்பனே வேதாந்தந் தானேமுத்தி
ஒச்சப்பா மற்றதொன்றால் முத்திஇல்லை
யுபநிடதஞ் சொல்கிறது ரணந்தாமென்று
வாச்சப்பா திடப்பட்டால் திரிதிகாமம்
மருவியதோ ரீதாகார் வர்மங்கேளு
காச்சப்பா சொற்பனம்போ லவத்தைமூன்றில்
காணுகிற வகிலபிர பஞ்சங்காணே (56)

காணப்பா வகிலமெல்லாம் முழுங்கினாலும்
கைகடந்த திரிதிகாரணமே தானாய்
வூணப்பா நானில்லை யகண்டமதான்று
யொத்துநின்ற நிலைமிதா காரமாச்சு
தோணப்பா சவுசமென்ற சொல்லைக்கேளு
சுகமாக வெக்கால மூன்றுக்குள்ளே
ஆணப்பா வந்ததில்லை போனதில்லை,
யாதிநா மென்றுநின்றால் சவுசமாச்சே. (57)

சவுசமொடு பத்தவகை யேமம்பார்த்து
சாதகமாய்ப் பின்கேட்கிற் சொல்லுவேனே
அவுசமொடு தேகத்திற் சரியைகூடுஞ்
யப்பனே பார்க்கையிலுங் கேட்கும்போதும்
நிமிசமுட னினைக்கயிலம் பரம்போற்பாரு
கோராக மூன்றையும்நீ நிலைத்தாயானால்
பவுசமுடன் செகமெல்லாம் நாசமாகிப்
பாழ்மாயை தோணுப்பிர காசமாமே. (58)

ஆமப்பா நேமமத்தை விரித்துச்சொல்வேன்
ஆச்சரியஞ் சத்தியமென் று மித்தையென் றும்
ஓமப்பா நானென் றும் நானென்றதாரு
ஓகோகோ நமக்குவந்த பந்தமேது
வாமப்பா நிரந்தர மாறுய்ந்துபார்த்து
மருவிநின்ற இடமல்லோ தபசுமாச்சு
தாமப்பா பிரமவரை லோகத்துள்ளே
தனித்துநின்ற காமியத்தை நரகமெண்ணே. (59)

எண்ணியந்த வஸ்துவிலே வெறுப்புவந்து
இதமாகச் சொற்பனம்போ லசத்தாகத்தான்
எண்ணியந்த பூரணமே தானுய்க்கண்டு
இயல்பான தடையற்று வடிவமாகி
தண்ணியந்த நிலையேசந் தோஷமென்பார்
சாத்துகிறே ஞாத்தியைத்தான் கண்டுகொள்ளு
பண்ணியந்தக் குருசொல்லும் வேதாந்தத்தைப்
பரிவாக லெட்சியமாம் பூரணந்தான்முன்றே. (60)

மூன்றான பொருளையுண்மை யென்றுநம்பு
முயற்சித்து யிருக்கிறதே யார்த்தியென்பார்
நீன்றான தானமென்ன சொல்லக்கேளு
நிலைத்துநின்ற குருவருளாற் போதமென்று
கான்றான மூத்தனுய்ப் பொருளையெல்லாம்
கைமுறையாய் தெட்சணை தான் கொடுத்துத்தானம்
ஆன்றான யீசுரர்க்குப் பூசைசொல்வேன்
அப்பனே தன்தேகஞ் சுகம்போலெண்ணே (61)

எண்ணுமக்காள் சகலதுக்க மதனிநோடு
இயல்பான இடுக்கமெல்லாந் தனக்குப்போல
பண்ணுமக்காள் திருததிபெத்தா லீசுரர்க்குப்பூசை
பாங்கறிந்து கொள்ளுசிர வணமுஞ்சொல்வேன்
கண்ணுமக்காள் பலபலதாம் நூலைவிட்டு
கைமுறையாய்ப் பிரவிர்த்தி யெல்லாம்நீக்கி
தண்ணுமக்காள் தன்னிழற்போல் குருவைக்காத்துச்
சாதகமாய்ப் பூரணம்போல் தானுய்நில்லே. (62)

நில்லென்ற வுபநிடத்து வர்க்கத்துள்ளே
நிற்கிறதே சிரவணமா மென்றுசொல்வார்
அல்லென்ற லெச்சையினி சொல்லக்கேளு
அப்பனே வேதாந்தத் தத்துவத்தைவிட்டு
மல்லென்ற வாசனைதான் றுடர்ந்துவந்து
மருவியதோர் புத்திரகளத் திரமாம்பாசம்
சொல்லென்று பற்றுவந்தால் அலட்சியித்து
சுகமாக யதையழித்துச் சுருதிநில்லே. (63)

நிற்கிறது லெச்சையெனச் சொல்லுவார்கள்
நிலையான மதியையான் சொல்லககேளு
அற்கிறதோர் வேதாந்த சரத்துக்குள்ளே
அகண்டத்தில் தினந்தோறு மாசைகொண்டால்
தற்கிறதோர் சிவமேது தானேபிர்மம்
சாதகமாய்க் குருசொன்ன வுபதேசம்போல்
கற்கிறதோர் வேதாந்தப் பாடம்பார்த்து
கைவிட்டால் மற்றதெல்லாஞ் சிவமுமாச்சே. (64)

ஆச்சப்பா விரதத்தைச் சொல்லக்கேளு
அப்பனே யென்னகாரி யந்தான்வந்தும்
ஓச்சப்பா துக்கத்தால் நாமேபிர்மம்
உத்தமனே லெட்சணமாம் விர்த்திநின்று
ஆச்சப்பா தவறுட்டால் விரதநாமம்
அப்பனே இருபத்து முன்னேபார்த்து
மூச்சப்பா முன்சொல்லா காயந்தோன்றில்
முன்வெளியே சாட்சியென்றுஞ் சொரூபந்தானே, (65)

சொரூபமென்ற சாட்சியே பரத்வமாச்சு
சுகமாக குறையத்து சந்தோஷமாகி
அரூபமென்ற ஆனமாவில் சிகாரமுண்டா
மப்பனே யிருக்கிறது நேமமாச்சு
பருவமென்ற விருபதையு மனுஷ்டித்தாக்கால்
பாங்காக திடப்படுகு மனந்தான்மைந்தா
கருவமென்ற சுவரிலாச்சித் திரத்தைப்போலுங்
கைவிட்ட பதுமையைப்போல் கலங்குந்தானே. (66)

தானென்ற வாசனத்தைச் சொலலக்கேளு
தனக்கேத்த படிசுகா சனத்திருந்து
வானென்ற வேதாந்தம் பார்க்கக்கேளு
மருவியதோர் வஸ்துவிலே நிராசையாகி
வேனென்ற வெளியாகப் பார்ப்பதாலே
மேவியதோர் பதார்த்தமெலாம் நிராசையாகும்
கோனென்ற வாசனந்தா னிதுவாமைந்தா
குலாவியினிப் பிராணுபக் குணத்தைக்கேளே. (67)

கேளப்பா ரேசிக்கில் மவுனமொட்டுக்
கெடியாக பூரிக்கி லறிவேபூரி
ஆளப்பா வகண்டத்திற் கும்பந்தானுய்
அகிலமொன்று மில்லையா காயமப்பா
வேளப்பா வெளிக்குள்ளே யொன்றுமில்லை
வேறெங்கே பார்ப்பதினி யென்றுவொன்ருய்
நாளப்பா தினந்தோறும் பண்ணப்பண்ண
நலமான பிராணுய மகண்டமாமே. (68)

ஆமப்பா பிரத்தியா காரஞ்சொல்வே
னந்தமென்ற காரணம்பிர பஞ்சத்துள்ளே
ஓமப்பா வஸ்துவைத்தான் சங்கியாமல்
உத்தமனே ஞானமென்ற மார்க்கத்தூடி
தாமப்பா வயிரமொட்டிக் கரணம்நீக்கி
சகலமுந்தான் நாதம்போற் பாருபாரு
சோமப்பா கருமமெல்லாந் தள்ளிப்போட்டு
சுகமான வேதாந்தச் சாட்சிகானே. (69)

சாட்சியென்று நிரந்தரமு முரைத்துநின்று
சகலமெல்லா மித்தையென்று தள்ளிப்போட்டு
ஆச்சியென்று யென்னேரம் நினைவிலநின்று
அப்பனே பிரவிர்த்தி நிவர்த்திபண்ணி
காட்சியென்ற சித்தமது சாந்தமாகிக்
கைமுறையாய்க கூடியொன்றி லேகமாகி
மாட்சியென்ற பேதமற்றுற் பிரத்தியாகாரம்
வநததுகது வடையாள மைந்தாபாரே. (70)

பாரப்பா தாரணையைச் சொல்வேன்யான்தான்
பரிவாக மாயையொடு மாயாவின்பம்
நேரப்பா சைதன்னிய மிந்தமூன்றும்
நிலையாக வாகாயம் போலேபாரு
காரப்பா மறைத்திருக்கக் கண்டாலுந்தான்
கைமுறையாய்த் தீர்த்தமொடு மூர்த்தியாகச்
சேரப்பா சேத்திரமா யென்னேரந்தான்
சிந்தித்து நிற்கிறதோர் திறந்தானன்றே. (71)

நன்றான புரோட்சிதத்தில் பிரமந்தானாய்
நலமாக நிட்சயித்து மறவாதென்றும்
ஒன்றான வறிவல்லோ தாரணையுமாச்சு
உத்தமனே தியானத்தை யுரைக்கக்கேளு
பன்றான அகிலமெல்லாம் போதமாகப்
பலபலவாஞ் சடமெல்லாங் கண்டமாகக்
கன்றான வெளியெல்லாம் நிர்மலமாய்க்காணும்
கைகண்ட தியானமிது கருத்திலூனே. (72)

ஊணியதோர் சமாதியைந்து முரைக்கக்கேளு
உத்தமனே தத்வலயச் சமாதிமார்க்கம்
ஆணியதோர் திஷ்டான சைதன்யத்தை
அளித்துமைந்தா நிலவறையிற் றீபம்போல
பேணியதோ ரகண்டமென்ற பூரணமாய்நின்று
பின்னையொரு தோற்றமற் றிருப்பதப்பா
வாணியதோர் தத்வலய சமாதியாச்சு
மைந்தனே சவ்விகற்பஞ் சொல்லக்கேளே. (73)

சொல்லுகிறேன் தத்வலய சமாதிமுத்திச்
சுகமாகப் பிரசத்த மனதிற்கேட்கில்
அல்லுகிறேன் சத்தானு வித்தையென்று
அப்பனே சவ்விகற்ப மென்றுபேரு
மல்லுகிறேன் சத்தானு வித்தைமார்க்கம்
மருவியதோ ரந்தநிலைக் குள்ளேநின்று
வெல்லுகிறேன் தனையுநிற்சந் தானம்பண்ணி
வேண்டியதோர் சஞ்சாரத் திருக்கிற்பாரே. (74)

இருக்கிறதோர் மவுனமுறை சமாதிகேளு
இயல்சொல்வ தல்லகுரு சொல்லவேணும்
பெருக்கிறதோர் மாயையபறும் மனமேசெம்மை
பேரான ரசமென்ற யோகந்தானும்
நெருக்கிறதோர் மனஞ்சென்று அறிவிறகூடு
நேரான அகண்டவெளி காந்திகாணும்
அருக்கிறதோ ரருக்கெல்லாம் படுதீபத்து
மறைகிறேன் மவுனத்தை அறைகிறேனே. (75)

அறைகிறே னகாரமூ லத்திேதநிற்கும்
அப்பனே உகாரங்கண் டத்தேநிற்கும்
வறைகிறேன் மகாரம்மஞ்ஞு மணியில்நிற்கும்
வாகாக யெழுத்தொன்றாய்க் கூட்டினக்கால்
நிறைகிறேன் மவுனமிது வறிவிற்கூடும்
நின்றுரைக்கில் கண்டந்தா னுள்ளேகொள்ளும்
பறைகிறே னிருக்கையிலும் (௩௨க்) கையிலுமைந்தா
பார்த்துரைக்கப் பிரபஞ்சம் பாழாய்ப்போச்சே. (76)

பாழாச்சு முன்னுமில்லை பின்னுமில்லை
பருமணியாந் திசைநாதங் காதிற்கேட்கும்
ஆளாச்சு ரவிகோடி வன்னிகோடி
யடங்காத மதிகோடி காந்திகாணும்
நாளாச்சு தினந்தோறும் பார்க்கக்கிட்டில்
நலமாக விழுங்கிப்போ மவுனப்பாம்பு
கோளாச்சு சடத்துக்கு ஐயோஐயோ
குறிப்பாகக் காயசித்தி பண்ணுபண்ணே. (77)

பண்ணினாற் சடம்போகா தெத்தனைநாளாயும்
பாங்காக மவுனத்தை விரித்துச்சொல்வேன்
ஒண்ணினால் மவுனத்தை ரவியைப்பாரு
வுருகியப்பா வகண்டத்தி லொளியேகாணுங்
கண்ணினாற் சடங்காணும் பிடிக்கப்பொய்யாங்
கற்பூரத் தீபம்போல் நிற்கும்நிற்கும்
தண்ணினாற் சாய்கையில்லை யகண்டமாவார்
சச்சிதா னந்தமென்ற தேகமாமே. (78)

ஆமப்பா வாறுதலை யாறுகாலா
யகண்டுநின்ற பானுவுக்குட் சித்திமுத்தி
ஓமப்பா யிப்படியே மதியைப்பார்த்தா
லுத்தமனே யமுதமென்ற தேகமாகும்
காமப்பா வர்ணம்போல் தேகமாகும்
கைகடந்த வகண்டத்தில் புக்கலாகுஞ்
சோமப்பா லுண்டுசட்டை குமட்டிப்போகுஞ்
சொல்லியதோர் மவுனத்தின் சூட்சந்தானே. (79)

தானென்ற மவுனத்தால் மூலம்பாரு
சாதகமாய் நடுப்பாரு முன்பின்பாரு
வானென்ற மேற்பாரு வகண்டம்பாரு
மக்களே வெகுசுருக்கு மவுனஞானம்
கோனென்ற கேசரியாற் பிடித்துப்பாரு
கொள்ளையிட்டாய் கொள்ளையிட்டாய் ஞானமெல்லாம்
ஊனென்ற வுடலேது ஞானவுடலாச்சு
யுரைத்தாக்கால் நிருவிகற்ப முறைக்குந்தானே. (80)

உறைகின்ற தத்வலய முந்திமைந்தா
உத்தமனே சந்தானு வித்தையாகும்
நிறைகின்ற ததுமுத்தி மவுனமாகும்
நேரசக மனமொளிந்து அறிவிற்சேர்ந்தால்
மறைகின்ற தூக்கமுற்று முறக்கம்போல
மருவியதோர் பிறச்சத்தங் காதிற்கேளா
துறைகின்ற சொரூபத்திற் சித்தமொன்றாய்
துலையாத பூரணமாம் (நிரு) விகற்பந்தானே. (81)

தானென்ற சமாதிவிட்டுச் சஞ்சரிக்கும்போது
சாங்கமாய் மவுனத்தே யிருந்துகொண்டு
கானென்ற முக்கால நிறையங்களில்லை
கைவிட்ட பிரபஞ்ச மிலையென்றெண்ணி
வானென்ற வெளிபோலே (கிடச்) சித்தமாகி
மருவியதோர் பிரவிர்த்தி யெல்லாம்விட்டு
மானென்ற மனத்திலே படாமல்நீக்கி
மருவியதோர் பிரபஞ்ச மழிந்துபோமே. (82)

அழிந்தொன்றாய்ச் சொரூபத்தி லேகித்துநின்றால்
அகண்டவிர்த்தி யப்பாகாத் தில்லாதீபங்
கழிந்துநின்ற யுப்பிலிட்ட சலத்தைப்போலே
கைகடந்த தனதுருவங் கெட்டுமைந்தா
பழிந்துநின்ற வேற்றுருவாய் பிரமந்தானாய்ப்
பராபரமாய்க் கடிகையொன் றிருந்தானானால்
தெளிந்துநின்ற பெருமைசொல்ல சிவனாற்கூடா
செகமெல்லாம் பூரணம்போற் றெளிந்துநில்லே (83)

நிற்கையிலே சமாதி (விட்டுச்) சஞ்சாரமானால்
நேரகப் பிரபஞ்சங் கருதக்கேளு
தற்கையிலே சமுத்திரமு மலையும்போலத்
தண்ணியிலே பிறந்துநின்ற நுரையும்போலக்
கற்கையிலே சிலந்தியொடு நூலும்போலக்
கலந்துநின்ற வாமையுட வகமும்போல
வற்கையிலே யாகாய மேகம்போல
வப்பனே சொற்பனப்ர பஞ்சந்தானே. (84)

தானென்ற வகண்டறிவி னாலேமைந்தா
தனித்துலகு நம்மிடத்தே யுண்டாய்நிற்கும்
மானென்ற நம்மிடத்தே யிருந்தவிர்த்தி
வளர்ந்துதப்பா பிரபஞ்சமென்ற நாமம்
வானென்ற நமக்குள்ளே யொளிந்ததாலே
மைந்தனே நம்மைவிட வற்பமில்லை
கோனென்ற நம்மாலே யெல்லாமாச்சு
கூறுதற்கு நம்மைவிட குறிகாணேனே. (85)

காணேநா னென்றுசொல்லி யொன்றாய்நின்று
கண்டுரைத்து உள்ளிட்டுக் கலந்துவொன்றாய்
ஊணேநான் பிள்ளையொன்றை யென்றுவூணி
வுத்தமனே யென்னேர மதிலேநின்று
பூணேநான் சகலதுக்கஞ் சுகத்திலேதான்
புகழ்தோய்த மென்றவா சனையைத்தள்ளி
யானேநான் விகற்பத்தி லகப்பட்டேனோ
னகண்டமென்ற தெனக்குமுண்டோ மாயையென்னே. ()

எண்ணப்பா மாயையென்ற தோய்தம்வந்தும்
யெதுக்கநின்று வாதரவாய்த் தள்ளிநீக்கிக்
கண்ணப்பா பாரාம லெக்காலத்திற்
கைவிட்ட மலைபோலே யலைச்சலற்று
தண்ணப்பா தோய்தமென்ற காற்றுவந்து
தாக்கையிலே தள்ளித்தா னாகநின்று
பண்ணப்பா யனுதினமு மகண்டத்துள்ளே
பார்க்கிறது மாருட சமாதியாச்சே. (87)

ஆச்சப்பா சமாதியைத்தான் முந்திப்பார்த்து
அப்யாசம் பண்ணுகிற முறமைகேளு
ஓச்சப்பா ஒகாரமென்ற (வுதா) சினத்தைத்தள்ளு
உத்தமனே சிகாரமென்ற கோபந்தள்ளு
வாச்சப்பா வாயில்வந்தால் நினைவாய்த்தள்ளு
மகத்தான தோய்தவா சனைதான்மைந்தா
நீச்சப்பா வீதிரண்டுந் தீள்ளமாட்டார்
நேராகத் தள்ளிவிட்டுச் சமாதிகேளே. (88)

கேளப்பா தாசியபி நயத்தைக்காட்டிக்
கெடியாய்க்கண் மூடிநா யகன்மேற்சொக்கு
மாளப்பா வப்படிநீ யகண்டஞ்சொக்கு
வப்யாச மார்க்கமிது வறிந்துகேளு
கோளப்பா வாசனையுங் கருவிப்பாம்புல
கூடுதற்கு வொட்டாதென் றிருக்கவேண்டாம்
காளப்பா தினமுமவு னத்தேபாரு
நலமான வகண்டமுன்னைக் காணுங்காணே. (89)

காண்பதற்குக் குறியகண்ட முன்னைக்கொள்ளுங்
கைமுறையாய் நீயுமங்கே கலந்துபோவாய்
பூண்பதற்கு யிரண்டில்லை யொன்றேயாச்சு
புகழாக நின்றதல்லோ மவுனஞானம்
வீண்பதற்கு குருசொல்வேன் சாஸ்திரங்களென்றுன்
விட்டகுறை தொடராத பாவம்பாவம்
ஊண்பதற்குப் பொருள்தேடிப் போகத்தேநின்று
யுத்தவெரு வாய்ஞானம் பேசுவாரே. (90)

பேசிலே தாச்சுமனஞ் செவ்வையானாற்
      பேரான உலகசம் சாரமென்ன
ஆசினால் தள்ளிநிடச் சித்தமாகி
      யறிவோடே யாத்திவகண் டத்தேநில்லு
மாசினால் மாய்கைவந் தென்னசெய்யும்
      மருவுபெண் டீர்பிள்ளை யென்னசெய்யும்
கூசினாற் சண்ணுமது யில்லாவிட்டாற்
      குறிகெட்டா னென்றுலகு கூசிப்போமே. (91)

பாமப்பா வுலகத்தை யுரைதேன்கோடி
      புகழாக மலைதோறும் லக்கமில்லை
ஆமப்பா யுகந்தோறு மலையிற்சேர்ந்து
      மடுத்தவர்க ளநேகசித்தர் துகையுங்காணேன்
ஓமப்பா மரபுகளிற் சீஷர்கோடி
      யுரைத்துநின்று நிர்விகற்பத் துரைந்தோர்கோடி
சோமப்பா லுண்டுநின்ற மவுனிகோடி
      சொரூபசித்தி யாகநின்றோர் துகைகாணேனே. (92)

துகையாக தத்துவதெரி சனையைப்பாரு
      சொல்லுகிற நானென்ற சொல்லைப்பாரு
வகையாக நானென்று சொன்னதாரு
      மருவியதோ ராத்மதெரி சனையைப்பாரு
தகையாகச் சீவதெரி சனையைப்பாரு
      சாருகிற மாயையுட யுத்திபாரு
புகையாக நின்றமன மயக்கம்பாரு
      போக்காக விதுவெல்லாந் தெளிந்துபாரே. (93)

யாரென்று சொன்னக்கால் வருமோமைந்தா
      பாங்காக விட்டகுறை தொடர்ந்துதூக்கி
நேரென்ற ஞானமுத்த நூலைத்தேடி
      நிலைத்ததிலே குருத்தேடிக் கேட்கவேணும்
ஊரென்றேன் மலையென்றேன் எங்கேயென்றேன்
      உரைத்தமனங் கடைத்தேற மச்சமில்லை
காரெனறேன் குருபதத்னித யண்டிக்கேளு
      கைமுறையாய்ச் சொன்னபடி கலந்துகூடே. (94)

கூடுவது மெவ்வாற்சாஸ் திரங்களெங்கே
குருசொல்லப் போரதெங்கே நாமமெங்கே
நீடுபது யோகமெங்கே ஞானமெங்கே
நிலைக்கசமு சாரசீ வனத்துக்கெங்கே
ஆடுவது குளிகையெங்கே காயசித்தி
யத்தனையும பொய்யென்றுற் புழுத்துச்சாவார்
தேடுவது நனறெனவுந் தேடினோர்கள்
செகத்தினிலே சீவமுத்த ரென்றுபேரே. (95)

பேரான உலகத்தோர் ஞானப்பேய்தான்
பிடிததெதன்பார் பெரியோரைப் பிசாசுமாண்பர்
ஊரான ஆருக்கு ளாருவரவேணும்
வுரைத்துநின்ற மவுனிசஞ் சரிப்பார்பாரு
சீரான மனமுடைய யோகியேனும்
க்ஷணத்திலே பெண்மாய்கை சேர்ந்துகொல்லும்
நேரான பெரியோர்க ளிதைக்கண்டல்லோ
நெடுமலையிற் சார்ந்திருந்தார் நினைவாய்க்காணே. (96)

காணப்பா முந்திதத் துவத்தைப்பாரு
கைமுறையா யேமமென்ற சரியைபாரு
பூணப்பா கிரியையென்ற நேமம்பாரு
புகழாக யோகமென்ற பிராணாயாமம்
ஊணப்பா வூணியபின பிரத்தியாகார
முடனான தாரணையும் யோகமாச்சு
தாணப்பா சமாதியைத்தும் யோகமாச்சு
சாதகமா யிதுநாலுஞ் சார்ந்துபாரே. (97)

பாரிந்த நாலுமுறை பார்க்குமுன்னே
பஞ்சிசச கிருதம்பா ணித்துப்பார்த்து
காரித்த வனியமாஞ் சமாதிக்குள்ளே
காத்திருந்து சிவமென்ற யோசனையைக்கண்டு
நேரிந்த ததவலயா ரூடம்பார்த்து
நிலைத்தபின்பு சஞ்சாரத் துள்ளேசென்று
சேரிந்த மவுனத்தை நிறைத்தபின்பு
சிறந்திருந்த நிர்விகற்பஞ் சித்திதானே. (98)

தானென்ற வேதாந்தசித் தாந்தத்தோடே
சமரசமா யிதுமூன்று மப்பியாசம்
வானென்ற நாதாந்த யோகமார்க்க
மருவியதோர் வேதாந்த ஞானமார்க்கங்
கானென்ற கவாந்தமல்லோ லவிச்சமார்க்கங்
கைமுறையா யிதுவாறுங் காணுங்காணும்
ஊனென்ற வுடம்பெடுத்து விட்டகுறைவந்தா
லுயர்ந்துநின்ற அகண்டமுன்னை யுண்ணும்பாரே. (99)

உண்ணுவது தவளையினமேற் சற்பம்போலு
முத்தமனே கோழியின்மேற் கெருடன்போலு
மெண்ணுவது வேங்கைகையி லாடுபோலு
மருவியதோர் கிரியின்வாய்ச் சர்ப்பம்போலும்
துண்ணுவது பிடிவிழுந்த மலையைப்போலுந்
துஷ்டர்கையி லகப்பட்ட செந்துபோலும்
பண்ணுவது மெய்யானால் போதமுன்னைப்
பாஞ்சிறஞ்சி தன்னைப்போற் பண்ணுந்தானே. (100)

தானென்ற தத்துவத்தை முன்னேசொன்னேன்
சாதகமாய் நால்வகையும் வகுத்துச்சொன்னேன்
வானென்ற சமாதியுட கருவைச்சொன்னேன்
மைந்தனே யப்யாச வகையுஞ்சொன்னேன்
கானென்ற மவுனத்தின் கருவுஞ்சொன்னேன்
கைமுறையாய்க் கேசரிதா னேதென்றாக்கால்
கோனென்ற ரவிமதியும் வன்னிமூன்றுங்
கூடிநின்ற வறிவல்லோ கேசரிதான்காணே (101)

காணப்பா வானந்த வேதாந்தமார்க்கங்
கைமுறையாய் நூறையும்நீ பாடம்பண்ணி
பூணப்பா மனத்தினுள்ளே கெட்டியாக
வுயர்த்தியுள்ள நாதாக்கள் கேட்டாற்சொல்லு
தோணப்பா யாருமில்லை யென்றுமெச்சிற்
றுடிபடவே மூலவர்க்க மென்றுசொல்லு
வீணப்பா திரியாதே வில்லோரேச
வேதாந்த சாஸ்திரத்தில் விரைந்துகூடே. (202)

கூடுவ தெவ்வாறு வேதாந்தமார்க்கம்
குறியான மூன்றெழுத்தி னுபதேசமுன்
நாடுவது நாலெழுத்து இரண்டாந்தீட்சை
நலம்பெறவே ஐந்தெழுத்து மூன்றாந்தீட்சை
ஊடுவது நாலெழுத்து நாலாந்தீட்சை
உத்தமனே யெட்டெழுத்து வைந்தாந்தீட்சை
ஆடுவது பத்தெழுத்து வாறாந்தீட்சை
யப்பனே பதினொன்று வேழுமாச்சே. (103)

ஆச்சப்பா பதினாறு வெட்டாந்தீட்சை
ஆச்சரியஞ் சத்திபிர சாதவித்தை
ஓச்சப்பா வொன்பதுதான் பின்புகேளு
வுத்தனே பரமாம்பிர சாதவித்தை
வாச்சப்பா பத்தாச்சு தீட்சைமார்க்கம்
மருவியதோர் பதினொன்று மவுனதீட்சை
மூச்சப்பா வாடாது யெட்டிற்சேரு
மூதண்ட மனத்தைமெள்ள வறிவிற்சேரே. (104)

அறிவிலே குருசொன்ன வெழுத்தையொட்டி
யகண்டத்தைப் பார்த்துண்ண வுன்னைத்தூக்கும்
பிறிவிலே மனஞ்செல்ல நாதமோங்கும்
பேரான மௌனத்தைச் சொல்லாராசான்
மறிவிலே யகண்டத்திற் சேர்க்கச்சேர்க்க
மனத்தோடே மந்திரம்போம் வாய்மூடிப்போம்
நெறிவிலே நிஷ்கலங்க மகண்டம்நீயாம
னோன பதினோறாந் தீட்சைதானே. (105)

தானென்ற அகாரத்தை உகாரத்திற்சேரு
தாக்கினால் மவுனவித்தை மவுனமாச்சு
வானென்ற வெளிகிழிந்து யொழிவுந்தாண்டி
மாசற்ற மகண்டமுன்னை வாரித்தூக்கும்
கோனென்ற கேசரிதா னிதுவேயாச்சு
குருசொல்ல வேணுமப்பா மவுனவித்தை
யானென்ற விட்டகுறை வந்தாலெய்து
மல்லாட்டாற் குருசொல்லா ரலைவார்பாரே. (106)

யாரப்பா ஞானத்தைத் தேடத்தேடப்
பரிவாக மூன்றுசென்ம மவுனமெய்தும்
நேரப்பா வஸ்துடனே யதீதமுத்தி
நிர்மலத்தே சேர்ந்துவிடும் நிசந்தான்முக்கால்
காரப்பா மூன்றுசென்மம் வாதசித்தி
கைமுறையாய்ப் பராபரையைப் பூசித்தாக்கால்
ஆரப்பா என்னைப்போற் றிறந்துசொல்வார்
அரகரா ஞானவங்க மறைந்திட்டேனே. (107)

அரைந்திட்டேன் வெகுபேர்க்கு மூணுகாண்டவாத
மதுக்கொக்கப் பெரியோர்க்கு வாதஞ்சொல்வேன்
திரைந்திட்ட வாதமெல்லா முப்பாலாச்சு
நேரான ஞானமெல்லா மனதாலாச்சு
உரைந்திட்ட மவுனத்தோர் சமாதிவிட்டால்
உண்பதற்குப் பிள்ளைகளைச் செய்யச்சொல்வார்
கரைந்திட்ட ஊரிலுப்பைக் கட்டிக்கொண்டு
கைமுறையா யாடுதற்குச் சொல்லுவேனே. (108)

சொல்லுகிறே னூரிலுப்பு பலந்தானஞ்சு
சுகமாகப் பருமணியாய்ப் பிரக்கிக்கொண்டு
ஒல்லுகிறேன் படிக்கிப்பலம் ஒன்னரைதான்போடு
உத்தமனே இந்துப்பு பலந்தானொன்று
மல்லுகிறேன் காரமரை சாரங்கால்தான்
மகத்தான வெடியுப்பு அரைக்கால்கூட்டி
வெல்லுகிறேன் சூடனது அரைக்காலோடே
விளங்கியதோ றுருவியுப்பு அரைக்கால்கூட்டே. (109)

கூட்டியெல்லாம் பொடிசெய்து சாரநீறுங்
குலாவியதோர் வெடியுப்பு நீராலாட்டி
ஆட்டியெல்லாம் வைத்தபின்பு உப்பைக்கேளு
அப்பனே புங்கம்பா லூட்டியாட்டி
நீட்டியெல்லா மேழுதிரங் காயப்போடு
நேராகக் காய்ந்தபின்பு இதனைப்பூசு
மூட்டியல்லோ பச்சமெரின்று இதனைக்காச்சி
மூதண்டப் புடத்துக்கு வகையைக்கேளே. (110)

கேளப்பா ஊசரத்தி லமுரிவிட்டு
　　கெடியாக வீரவியதைத் யுலரவைத்து
தாளப்பா பாதியொரு ஓட்டிலிட்டுத்
　　தனிமேலே உப்பையெல்லாம் பரப்பிவைத்து
நீளப்பா மருபாதி மேலேபோட்டு
　　நிலைக்கவொரு ஓடுகொண்டு மூடச்செய்து
சூளப்பா புடம்போடு உப்புக்கட்டும்
　　துடியான உப்பிதுதான் துரையைக்கேளே. (111)

துரையிதிலே சுண்ணும்பா முருக்கினமுமாகும்
　　துலையாத செந்தூரங் களங்கமாகும்
துரையிதிலே கட்டினமாஞ் சத்தினமுமாகும்
　　துடியான மெழுகாகுஞ் செயநீராகும்
துரையிதிலே சங்கிலிபோற் றுடர்ந்துயேரும்
　　சூதத்தைக் கண்ணிமைக்குள் துடிக்கக்கொல்லும்
துறையிதிலே என்னசொல்வேன் தூமவரைவேதை
　　சொல்லிறந்த மவுனிக்கிச் சோத்துஉப்பே. (112)

உப்பிலே பலமொன்று யெடுத்துக்கொண்டு
　　உத்தமனே கெந்தியொரு பலந்தான்போட்டு
நப்பிலே காரமரைச் சாரக்கால்தான்
　　நலமாக மூன்றுநின்று உருகும்போது
அப்பிலே இந்தஉப்பைப் போடுபோடு
　　அயக்குகையி லுருக்குவது மறந்திடாதே
செப்பிலே சில்விட்டுப் புடத்தைப்போடு
　　செய்முறைதா னீசானம் பூஜைபண்ணே. (113)

பண்ணப்பா உப்பதுவுஞ் சிவக்காவிட்டால்
　　பாச்சிமுன்போற் புடம்போடு சிவக்கமட்டும்
நண்ணப்பா சிவந்தாக்கா லெடுத்துக்கொண்டு
　　நாட்டுகிற முறைகேளு நன்றாய்ச்சொல்வேன்
தண்ணப்பா சூதமொன்று தங்கம்ரெண்டு
　　தாக்கியிதில் பத்திடைதா னுப்புப்போட்டு
கண்ணப்பா அரைத்துநன்றாய் மெழுகுபோலே
　　கைமுறையா யுருட்டியதை வைத்துக்கொள்ளே. (114)

வைத்திருக்கு மெழுகுதனைப் பஞ்சலோகம்
வகையாக வன்பதுக்கு ஒன்றுமாட்டு
தைத்திருக்கு மாத்தேது பெரியோர்கைக்கி
சாதகத்தை யடியேனே சொல்லப்போறேன்
மொய்த்திருக்கு மிந்தஉப்பில் வரதவகோடி
மூட்டரிந்து விட்டாக்கால் மூணுகாண்டம்தாண்டும்
கைத்திருக்கு மினித்திருக்கு மென்பார்வாயிர்
கலந்திட்ட உப்பினுட வரிசைதானே. (115)

தானென்ற உப்போடு சாரங்காரம்
தனித்துநின்று திருபுடியாய் மண்டலங்கள்மூன்றாய்
வானென்ற பூதமஞ்சாய் ஆதாரமாறாய்
மருவியது பஞ்சசித்த கிருதமாகி
வேனென்ற தத்துவமாய் மனசுகாலாய்
வேதாந்த சித்தாந்தத் தனமுமாகி
கோனென்ற சூதவித்தை நின்றதப்பா
கொள்கியிதில் நேர்ஞானங் கூறக்கேளே. (116)

கூறுகிறேன் தத்துவத்தைக் கேட்டுத்தள்ளி
கொள்கின்ற ஆறுதலக் குரியுந்தள்ளி
கூறுகிறேன் மாய்கையெல்லாங் கூட்டோடேதள்ளி
கூறுகிற வாசனையைக் குமட்டிநீக்கி
கூறுகிறேன் மனதோடே புருவமய்யத்தூணி
கொடுமனதை யசையாமற் கெட்டிபண்ணி
கூறுகிறேன் காரமுத லுகாரந்தாக்கி
குவிந்துநின்ற மவுனத்தை யறிவிற்றாக்கே. (117)

தூக்கையிலே புருவமய்யங் கனத்துவிம்மும்
சாதகத்துக் கேதுவிது தாக்குதாக்கு
நோக்கையிலே பளிச்செசன்று நாதங்காணும்
நூளஞ்சேர ஞுதம்போ மறிவுசேரும்
பார்க்கையிலே ஒன்றுமில்லை சடமுமில்லை
பாரென்ற மவுனமில்லை அறிவுமில்லை;
கார்க்கையிலே அகண்டமுன்னைக் கொள்ளுங்கொள்ளும்
காராட்டா லொன்றுமில்லை காருபாரே. (118)

பாரிந்த அகண்டத்துக் காதியந்தமில்லை
 பரவியதில் கூடுகிற துறையோகோடி
நேரிந்தப் படிவல்லோர் நேர்ந்தார்நேர்ந்தார்
 நிமிஷத்தில் நேருவிக்கும் சூதமென்றபோதஞ்
சாரிந்தச் சமனாக அருளோடு பொருளும்
 சாதகமாய்ச் சொன்னதெல்லாங் கைகலக்கமட்டும்
கூர்திந்து கலந்தாக்கா லெல்லாம்பொய்பொய்
 குவியாட்டால் குவியவைக்குங் குளிகைசெய்யே. (119)

செய்யப்பா குளிகைமுந்தித் துரியத்திற்சேர்க்கும்
 செகசால அட்டாங்கஞ் சேரஆடும்
வையப்பா மனசையந்த அகண்டத்துள்ளே
 மத்தொன்றில் வையாதே மயக்கமாகு
மெய்யப்பா மெய்யப்பா முக்காலுஞ்சொன்னேன்
 வேறென்று மெண்ணாதே மனமிரக்கமுத்தி
பொய்யப்பா வெண்ணாதே உப்பிரக்கச்சித்தி
 புகழ்பெரிய வல்லோர்கள் போக்கிதாமே. (120)

போக்கோடே தேசமெங்குந் திரியுமக்காள்
 புகழாக யின்னூலைப் பாடம்பண்ணி
வாக்கோடே நாதாக்கள் வேதாந்தங்கேட்டால்
 மயங்காதே யிம்முறையை வகையாய்ச்சொல்லு
தாக்கோடே யாருமைந்தன் துரியமிதுவென்பார்
 சச்சிதானந்தகுரு மூலவற்கமென்றும்
தூக்கோடே பணிந்துமக்காள் வாய்பொத்திச்சொல்லு
 சோத்தியமாய்ப் பிதாபேரைச் சொல்லென்பாரே. (121)

சொல்லுகிறேன் மூலருக்கு நாலாம்பேரர்
 சொற்றவராக் கொங்கணவர் பிள்ளையானென்று
சொல்லுமுன்னே உனையழைத்து அணைத்துக்கொள்வார்
 சூழலகி லறுபத்து நாலுபதியோருஞ்
சொல்லுகிறே னென்னாலே யறிந்தமட்டுஞ்சொன்னேன்
 துடியான நாதாக்கள் தூள்க்குப்பத்தன்
சொல்லுகிறேன் மூலகுரு போகர்பாதம்போற்றி
 சுத்தசை தன்யவே தாந்தஞ்சொல்லே. (122)

சொல்லினேன் வயித்தியமா யிரங்களப்பா
சுகமுடனே அறிந்துகொள்வாய் ஞானமாக
நல்லதொரு கடைக்காண்டம் ஐநூறுந்தான்
நான்மறைக்கும் ஏர்க்கவே சொல்லிவைத்தேன்
வல்லதொரு ஞானவெண்பா நாற்பத்தெட்டும்
மகிழ்வுடனே விதிமுறையாய் வையகத்தில்
எல்லாருங் கண்டுமகிழ் வடையவேதான்
இயம்பினேன் கண்டுகொள்வா யப்பாநீயே. (123)

கண்டுகொள்வாய் ஞானத்தின் மார்க்கந்தன்னை
கனிவுடனே உந்தனுக்குத் தெரியச்சொன்னேன்
விண்டுகொள்வா யிதன்பெருமை கண்டாயானால்
மேலான சித்தர்களுந் தேடுவார்கள்
எண்டிசையி லுள்ளமகா ரிஷிகளுக்கு
இயம்பிடுவாய் ஞானத்தின் பெருமைதன்னை
மண்டலத்தி லுள்ளவர்க்குஞ் சொல்லிவிட்டேன்
மகிமைபெற நூற்றிபதி னென்றுமுற்றே. (124)

கொங்கணர் ஞான சைதன்யம் ௱௰௧,
முற்றிற்று.

கொங்கணர் ஞானசைதன்யம் ௱௰௧ என்று முன் அச்சிட்டிருந்தது இன்னுமொரு ஏட்டுப்பிரதியிருந்து ஒத்துப்பார்த்ததில் 124 பாட்டு வரை யிருந்தபடியால் மிகுதியாயிருந்த பாட்டு ௰௩ம் சேர்த்து ஆகப் பாட்டு ௱௨௪ ஆக இப்பொழுது அச்சிட்டிருக்கிறதென்பதை யாவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்ஙனம்,

☞ இ. ராம. கு. ஸன்.

ஸ்ரீவில்லிபுத்தூரைச்சேர்ந்த தென்கரை வடகரை கோட்டைப் பட்டி நாட்டாண்மை முத்துசாமிநாயுடு அவர்கள் குமாரர் ☞ தம்பு சாமிநாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

அறுபத்தோராவது:

குதம்பைச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் ௰அ.

அறுபத்து நாலுகலை யெட்டாய்நின்ற
ஆதாரந் தனைகதுறுகனி யீதனுக்குள்ளே
மறுபத்து ஞானகலை யுரைப்பேன்கேளு
மைந்தனே குருவருளை மனத்திலேத்திக்
இறுபத்து மனமடங்கி வெப்பந்தீரந்து
கிழக்குதய மாகவரும வெய்யோனபோல
சிறுபத்து வயதுடைய தேவிபாதம்
சென்னிமேற கொண்டுயான செப்புவேனே. (1)

செப்பதியும் சிவசத்தி ரூபஞ்சொல்வேன்
திரிகோணந துளவீடு வரமபதாக
முப்பதியும அதுவாகும் மூலமாகும்
முச்சுடரின உச்சிமுடி மூலாதாரம்
எப்பதியும் மூவஞ்சும இதிலேகாணும்
ஏகவெளி மூனபாட்டி னிசைபபாரு
அப்பதியு மெய்பபொருளாந கூடுகூடு
ஆனந்தக கோட்டையிலம் மனையமவவே. (2)

மம்மனையே கால்சுழியா மேரெட்டுச்சி
மாயைதனை யகற்றிநம வயசிரண்டுக
தும்மனவே நீரெட்டுங காலோமத்தின
துசிகரமா யிருபதுசித தானபெண்ணும்
அம்மனவே அட்டகாமம ஓங்காரந்தான
யநமவசி ஓரெழுத்துச் சிலையுமெட்டாம்
கும்மெனவே வகாரமுடன நகாரமரெண்டும
கும்மன அவ் வசியொன்றைக கூடிககாணே. (3)

கூடிக்காண் வசீகரத்தின் நகாரமெட்டும்
குணமாகும் ஒங்காரக் கம்பந்தாண்டி
நாடிக்காண் மகாரவித்தை அதிதமப்பா
நலமாகுஞ் சொல்வதற்கு நாவெழாது
ஓடிக்காண் ஒருவருந்தான் விள்ளமாட்டார்
உத்துணர்ந்து பார்த்தறிந்து உரைப்புவந்தால்
தேடிக்காண் இதினுடனே பன்னிரண்டும்
செத்திடுகிற் றராதரமாக் தெளிந்துபாரே. (4)

பாரப்பா யிப்படியே பார்த்தாயானால்
பராபரமும் பரையுமுந்த னிடமே வாழ்வார்
ஆரப்பா உனக்கிணைதா னெவருமுண்டோ
அறிந்துபார் முன்பாட்டி னடியைத்தள்ளே
காரப்பா ஒருநினைவாய்க காருகாரு
கருதிநீ நினைத்ததெல்லாங் கண்டுகொள்வாய்
சீரப்பா உலகிலில்லத் தோடிருந்து
திருககறுக்க முத்தியுண்டாந் தெளிந்துபாரே. (5)

பாரப்பா யிந்தினுட பிறவிகேளு
பாரிலே பதினாறு முழதனுக்குக்கீழ்
நீரப்பா கசிந்தெடுத்து மேலேயுன்னி
நேசமாய்ப் பனிகாலம் மேற்கொள்வார்கள்
ஆரப்பா யிப்பெருமை யறியப்போரார்
அடங்காத மனோமணித்தா யின்றநாதம்
பேரப்பா வகைகேளு சொல்வேன்சொல்வேன்
பேசாதே பிறரோடே யிந்தின்பூவே. (6)

இந்தென்றும் பூவென்றுங் கால்தானென்றும்
இணையான அடியென்றும் மூலமென்றும்
சுந்தரியாள் சுட்டதென்றும் மண்தானென்றும்
துலையாத நீரளிக்கு முப்பிதென்றும்
சந்திரனு ருப்பென்றுஞ் சுரோணிதந்தான்
தருவழலை யென்றும்பேர் பூமிநாதம்
வந்ததொரு சத்தியென்றுங் கன்னியென்றும்
மனோமணித்தா யிதின்பெயரைக் கண்டுகொள்ளே. (7)

கண்டுகொள்ளுஞ் சிவமதனைக் காணமாட்டார்
கன்னிக்குத் தானடுக்க வாழ்வாரகேளு:
பண்டுடனே வாழும்பே ரவிதானென்றும்
பரமென்றும் வழலையென்றும் பச்சையென்றும்
விண்டதொரு தேவியென்றுஞ் சந்திரனென்றும்
மேலான சூரியனால் விளையுப்பென்றும்
உண்டிடவே விகதென்றும் பொருளீதென்றும்
உத்தமனே சிவக்கூத்தின பேராங்காணே. (8)

காணாத பொருளொன்று சொல்லக்கேளு
கமலசத்த சாகரமும் உப்பேயாச்சு
தோணாத உப்பெல்லாம் நீர்தானாச்சு
தொலையாத முப்பூவு மிதிலேயாச்சு
காணாத தண்ணீரை யிறுத்துக்காச்சு
காட்டுள்ளோர் சுவைகண்டு யெடுக்கலாச்சு
ஆணாத சிவசத்தி யென்றமார்க்கம்
அடங்காத சிவகங்கை யென்றுநாட்டே. (9)

நாட்டமுடன் குளிகையொன்று நவிலக்கேளு
நலமான பெரியோர்க ளறிந்துசெய்வார்
தேட்டமுடன் நோயதனை யகற்றித்தானே
தேகமதைக் குணப்படுத்துஞ் செவ்வையாக
வாட்டுரச கற்பூர பலமுநாகால்தான்
வளமான குங்குமப்பூ பலமதொன்று
தாட்டீக மானதிரு பச்சைப்பூரம்
தவறுமற் சேர்த்திடுவாய் பலங்காலாமே. (10)

பலங்கால்தான் லவங்கப்பூ லவங்கப்பட்டை
பரிவான கோஷ்டமது கால்தானப்பா
நலங்காமல் வன்னிசெகற்ப மரைக்கலாகும்
நவமான சரக்கலோ த்துமொன்றாய்ச்சேர்த்து
நலமான தலமறிந்து பெரியோர்செய்த
தவறாத பாகமென்றே மனதில்வைத்துப்
பெலமான கல்வத்திற் போட்டரைத்துப்
பேர்பெறவே யாழம்வைத்து வடிப்பீர்தானே, (11)

தானான சந்தனந்தான் பலமுமைந்து
தயையான லவுங்கப்பூ முத்தக்காசு
கோனான மாஞ்சிசிறு நாகப்பூவும்
குணம்பெறவே யிதுநாலும் வகைக்கோர்காசு
தேனான சட்டிதனி லிடித்துப்போட்டு
தீர்க்கமதாய் நன்றாகக் கியாழமிட்டுப்
பானான பதம்பார்த்து அதையிறக்கிப்
பக்குவமாய் இரண்டுநா ளரைப்பீர்தானே. (12)

நாள்தவறிப் போகாம லாட்டியாட்டி
நயனமதி விட்டெடுக்கும் மைபோற்பாரு
ஆள்சிறந்து பெலமாக அரைத்தபோது
அம்மம்மா யென்னசொல்வேன் பிசின்போலாகும்
தூள்தனையே பெருகாம லிணக்கமாகத்
தூரியமுடன் றானெடுத்து உருட்டிக்கொண்டு
வாள்கொடுத்த வாசரைப்போற் குளிகைசெய்ய
வயனமுடன் விளம்புகிறேன் மகிழ்ந்துகேளே. (14)

மகிழ்ந்துவரக் குளிகைசெய்வாய் குன்றிபோல
மாத்திரையாய் நீயுமதை யுருட்டிக்கொண்டு
புகழ்ந்துவரப் பாணிதனி லடைத்துமேலாய்ப்
புண்ணியர்க்குக் கிடைத்ததென்றே கடவுள்பாதம்
அகமகிழப் பூசைசெய்து வைத்தன்பாக
அடவுடனே திரிகடுகு தேனிலாதல்
இகழாமற் றுளசிரசந் தன்னிலேற்ற
இசைந்தசுரஞ் சன்னியெல்லா மேங்கிப்போமே. (14)

ஏங்கிவிடும் மயக்கமொடு சிரசில்நிற்கும்
இசைவிலா வாதபித்தந் தனையேநீக்கும்
தாங்கிவரும் பாரித்த நோய்கள்மற்ற
தலைவலித்த லாயாச மெல்லாம்போகும்
ஓங்கியசொற் றவறும லனந்தநோயை
யோட்டிவிடுஞ் சீதளங்க ளணுகிடாமல்
நீங்கிப்போ வதற்குச்சந் தேகமில்லை
நிதானமா யனுப்பான மறிந்துசெய்வீர். (15

அறிந்திதற்குப் பத்தியத்தைக் கேட்பீர்மிக்க
அன்பான ஆட்டிறைச்சி முருங்கைப்பிஞ்சும்
முறிந்துவிடாக் கத்திரிக்காய்ப் பிஞசதாகும்
முழுத்துவரை மிளகுநீர்ச் சாதமாகும்
தெரிந்தபடி நிதானித்து வியாதிதன்னைத்
தெளிவுடனே பகிர்ந்துமிகக் கொடுப்பீராகில்
சொரிந்தயிந்தக் குணங்கள்முத லானதெல்லாம்
சொல்லாமல் நீங்குமப்பா திறமைபாரே. (16)

அப்பனே ஸ்நானமது செய்வதற்கு
அறிந்திடவே விளம்புகிறே னறிவாய்க்கேளு
தப்பிதமி தல்லநல் லெண்ணெய்தன்னில்
தனித்தகருஞ் சீரகங்கஸ் தூரிமஞ்சள்
ஒப்பனையாய் வகைக்குமொரு பலமும்போடு
ஒல்கியபீசாற் றவுருமற் பாருபாரு
செப்பினே னருகன்வேர் பலந்தான்சேர்த்துச்
செழிப்புடனே யெரித்திறக்கி ஸ்நானஞ்செய்யே. (17)

இறக்கியே விராகனிடைச் சாரம்போடு
இன்பமுடன் முழுகிடவே குணமாந்தேகம்
சிறக்கவே சீயக்காய் வென்னீர்விட்டு
சிதறுமற் செய்துமிகத் தேர்ந்துபார்ப்பீர்
மறவாமற பத்தியமா யசனமுற்று
மற்றுநாள் பலகறியுங் காய்களுண்டு
அறந்தழைகக ஆத்தாளைப் பூசைபண்ணு
அனுதினமும் நல்வழியில் நிலைப்பீர்தாமே. (18)

குதம்பைச்சித்தர் ஞான சூஸ்திரம் ௰௨
முற்றிற்று.

மதுரை இராமாயணச்சாவடித்தெரு பூசாரி கருப்பணக்கோனு ரவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தச் சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை.

அறுபத்திரண்டாவது:

குதம்பைச் சித்தர் பாடல்.

காப்பு-

வெண்பா.

உலகிலஞ் ஞான மொழிந்திட யார்க்கும்
இலகுங் கடவுளை யேத்தி—நலமார்
குதம்பாய் மெய்ஞ்ஞானங் கூறுவே னன்கு
நிதம்பார்த்து நெஞ்சில் நினை.

கடவுள் வணக்கம்.

பூரணங் கண்டோரிப் பூமியி லேவரக்
காரண மில்லையடி குதம்பாய்
காரண மில்லையடி. (1)

போங்காலம் நீங்கநற் பூரணங்கண்டோர்க்குச்
சாங்கால மில்லையடி குதம்பாய்
சாங்கால மில்லையடி. (2)

செத்துப் பிறக்கின்ற தேவைத் துதிப்போர்க்கு
முத்திதா னில்லையடி குதம்பாய்
முத்திதா னில்லையடி. (3)

வஸ்து தரிசன மாட்சியாய்க் கண்டோர்க்குக்
கஸ்திசற் றில்லையடி குதம்பாய்
கஸ்திசற் றில்லையடி. (4)

பற்றற்ற வஸ்துவைப் பற்றறக் கண்டோர்க்குக்
குற்றங்க ளில்லையடி குதம்பாய்
குற்றங்க ளில்லையடி. (5)

காட்சிய காட்சி கடந்த பிரமத்தைச்
சூட்சியாய்ப் பார்ப்பாயடி குதம்பாய்
சூட்சியாய்ப் பார்ப்பாயடி. (6)

வெட்ட வெளிக்குள் வெறும்பாழாய் நின்றதை
இட்டமாய்ப் பார்ப்பாயடி குதம்பாய்
இட்டமாய்ப் பார்ப்பாயடி. (7)

எங்கு நிறைந்தே யிருக்கின்ற சோதியை
அங்கத்துட் பார்ப்பாயடி குதம்பாய்
அங்கத்துட் பார்ப்பாயடி. (8)

அண்டத்துக் கப்பா லகன்ற சுடரினைப்
பிண்டத்துட் பார்ப்பாயடி குதம்பாய்
பிண்டத்துட் பார்ப்பாயடி. (9)

ஆவித் துணையாகு மமர வமுதத்தைச்
சேவித்துக் கொள்வாயடி குதம்பாய்
சேவித்துக் கொள்வாயடி. (10)

தீண்டா விளக்கினைத் தெய்வக் கொழுந்தினை
மாண்டாலும் போற்றிடுவாய் குதம்பாய்
மாண்டாலும் போற்றிடுவாய். (11)

அண்டமும் பிண்டமு மாக்கிய தேவனைத்
தெண்டனிட் டேத்தடி குதம்பாய்
தெண்டனிட் டேத்தடி. (12)

எந்தை பராபர வஸ்தி னிணையடி
சிந்தையிற் கொள்வாயடி குதம்பாய்
சிந்தையிற் கொள்வாயடி (13)

விண்ணொளி யாக விளங்கும் பிரமமே
கண்ணொளி யாகுமடி குதம்பாய்
கண்ணொளி யாகுமடி. (14)

பத்தி சற்றில்லாத பாமர பாவிக்கு
முத்திசற் றில்லையடி குதம்பாய்
முத்திசற் றில்லையடி. (15)

எல்லாப் பொருளுக்கு மேலான வென்றேவைச்
சொல்லாமற் சொல்வாயடி குதம்பாய்
சொல்லாமற் சொல்வாயடி. (16)

எந்தவுயிர்க்கு மிரைதரு மீசனைச்
சந்ததம் வாழ்த்தடி குதம்பாய்
சந்ததம் வாழ்த்தடி. (18)

காணக் கிடையாத கற்பாந்த கம்பத்தை
நாணமற் றேத்தடி குதம்பாய்
நாணமற் றேத்தடி. (17)

அணுவாய்ப்பல் லண்டமா யானசிற்சோதியைத்
துணிவாய்நீ போற்றடி குதம்பாய்
துணிவாய்நீ போற்றடி. (19)

மாணிக்கக் குன்றிற்கு மாசற்ற சோதிக்குக்
காணிக்கை நன்மனமே குதம்பாய்
காணிக்கை நன்மனமே. (20)

கடவுள் வல்லபங்கூறல்.

தேவருஞ் சித்தருந் தேடு முதலவர்
மூவரு மாவாரடி குதம்பாய்
மூவரு மாவாரடி. (21)

சத்தாகிச் சித்தாகித் தாபர சங்கமாய்
வித்தாகும் வஸ்துவடி குதம்பாய்
வித்தாகும் வஸ்துவடி. (22)

உருவா யருவா யொளியாய் வெளியாய்த்
திருவாகி நின்றதுகாண் குதம்பாய்
திருவாகி நின்றதுகாண். (23)

நீரும் நெருப்பு நெடுங்காற் றுவானமும்
பாருமாய் நின்றதைக்காண் குதம்பாய்
பாருமாய் நின்றதைக்காண் (24)

புவனமெல் லாக்கணப் போதேயழித்திடச்
சிவனாலே யாகுமடி குதம்பாய்
சிவனாலே யாகுமடி. (25)

அவனசையாவிடி லணுவசை யாதென்றல்
புவனத்தி லுண்மையடி குதம்பாய்
புவனத்தி லுண்மையடி. (26)

காரணஞ் சித்தென்று காரியஞ் சத்தென்றும்
ஆரணஞ் சொல்லுமடி குதம்பாய்
ஆரணஞ் சொல்லுமடி. (27)

காரண முன்னென்றுங் காரியம் பின்னென்றுந்
தாரணி சொல்லுமடி குதம்பாய்
தாரணி சொல்லுமடி. (28)

ஆதிசகத்தென் றநாதி மகத்தென்று
மேதினி கூறுமடி குதம்பாய்
மேதினி கூறுமடி. (29)

ஐந்து தொழிற்கு முரியோ னநாதியை
மந்திரம் போற்றுமடி குதம்பாய்
மந்திரம் போற்றுமடி. (30)

யானை தலையா யெறும்பு கடையாய்ப்பல்
சேனையைத் தந்தானடி குதம்பாய்
சேனையைத் தந்தானடி (31)

மண்ணளவிட்டாலும் வஸ்துப் பெருமைக்கே
யெண்ணள வில்லையடி குதம்பாய்
யெண்ணள வில்லையடி. (32)

ஆதியு மந்தமு மான வொருவனே
சோதியாய் நின்றானடி குதம்பாய்
சோதியாய் நின்றானடி. (33)

சிவனும் புத்தியுஞ் சித்தமுந் தந்தவன்
தேவ னவனுமடி குதம்பாய்
தேவ னவனுமடி. (34)

சுத்தஞ் சுயம்பு சுகுணஞ் சம்பூரணஞ்
சத்திய முள்ளானடி குதம்பாய்
சத்திய முள்ளானடி. (35)

எங்கும் வியாபக மீகை விவேகங்கள்
பொங்கமா யுள்ளானடி குதம்பாய்
பொங்கமா யுள்ளானடி. (36)

தீர்க்க வாகாயந் தெரியாத தன்மைபோல்
பார்க்கப்படா தானடி குதம்பாய்
பார்க்கப்படா தானடி. (37)

ஆத்துமந் தன்னை யநுபமா யெண்ணினாய்
கூத்தனவ் வாறல்லவோ குதம்பாய்
கூத்தனவ் வாறல்லவோ. (38)

அண்டத்தைத் தேவ னளிக்கவெண் ணும்போதே
அண்டமுண் டாயிற்றடி குதம்பாய்
அண்டமுண் டாயிற்றடி. (39)

வான முற்றாக வளர்ந்திடு சின்னங்கள்
தானவர் செய்தாரடி குதம்பாய்
தானவர் செய்தாரடி. (40)

ஒன்றுமில் லாவெளிக் குள்ளேபல் லண்டத்தை
நின்றிடச் செய்தானடி குதம்பாய்
நின்றிடச் செய்தானடி. (41)

கருவிக ளில்லாமற் காணும்பல் லண்டங்கள்
உருவுறச் செய்தானடி குதம்பாய்
உருவுறச் செய்தானடி. (42)

எல்லா வுயிர்களு மெங்கு வுலகமும்
வல்லானைப் போற்றுமடி குதம்பாய்
வல்லானைப் போற்றுமடி. (43)

என்று மழியாமை யெங்கு நிறைவாகி
நின்றது பிர்மமடி குதம்பாய்
நின்றது பிர்மமடி. (44)

கண்டத்தை யாள்கின்ற காவலர் போற்சோதி
அண்டத்தை யாள்கின்றதே குதம்பாய்
அண்டத்தை யாள்கின்றதே. (45)

அண்டமுண் டாகுமுன் னாகவ நாதியாய்க்
கண்டது பிர்மமடி குதம்பாய்
கண்டது பிர்மமடி. (46)

எந்தவுயிர் கட்கு மெந்த வுலகிற்கும்
அந்தமாய் நின்ருனடி குதம்பாய்
அந்தமாய் நின்ருனடி (47)

தணிவான புத்தியாற் ருணு வறியாதோர்
அணுவேனு மில்லையடி குதம்பாய்
அணுவேனு மில்லையடி (48)

மூன்று தொழிலினை மூர்த்திசெய் யாவிடில்
தோன்ரு துலகமடி குதம்பாய்
தோன்ரு துலகமடி (49)

சீரான தேவன் சிறப்பினைச் சொல்லவே
யாராலே யாகுமடி குதம்பாய்
யாராலே யாகுமடி (50)

முத்திநிலை பெறும்வழி.

எல்லார்க்கு மேலான ஏகனைப் பற்றிய
வல்லார்க்கு முத்தியடி குதம்பாய்
வல்லார்க்கு முத்தியடி (51)

பற்றற நின்ருனைப் பற்றறப் பற்றிடக்
கற்ருர்க்கு முத்தியடி குதம்பாய்
கற்ருர்க்கு முத்தியடி (52)

பந்தத்தை விட்டொளிர் பந்தத்தைப் பற்றினுல்
சந்தத முத்தியடி குதம்பாய்
சந்தத முத்தியடி (53)

ஆமைபோ லைந்து மடக்கித் திரிகின்ற
ஊமைக்கு முத்தியடி குதம்பாய்
ஊமைக்கு முத்தியடி (54)

மந்தி மனதை வசப்படுத் திட்டார்க்கு
வந்தெய்து முத்தியடி குதம்பாய்
வந்தெய்து முத்தியடி (55)

அந்தக் கரண மடங்க வடக்கினுல்
சொந்தம் பிரமமடி குதம்பாய்
சொந்தம் பிரமமடி (56)

தாய்க்குச் சரியான தற்பரஞ் சார்ந்திடில்
வாய்க்கும் பதவியடி குதம்பாய்
வாய்க்கும் பதவியடி. (57)

சுத்த பிரமத்தை தொந்தமென் றெட்டினல்
சித்திக்கு முத்தியடி குதம்பாய்
சித்திக்கு முத்தியடி. (58)

கன்றை விடாதுசெல் கற்றுவைப் போல்வஸ்தை
ஒன்றினல் முத்தியடி குதம்பாய்
ஒன்றினல் முத்தியடி. (59)

கைக்கனி போலவே காசறு பிர்மத்திற்
சேர்க்கினல் முத்தியடி குதம்பாய்
சொக்கினல் முத்தியடி. (60)

நித்திய வஸ்துவை நீங்காது நாடினல்
முத்திதான் சித்திகருமே குதம்பாய்
முத்திதான் சித்திக்குமே. (61)

தேகத்தைப் பழித்தல்.

பேசரு நாற்றம் பெருகு முடலுக்கு
வாசனை யேதுக்கடி குதம்பாய்
வாசனை யேதுக்கடி. (62)

துற்கந்த மாய்மலஞ் சோரு முடலுக்கு
நற்கந்த மேதுக்கடி குதம்பாய்
நற்கந்த மேதுக்கடி. (63)

நீச்சுக் கவுச்சது நீங்காமெய்க் குமஞ்சள்
பூச்சுத்தா னேதுக்கடி குதம்பாய்
பூச்சுத்தா னேதுக்கடி. (64)

சேலை மினுக்கதுஞ் செம்பொன் மினுக்கதும்
மேலை மினுக்காமடி குதம்பாய்
மேலை மினுக்காமடி. (65)

பீவாச முள்ளவன் பீறலு டம்புக்குப்
பூவாச மேதுக்கடி குதம்பாய்
பூவாச மேதுக்கடி. (66)

போராட்டஞ் செய்து புழுத்த வுடம்பிற்கு
நீராட்ட மேதுக்கடி குதம்பாய்
நீராட்ட மேதுக்கடி. (67)

சீயு நிணமுந் திரண்ட உடம்பினை
ஆயுவ தேதுக்கடி குதம்பாய்
ஆயுவ தேதுக்கடி. (68)

காகங் கழுகு களித்துண்ணு மேனிக்கு
வாகன மேதுக்கடி குதம்பாய்
வாகன மேதுக்கடி. (69)

கோவணத் தோடே கொழுத்து முடலுக்குப்
பூவணை யேதுக்கடி குதம்பாய்
பூவணை யேதுக்கடி. (70)

மாதரைப் பழித்தல்.

நெடுவரை போலவே நீண்ட கனதனம்
நடுவாக வந்ததடி குதம்பாய்
நடுவாக வந்ததடி. (71)

கையா லழைப்பது போல வுனதுகண்
மையா லழைப்பதென்னை குதம்பாய்
மையா லழைப்பதென்னை. (72)

முதிர்ந்த சுடுகாட்டில் முல்லையை யொத்தபல்
உதிர்ந்து கிடக்குமடி குதம்பாய்
உதிர்ந்து கிடக்குமடி. (73)

கழறுங் கிளிமொழி காலஞ் சென்றாலது
குளறி யழியுமடி குதம்பாய்
குளறி யழியுமடி. (74)

வளர்ந்து முறுக்காய் வயதி லெழுந்தனம்
தளர்ந்து விழுந்திடுமே குதம்பாய்
தளர்ந்து விழுந்திடுமே. (75)

பொருக்கின்றி மேனியிற் பூரித்தெழுந்த தோல்
சுருக்கம் விழுந்திடுமே குதம்பாய்
சுருக்கம் விழுந்திடுமே. (76)

கொள்ளை யதாகக் கொழுத்தே யெழுந்தகண்
கொள்ளைய தாய்விடுமே குதம்பாய்
கொள்ளைய தாய்விடுமே. (77)

மஞ்சு போலாகி வளர்ந்திடுங் கூந்தலும்
பஞ்சுபோ லாகிடுமே குதம்பாய்
பஞ்சுபோ லாகிடுமே. (78)

பொன்னாலே செய்யாடி போன்றவுன் கன்னங்கள்
பின்னாலே யொட்டிவிடும் குதம்பாய்
பின்னாலே யொட்டிவிடும் (79)

கல்லாயுன் னங்கமு நன்கு நிமிர்ந்தாலும்
வில்லாய்ப்பின் கூனிவிடும் குதம்பாய்
வில்லாய்ப்பின் கூனிவிடும். (80)

முந்தி நடக்கின்ற மொய்ம்புஞ்சின் னாளையில்
குந்தியிருக்கச் செய்யும் குதம்பாய்
குந்தியிருக்கச் செய்யும். (81)

பிறக்கும்போ துற்ற பெருமையைப் போலவே
இறக்கும்போ தெய்துவிடும் குதம்பாய்
இறக்கும்போ தெய்துவிடும். (82)

நரக நிலைமை.

கோபம் பொறாமை கொடுஞ்சொல்வன் கோளிவை
பாபத்துக் கேதுவடி குதம்பாய்
பாபத்துக் கேதுவடி. (83)

கள்ளங்கட் காமங் கொலைகள் கபடங்கள்
பள்ளத்திற் றள்ளுமடி குதம்பாய்
பள்ளத்திற் றள்ளுமடி. (84)

பொருளாசை யுள்ளவிப் பூமியி லுள்ளோருக்
கிருளாம் நரகமடி குதம்பாய்
இருளாம் நரகமடி. (85)

கற்புள்ள மாதைக் கலக்க நினைக்கினும்
வற்புள்ள பாவமடி குதம்பாய்
வற்புள்ள பாவமடி. (86)

தாழாம லுத்தமர் தம்மை யிகழ்வது
கீழாம் நரகமடி குதம்பாய்
கீழாம் நரகமடி. (87)

சுத்த பிரமத்தைத் தோத்திரஞ் செய்யார்க்கு
நித்த நரகமடி குதம்பாய்
நித்த நரகமடி. (88)

எப்பாரும் போற்று மிறையை நினையார்க்குத்
தப்பா நரகமடி குதம்பாய்
தப்பா நரகமடி. (89)

பாழாகப் பூசைகள் பண்ணு மடையர்க்கே
ஏழாம் நரகமடி குதம்பாய்
ஏழாம் நரகமடி. (90)

காயமெடுத் தாதி கர்த்தரை யெண்ணார்க்குத்
தீயாம் நரகமடி குதம்பாய்
தீயாம் நரகமடி. (91)

அன்போடு நற்பத்தி யாதிமேல் வையார்க்குத்
துன்பாம் நரகமடி குதம்பாய்
துன்பாம் நரகமடி. (92)

பொய்த்தவ வொழுக்கத்தைப் பழித்தல்.

செங்காவி பூண்டு தெருவி லலைவோர்க்கு
எங்காகும் நல்வழியே குதம்பாய்
எங்காகும் நல்வழியே. (93)

மாத்திரைக் கோல்கொண்டு மாரீசஞ் செய்வார்க்குச்
சாத்திர மேதுக்கடி குதம்பாய்
சாதநிர மேதுக்கடி. (94)

வெண்ணீறு பூசியே வீதியில் வந்தோர்க்குப்
பெண்ணாசை யேதுக்கடி குதம்பாய்
பெண்ணாசை யேதுக்கடி. (95)

ஒப்பிலாத் தேவனை யுள்ளத்தில் வைத்தோர்க்குக்
கப்பறை யேதுக்கடி குதம்பாய்
கப்பறை யேதுக்கடி. [96]

சான்றோ றெனச்சொல்லித் தத்துவந் தேர்ந்தோர்க்கு
மான்றோ லேதுக்கடி குதம்பாய்
மான்றோ லேதுக்கடி. (97)

நாடி மனத்தினை நாதன்பால் வைத்தோர்க்குத்
தாடிசடை யேனோ குதம்பாய்
தாடிசடை யேனோ. (98)

நாதற் குறவாகி நற்றவஞ் சார்ந்தோர்க்குப்
பாதக் குறடுமுண்டோ குதம்பாய்
பாதக் குறடுமுண்டோ. (99)

தபநிலை கண்டாதி தன்வழி பட்டோர்க்குச்
செபமாலை யேதுக்கடி குதம்பாய்
செபமாலை யேதுக்கடி. (100)

பங்கொடு பங்கில்லா பாழ்வெளி கண்டோர்க்கு
லங்கோ டேதுக்கடி குதம்பாய்
லங்கோ டேதுக்கடி. (101)

நிலையாப் பொருள்.

தேடிய செம்பொன்னுஞ் செத்தபோ துன்னோடு
நாடி வருவதுண்டோ குதம்பாய்
நாடி வருவதுண்டோ. (102)

போம்போது தேடும் பொருளி லணுவேனுஞ்
சாம்போது தான்வருமோ குதம்பாய்
சாம்போது தான்வருமோ. (103)

காசினி முற்றுயுன் கைவச மாயினுந்
தூசேனும் பின்வருமோ குதம்பாய்
தூசேனும் பின்வருமோ. (104)

உற்று ருறவின ரூரார் பிறந்தவர்
பெற்றார் துணை யாவரோ குதம்பாய்
பெற்றார் துணையாவரோ. (105)

மெய்ப்பணி கொள்ளாத மேதினி மாந்தர்க்குப்
பொய்ப்பணி யேதுக்கடி குதம்பாய்
பொய்ப்பணி யேதுக்கடி. (106)

விண்ணாசை தன்னை விரும்பாத மக்கட்கு
மண்ணாசை யேதுக்கடி குதம்பாய்
மண்ணாசை யேதுக்கடி. (107)

சேனைகள் பூந்தேர் திரண்ட மனுத்திரள்
யானையும் நில்லாதடி குதம்பாய்
யானையும் நில்லாதடி. (108)

செங்கோல் செலுத்திய செல்வமு மோர்காலம்
தங்கா தழியுமடி குதம்பாய்
தங்கா தழியுமடி. (109)

கூடங்கள் மாடங்கள் கோபுர மாபுரம்
கூடவே வாராதடி குதம்பாய்
கூடவே வாராதடி. (110)

தன்னோடு செல்பவை.

நல்வினை தீவினை காடிப் புரிந்தோர்பால்
செல்வன நிச்சயமே குதம்பாய்
செல்வன நிச்சயமே. (111)

செய்தவஞ் செய்கொலை செய்தன்மந் தன்னொடும்
எய்த வருவனவே குதம்பாய்
எய்த வருவனவே. (112)

முத்தி யளித்திடு மூர்த்தியைப் போத்திசெய்
பத்தியும் பின்வருமே குதம்பாய்
பத்தியும் பின்வருமே. (113)

ஆசையை யொழித்தல்.

இச்சைப் பிறப்பினை யெய்விக்கு மென்றது
நிச்சய மாகுமடி குதம்பாய்
நிச்சய மாகுமடி. (114)

வல்லமை யாகவே வாஞ்சை யொழித்திட்டால்
நல்ல துறவாமடி குதம்பாய்
நல்ல துறவாமடி. (115)

ஆசை யறுத்தோர்க்கே யானந்த முண்டென்ற
ஓசையைக் கேட்டிலையோ குதம்பாய்
ஓசையைக் கேட்டிலையோ. (116)

தேக்கிய வாசையைச் சீயென் றொறுத்தோரே
பாக்கிய வான்களடி குதம்பாய்
பாக்கிய வான்களடி. (117)

இன்பங்க ளெய்திட விச்சை யுறாதார்க்குத்
துன்பங்க ளுண்டாமடி குதம்பாய்
துன்பங்க ளுண்டாமடி. (118)

துறவிக ளாசை துறந்து விடுவரேல்
பிறவிக ளில்லையடி குதம்பாய்
பிறவிக ளில்லையடி. (119)

தவநிலை கூறல்.

கொல்லா விரதங் குளிர்பசி நீக்குதல்
நல்ல விரதமடி குதம்பாய்
நல்ல விரதமடி. (120)

தவநிலை யென்றதைச் சாராத மாந்தர்கள்
அவநிலை யாவாரடி குதம்பாய்
அவநிலை யாவாரடி. (121)

தவமதை யெக்காலுஞ் சாதிக்க வல்லார்க்குச்
சிவமது கைவசமே குதம்பாய்
சிவமது கைவசமே. (122)

காமனை வென்று கடுந்தவஞ் செய்வோர்க்கு
எமன் பயப்படுவான் குதம்பாய்
எமன் பயப்படுவான். (123)

யோகந் தான்வேண்டி யுறுதிகொள் யோகிக்கு
மோகந்தா னில்லையடி குதம்பாய்
மோகந்தா னில்லையடி. (124)

காலங்கள் கண்டு கடிந்த துறவோர்க்குக்
கோலங்க ளுண்டாமடி குதம்பாய்
கோலங்க ளுண்டாமடி. (125)

ஐம்புலன் வென்றே யனைத்துந் துறந்தோர்கள்
சம்புவைக் காண்பாரடி குதம்பாய்
சம்புவைக் காண்பாரடி. (126)

மெய்மை வெறுத்திட்டு மெய்யை விரும்பினோர்
மெய்யவ ராவாரடி குதம்பாய்
மெய்யவ ராவாரடி. (127)

யானென தென்னு மிருவகைப் பற்றற்றோன்
வானவ னாவானடி குதம்பாய்
வானவ னாவானடி. (128)

அகம்புற மானபற் றற்றமெய்ஞ் ஞானிக்கு
கருபிறப் பில்லையடி குதம்பாய்
கருபிறப் பில்லையடி. (129)

பற்றறிற் றுன்பமும் பற்றறு மின்பமும்
முற்றாக வெய்துமடி குதம்பாய்
முற்றாக வெய்துமடி. (130)

அறிவு விளக்கம்.

பொய்ஞானம் நீக்கியே பூரணஞ் சார்தற்கு
மெய்ஞ்ஞானம் வேண்டுமடி குதம்பாய்
மெய்ஞ்ஞானம் வேண்டுமடி. (131)

பிறவியை நீக்கிடப் பேரின்பம் நோக்கிய
அறிவு பெரிதாமடி குதம்பாய்
அறிவு பெரிதாமடி. (132)

சத்துவமாகவே சத்துப் பொருள்கண்டால்
தத்துவ ஞானமடி குதம்பாய்
தத்துவ ஞானமடி. (133)

அண்டத்தைக் கண்டதை யாக்கினோ னுண்டென்று
கண்ட தறிவாமடி குதம்பாய்
கண்ட தறிவாமடி. (134)

மூக்குற்றம் நீக்க முயலுமெய்ஞ் ஞானமே
தக்கமெய்ஞ் ஞானமடி குதம்பாய்
தக்கமெய்ஞ் ஞானமடி. (135)

போதமி தென்றுமெய்ப் போதநிலை காணல்
போதம தாகுமடி குதம்பாய்
போதம தாகுமடி. (136)

ஜாதி பேத மின்மை.

ஆண்சாதி பெண்சாதி யாகு மிருசாதி
வீண்சாதி மற்றவெல்லாம் குதம்பாய்
வீண்சாதி மற்றவெல்லாம். (137)

பார்ப்பார்கள் மேலென்றும் பறையர்கள் கீழென்றும்
தீர்ப்பாகச் சொல்வதென்ன குதம்பாய்
தீர்ப்பாகச் சொல்வதென்ன. (138)

பார்ப்பாரைக் கர்த்தர் பறையரைப் போலவே
தீர்ப்பாய்ப் படைத்தாரடி குதம்பாய்
தீர்ப்பாய்ப் படைத்தாரடி. (139)

பற்பல சாதியாய்ப் பாரிற் பகுத்தது
கற்பனை யாகுமடி குதம்பாய்
கற்பனை யாகுமடி. (140)

கட்டிடுஞ் சாதிப்பேர் கட்டுச்சொல் லல்லாமல்
தொட்டிடும் வஸ்தல்லவே குதம்பாய்
தொட்டிடும் வஸ்தல்லவே. (141)

ஆதி பரப்பிர்ம மாக்குமக் காலையில்
சாதிக ளில்லையடி குதம்பாய்
சாதிக ளில்லையடி. (142)

சாதிவே றென்றே தரம்பிரிப் போருக்குச்
சோதிவே றாகுமடி குதம்பாய்
சோதிவே றாகுமடி. (143)

நீதிமா னென்றே நெறியா யிருப்போனே
சாதிமா னாவானடி குதம்பாய்
சாதிமா னாவானடி. (144)

சாதியொன் றில்லை சமயமொன் றில்லையென்
றோதி யுணர்ந்தறிவாய் குதம்பாய்
ஓதி யுணர்ந்தறிவாய். (145)

சமயநிலை கூறல்.

தன்புத்தி தெய்வமாய்ச் சாற்றிய சார்வாகம்
புன்புத்தி யாகுமடி குதம்பாய்
புன்புத்தி யாகுமடி. (146)

கல்லினைச் செம்பினைக் கட்டையைக் கும்பிடல்
புல்லறி வாகுமடி குதம்பாய்
புல்லறி வாகுமடி. (147)

அண்டத்தைக் கண்டு மகாதியி லென்பவர்
கொண்ட கருத்தவமே குதம்பாய்
கொண்ட கருத்தவமே. (148)

பெண்வழின்ப முத்தியாய்ப பேசும்பா டாண்மதம்
கண்ணின்மை யாகுமடி குதம்பாய்
கண்ணின்மை யாகுமடி. (149)

சூரியன் றெய்வமாய்ச சுட்டுஞ் சமயந்தான்
காரிய மல்லவடி குதம்பாய்
காரிய மல்லவடி. (150)

மனந்தெய்வ மென்று மகிழ்ந்து கொண்டாடிய
இனமதி யீனமடி குதம்பாய்
இனமது யீனமடி. (151)

பற்பல மார்க்கம் பகர்ந்திடும் வேதங்கள்
கற்பனை யாகுமடி குதம்பாய்
கற்பனை யாகுமடி. (152)

நீண்ட குரங்கை நெடிய பருந்தினை
வேண்டப் பயன்வருமோ குதம்பாய்
வேண்டப் பயன்வருமோ. (153)

மெய்த்தேவ னென்றென்று வேண்டாத பன்மதம்
பொய்த்தேவைப் போற்றுமடி குதம்பாய்
பொய்த்தேவைப் போற்றுமடி. (154)

மந்திர நிலைகூறல்.

நாற்பத்து மூக்கோணம் நாடு மெழுத்தெலா
மேற்பற்றிக் கண்டறிநீ குதம்பாய்
மேற்பற்றிக் கண்டறிநீ. (155)

சட்கோணத் துள்ளந்தச் சண்முக வக்கரம்
உட்கோணத் துள்ளறிநீ குதம்பாய்
உட்கோணத் துள்ளறிநீ. (156)

ஐந்தெழுத் தைந்தறைக் கார்ந்திடு மவ்வாறே
சிந்தையுட் கண்டறிநீ　குதம்பாய்
சிந்தையுட் கண்டறிநீ.　(157)

வாதநிலை கூறல்.

ஆறாறு காரமும் நாறுமே சேர்ந்திடில்
வீறான முப்பாமடி　குதம்பாய்
வீறான முப்பாமடி.　(158)

விந்தொடு நாதம் விளங்கத் துலங்கினால்
வந்தது வாதமடி　குதம்பாய்
வந்தது வாதமடி.　(159)

அன்பினைக் கொண்டந்த வப்பினைக்கட்டினால்
முப்பூ வாகுமடி　குதம்பாய்
முப்பூ வாகுமடி　(160)

உள்ளக் கருவியே யுண்மை வாதமன்றிக்
கொள்ளக் கிடையாதடி　குதம்பாய்
கொள்ளக கிடையாதடி,　(161)

பெண்ணாலே வாதம் பிறப்பதே யல்லாமல்
மண்ணாலே யில்லையடி　குதம்பாய்
மண்ணாலே யிலலையடி.　(162)

ஐந்து சரக்கொடு விந்துநா தஞ்சேரில்
வெந்திடும் லோகமடி　குதம்பாய்
வெந்திடும் லோகமடி.　(163)

வயித்தியங் கூறல்.

முப்பிணி தன்னை யறியாத மூடர்கள்
எப்பிணி தீர்ப்பாரடி　குதம்பாய்
எப்பிணி தீர்ப்பாரடி.　(164)

எட்டெட்டுங் கட்டி யிருக்குமேற் றீயினிற்
விட்டோடும் நோய்களெல்லாம்　குதம்பாய்
விட்டோடும் நோய்களெல்லாம்.　(165)

நாடி யொருபது நன்கா யறிந்திடில்
ஓடிவிடும் பிணியே　குதம்பாய்
ஓடிவிடும் பிணியே.　(166)

சத்தவகை தானு தன்னை யறிந்தவன்
சுத்த வயித்தியனே குதம்பாய்
சுத்த வயித்தியனே. (167)

வாயு வொருபத்தும் வாய்த்த நிலைகண்டோன்
ஆயு வறிவானடி குதம்பாய்
ஆயு வறிவானடி. [168)

ஆயுள் வேதப்படி யவிழ்த முடித்திடில்
மாயும் வியாதியடி குதம்பாய்
மாயும் வியாதியடி. (169)

கற்பநிலை கூறல்.

பொற்பார்ந்த முப்பூவைப் போதம் பொசித்தவர்
கற்பாந்தம் வாழ்வாரடி குதம்பாய்
கற்பாந்தம் வாழ்வாரடி. (170)

வேவாத முப்பூவை வேண்டியுண் டார்பாரில்
சாவாமல் வாழ்வாரடி குதம்பாய்
சாவாமல் வாழ்வாரடி. (171)

விந்து விடார்களே வெய்ய சுடலையில்
வெந்து விடார்களடி குதம்பாய்
வெந்து விடார்களடி. (172)

தொல்லை சடம்விட்டுச் சுட்ட சடங்கொண்டோர்
எல்லையில் வாழ்வாரடி குதம்பாய்
எல்லையில் வாழ்வாரடி. (174)

தோற்பையை நீககிநற் சோதிப்பை கொண்டவர்
மேற்பைகஞ் சுண்பாரடி குதம்பாய்
மேற்பைகஞ் சுண்பாரடி. (174)

மாற்றினை யேற்ற வயங்குமெய் யோர்களே
கூற்றினை வெல்வாரடி குதம்பாய்
கூற்றினை வெல்வாரடி. (175)

ஸ்தலங்களிவை யெனல்.

கோயில் படிதேடிக் கும்பிட்ட தாலுனக்
கேயும் பலன்வருமோ குதம்பாய்
ஏயும் பலன் வருமோ. (176)

சித்தத் தலம்போலத் தெய்வ மிருக்கின்ற
சுத்தத் தலங்களுண்டோ குதம்பாய்
சுத்தத் தலங்களுண்டோ. (177)

மெய்த்தலத் தில்லாத மெய்ப்பொரு ளானவர்
பொய்த்தலத் தெய்வதுண்டோ குதம்பாய்
பொய்த்தலத் தெய்வதுண்டோ. (178)

சிற்பர்கள் கட்டுங் திருக்கோயி லுள்ளாகத்
தற்பரம் வாழ்வதுண்டோ குதம்பாய்
தற்பரம் வாழ்வதுண்டோ. (179)

தன்னாலுண் டாஞ்சிஷ்டி தன்னாலே சிஷ்டித்த
புன்கோயி லுள்ளவன்யார் குதம்பாய்
புன்கோயி லுள்ளவன்யார். (180)

அன்பான பத்த ரகக்கோயில் கர்த்தர்க்கே
இன்பான கோயிலடி குதம்பாய்
இன்பான கோயிலடி. (181)

தேவநிலை யறிதல்.

தன்னுள் விளங்கிய சம்புவைக் காணாது
மன்னுங் தலத்தெய்வமென் குதம்பாய்
மன்னுங் தலத்தெய்வமென். (182)

இருந்த விடத்தி லிருந்தே யறியாமல்
வருந்தித் திரிவதென்னே குதம்பாய்
வருந்தித் திரிவதென்னே. (183)

காசி ராமேச்சுரங் காணவே சென்றாலும்
ஈசனைக் காணுவையோ குதம்பாய்
ஈசனைக் காணுவையோ. (184)

பூவதில் நாளும் பொருந்தித் திரியினும்
தேவனைக் காணுவையோ குதம்பாய்
தேவனைக் காணுவையோ. (185)

உள்ளங்கால் வெள்ளெலும் பாகவு லாவினும்
வள்ளலைக் காணுவையோ குதம்பாய்
வள்ளலைக் காணுவையோ. (186)

போரினி லூசி பொறுக்கத் துணிதல்போல்
ஆரியற் றேடுதலே குதம்பாய்
ஆரியற் றேடுதலே. (187)

சாதனை யாலே தனிப்பதஞ் சேரார்க்கு
வேதனை யாகுமடி குதம்பாய்
வேதனை யாகுமடி. (188)

வேதனை நீங்கி விடாது தொடர்ந் தோரே
நாதனைக் காணுவர்காண் குதம்பாய்
நாதனைக் காணுவர்காண். (189)

நாடி வழக்க மறிந்து செறிந்தவர்
நீடொளி காணுவரே குதம்பாய்
நீடொளி காணுவரே. (190)

அஞ்ஞானங் கடிதல்.

மீளா வியாதியில் மேன்மேலும் நொந்தார்க்கு
நாளேது கோளேதடி குதம்பாய்
நாளேது கோளேதடி. (191)

தீட்டா லுடம்பு திறங்கொண் டிருக்கையில்
தீட்டென்று சொல்வதென்னை குதம்பாய்
தீட்டென்று சொல்வதென்னை. (192)

செத்தபின் சாப்பறை செத்தார்க்குச் சேவித்தல்
சத்த மறிவாரடி குதம்பாய்
சத்த மறிவாரடி. (193)

தந்தைதாய் செய்வினை சந்ததிக் காமென்பார்
சிந்தை தெளிந்திலரே குதம்பாய்
சிந்தை தெளிந்திலரே. (194)

பிள்ளைகள் செய்தன்மம் பெற்றோர்க் குறுமென்றல்
வெள்ளறி வாகுமடி குதம்பாய்
வெள்ளறி வாகுமடி. (195)

பந்தவினைக் கீடாய்ப் பாரிற் பிறந்தோர்க்குச்
சொந்தம தில்லையடி குதம்பாய்
சொந்தம தில்லையடி. (196)

பர்ப்பார் சடங்கு பலனின்று பாரிலே
தீர்ப்பாக வெண்ணிடுவாய் குதம்பாய்
தீர்ப்பாக வெண்ணிடுவாய். 197

அந்தணர்க் காவை யளித்தோர்க ளாவிக்குச்
சொந்தமோ முத்தியடி குதம்பாய்
சொந்தமோ முத்தியடி. 198

வேதியர் கட்டிய வீஞான வேதத்தைச்
சோதித்துத் தள்ளடி குதம்பாய்
சோதித்துத் தள்ளடி (199)

தன்பாவம் நீக்காத தன்மையர் மற்றவர்
வன்பாவம் நீக்குவரோ. குதம்பாய்
வன்பாவம் நீக்குவரோ. (200)

வேள்வியி லாட்டினை வேவச்செய் துண்போர்க்கு
மீள்வழி யில்லையடி குதம்பாய்
மீள்வழி யில்லையடி. (201)

வேதம் புராணம் விளங்கிய சாஸ்திரம்
போதனை யாகுமடி குதம்பாய்
போதனை யாகுமடி. (202)

யாகாதி கன்மங்கள் யாவுஞ் சடங்குகள்
ஆகாத செய்கையடி குதம்பாய்
ஆகாத செய்கையடி (203)

சாற்றுஞ் சகுணங்கள் சந்தியா வந்தனம்
போற்று மறிவினமே குதம்பாய்
போற்று மறிவினமே. (204)

ஆனதோர் காளென்றல் லாகாத காளென்றல்
ஞானமில் லாமையடி குதம்பாய்
ஞானமில் லாமையடி. (205)

அஞ்சன மென்ற தறியாம லேய்க்குதல்
வஞ்சனை யாகுமடி குதம்பாய்
வஞ்சனை யாகுமடி. (206)

மாயவித்தை பல மாநிலத்திற் செய்கை
நீயதொழி லாமடி குதம்பாய்
நீயதொழி லாமடி. (207)

கருவை யழித்துக்கன் மத்தொழில் செய்குதல்
திருவை யழிக்குமடி குதம்பாய்
திருவை யழிக்குமடி. (208)

மாரணஞ் செய்துபல் மாந்தரைக் கொல்வது
சூரண மாக்குமடி குதம்பாய்
சூரண மாக்குமடி. (209)

பொய்யான சோதிடர் பொய்மொழி யாவுமே
வெய்ய மயக்கமடி குதம்பாய்
வெய்ய மயக்கமடி. (210)

மெய்க்குறி கண்டு விளங்க வறியார்க்குப்
பொய்க்குறி யேதுக்கடி குதம்பாய்
பொய்க்குறி யேதுக்கடி. (211)

நாயாட்ட மாடி நகைத்துழல் மூடர்க்குப்
பேயாட்ட மேதுக்கடி குதம்பாய்
பேயாட்ட மேதுக்கடி. (212)

மந்திர மூலம் வகுத்தறி யாதார்க்குத்
தந்திர மேதுககடி குதம்பாய்
தந்திர மேதுக்கடி. (213)

வாதமென்றே பொய்யை வாயிற் புடைப்போர்க்குச்
சேத மிகவருமே குதம்பாய்
சேத மிகவருமே. (214)

வெட்ட வெளிதன்னை மெய்யென் றிருப்பார்க்கு
பட்டய மேதுககடி குதம்பாய்
பட்டய மேதுக்கடி. (215)

மெய்ப்பொருள் கண்டு விளங்கு மெய்ஞ்ஞானிக்குக்
கற்பங்க ளேதுககடி குதம்பாய்
கற்பங்க ளேதுக்கடி. (216)

காணுமற் கண்டு கருத்தோ டிருப்பார்க்கு
வீணாசை யேதுக்கடி குதம்பாய்
வீணாசை யேதுக்கடி. (217)

வஞ்சக மற்று வழிதனைக் கண்டோர்க்குச்
சஞ்சல மேதுக்கடி குதம்பாய்
சஞ்சல மேதுக்கடி. (218)

ஆதார மான வடிமுடி கண்டோர்க்கு
வாதாட்ட மேதுக்கடி குதம்பாய்
வாதாட்ட மேதுக்கடி. (219)

நித்திரை கெட்டு நினைவோ டிருப்பார்க்கு
முத்திரை யேதுக்கடி குதம்பாய்
முத்திரை யேதுக்கடி. (220)

தந்திரமான தலந்தனில் நிற்போர்க்கு
மந்திர மேதுக்கடி குதம்பாய்
மந்திர மேதுக்கடி. (221)

சத்தியமான தலத்தி லிருப்போர்க்கு
உத்திய மேதுக்கடி. குதம்பாய்
உத்திய மேதுக்கடி. (222)

நாட்டத்தைப் பற்றி நடுவணை சேர்வோர்க்கு
வாட்டங்க ளேதுக்கடி குதம்பாய்
வாட்டங்க ளேதுக்கடி. (223)

முத்தமிழ் கற்று முயங்குமெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்க ளேதுக்கடி குதம்பாய்
சத்தங்க ளேதுக்கடி. (224)

உச்சிக்கு மேற்சென் றுயர்வெளி கண்டோருக்
கிச்சிப்பிங் கேதுக்கடி குதம்பாய்
இச்சிப்பிங் கேதுக்கடி. (225)

வேகாமல் வெந்து வெளியொளி கண்டோர்க்கு
மோகந்தா னேதுக்கடி குதம்பாய்
மோகந்தா னேதுக்கடி. (226)

சாகாமற் ருண்டித் தனிவழி போவார்க்கு
ஏகாந்த மேதுக்கடி குதம்பாய்
ஏகாந்த மேதுக்கடி. (227)

அந்தரந் தன்னி லசைந்தாடு முத்தர்க்குத்
தந்திர மேதுக்கடி குதம்பாய்
தந்திர மேதுக்கடி. (228)

ஆனந்தம் பொங்கி அறிவோ டிருப்பார்க்கு
ஞானந்தா னேதுக்கடி குதம்பாய்
ஞானந்தா னேதுக்கடி. (229)

சித்திரக் கூத்தைத் தினந்தினங் காண்போர்க்குப்
பத்திர மேதுக்கடி குதம்பாய்
பத்திர மேதுக்கடி. (230)

முக்கோணந் தன்னில் முளைத்தமெய்ஞ்ஞானிக்குச்
சட்கோண மேதுக்கடி குதம்பாய்
சட்கோண மேதுக்கடி. (231)

அட்டதிக் கெல்லா மசைந்தாடும் நாதர்க்கு
நட்டணை யேதுக்கடி குதம்பாய்
நட்டணை யேதுக்கடி. (232)

முத்தி பெற்றுள்ள முயலுமெய்ஞ் ஞானிக்குப்
பத்திய மேதுக்கடி குதம்பாய்
பத்திய மேதுக்கடி. (233)

அல்லலை நீக்கி யறிவோ டிருப்பார்க்குப்
பல்லாக் கேதுக்கடி குதம்பாய்
பல்லாக் கேதுக்கடி. (234)

அட்டாங்க யோக மறிந்தமெய்ஞ் ஞானிக்கு
முட்டாங்க மேதுக்கடி குதம்பாய்
முட்டாங்க மேதுக்கடி. (235)

வேகமடக்கி விளங்குமெய்ஞ் ஞானிக்கு
யோகந்தா னேதுக்கடி குதம்பாய்
யோகந்தா னேதுக்கடி. (235)

மாற்றானை வென்று மலைமே லிருப்பார்க்குப்
பூத்தான மேதுக்கடி குதம்பாய்
பூத்தான மேதுக்கடி. (237)

செத்தாரைப் போல திரிபூமெய்ஞ் ஞானிக்குக்
கைத்தாள மேதுககடி குதம்பாய்
கைத்தாள மேதுக்கடி. (238)

கண்டாரை நோக்கிக் கருத்தோ டிருப்பார்க்குக்
கொண்டாட்ட மேதுக்கடி குதம்பாய்
கொண்டாட்ட மேதுக்கடி (239)

காலனை வென்று கருத்தறி வாளர்க்கு
கோலங்க ளேதுக்கடி குதம்பாய்
கோலங்க ளேதுக்கடி. (240)

வெண்காய முண்டு மிளகுண்டோர் சுக்குண்டோர்க்
குண்காய மேதுக்கடி குதம்பாய்
யுண்காய மேதுக்கடி (241)

மாங்காய்ப் பாலுண்டு மலைமேலிருப் போர்க்கு
தேங்காய்ப் பாலேதுக்கடி, குதம்பாய்
தேங்காய்ப் பாலேதுக்கடி. (242)

பட்டணஞ் சுற்றிப் பகலே திரிவார்க்கு
முட்டாக் கேதுக்கடி குதம்பாய்
முட்டாக் கேதுக்கடி. (243)

தாழ்வார மில்லை தனக்கொரு வீடில்லை
தேவார மேதுக்கடி குதம்பாய்
தேவார மேதுக்கடி. (244)

தன்னை யறிந்து தலைவனைச் சேர்ந்தோர்க்குப்
பின்னாசை யேதுக்கடி குதம்பாய்
பின்னாசை யேதுக்கடி. (245;

பத்தாவுந் தானும் பதியோ டிருப்பாருக்
குத்தார மேதுக்கடி குதம்பாய்
உத்தார மேதுக்கடி. (246)

குதம்பைச் சித்தர் பாடல் உ௪க௯

முற்றிற்று.

மதுரை திண்டுக்கல் ரோட்டு பங்காருசுவாமி யவர்கள் குமாரர் முத்தியாலு நாயுடு அவர்களுடைய பிரதியின்படி அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

அறுபத்து மூன்றுவது:

அம்பிகானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

ஞானோபதேசம் உரு.

கார்சொரியும் மேனிவிநா யகனேகாப்பு
காலாங்கி காப்புகரு வூராகாப்பு
மேர்வளரும் போகாநந்தி பாதங்காப்பு
மெய்யான கும்பமுனி மிகவேகாப்பு
தார்வளரும் சித்தருட பாதங்காப்பு
சாஸ்திரமுஞ் சூஸ்திமுந் தானேகாப்பு
பார்தனிலே வகார துறை யிருபத்தைந்தும்
பாடுதற்கு மூலரெந்தன் பட்டர்தானே. (1)

பட்டர்திரு மூலருக்கு மூன்றும்பேரன்
பாங்கான போகருக்கு நாலாம்பிள்ளை
தாட்டிகமாய் அம்பிகா னந்தனென்பேர்
தாயான அம்பிகையைத் தானேபோற்றி
மூட்டினேன் வாதமெழு நூற்றிப்பத்தில்
முன்னூற்றி யிருபதிலே வாசியோகம்
பூட்டினேன் வயித்தியம் ராறுனுறில்
பொன்கயிலை சித்தரிடம் புகழ்ந்திட்டானே. (2)

புகழ்ந்திட்ட கயிலாசச் சட்டைநாதர்
புதல்வனெனும் சுந்தார்யென் னூலைப்பார்த்து
இகழ்ந்திட்ட நூல்களிலே மூலந்தன்னை
இப்படியும் வெளியாகச் சொல்லலாமோ
நிகழ்ந்திட்ட இருவருக்குந் தர்க்கமாச்சு
நிமிஷத்தில் நூல்மறைத்தா நின்றசித்தர்
பகர்ந்திட்டேன் கோபத்தா லிந்தநூலைப்
பார்த்தவரும் யெனக்காகப் பயந்திட்டாரே. (3)

பயந்திட்ட மூவவர்க்கத் தாரேசித்தர்
பகைபண்ணக் கூடாதென் றிருபத்தஞ்சும்
ஜெயம்பெற்ற நூலென்று வெளியில்விட்டார்
சித்தர்சொன்ன நூலெல்லா மிதுக்கீடல்ல
மயம்பெற்ற வாதத்துக் காதியென்ன
வாசியென்ற யோகத்துக் காதியென்ன
நயம்பெற்ற ஞானத்துக் காதியென்ன
நலமான கற்பமுதற் குளிகைகேளே. (4)

கேளப்பா வாதத்துக் கங்கியுப்பூ
கிடைத்த அங்கி பட்டரசம் கற்பத்துக்கு
தாளப்பா கேசரத்தில் மௌனயோகம்
சகசமற்ற சாந்தியிலே ஞானத்துக்கு
சூளப்பா சாரணைக்கு ஆதிசத்து
சுகமான செயநீர்க்கு வீரமாதி
வாளப்பா செந்தூரந் தனக்குகெந்தி
வர்னமென்ற மெழுகுக்குத் தங்கமென்னே. (5)

தங்கமென்ற மெழுகுக்கு வீரமாதி
சரக்கான கட்டுகளுக் காதிசுண்ணம்
பங்கமில்லாச் சுண்ணத்துக் கிணங்கியுப்பு
பாங்கான புனுகுவருக் கினத்துக்காதி
அங்கமாம் புடத்துக்குப் பரியேயாதி
அனைத்தையுமே கொல்லுதற்குச் சூதமாதி
உங்களால் முடியாது பிரித்துப்பார்க்க
ஒருகோடி தரைக்கெல்லாம் வழலையொன்றே. (6)

ஒன்றான வழலையென்ற அங்கியுப்புக்
கொப்புமுண்டோ யென்றாலே வுரைக்கப்போமோ
குன்றான பூமியெல்லா மோடினாலும்
குருவழலை யுப்பறியக் கூடாதையா
மன்றான பூமடவார் கையைப்பாரு
வலதிடக்கை பூண்டகங் கணத்தைப்பாரு
நன்றான ரெக்கிருந்த பூமிபாரு
நல்லபச்சை மஞ்சள்நிறம் காட்டிப்பாரே. (7)

பாரடா அந்தநிலம் உனக்கே சொந்தம்
பாங்கிவளை செய்திடுவோர் தனக்கேசொந்தம்
ஊரடா வெளுக்கும்வண்ணா னுக்குச்சொந்தம்
உன்னிலமும் அவர்நிலமும் வேறேஉண்டு
சேரடா குறிஞ்சிநெய்தல் மருதம்முல்லை
தியான பாலைநிலம் அஞ்சுக்குள்ளே
நீரடா பாலைநிலம் கசிவுகண்டால்
நிலத்திலே குடிசைகட்டி நிலைத்துக்கொள்ளே. (8)

கொள்ளப்பா கசிவெடுக்கும் நாள்தானென்று
கூறினால் சித்தர்பகை குத்தமாகும்
விள்ளப்பா பிரமகற்பம் மேற்கேயென்பார்
வீரான பாரையுப்பு கிழக்கேயென்பார்
துள்ளப்பா யிதுமூன்றும் பூமிநாதம்
சோதித்தால் வேறிடத்திற் குடியுமாச்சு
தள்ளப்பா அஞ்சிலே ரெண்டேநன்று
தானறிந்தாற் சமுசியங்கள் தள்ளிப்போச்சே. (6)

போச்சப்பா அண்டத்தி லடங்கித்தானே
பூமிதனிற் சுண்ணாம்புக் கல்போல்நிற்கும்
ஏச்சப்பா பச்சையிலே பாலைமேனி
இளங்குமரி இளக்குயப்பால் யிளத்தண்ணீரில்
கார்சப்பா முப்பூவுக் கொன்றாந் தீக்ஷை
கடற்கிளிஞ்சில் திராவகமே யிரண்டாம்தீக்ஷை
மூச்சப்பா அண்டநீறம் மூன்றாம்தீக்ஷை
முக்கியமா மாறென்று மொழிந்திடாரே. (10)

மொழியவில்லை அஞ்சிலே ரெண்டுதீச்சை
மூலத்திற் பிரணவநீர் ஊட்டவேணும்
தெளியவில்லை யென்பார்கள் அங்கியென்றால்
தீய்க்காடு நீர்க்காடாய்த் தெரிந்திடாதோ
பளிச்சென்ற ரவிமுகத்தைப் பார்க்கும்போது
பட்டவிடந் தொட்டவிட மெல்லாம்பொன்னும்
சுழியறிந்தால் நடுவிலொரு கலையைத்தள்ளி
சுவாத சாந்தப் பெருவெளியிற் சேர்க்குவீரே. (11)

சொக்குதற்குக் குருசொல்ல வேணும்வேணும்
சொல்லாட்டால் யென்னாலே சொல்லவேணும்
சிக்குதற்கு மூலத்தில் வாசியோகம்
சிகாரத்தை மேலெழுப்பச் சித்தம்பானம
முக்கியமாய்ச் சந்திரகலை பதினாறாகுள
மூகித்தவிரல் காலையல்லோ நிறுத்தவேணும்
அக்கரையிற் பசுபோலே யிங்குமங்கும்
அலைவதினால் மவுனவித்தைக் காகாதென்னே. (12)

ஆகாத மேல்வாசிக் குகையினுள்ளே
அடையோகஞ் சாதித்தாற் பிராணவாய்வு
போகாதோ கேசரத்தி லாயிரத்தெண்மலரில
பூண்டவருந் தேனமிர்தம் பொசித்திடாரோ
சாகாதோ சஞ்சிதமே யாபாரங்கள்
தலைவனையும் தனனையுமே தானேகண்டாற்
போகாதோ மூபிறப்பு ஞானகற்பம்
பூரணத்தைக் கண்டவரே புலனற்றாரே. (13)

புலனற்ற பேர்க்கல்லோ ராஜயோகம்
பூட்டினார் புசண்டருமே கொங்கணர்க்குச்
சலனத்தைத் தவிழ்ப்பதற்கு அடயோகந்தான
சாதித்தால் ராஜாங்கந் தானேசித்தி
மலமற்று வெளியிலவரும ராஜாங்கந்தான்
மாறாட்ட மில்லாமற சித்தியானால்
உலவற்ற ஞானியென்று அவர்க்குப்பேராம்
உடலிலே கத்திநடு வோடும்பாரே. (14)

ஓடாமல் நாசியிலே பிராணவாய்வு
உதரத்திற பாய்ந்தாக்காற் காதுகெட்டு
வாடாமல் கண்கெட்டுத் தலைவெடித்து
மாண்டிறந்து போகாமல் வயணஞ்சொல்வேன்
நீடாமல் சுழிமுனையின் பொறையில்நாவை
நீட்டியே திரிவிதப் பழக்கத்தாலே
கூடாமல் சீவகலை பிராணத்தையா
சூதமணிச் சாரணையைச் சொல்லுவேனே. (15)

சொல்லுகிறேன் உபரசமாம் வங்கத்தாலே
சூடான புடமேதி யிருக்கதானால்
வெல்லுகிறேன் லகிரிகுறை யாமல்தினறால்
மேலான அண்டமெல்லாம் ஓடிமீளும்
புல்லிலே சிந்தினதோர் தவிட்டைப்போல
போட்டார்களை நூல்களிலே காணமாட்டார்
கல்லிலே நாருரிக்கும் கதைதானையா
கண்கெட்ட வாதிகளைக் கண்டுபாரே. (16)

கண்டுகொள்ளனும் பூவழலை யங்கியுப்பைக்
கரைககண்டற கிடும்போதுகடிய சுண்ணம்
மண்டிலே நடனமிட்ட சுண்ணத்தாலே
வளாருத செந்தூர மாகச்செய்து
உண்டுவிடு வருஷமொன்றிற கற்பமாச்சு
உனனுடமபு பரவெளிககு ஒப்புமாச்சு
விண்டுசொலல வேணுமையா யிதுபோதாதோ
மேலென்ன கீழென்ன வெளிதானச்சே. (17)

வெளியிலே வனமனது வெளியுமானல்
வேறொன்று மில்லையடா ஞானவாழ்க்கை
தெளிவிலே மாயைவந்து மூடாதையா
தேறினபேர் தஙகளுக்குத் தீங்குமுண்டோ
துளியிலே காசசிவிட்டால தீக்ஷையாச்சு
சுகஙகாணும் பம்பரம்போற் கைக்குள்ளாச்சு
வழியிலே கண்டதொரு குதிரைக்குத்தான்
வைக்கோ லல்லோ கடிவாளம் மாட்டியேறே. (18)

ஏறினுற் றுருசுகொண்டு முன்னேயேறு
எட்டமட்டுஞ் சாரத்தி லேறிப்பாரு
கூறினுற முளகமாம வஙகசசுண்ணம்
கொண்டேறி வீரத்தைத் தொட்டேபாரு
மாறினு லாயிரத்துக கோடுமமாற்று
வரையெல்லாம பாலைநிலங் காத்தவர்க்குத்
தேறினு லிப்பொருளைத் தேடவேணும்
தெளிவிலே செப்புகிற சேதிகேளே. (19)

செய்வதென்ன பரிபாஷை நூலைப்பார்த்து
தெளியாமற் குருமுடிப்பார் சிலதுபேர்கள்
மொய்தவெடி யுபயெடுப்பார் கல்லுச்சுண்ணம்
மூட்டிடுவார் பெருவாயினை நீரினாலே
பேதைசிறு நீராலே ஆகுமென்பார்
புடவைப்பும் சவுக்கார வழலையென்பார்
கொய்த வைப்புப் பாஷாணச் சரக்கைச்சுட்டுக்
கோலுரணி மாலைக்கண் குருடராமே. (20)

குருடரையோ சாராயங் குடித்துப்போட்டுக்
கொண்டுவா தருசைக்குரு முடிப்பேனென்பான்
திருடரையோ அவர்களைநீ சேர்க்கவேண்டாம்
ஜீவனத்துக் கேதிரிவான சிலதுபேர்கள்
மூடரையோ கோபமாய் உருட்டிப்பார்ப்பான்
மூதேவி அவன்முகத்தில் விழிக்கவேண்டாம்
கெருடனுக்கு அடிமையாம் பாம்புகுத்தான்
கெஞ்சுவரோ குருநூலுங் கிட்டினோர்க்கே. (21)

குருச்சொல்லும் வித்தைக்குப் பழுதோயில்லை
கூருகெட்டுச் சுட்டதெல்லாம் தோஷந்தோஷம்
குருச்சொன்ன சாஸ்திரங்கள் மெத்தவுண்டு
கோடிநூற் பார்த்தாலுங் குருவாகாது
குருச்சொன்ன நூல்களெல்லாஞ் சூக்ஷமாகும்
குருவழலை சாஸ்திரத்தைக் குகைக்குள்வைத்தார்
குருச்சொன்ன பரிபாஷை யிதுகளெல்லாம்
கொண்டாட்ட மாகவிதை வெளிவிட்டாரே. (22)

வெளிவருமோ பரிபாஷை புதையலப்பா
விதியாளி வினையவான் காண்பதல்லால்
தெளியாத மூடருக்கு நூல்மகத்வம்
செப்புகின்ற உவமான கியானமெல்லாம்
வழியோடே தெரியாது அவர்கள் தங்கள்
மனசுக்கே சரிப்போன படியேபார்ப்பார்
அழியாத அக்கியுப்பு மாத்தினுப்பை
அண்டமென்றும் பிண்டமென்றும் ஆசிப்பாரே. (23)

ஆசிப்பார் வெள்ளிக்கு மீனையென்பார்
ஆத்துக்குப் பாசாண மாகுமென்பார்
வேகியர்கள் கண்ணுக்குக கடலேயென்பார்
வெஙகலத்தைக் கருசமென்று விளம்புவார்கள்
பாசையாற் சொன்னாலுந் தெரியுமென்று
பழங்கதைபோற சொல்லெடுத்துப் பாடிப்போட்டார்
தோசிகளே உங்களுக்கு யிந்தப்பாஷை
தோய்வதெபபோ சுருதவான் சோதிப்பானே. (24)

சோதிப்பான் அங்கிவுப்பை வழலையென்றும்
சுண்ணமென்றும பாலகிலச் சூடசமென்றும்
நாதிப்பான கேசரததிற பிராணநிஷ்டை
ஞானமென்றும் யோகமென்றும் நல்லோர்காண்பார்
பேதிப்பானு சாரணைகருப் புடந்தானென்றும்
பெரிதான கற்பத்தை ரசமாமென்றும்
சாதிப்பா னிதுவெல்லாம மனமாமென்றும்
சாஸ்திரமே யிருபத்தி அஞ்சுமுறறே. (25)

அம்பிகானந்தர் ஞானுபதேசம் உரு
முற்றிற்று.

மதுரை புதுக்குயவர் பாளையம் சின்னச்சாமிக் கவிராயரவர்கள் இடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை.

அறுபத்துநான்காவது:

டமரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

சிவநூல் சூஸ்திரம் ய௱.

ஆனந்த நிற்குணத்தி னருளேகாப்பு
அடியேனை யாண்டநந்தி பாதங்காப்பு
தானந்தஜனகாதி ரிஷிகட்கெல்லாம்
தாசனெனப் பேருபெத்தேன் டமரானந்தன்
மோனந்தப் பிரமவனு சந்தானத்தின்
மும்மூச்சு (தத்) துவஞான நிஷ்டைசெய்தேன்
ஞானந்தான் பேசிவைத்தேன் முப்பத்தைந்தில்
நலமான வாதவித்தை நவிலுவேனே. (1)

நவிலுவேன் சூத்திரமோ பதினேழுக்குள்
நாதாக்கள மறைத்துவைத்த ஞாயமெல்லாம்
புவியிலுள்ளோ ரறியாமற் சித்தர்கூடிப்
பூவழலை யென்றுசொல்லும் பூட்டகத்தைச்
செவிகூர்ந்து கேளுங்க ளிந்தச்சேதி
தெருவில் வந்தா லுங்கள்தலை தெரித்துப்போகும்
தவிலடித்துப் பேசாதே ரகஸ்யமப்பா
சவுக்கார மானதென்ன தணலாம்விண்ணே. (2)

விண்ணிலே மூன்றுசுடர் தோணலாச்சு
வெய்யோனுஞ் சந்த்ரனுமக் கினிதானென்பார்
மண்ணிலே வந்தவுடன் முப்பூவாச்சு
வளர்பிறையைத் தொட்டுநிற்கு மூசரந்தான்
தண்ணியிலே கண்டசிலை யருக்கனுச்சு
சமாதியுப்புச் சுண்ணமடா தளர்கூறுச்சு
பெண்ணடுக்க லாணவியுங் கிணலாச்சு
பேசாதே பிண்டத்திற் பிரித்துப்பாரே, (3)

பிரித்துப்பார் வாயுவங்கி யுப்புமூன்றும்
பிண்டத்தி லப்படியே நின்றதையா
விரித்துப்பார் பிருதிவியே பிண்டம்பிண்டம்
வேறொன்று மில்லையடா யிதுதானமூலம்
குரித்துப்பா ரிடகலையிங் கலைதான்ரெண்டுமே
கூடிநிற்குஞ் சுழிமுனையின் கூர்மைதப்பி
மரித்துப்போ னல்வருமோ சீவன்தானும்
மயங்கிநின்று திரியாதே மண்ணைக்கிண்டே. (4)

கிண்டுவாய் பசுந்தமண்ணுந் தண்ணீருள்ளே
கீழிருக்கும் வழலையுப்பு கணேசனுச்சு
கண்டுபார் நெற்றிக்கண் ணுடையோனென்பார்
கல்லென்பார் ஐங்காயக் கனிதானென்பார்
விண்டுபோ காதபஞ்ச மித்திரமென்பார்
விங்தென்பார் காதமென்பார் வெடிதானென்பார்
கொண்டல்வன்னி பீசமென்பார் சுண்ணமென்பார்
கோசமென்றும் பீசமென்றுங் கூறுமேகே. (5)

ஏகாதி வஸ்துவென்று ஈ-ஊ-வென்றும்
ஏ-ஐ.ஓ ஆவென்றும் இலக்கமென்றும்
சாகாத காலென்று மதிஷ்டானமென்றும்
சாரமென்றும் பூரமென்றுஞ் சச்சுவென்றும்
வேகாத தலையென்றும் வீரமென்றும்
விசுவனென்று மிரண்யகற்ப விராட்டாமென்றும்
போகாத புனலென்றும் பூரணமென்றும்
புளிலவண மென்றுசொல்லிப் பொருந்தும்பேரே. (6)

பேரான பரிபாஷை பேர்களெல்லாம்
பேயனுக்கும் பேதையர்கரும் பேர்தானுச்சு
கூறான மூன்றுவித அண்டபிண்டங்
கோடான கோடியெல்லா மிதற்குள்ளாச்சு
நீரான அங்கியுடன் காலுங்கூட்டி
நின்றவிடம் வழலையென்பார் நந்தியீசர்
தேறாதே போனாலும் உலகமாடே
சிவனாலு மென்னாலுந் திரட்டிப்பாரே. (7)

பார்க்கையிலே புளிச்சென்று பிரகாசிக்கும்
        பருதிமதி அக்கினியும் பாழ்போகாமற்
சேர்க்கையிலே வண்ணாகை சிககிகொண்டால்
        திடத்துடனே சேரலாகு சிவயோகத்தில்
நோக்கையிலே வழலையல்லோ கற்பமாச்சு
        கொந்தசடங் கற்பூர தேகமாச்சு
நாக்கையல்லோ தூக்கிவிடும் மேல்மூலத்துள்
        நலமான பிராணநிற்கும் நாட்டந்தானே. (8)

தானென்ற வன்னிக்கு ஆணென்றேபேர்
        தண்ணீரும் வாய்வுக்குப பெண்ணென்றேபேர்
ஏனென்ற சுழிமுனையே ருத்திரனாச்சு
        இடகலைபிங் கலையிரண்டும் பிர்மாவிஷ்ணு
வானென்ற சிங்குவங்கு யகாரமாசசு
        வாதமென்றும் யோகமென்றும் ரெண்டேபேச்சு
ஊனென்ற சடத்துக்குள் வஸ்துவித்தை
        ஒருகோடி சித்தரெல்லாஞ் செய்திட்டாரே. (9)

செய்திட்ட சடத்துக்குத் தாயார்மண்ணீர்
        செலங்கோர்த்து நின்றவிடம் அடிதானையா
மெய்த்திட்ட வாய்வுமண்ணுஞ் செலமுங்கூடி
        விரிகடலில் நின்றவிடம் நடுவென்பார்கள்
எய்த்திட்ட அக்கினியுஞ் செலமுங்கூடி
        இருந்தவிடந் தலைகீழென் றியம்பலாகும்
கொய்த்திட்ட திரிகோண சலமுப்பூவைக்
        குருமுனிவர் தானுரைதத குறிகண்டீரே. (10)

கண்டீரோ மண்ணாலே யெல்லாமாச்சு
        காயசித்தி வாதசித்தி மண்ணாலாச்சு
பெண்டீரும் பிள்ளைகளும மண்ணாலாச்சு
        பிறப்பதுவு மிறபபதுவு மண்ணாலாச்சு
துண்டான பொருளொன்றுங் காணேனையா
        தூலவிடம் பிரகிருதி சூட்சமாக்கம்
பண்டான சேதியல்லோ வேறொன்றில்லை
        பச்சையொன்று வெள்ளையொன்று பவளமொன்றே. (11)

ஒன்றான வஸ்துவுக்கு மாலைகாலை
உசரியெனறு மச்சாத்தில் ஓ.ஆ.ஊ-வாம்
நன்றான மேஷமொடு மீனக்கும்பம
காமிளாடுமூற் புறையும்பிற் பிறைநாள்மூன்றும்
குன்றாத வாலைதிரி புரைவரைக்குங்
கூட்டினார் தீட்சைக்குக குணந்தானையா
என்றேதான் சொன்னவித்தை பதினேழுக்குள்
இயம்பினேன் புத்தியினு லிசைந்துபாரே. (12)

இசையாமற் செய்தாரே சவுக்காரத்தை
இக்கெதனறு ஊசாரம்வ கற்சுண்ணும்புங்
கசிவெடுக்கக் காச்சியலலோ வெண்ணெய்குத்திக்
கட்டுவார் தீயனுக்குக் கலகலக்கும்
குசமசக்குசசவுக்காரம வண்ணுனுககுக்
கோடிவெள்ளைக் காகுமல்லாற் குருவாகாது
விசைமிகுத்த வாயுவங்கி அப்புமூன்றும்
வெளிப்பட்டா லுருப்படலாம விண்ணைப்பாரே. (13)

விண்ணைப்பா ராதவற்கு மவுனமேது
விந்தைச்சே ராதவற்குக கற்பமேது
மண்ணைப்பா ராதவதறகுக கறபமேது
வானைசசே ராதவறகு யோகமேது
கண்ணைப்பெ ருதவற்குப பார்வையேது
காலைந்தே டாதவறகு ஒட்டமேது
அண்ணைக்கே போனவுயி ரின்னைக்கேது
ஆசானைத் தேடியடி முடியைக்கேளே. (14)

முடியென்ற வன்னிகெற்பங் கீழேசென்று
முத்துப்போ லேயிருக்கு மிதுதானசுண்ணம்
அடியென்ற புளியதுவும் மேலாய்நிற்கும்
ஆகாச விந்துவென்று மதற்கேபேராம்
செடியசிலை போலிருக்கும் உப்புமார்க்கம்
நீலமென்றும சொல்வார்கள் நடுவின்கூறு
இடியென்ற வஸ்துவித்த ரெண்டிற்சேர்ந்தால்
ஏத்தமென்ற சவுக்கார வழலையென்னே. (15)

என்னவே யானுரைக்கும் சவுக்காரத்துக்
　　கேணியல்லோ சாரமொடு துருசிரெண்டும்
சொன்னபடி கேட்குமடா வீரம்பூரம்
　　தொட்டேறச் சகலசித்துரு சூதஞ்செய்யும்
விண்ணையில்லை யதினாலே அண்டகூட
　　மேலேறிப் பார்க்கலாம் விலாசமெல்லாம்
தன்னையறிப் பிரமதிலே வேறேயில்லை
　　சவுக்கார நிலமறிந்த சத்துவுக்கே. (16)

சத்துபதஞ் சவிவியாக் கிரமருக்குத்
　　தனதான பிள்ளைகளில் யாமொருத்தன்
வித்தையெல்லாங் கண்டுகொண்டேன் வடமேர் தன்னில்
　　விசுவகர்மன் தனகுருப தேசஞ்சொன்னேன்
சித்துவிளை யாடுதற்கு கிரந்தம்நூறும்
　　செப்பினேன் சிவநூலைத் தெளிந்துபார்த்து
அத்துவித மானதினால் டமரானந்தர்
　　அருளியதோர் பதினேழு மடக்குமுற்றே. (17)

டமரானந்தர் சிவநூல் சூஸ்திரம் ௫௱

முற்றிற்று.

மதுரை இராமநாயணச்சாவடித்தெரு இராமசாமிக் கோனாரவர்கள் குமாரர் இருளப்பக்கோனாரவர்களிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் துணை.

அறுபத்தைந்தாவது
வால்மீகர் திருவாய்மலர்ந்தருளிய

சிவயோகஞானம்.

திரிமூர்த்தி தேவர்முதல் மனிதரோடு
சிவயோகம் பெற்றிருந்த மார்க்கந்தன்னைப்
பிரியமுட னெனைத்தொழுது கேட்டாய்பிள்ளாய்
பிங்கலையும் இடகலையும் மாறும்போது
அறிவுடனே சுழிமுனையில் மனத்தைவைத்து
அசையாம லொருநினைவாய்த் தாக்கும்போது
குறியான சிவயோகஞ் சித்தியாச்சு
கோடிசென்மஞ் சித்தனைப்போ லாளலாமே. (1)

கோடியென்று லொருகோடி காலமல்ல
கோடான கோடியடா கொலுவிற்றுனே
ஆடிநிற்குஞ் சிவசத்தி ரெண்டுபேரும்
அன்புடனே உனைத்தூக்கி மடியில்வைப்பார்
சாடிவிழுங் குரங்கதுபோற் சாடிடாமற்
றுயான மதியிரவி நடுவில்நில்லு
பாடிவிட்டேன் சிவயோக மார்க்கந்தன்னைப்
பார்த்தறிந்து அக்கியான பகையைவெல்லே (2)

பகையான கருவியெல்லா மடங்கிப்போகப்
பகருகிறே னுபாயமொன்று லகுவாய்ச் சொல்வேன்
திகையாதே பலநூலின் மயக்கங்கண்டு
சித்தின்ப மோகத்தில் மயங்கிடாதே
தகையேது மில்லாத உபாயஞ்சொல்வேன்
தாரணியி லித்தமுறை சூக்ஷாசூக்ஷம்
வகையான சுழிமுனையில் வாசிபூட்டி
வையகத்தி லுலகத்தோ டொத்துவாழே. (3)

உலகத்தோ டொத்திருப்பார் யோகம்பெற்றோர்
உத்தமனே புளித்தோடு பழம்போலப்பா
கலகமென்று நூல்பார்த்துக் கலங்கவேண்டாம்
காசியென்றுந் தலமென்றும் அலையவேண்டாம்
சிலபலநூல் பலபலவா யோகஞ்சொல்லும்
சீயென்றும் வாவென்றும் செபிக்கச்சொல்லும்
பலபலவாய் நினைவானால் யோகம்போச்சு
பஞ்சிட்டுப் பாரம்வைத்து பதியிற்செல்லே. (4)

பதியான வான்பூமி யிரண்டுமொன்று
பரலோகஞ் சிவயோக மென்றுபேரு
நிதியான வாய்வுவன்னி அப்புமூன்றும்
நிலையான அயன்மாலு மரனுமாகும்
மதியான புத்தியினா லறிந்துகொண்டு
மகத்தான மாயையது யேகமாகும்
கெதியான வுன்னுள்ள வானமாகுங்
கிருபையுள்ள திருமூச்சு வாயுவாமே. (5)

ஆமப்பா வன்னியது நயனமாகும்
அப்பனே வமுதமது நாவதாகும்
ஓமப்பா நாசியது வாயுமாகும்
உத்தமனே யிருகாது வானமாகும்
தாமப்பா முன்னூரில் மார்க்கஞ்சொன்னேன்
தாரணியி லின்னதென்று விரித்துச்சொன்னேன்
வாமப்பா அக்ஷரங்க ளொன்றுமில்லை
மகத்தான வாசியுட வகையைக்கேளே. (6)

வகையான வாசியது மனமுங்கண்ணும்
மயங்காதே சிவாயமென்று புலம்பிடாதே
பகையாதே அக்ஷரங்க ளைம்பத்தொன்றும்
பரிபாஷை யாலுரைத்த நாமபேதம்
திகையாதே நாமமட் சரங்களொன்றும்
செபியாதே அறிவுகெட்ட மனுடரைப்போல்
நகையாதே மானிடரைப் பல்சாதியென்றும்
நம்பாதே நல்வெளியிற் காலைக்காரே. (7)

காரென்று முன்னோர்கள் சொன்னதாலே
கலங்காமல் நூல்வழியே காக்கும்போது
ஊரென்ற பதிசென்றேன் வைகுண்டங்கண்டேன்
ஒளிநாத பரவெளியிற் றெனியுங்கண்டேன்
சீரென்ற சிவஞான யோகம்பெற்றேன்
செனியாமற் பேரின்ப வீடுபெறறேன்.
தூரென்ற மூடுகண்டேன் நுனியுங்கண்டேன
சூக்ஷாதி சூக்ஷத்தைத் துலக்கினேனே. (8)

துலக்காத காரணத்தைத் துலக்கிச்சொன்னேன்
தூங்காமற் றூங்குகின்ற யிடமுஞ்சொன்னேன்
கலக்காதே காரணத்தை வெளிவிடாதே
காலடியை மறவாதே கண் தூங்காதே
நிலைக்காது உலகத்தோர் சொல்லும்பேச்சு
நில்லாது நிசமென்று நமபிடாதே
வலக்காரஞ் சொல்லாதே வீண்பேசாதே
வையகத்தில் பலவேஷங் கொண்டிடாதே. (9)

கொண்டதொரு கூத்தெல்லாம் நாதன்கூத்து
குவலயத்தி லிவன்கூத்து ஒன்றுமில்லை
விண்டுரைத்தேன் சிவயோக மார்க்கமெல்லாம்
விரிவான சாஸ்திரத்தைக் குறுக்கிச்சொன்னேன்
கண்டுரைத்தார் சித்தர்பதி னெட்டுப்பேரும்
காசினியிற் பரிபாஷை யாகச்சொன்னார்
பண்டுபரம் விளம்பினதை யறியச்சொன்னேன்
பரமரக சியயோகம் பத்துமுற்றே. (10)

வால்மீகர் சிவயோக ஞானம் ய

முற்றிற்று.

மேலூர்த்தாலூகா கொட்டாம்பட்டி எம். கருப்பையா பாவலர் அவர்களிடமிருந்த பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ
குருவே துணை.

அறுபத்தாறுவது:
வால்மீகர் திருவாய் மலர்ந்தருளிய

ஞானநாடி சாஸ்திரம் ௬௬.

நீடிய வாத நாடி நீர்ச்சுழல் வண்டு போலே
ஓடியே சுழலு மாகி லூண்பிலாச் சுளையே தொங்கி
நாடியே குளித்து நிற்கும் நாளிலே உடம்பு வத்தும்
சூடிய ஈச ஞானி தொல்முனி வகுத்தவாறே. (1)

உன்னிய வாத நாடி யூசிபோ லிருக்குமாகிற்
கன்னியை யறியச் சொன்னேன் அத்திரிக் காயைத் தொங்கித்
தன்னிலே வயிற்றை யூதும் சபிப்பது யில்லை மந்தம்
வன்னியைப் புணர்ந்தோ ஞானி வருஷமோ ரெட்டதாமே. (2)

கண்டது வாதநாடிக் கட்டெறும் பென்ன லூர்ந்தால்
உண்டது தொங்கி நின்ற வுபகறி சொல்லக் கேளு
முண்டது விலாவில் நிற்கும் முருங்கைக்கா யிலையே தொங்கி
லொண்டடி கழியும் வீங்கு மொன்பது வருஷந்தானே. (3)

பஞ்சிட்ட கோலைப் போலே பறையடி வாதநாடி
மிஞ்சிட்டு ஓடுமாகில் விளைந்திடும் பிணியைக் கேளீர்
அஞ்சிடும் பாவைக் காயா லடிக்குடல் தன்னில்த் தொங்கில்
வஞ்சிடும் வறச்சி தோன்றும் வருஷமோ ரெட்ட தாமே. (4)

நாட்டிய வாத நாடி நடுங்கியே குளிரு மாகில்
ஓட்டிய தேங்காய்க் கீற்று உட்குடல் தன்னில் நிற்கும்
வாட்டிய வுடம்பு வத்தும் வயிறது வூதிக் காட்டுந்
தீட்டிய மாவி ஞானி சென்றது வருஷ மேழே. (5)

சத்திய வாத நாடி சக்கரம் போலே சுத்தில்
முத்திய வாழைத் தோலு முதுகீரைத் தண்டுந்தோலும்

சுத்திய குடலிற் பத்திச் சுருக்கென வலியுந் தோன்றும்
பத்திசேர் குழலி னாளே பயனிது வருஷம் பத்தே. (6)

சுருக்கென வாத நாடி சுழல்நீரைப் போலே சுத்தி
யிருக்கிய கையுங் காலு மெலும்பர வத்தி நிற்கும்
மருக்கியே வயிறு வூதும் மனமரு குருத்துக் கொள்ளுந்
தருக்கிய கோழியாடு தங்கிய வருஷம் பத்தே. (7)

மீறிய வாத நாடி மீனது போலே யேறிற்
கூறிய அவரை யீற்கிற் கொடியமீன் புடலின் காயும்
ஏறியே வலது பக்கம் யெலும்பினி லொட்டிநிற்கும்
மாறியே உதிரம் வீழும் வருடமெட் டதையே யாகும். (8)

நண்ணிய வாத நாடி நாரைபோல் நடக்கு மாகில்
உண்ணிய சத்திப் புண்டா முடம்பெல்லாம் ஊதி வாங்கும்
கண்ணிலே குந்த முண்டாங் காந்திடும் வயிறு வீங்கும்
பண்ணிமாங் கிசமே தொங்கிற் பனிரண்டு வருஷந் தானே. (9)

பலவுரு வாத நாடி பாம்புபோற் சுத்து மாகில்
நலமுறு முன்னே சொன்ன நற்கதி தன்னை நீக்கி
இலமுறு மத்த மத்த யெக்கறி யுள்ளதெல்லாம்
சலமுறும் வயித்திற் றெங்கிச் சத்திக்கும் வருஷ மொன்றே. ()

பலகறி பொசிப்பிற் றொங்கிற் பத்தியே வுடலில்நின்று
இலகறி தன்னை யெல்லா மிரிசிக ளறியச் சொன்னோம்
கலகறி வருஷம் பத்துக் கண்டுகண் டுள்ள தெல்லாம்
வலுவறி புத்தில் மேவும் வால்மீக ருரைத்த வாறே. (11)

வால்மீகர் ஞான நாடி சாஸ்திரம் ௰௧
முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் க. ரா. ம. கணபதியாபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

ஆமப்பா வுலகத்திற் பெருநூல்பார்த்தோர்
அவரவர்கள் நடத்தையெல்லாஞ் சரியையென்பார்
ஓமப்பா கல்லுசெம்புத் தெய்வமென்று
உருகுவார் பூசிப்பார் கிரியையென்பார்
வாமப்பா யோகமென்று காய்கனியைத்தின்று
வாய்பேசா வூமையைப்போற் றிரிகுவார்கள்
காமப்பா ஞானமென்று மானம்விட்டுக்
காக்கைபித்தன் மிருகம்போற் சுற்றுவாரே. (4)

சுற்றுவார் பெருநூலைப் பார்த்துப்பார்த்துத்
தூசிப்பா ருலகத்திற் சிறிதுபேரைத்
தெற்றுவார் வயறபிழைக்க அநேகவேசம்
தேசத்தி லணிந்துகொண்டு திரிகுவார்கள்
பற்றுவார் குருக்களென்பார் சிஷனென்பார்
பையவேதீட்சை வைப்பா ரடிமையென்பார்
கற்றுவார் திருமூர்த்தி நாமமென்று
காரணத்தை யறியாத கசடர்தானே. (5)

தானென்ற வுலகத்திற் சிறிதுபேர்கள்
சடைபுலித்தோல் காவிவஸ்திரந் தாம்பூரம்பூண்டு
ஊனென்ற வுடம்பெல்லாம் சாம்பல்பூசி
உலகத்தில் யோகியென்பார் ஞானியென்பார்
தேனென்ற சிவபூசை தீட்சையென்பார்
திருமாலைக் கண்ணெதிரே கண்டேனென்பார்
கானென்ற காட்டுக்குள் தேவர்கோடி
காரணத்தை யறியாமற் கதறுவாரே. (6)

கதறுகின்ற பேர்களய்யா கோடாகோடி
காரணத்தை யறிந்தவர்கள் கொஞ்சங்கொஞ்சம்
பதறுகின்ற பேர்களெல்லாம் பரமார்த்தத்தைப்
பத்தியினாற் பார்த்தவர்கள் சுருக்கமப்பா
உதறுகின்ற பேர்களையா வுலகத்துள்ளே
உதித்தகலை [illegible] தி லறியமாட்டார்
சிதறுகின்ற [illegible] ள்ளே அவர்களு [illegible] தறிடாமற்
சா [illegible] ஸ்திரம் அச்சிடலானது. (7)

நில்லென்று பெரியோர்கள் பாசையாலே
நீயுலகந் தன்னுக்குள் காணுவேதம்
வல்லமையாஞ் சாத்திரங்க ளிருமூன்றாக
வயறுபிழைக்கப் புராணங்கள் பதினெட்டாகக்
கல்லுதனைக் கரைப்பதுபோல் வேதாகமங்கள்
கட்டினா ரவரவர்கள் பாசையாலே
தொல்லுலகில் நால்சாதி யநேகஞ்சாதி
தொகுத்தார்க ளவரவர்கள் பிழைக்கத்தானே. (8)

தானென்ற வுலகத்திற் கதையில் லாட்டால்
தன்பெருமை யாலழிந்து சணத்தில்வீழ்வார்
ஊனென்ற வுடலெடுத்தா லெல்லாம்வேணும்
உலகத்தி லவரவர்கள் பாசைவேணும
மானென்ற சிவகாமி சிவனுங்கூடி
மாமுனிவர் முகம்பார்த்து மறைநூல்சொன்னார்
தேனென்ற சிவகாமி யருளினாலே
திரட்டினார் வெகுகோடி தேசபாசை, (9)

தேசத்திற் பாசைதனை யறிந்திடாமற்
றெளிவாக வுலகத்தார் பாசைபார்த்தோர்
ஆசிப்பா ருலகத்திற கண்டதெல்லா
மாச்சரியந் தனைக்கண்டு அறிந்துபோனா
வாசிதனை யறியாத சண்டிமாண்பா
வார்த்தையினால் மறட்டிவைப்பார் மற்றபேரை
நாசிவழி நடுவில்வருஞ சிவத்தைக்கண்டோர்
நான்முகனுந் திருமாலுஞ் சிவமூவந்தானே. (10)

சிவசிவா பதினெண்பேர் பாடற்கெல்லாந்
திறவுகோல் வால்மீகர் பதினாறுகும்
சிவம்பெற்ற சித்தமெல்லா மின்னூல்பார்த்துச்
சிவனோடே கோள்சொன்னா சிரித்தார்நாதன்
அவமாகிப போகாமற சிவனுத்தார
மருளதினா லறிந்துசொன்னே னுலகர்க்காக
நவமான நவக்கிரங்க தன்னுக்குள்ளே
நாகருவாய் செவிமூக்கு வதனுட்பாரே. (11)

நாக்குவாய்ச் செவிமூக்கு மத்திக்கப்பால்
கடுவீடு குய்யமூத லுச்சிதொட்டுத்
தாக்குவாய் அங்கென்று அதிலேயூணித்
தாயாரைப் பூசித்து வேதமோது
வாக்குவா யசையாமல் மவுனங்கொண்டு
வாசிவரு மிடத்தில்மனம் வைத்துக்காரு
நீக்குவாய் வாசிநடு மனந்தான்புக்கில்
நினைவுஅதி லடங்கிவிடும் வரிசைகாணே. (12)

காணரிது யெவராலு மூலசூட்சம்
காண்பவனே சிவசித்த னவனேயாகும்
பூணரிது யுலகத்தி லின்னூற்கிட்டில்
பூலோக சித்தனென் றுரைக்கலாகும்
காணரிது சிவசத்தி திருமூச்சாகும்
காடாதே மூடருக்கு யின்னூல்தன்னைத்
தோணரிது வெளிமயக்குச் சும்மாஆமோ
சொல்லரிது சூட்சத்தைச் சொன்னேன்பாரே. (13)

சூட்சமின்னஞ் சொல்லுகிறேன் வாசிகாணச்
சூட்சாதி சூட்சத்தைத் திறக்கப்போமோ
சாட்சியில்லை துணையில்லை கேள்வியில்லை
சந்தேக மொன்றுமில்லை வெளியைக்காண
காச்சியென்ற கெற்பத்தி லவதரிக்குமாப்போற்
காரணத்தைக் கண்ணாலே கண்டிருக்க
ஆச்சுதிது வுமையாளை யிப்படியேகண்டேன்
ஆனந்தத் திருக்கூத்தி னடியைக்காரே. (14)

காப்பதற்குப் பத்தியத்தைச் சொல்லக்கேளு
காய்கனி பஞ்சபட்ச பரமானங்கள்
எப்பமுட னுண்டுகொண்டு சிவத்தைக்காரு
யென்மக்காள் சித்தருடன் குருநூல்பாரு
ஆர்ப்பனத்துக் கழிவில்லா திருக்கவேணும்
அவரவர்கள் நித்தியகர்மம் நடத்தவேணும்
தீர்க்கமுடன் நின்றவனே வாசிசித்தி
சிறப்பாகப் பதினாறும் பலிக்குந்தானே. (15)

தானவனா யிருக்கவென்றால் வாசிவேணும்
தன்னுகருள் தானின்ற விடமும்வேணும்
வானவனாய் நின்றவர்க்கு யெல்லாஞ்சித்தி
வானுக்குள் மனமிருக்க மதிபோறகாணும்
தேனவனுஞ் சித்தருக்குத் தெவிட்டாமூலி
சிறப்பாக உடலுகருப் பதியேயாகுங்
கோனவனா யிருககவென று குறுக்கிசசொன்னேன்
குவலயத்திற் பதினாறுவ குருத்தான்முறறே. (16)

வால்மீகர் சுத்த ஞானம் ௧௬

முற்றிற்று.

வால்மீகர் ஞானசாஸ்திரங்கள் நம்மிடம் அநேகம் ஓலை ஏட்டுப்பிதிகளிருப்பினும் தற்போது இதிற்சிலதை அச்சிட்டிருக்கிறோம் மற்றவைகள் அடுத்த பாகத்தில் வெளியிடக்கூடும்.

மதுரை தர்சில்தார் பள்ளிவாசல்தெரு ☞ குமரவேலு மணியக்காரர் அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

யோகஞானசாஸ்திரத்திரட்டின்

மூன்றும் பாகத்தில் சொல்லியிருக்கிற

முக்கிய விஷயங்கள்.

ஐயா! இதற்கடுத்த மூன்றும் பாகத்தில் கடைப்பிள்ளை, ஜெய முனிவர், கல்லுளிச் சித்தர், கஞ்சமலைச் சித்தர், புலிப்பாணி முனிவர் கௌசிக முனிவர், மிருகண்ட மகாரிஷி, குருராஜர், இராமரிஷி, அத்திரி மகாரிஷி, புசுண்டமகாரிஷி, மௌனச்சித்தர், சூதமகாமுனிவர், முதலிய தபோதனர்களாற் சொல்லப்பெற்ற இருபத்தேழு சாஸ்திரங்கள் அமைந்துள்ள விஷயங்களை இதனடியிற் காணலாம். அவையாவன;

68-வது கடைப்பிள்ளை ஞானசைதன்யம் எழில். அறிவே குருவாய் விளங்கும் அரிய செயலினையும், அஞ்சுபூத ஆறுதாரம், வேதாந்த சித்தாந்த சூட்சும விபரங்களையும்;

69-வது கடைப்பிள்ளை ஞான சமாதி தீட்சை பதினேழில், அருள்பெருகு மந்திரமும், அரிய சமாதி தீட்சையும், குருவிருக்கும் பதியும், சுழிமுனை தீபசோதியும், துரியம் துரியாதீதம், கேசரி பூஜை, சத்தம் பிறந்த இடத்தின் விபரங்களையும்;

70-வது கடைப்பிள்ளை ஞானத்தண்டகம் ஐம்பதில், உந்திக்கமலத்திலிருந்து மேலாதாரம் வரையுள்ள சோதிசொரூபநிலையும், ரவிமதி சுழினையும், சிவயோகம் நிருவிகற்ப சமாதி, அதற்குரிய மூலாட்சரங்களும், பூஜாவிதி தீட்சாவிதி அமுதரசகற்பம், குளிகை ஜெபமணி முதலிய விபரங்களையும்;

71-வது கடைப்பிள்ளை ஞானக்கக்கிஷம் எண்பதில், அரிமூல மந்திரம், நவக்கிரகச் சக்கரம், கருக்குரு, தேகசுத்தி, நித்தியகர்மானுஷ்டானம், தசநாதம், புருவகடு காட்டம், தசதீட்சை, நந்திதெரிசனம், கெற்பரோகநிவர்த்தி முதலிய விபரங்களையும;

72-வது கடைப்பிள்ளை சிவயோக ஞானம் நூறில், வாசியோக மூலமும், காயகற்பக் குளிகையும், சாகாத்தலை வேகாக்கால் போகாப் புனல், என்பதும், வாதம் மதியமுத முதலிய விபரங்களையும்;

73-வது கடைப்பிள்ளை கலைக்கியானம் நூற்றியிருபதில், மண்டலம்மூன்றும், மந்திர மூலமும், நவகோண சக்காம் பூஜை வரிசையும், வாசியோகமும், விசுவரூபதெரிசனமும், காயகற்ப அமுதம் முதலிய விபரங்களையும்;

74-வது கடைப்பிள்ளை ஞானதீட்சாவிதி பதினாறில், பூரண தீட்சை, அறுகோணம், நந்தி தெரிசனம், ரவிமதி சுழினை முதலிய விபரங்களையும்;

75-வது ஜெயமுனிவர் திருமந்திர ஞானம் முப்பத்தேழில், யோக சாதன மர்மங்களும், வேடதாரியின் விபரீதமும், அஷ்டகணபதியின் மந்திரசித்தி முதலிய விபரங்களையும்;

76-வது கல்லுளிச்சித்தர் ஞானானந்த சூஸ்திரம் பத்தொன்பதில், மாயையை விலக்கிப் பரத்துடன் அமையும் மார்க்கமும், மருந்துகளிற் சில விபரங்களையும்;

77-வது கல்லுளிச் சித்தர் பாடல் பதினாறில், பிரபஞ்சம் பொய்யென்றும், பிரமமொன்றே மெய்யென்றும், அதை அனுசரித்து நடப்பதே மேலான முத்திமோக்ஷமென்றும், அஷ்டகர்ம முதலிய வாசி நிலை விபரங்களையும்;

78 வது கஞ்சமலைச் சித்தர் கலைக்கியானம், இருபத்தி மூன்றில் இடகலை பிங்கலை சுழிமுனை மதியமுதம் பஞ்சபக்ஷி அட்சரமும், அடி நடுமுடியும் அண்டத்திலுள்ளவை பிண்டத்திலுண்டென்ற விபரங்களையும்;

79-வது கஞ்சமலைச் சித்தர்பாடல் இருபத்தைந்தில், மாயையை நீக்கி மனம் வாக்குக்கெட்டாப் பிரமத்தில் அயிக்கமாக வேணுமென்பதையும், அதற்குரிய சாஸ்திர விசாரணை செய்யவேணுமென்ற விபரங்களையும்;

80-வது புலிப்பாணி முனிவர் தீட்சாவிதி ஐம்பதில், சிதம்பர சக்கர அட்சர மூலமந்திர பூஜாவிதிகளையும், அதற்குரிய சாபநிவார்ணம் எந்திர மந்திர அட்சரங்களையும், அஷ்டதிக்கு தேவதைகள் பந்தனம் ஆசனங்களின் விபரங்களும்;

81-வது கௌசிகமுனிவர் ஞானசூஸ்திரம் முப்பதில், சுழிமுனை வஸ்து தெரிசனங்களையும், சித்திகளிற் சிறந்த அஷ்டமா சித்திகளையும் வேதை முதலிய விபரங்களையும்;

82-வது மிருகண்ட மகாரிஷி மெய்ஞ்ஞானம் முப்பதில், காரண குருவைக்கண்டு தொண்டு புரிந்து பூரண பேரின்ப மர்மங்களைத் தெரிந்து சாதனம் புரியும் விபரங்களையும்;

83-வது குருராஜர் ஞானரத்தினாபரணம் ஐம்பதில், காயம் அழியாதிருக்கக் கற்பமுண்டு கற்பாந்த காலம் வாழலா மென்ற விபரங்களையும்;

84-வது குருராஜர் சிவயோக சிந்தாமணி ஐம்பதில், சரியை கிரியை யோகம் ஞானம், மதிரவி சுழிமுனை வழிலை செயநீர் வாத முறைகளை அனுஷ்டிக்கும் விபரங்களையும்;

85-வது இராமரிஷி சிவயோக ஞானம் பதினெட்டில், சத்தி மூலமும், பூரணசோதிப் பிரகாசமும், நந்தி தெரிசனமும், வாசியால் ரேசகபூரக கும்பகமும், அதற்குரிய மூலாட்சர விபரங்களையும்;

86-வது அத்திரிமகாரிஷி உண்மை ஞானபோதகம் முப்பதில், அண்டபிண்டம், பஞ்சபூதம், பரவான்மா ஜீவான்மா சத்திசிவம், பஞ்சாட்சரநிலை கதிர்மதி அடிமுடி ஆதிவஸ்து விபரங்களையும்;

87-வது புசுண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் எண்பதில், பராபர மாயெங்கும் பரவிய பரப்பிர்ம வஸ்துநிலைமையும், ரவிமதி சுடராகிய வாசியோக வல்லபங்களையும், கற்பமுறை சரக்குவகை செந்தூரம் ஆருதாரம் உயிரெழுத்து முதலிய மர்மங்களையும்;

88-வது புசுண்டர் ஞானகாவியம் முப்பத்துமூன்றில், தீச தீட்சையும், சகலசித்தும், சந்திரபுஷ்கரணியில் ஸ்நானமும், முக்கோணத் தியல்பும், பரஞான சிவபோதப் பண்பும், பிரளய காலத்திற் பிர்மா விஷ்ணு ருத்திர னிருக்கும் விபரங்களையும்;

89-வது புசுண்டர் ஞானோபநிடதம் முப்பத்திரண்டில், அத்வைத பிரணவமுடிவும், ஆரூடஞானமும், துரியாதீத பிரமநிலையும், சூட்சும ஞான தத்துவ முதலிய விபரங்களையும்;

90-வது புசண்டர் ஞானசூஸ்திரம் பத்தொன்பதில், கல்லுப்புக் கட்டு குருசெந்தூரம், வேதை விபரங்களையும்;

91-வது புசண்டர் ஞானக்குறள் பதினாறில், சின்மயத்தி னுண்மையும், அதற்குரிய விபரங்களையும்;

92-வது மௌனச்சித்தர் ஞானம் யெட்டில், சின்மய சொரூப மூலாச்சாரங்களையும், மவுனதீட்சை விபரங்களையும்;

93-வது மௌனச்சித்தர் பாடல் பன்னிரண்டில், யோகசாதனைக் குரிய விபரங்களையும்;

94-வது சூதமகாமுனி ஞானசூஸ்திரம் பதினொன்கில், யோக சாதனங்களுக்குரிய மர்மங்களையும, ஆதாரமூல பிரணவ சொரூப விபரங்களையுஞ் சொல்லப் பெற்றிருக்கின்றன.

முன்சொன்ன முதலாவது, இரண்டாவது பாகங்களில், ஒளிமறைவாயும், பரிபாஷையாயும், பகர்ந்திருப்பதை ஆராய்ந்துணர வேண்டுமாகில் இதனடுத்த மூன்றும் பாகத்தை வாங்கி வாசித்துப் பார்க்க நன்குவிளங்கும். ஆனதுபற்றி யாவரும் மூன்றும் வாலியத்தையுஞ் சேர்த்துப் பார்க்கும்படி கோருகிறேன்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

உ

பரமபதி துணை.

ஓலையேட்டுச் சுவடிகளிலிருந்து
புதிதாய் அச்சிட்ட

* புத்தக விளம்பரம். *

வைத்திய வாதயோகஞான சாஸ்திரத்திரட்டு 1-முதல் 10-பாகங்கள் பாகம் 1-க்குவிலை ரூ	1—0—0
யாகோபுமுனிவ ரருளிய வயித்தியவாதக் கோர்வை 17-சாஸ்திரங்க ளடங்கியபெரிய புத்தகம் விலை ரூ	8—0—0
அகஸ்தியர் பன்னிருகாண்டம் 200	0—8—0
ஷை கற்பமுப்புக் குருநூல் 200	0—8—0
ஷை அமுத கலைக்யானம் 1200	0-14—0
ஷை பரிபாஷை 300	0—8—0
ஷை பூரணம் 205	0—8—0
ஷை பூரண சூஸ்திரம் 216	0—8—0
ஷை கற்பம் 300	0—8—0
ஷை பரிபூரணம் 1200	1—4—0
புலஸ்தியர் வாதசூஸ்திரம் 300	0—8—0
கருவூரார் வாதகாவியம் 700	0-14—0
தன்வந்திரி வயித்தியக்குருநூல் 200	0—8—0
திருவள்ளுவர் கற்பம் 300 ...	0—12-0
இராமதேவர் வயித்தியகாவியம் 1000	1—0—0

இன்னுமனேக வயித்திய நூல்களும் மற்ற இதர புஸ்தகங்களும் குறைந்த விலைக்கு நேரிலும் வி. பி தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்,

புக்ஷாப் புதுமண்டபம், மதுரை.